மெய்யியல்

அறிமுக உரைகள்

எம்.எஸ்.எம் அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

E11-

மெய்யியல்

அறிமுக உரைகள்

எம்.எஸ்.எம்.அனஸ்
மெய்யியல் துறை
பேராதனைப் பல்கலைக் கழகம்

Z. A. Zanhir
Assistant Director of Education
(Tamil Medium)
Zonal Education Office
Puttalam.

Z. A. ZAHIR
B.A. (Peradeniya) PGD in Edu.
Jr. Service Advisor
Zonal Education Office
PUTTALAM.

வெளியீடு
பண்பாட்டு வட்டம் பேராதனை
2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Title of the Book

மெய்யியல் அறிமுக உரைகள்

MAIYIYAL ARIMUHAURAIKAL

PHILOSOPHY : AN INTRODUCTORY TEXT

AUTHOR:
DR. M.S.M ANES
SENIOR LECTURER
DEPARTMENT OF PHILOSOPHY
UNIVERSITY OF PERADENIYA

COPYRIGHT : AUTHOR

FIRST EDITION : May, 2003

PAGES : v+151

PUBLISHERS : CULTURAL STUDY CIRCLE
C.72, MEEWATHURA
PERADENIYA

PRINTERS : AZMINA COMPUTER ENTER PRICE
MEEWATHURA

PRICE : 260/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

முன்னுரை

பல்கலைக் கழக மட்டத்தில் மெய்யியலைப் பாடமாகப் பயிலும் மாணவர் தொகை அண்மைக் காலமாக அதிகரித்து வருகிறது. இது தவிர பல்கலைக் கழக வெளிவாரிப் பட்டப்படிப்பு நிலையங்களில் மெய்யியலைப் பாடமாகப் பதிவு செய்வோரின் தொகையும் அதிகரித்துள்ளது. மெய்யியல் பாடம் சமூக விஞ்ஞானங்களுக்குரிய பிரச்சினைகளையும், விடயப்பொருள்களையும், முறையியலையும் பெருமளவு தனது பிரச்சினை மையங்களாகக் (Issues) கொண்டிருப்பது மாணவர்களின் ஆர்வத்திற்குக் காரணமாக இருக்கலாம். அதேவேளை மெய்யியலை அதற்குரிய இயல்பில் கற்கவேண்டும் என்ற ஆர்வத்திலும் மாணவர் இப்பாடத்தை தெரிவு செய்தல் கூடும்.

முப்பது வருடங்களாக சுயமொழிக் கல்வியில் மெய்யியல் ஒரு பாடமாக பிரசித்தி பெற்றுள்ளபோதும் இதற்கான பாடநூல்கள் தமிழில் இல்லாத குறை அடிக்கடி மாணவர்களால் சுட்டிக்காட்டப்படுகிறது. முக்கியமாக மெய்யியலைக் கற்பதற்கும் அதன் பாட இயல்பை அறிந்து கொள்வதற்கும் பொருத்தமான அறிமுக நூல்கள் இல்லாதிருப்பது முதற் குறைபாடாகும். பொது வாசகர்களின் அறிவுத் தேவையையும் நாம் கவனத்தில் கொள்ளாதிருக்க முடியாது.

எவ்வாறாயினும், மெய்யியலை மாணவர்களுக்கும் பொதுவாசகர் களுக்கும் அறிமுகப்படுத்துவது எவ்வாறு என்பது உண்மையிலேயே ஒரு கடினமான கேள்வியாகும். மெய்யியலைக் கற்கும் முதல் வருட மாணவர்களுக்கு என வகுக்கப்பட்ட ஒரு உத்தேச பாடத்திட்டத்திற்கு ஏற்ற விதத்தில், சில தலைப்புக்களை விளக்க முற்படுவது ஓரளவு இப்பிரச்சினைக்குரிய தீர்வாகலாம். மெய்யியல் பிரச்சினைகள் என்ற தலைப்பில் பத்து வருடங்களுக்கு மேலாக மெய்யியலை வகுப்புக்களில் அறிமுகப்படுத்திய அனுபவம் இருந்த போதும் நூல் எழுதும் நோக்கம் இருக்கவில்லை. அதனால், வரன்முறையான குறிப்புக்கள் எதுவும் என்னால் ஆயத்தம் செய்யப்படவில்லை.

திட்டமிட்ட விரிவுரைக் குறிப்புக்களோ அல்லது முன்கூட்டியே எழுதப்பட்ட விரிவுரைகளோ இன்றித் நல்ல நூல்களுடன் வகுப்பிற்குச் சென்று விரிவுரை நிகழ்த்திவரும் ஒருவரால் இவ்விடயம் பற்றி வகுப்பில் கூறப்படுவனவற்றைக் கொண்டு நூல் எழுதுவது இலகுவானதல்ல.

எனது மாணவர், விரிவுரையாளர் A.L.M. றியால் (தென்கிழக்குப் பல்கலைக்கழகம்) பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருந்தபோது மெய்யியல் அறிமுக நூல் ஒன்றை எழுதும்படிக் கேட்டுக்கொண்டதே இம்முயற்சியின் ஆரம்பமாகும். அவர் என்னிடம் பயின்ற காலத்தில் அவர் ஆர்வத்துடன் எழுதியிருந்த குறிப்புக்களையும் அதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

முன்னரும் பின்னரும் என்னிடம் பயின்ற மாணவர் சிலரிடமிருந்து பெற்ற விரிவுரைக் குறிப்புக்களையும், சேர்த்து எழுதி அவற்றை அவர் ஒரு தொகுதியாக எனக்கு வழங்கினார். அவரது அந்த முயற்சிதான் இந்த நூலுக்கான அத்திவாரமாகும். இதற்காக அவருக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

நல்ல முறையில் றியால் தொகுத்திருந்த போதும் மாணவர்கள் விரிவுரைகளை எழுதியவிதத்தினால் விடுபட்டவைகள், மயக்கமான இடங்கள் என்று சில பிரச்சினைகள் இருந்தன. முடிந்தவரை இவை திருத்தப்பட்டுள்ளன. எனினும், சில பகுதிகள் மாணவர் முன்நிலையில் பேசிய ஒழுங்கிலேயே அதேவிதம் விடப்பட்டுள்ளன. புதிய திருத்தங்களும் சில இடங்களில் புதிய விடயங்களும் சேர்க்கப்பட்டு இந்நூல் ஆக்கம் நிறைவு பெற்றுள்ளது. கடந்த சில வருடங்களாக நான் எடுத்துக் கொண்ட சில தலைப்புக்கள், அவற்றிற்காகப் பயன்படுத்திய நூல்கள், கட்டுரைகள், எனது சொந்த விளக்கங்கள், கருத்துக்கள் என்பனவற்றுடன் தேவையான இடங்களில் மேற்கொள்ளப்பட்ட நேரடி மொழிபெயர்ப்புக்கள் கொண்ட விரிவுரைகளின் எழுத்து வடிவமே இந்நூலாகும். விரிவுரை வகுப்புக்களில் பயன்படுத்திய வற்றுள் சில நூல்களை இங்கு குறிப்பிடுவது முக்கியமாகும். Edward (A modern Introduction to Philosopy -1978) J.S. Mackanzie (Maual of Ethics-1949) P.H. Nowell-Smith (Ethics-1959) William Lillie (An Introduction to Ethics -1966) Harrold Titus (Living Issues in Philosophy -1968) Gilbert Ryle (The Concept of Mind -1983) W.T.Stace (Acritical History of Greek Philosophy -1950) Bertrand Ruessell (A History of Western Philosophy -1966)A.C Ewing (The fundametal Questions of Philospohpy -1964) ஜான்பிளமணாட்ஸ் (ஆங்கிலேயப் பயன்வழிக்கொள்கையினர்-1966)

இவற்றோடு மெய்யியல் கல்விக்கு வழிகாட்டிகளாக விளங்கிய எனது ஆசான்களான செ. வெ. காசிநாதன் அவர்களுக்கும், பேராசிரியர் சோ. கிருஷ்ணராஜா அவர்களுக்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

அச்சுப்பிரதி ஒப்பீட்டுத்திருத்தங்களைச் செய்து உதவிய மெய்யியல் துறை உதவி விரிவுரையாளர் M.I.M. தௌபீக், இந்நூலை சிறப்பாக கணணிப்படுத்திய தமயந்தி ஜெகநாதன் ஆகியோருக்கும் எனது நன்றிகள். இந்நூல் ஆக்கம் நிறைவுபெற ஒத்துழைப்புச் செய்த மனைவி முப்ரிஹா அனஸ் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

எம்.எஸ்.எம். அனஸ்

C.72, பல்கலை, வீட்டுத்தொகுதி
மீவத்துறை, பேராதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உள்ளடக்கம்

முன்னுரை iii

1. ஆதி கிரேக்க மெய்யியல் 01

2. மெய்யியல் ஓர் அறிமுகம் 06
   மெய்யியலும் விஞ்ஞானமும்
   பௌதீகவதீதம்
   பெறுமானங்கள்

3. நவீன மெய்யியல்: அனுபவவாதம் 21

4. பகுப்பாய்வு மெய்யியல் 27
   தர்க்க அணுவாதம்
   தர்க்கப் புலனெறிவாதம்
   வாய்ப்புப்பார்த்தல் கோட்பாடு

5. நிர்ணயவாதமும் சுயாதீன சித்தமும் 43

6. அறிவும் நம்பிக்கையும் 48
   உண்மை கோட்பாடுகள்
   அறிவின் ஏற்புடைமை
   ஐயவாதம்

7. உடல் உளப் பிரச்சினைகள் 60
   மனித இயல்பு
   இருமைவாதம்
   றையிலின் மொழியியல் தீர்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

8. கடவுள் இருப்பும் சமயங்களும் 81
சமயத்தின் தோற்றம்
சமயங்களின் கடவுள் கோட்பாடு
கடவுள் இருப்பு நிரூபணங்கள்

9. சமூக அரசியல் சிந்தனைகளில்
நீதி எண்ணக்கரு 111
ஹியூன் நீதி
பிளேட்டோவின் நீதி
நீதியும் ஒழுக்கமும்

10. ஒழுக்கவியல்நோக்கில்
தண்டனைக் கோட்பாடுகள் 120
சட்டமும் ஒழுக்கமும்
பயன்வழிவாத நோக்கு
காண்டின் நோக்கு

11. கலைமெய்யியலில்
இரசனைவியலும் மதிப்புக்களும் 136
பெறுமானத் தீர்ப்புக்கள்
அழகு எண்ணக்கரு
கலையும் இரசனையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அத்தியாயம் 1

ஆதி கிரேக்க மெய்யியல்

ஏனைய பாடங்களை விட மெய்யியலின் ஆய்வு வேறுபட்டது. தரவுகள், சூத்திரங்கள், ஆய்வுக் கருவிகள் என்பன தேவைப்படுவது வேறு துறைகளிலாகும். ஆனால், மெய்யியல் துறையில் எது முன் தேவை என்றால், விசாரணை செய்யும் மனமாகும். விசாரணை என்ற பதம் தான் மெய்யியலை வேறு துறைகளிலிருந்து மிகத் தெளிவாகப் பிரித்துக் காட்டுகின்றது. அதிலும், முக்கியமாக மெய்யியல், பாரபட்சமற்ற, பக்கச் சார்பற்ற நியாயத்தையும் உண்மையையும் மட்டும் தருகின்றது. இது ஒரு வகையில் ஆதி கிரேக்கச் சிந்தனையில் மிகத் தெளிவானதாக இருந்தது. இதனை அறிவு அறிவுக்காக என்ற எல்லை எனலாம். இது யாதெனில், வேறு எதற்கும் விட்டுக் கொடுக்காத, எதையும் சாராத நிலையையே அறிவு அறிவுக்காக என்பது வரையறுக்கின்றது. இதன் வெளிப்பாடு அல்லது இலக்கு உண்மையைப் புரிவதிலுள்ள தெளிவான அர்ப்பணமாகும். இங்கு உண்மையென்பது ஒன்றின் அல்லது ஒரு தோற்றப்பாட்டின் யதார்த்தத்தையும் அதன் சாரத்தையும் கூறும் இயல்புள்ளது எனலாம்.

ஆதி கிரேக்கத்தில் இத்தகைய மனோபாவத்தைக் கொண்ட சிந்தனையாளர்களைக் காணலாம். அக்காலத்தில் (2000 வருடங்களுக்கு முன்) இயற்கையையும், மனிதனையும், சமூகத்தையும் பற்றிய இலக்கியங்கள், சமயங்கள், புராணங்கள், வரலாறுகள், புரோகிதங்கள் வெவ்வேறு தாக்கங்களைச் சூழலுக்கு ஏற்ப வெளிப்படுத்தின.

இவற்றிலிருந்து விடுபட்டுச் சுதந்திரமாய் ஆராயும் போக்கு அங்கு உருவாகியது. சுதந்திரமாய் நிற்றல் என்பது ஒரு பிரதான மெய்யியல் பண்பு ஆகும். ஒன்றைச் சாராது இருத்தல், ஒன்றுக்கு அண்மை ஆகாது இருத்தல், அதேவேளை துணிவு ஏதாவது ஒரு புதிய விடயத்தைச் சொல்வதில் உள்ள பிரச்சினைகளை எதிர்நோக்கல் என்பனவும் மெய்யியல் மனப்பாங்கின் முக்கிய பண்புகளாகும். ஆதி கிரேக்க மெய்யியலாளர்கள் முக்கியமாக தேலிஸ் என்பவர் மெய்யியலின் தந்தை எனப்படுகின்றார். அதேவித விசாரணையை வளர்த்தவர்களில் அனெக்ஸிமாந்தர், அனெக்ஸிமினிஸ், ஹெராக்ளிட்டஸ் போன்ற ஆதி கிரேக்க மெய்யியலாளர்களையும் வரலாற்றில் நாம் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆதி கிரேக்க மெய்யியலில் அயோனிய மெய்யியல் முக்கிய மானது. அதாவது, கிரேக்க நாட்டில் அயோனியா என்ற இடத்தில் உருவான மெய்யியற் சிந்தனைகளை இது குறிக்கின்றது. அக்காலக் கிரேக்கத்தில் அயோனியா மிகவும் முன்னேற்றமான, செல்வமான பகுதியாக இருந்தது. முக்கியமாகப் பண்பாடு, சமூக, பொருளாதாரத் தொடர்புகள் போன்றன வளர்ந்திருந்தன. ஆதி கிரேக்க மெய்யியலாளர்கள் இயற்கையில் நேரடியாக ஆர்வம் செலுத்தியதையும் காணலாம். அதனால் அவர்களைப் பௌதிகவாதிகள் என வரலாறு கூறுகின்றது.

ஒரு விடயத்தின் மூலாதார அம்சத்தை ஆராய்வது, அடிப்படை யான கூறுகளைப் பகுத்தாராய்வது, அந்த விடயத்தின் இயல்பு, குணாதிசயங்களையும் தூய அறிவால் விளக்க முயற்சிப்பது என்பன போன்ற பண்புகள் அயோனிய சிந்தனையாளர்களிடம் நன்கு பிரதி பலிப்பதைக் காணலாம்.

என்றாலும், ஆதி கிரேக்க சிந்தனை வரலாறு ஒரு மெய்யி யலின் வரலாறு அல்ல. இவ்வரலாற்றில் காணப்படும் சிந்தனையாளர்கள் உண்மையில் விஞ்ஞானிகளாவார்கள். ஒரு வகையில் ஆதி கிரேக்க மெய்யியலின் தோற்றம் என்பது, ஆதி கிரேக்க விஞ்ஞானத்தின் தோற்ற மாகும். ஆதி கிரேக்க மெய்யியலின் அடிப்படைக் கேள்விகள் ஒரு விடயத்தின் மூலப்பொருள், தோற்றம், இயல்பு யாது என்பதே. இதுவே மெய்யியலின் அடிப்படைக் கருத்தாக அமைகின்றது. கிரேக்க வரலாற்றில் இத்தகைய சிந்தனைகளைக் கொண்டிருப்பவர்கள் மெய்யியலாளர்கள் எனவும் அழைக்கப்பட்டனர்.

ஆதி கிரேக்க மெய்யியலில் மெய்யியல் ஆரம்பித்தது என்பதை விட மெய்யியல் விசாரணை ஆரம்பித்தது எனக் கூறுவது பொருத்த மாகும். ஏனெனில், சில விசேட கருத்துக்களின்படி மெய்யியல் ஒரு தனித்துறை என்பது பொருத்தமாயினும், சில சந்தர்ப்பங்களில் அது ஒரு ஆய்வு முறையாகவும் செயற்படுகிறது. கணிதத்தைப் போல, அளவை யியலைப் போல சில திட்டவட்டமான விதிமுறைகளுடன் விடயங்களை ஆராய்வதற்கு மெய்யியல் எத்தனித்து வருவதை மெய்யியல் வரலாறு முழுவதிலும் காண முடிகின்றது. எனினும், மெய்யியலின் வரலாறு ஒரே விதமான போக்குகளையோ பண்புகளையோ கொண்டிருக்க வில்லை என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

கிரேக்க சிந்தனையாளர்களில் பலர் தவிர்க்க முடியாத வகையில் உலோகாயதவாத வளர்ச்சிக்கு ஆதாரமாக இருந்துள்ளனர். ஆரம்பத்தில் மனிதனுக்கு வெளியே உள்ளவற்றை ஆராய முற்பட்டனர். ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவர்கள் தம் உள்ளுணர்வுகளை ஆராய முற்படவில்லை. இது கிரேக்க மெய்யியலை விமர்சிக்க உதவும் மற்றொரு காரணமாகும். இதனால் இவர்களிற் பலர் மனிதனை இப்பிரபஞ்சத்தின் சிறுபாகமாகவே எடுத்துக் கொண்டுள்ளனர். இவர்கள் உள்ளுணர்வுகளை ஆராய்வதற்கான முயற்சியில் இறங்கவில்லை. குறிப்பாக மனிதனின் வாழ்வு விதி, ஒழுக்கவியல், ஆன்மீகம், என்பவற்றை மிகக் குறைவாகவே கருத்திற் கொண்டனர். எனினும் அடுத்த சில தசாப்தங்களில் கிரேக்க மெய்யியல் சிந்தனையில் இப்பிரச்சினைகளும் முக்கிய இடத்தினைப் பெற்றுக் கொண்டன.

ஆதி கிரேக்கரே உலக விஞ்ஞானச் சிந்தனை நோக்கிற்கும், மெய்யியற் சிந்தனை வளர்ச்சிக்கும் புதிய ஆரம்பத்தை தந்தனர். மனிதச் சிந்தனை வளர்ச்சியில் அவர்களின் பங்களிப்பு தனித்துவமானது.

கிரேக்க மெய்யியலாளர்கள்

தேலிஸ்

இவரது காலப்பகுதி தெளிவாகத் தெரியாவிட்டாலும் இவர் கி.மு. 6ம் நூற்றாண்டிற்கு உரியவர் எனக் கருதப்படுகிறார். பண்டைய கிரேக்க வரலாற்றில் குறிப்பிடப்படும் அறிஞர்களுள் இவர் முதன்மையானவர். தேலிஸ் எகிப்து நாட்டில் கணிதம், வானியல் என்பவற்றைக் கற்றுக் கிரேக்க நாட்டுக்கு அத்துறையைக் கொண்டு வந்தார்.

இவ்வுலகம் எதனால் ஆனது? என்ற அடிப்படை வினாவைத் தொடுத்த முதல் அறிஞன் தேலிஸ் ஆவார். ''தண்ணீரே எல்லாப் பொருட்களுக்கும் மூல காரணம்'' என்பது இவரது கொள்கை. பிரபஞ்சப் பொருட்கள் அனைத்தையும் ஒரே மூலத்துக்குள் கொண்டுவர முயன்ற துடன், நீராலான இவ்வுலகம் நீரில் மிதக்கின்றது எனக் கருதினார். இவரது 'தண்ணீர் மெய்யியல்' பிரதான கூறுகள் பலவற்றைக் கொண்டிருந்தது.

1. இம்மண்ணுலகு நீரில் மிதக்கின்றது.
2. இத்தோடு, எப்பொருளுக்கும் முதற்காரணி, நீர்
3. அனைத்துப் பொருட்களும் உயிர்களைக் கொண்டு விளங்குகின்றன.
4. அனைத்தும் ஆன்மா என்பதும் தேலிஸின் கொள்கைகளாகும். இவரது காலத்தில் பொருள் வேறு, ஆன்மா வேறு என்ற இருமைக் கொள்கை இடம் பெறவில்லை. உயிர் இல்லாத பொருள் ஒன்று இருக்க முடியாது என்பது இவரது கருத்தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அனெக்ஸிமாந்தர்

தேலிஸின் மாணவராக இவர் இருந்த போதிலும், அவரது கருத்துக்களிலிருந்து இவர் வேறுபடுகின்றார். எந்தவொரு தனி மூலத்தையும் பிரபஞ்சத்தின் தனி முதற் காரணமாக இவர் ஏற்கவில்லை. இப்பிரபஞ்சம் எதிர்மறைகளின் தொடர் என்பது இவரது முடிவு. உதாரணமாக:- நீர் - நெருப்பு வன்மை- மென்மை என்பன போன்ற எதிர்மறைகளால் ஆனதே இப்பிரபஞ்சம். இவ் எதிர்மறைகளின் ஏதோ ஒன்றை மட்டும் உலகின் முதற் காரணமாகக் குறிப்பிடுவது பொருத்த மற்றது என்றார்.

பகுக்கப்படாத முழுமையான எல்லையற்ற ஒன்று இருந்தது. அந்த ஒன்றுதான் அனைத்துக்கும் மூலகாரணம். எந்த மூல காரணத்தி லிருந்து இவ்வுலகம் தோன்றியதோ, அதனிடமே அது சேரும். ஆக்கப்பட்ட பொருள் அனைத்தும் அழிந்தே தீரும் என்பது இவரது முடிவாகும்.

இயற்கை ஒரு ஒழுங்கில் உள்ளது என்றும், இவ் ஒழுங்கே நீதி நேர்மை ஆகுமென்றும் அவர் உறுதியாக நம்பினார். மனிதனின் பரிணாமத்தை முதன்முதலில் குறிப்பிட்டவர் இவராவார். மற்ற விலங்கு களைப் போலவே மனிதனும் மீனில் இருந்து பரிணமித்தான் என்று இவர் கூறுகின்றார்.

அனக்ஸிமினிஸ்

இவர் அனக்ஸிமாந்தரின் மாணவர். பொருள் அனைத்தும் காற்றிலிருந்து தோன்றி வளர்ந்து காற்றிலே மறைகின்றன என்பது இவரது கருத்தாகும். முடிவில்லாப் பேரண்டத்தில் எங்கும் நிறைந்து நிற்பது காற்றாகும். காற்று அளவில்லாதது, அழியாதது, மாறும் இயல்புடையது. காற்றின் செறிவுக்கு ஏற்பவும், ஆழத்தின் அளவுக்கு ஏற்பவும் நீர், நெருப்பு, நிலம் போன்ற பொருட்கள் பரிணமிக்கின்றன. காற்றின் செறிவான அளவுக்கேற்ப பொருட்களின் பண்புகளும் வேறு படுகின்றன என்றார்.

ஹெராக்லிட்டஸ்

மாற்றத்துக்கும் இயக்கத்துக்கும் அதிகமான வாய்ப்புடைய நெருப்பே இயற்கையின் முதல் மூலம் என்ற கருத்தை இவர் முன்வைத்தார். இந்நெருப்பு, என்றோ எவராலோ உண்டாக்கப்பட்டதும் அல்ல. அழிக்கப்பட்டதுமல்ல. எல்லாப்பொருட்களும் அவற்றின் பண்புகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவற்றின் எதிர்மறையாக மாறிக் கொண்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக வெப்பம் குளிராகவும், குளிர் வெப்பமாகவும் மாற்றம் பெறுகின்றது. இவ் எதிர்மறை மாற்றம் இடையீடின்றித் தொடர்ந்து நடைபெறும். மாற்றம் இயற்கையின் மாறாப் பண்பாகும். ஓடுகின்ற ஆற்று நீரில் ஒரே பகுதியில் இருமுறை கால்வைக்க முடியாது. இத்தகைய தொடர் எதிர்மறை மாற்றம் மனித வாழ்வைப் போராட்டங்களாக மாற்றுகின்றன. பிறப்பு- இறப்பு, உயர்வு- தாழ்வு, வெப்பம் - தட்பம் என்பனவெல்லாம் ஒன்றின் வெவ்வேறு வெளிப்பாடாகும்.

Z. A. ZAINUDEEN
B.A. (Econ) P.G.D. In Edu.
In - Service Advisor
Zonal Education Office
PUTTALAM.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அத்தியாயம் 2

மெய்யியல் அறிமுகம்

I

பொதுவான கருத்தில் ஒருவனுடைய மெய்யியல் என்பது அவனது அடிப்படை நம்பிக்கைகள், ஆர்வங்கள் முதலியவற்றைக் கொண்டது. இந்த நோக்கில் ஒருவன் தான் ஒரு மெய்யியல் சார்ந்த சிந்தனைகளை வைத்திருப்பதாக உணராவிட்டாலும், ஒவ்வொருவரும் ஏதோ ஒரு மெய்யியற் பார்வையைப் பெற்றிருக்கின்றனர். இந்தப் பார்வை எந்தளவுக்குச் சரியானது, யதார்த்தமானது, ஏற்றுக்கொள்ளக் கூடியது, சாத்தியமானது என்பது விவாதத்துக்கு உரியதாகும். எங்கள் எல்லோருக்குமே ஒவ்வொரு விடயத்தைப் பற்றியும் சில அபிப்பிராயங்கள் இருக்கின்றன. உலகம், இயற்கைப் பொருட்கள், வரலாறு, தாவரங்கள் அவற்றின் தோற்றம், பொருளாதாரம், சமயம், கல்வி, அறிவியல் போன்ற பலதரப்பட்ட மனிதன் சார்ந்த விடயங்களைப் பற்றி எங்கள் எல்லோருக்குமே குறிப்பிட்ட அபிப்பிராயங்கள் இருக்கின்றன.

ஆன்மா, கடமை, உரிமை, சுதந்திரம், மனம், ஒழுக்கம் என்ற விடயங்களைப் பற்றியும், எங்களுக்கிடையில் அபிப்பிராயங்கள் இருக்கின்றன. எங்களுக்கு ஏற்படுகின்ற அபிப்பிராயங்கள், குடும்பம், வாழ்கின்ற சுற்றாடல், பழகுகின்ற விதம், மரபுகள், பண்பாடுகளினாலும் இந்த வகையான அபிப்பிராயங்களைப் பெற்றிருக்கலாம். இருந்தாலும், மெய்யியல் என்ற கருத்துக்கு எமது இந்த அபிப்பிராயங்கள் போதுமான தாயில்லை. இந்த அபிப்பிராயங்கள் மெய்யியலை விளக்கக் கூடியதாகவும் இல்லை.

மெய்யியல் மனித கலாசாரத்தில் ஒரு வரலாற்று ரீதியான உற்பத்தியாகும். இது பல்வேறு துறைகளுடன் தொடர்பு கொண்டது. ஒவ்வொரு துறையிலிருந்தும் அவ்வத் துறைக்கிடையேயான ஆதார சிந்தனையோடு தொடர்பு கொண்டதாகவும் அவற்றைப் பகுப்பாய்வு செய்து விமர்சன நோக்கில் எடுத்துக் கூறுவதாகவும் இது உள்ளது. இதில் குறிப்பாக, அத்துறைகளில் காணப்படும் தர்க்கரீதியான முரண்பாடுகளையும், விடயங்களையும் பக்கச்சார்பின்றிப் பகுத்தறிவுக்கும் நேர்மைக்கும் இசைவான வழியில் அவற்றை மெய்யியல் ஆராய்கின்றது. இச்சிந்தனை ஒழுங்கு மனித கலாசாரத்தின் ஓர் இன்றியமையாத உற்பத்தியும் தேவையும் எனக் கூறலாம். கலாசாரம் என்று நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சொல்வது மனித நடவடிக்கைகளின் மொத்த விளைவுகள் எனக் கொள்ள வேண்டும்.

மெய்யியல் கிரேக்கத்தில் ஆரம்பமானது. மிகவும் சிக்கலான விஞ்ஞானப் பிரச்சினைக்கு மத்தியில் மெய்யியலின் ஆரம்ப அடி எடுத்து வைக்கப்பட்டது. உண்மையில் மெய்யியல் எங்கு, எப்போது தோன்றியது என்று கூற முடியாது போனாலும் ஆதி கிரேக்க காலம் இதற்கான முக்கிய பண்புகளை அதிகம் கொண்டுள்ளதைக் காணலாம். ஆரம்பகால மெய்யியல் சிந்தனைகள் தெளிவான மெய்யியற் தன்மையைக் கொண்டவையல்ல என்பதை ஏற்க வேண்டும். ஏனெனில், அவற்றில் புராணக் கதைகள், சமய நம்பிக்கைகள், கலை சார்ந்த விடயங்கள், விஞ்ஞான உண்மைகள் போன்ற பல பிரச்சினைகள் இருந்தன. அதாவது, மெய்யியல் அல்லாத விடயங்கள் பல அப்போது மெய்யியலுடன் கலந்திருந்தன.

மெய்யியல் என்ற வார்த்தை "Sophia" என்ற கிரேக்க சொல்லிலிருந்து வந்தது. இச்சொல் "Wisdom" என்ற சொல்லுக்குச் சமமாகின்றது. இதைத் தமிழில் 'ஞானம்' எனலாம். இச்சொல்லை ஞானம் எனக் கூறினாலும், "Sophia" என்ற கிரேக்கச் சொல்லுக்கு ஆழமான கருத்துண்டு. எந்தவொரு அறிவும் நடைமுறைப் பயிற்சி களுக்குள் அடங்குகின்றது. உதாரணத்துக்கு, ஹோமர் என்ற கிரேக்க கவிஞர் இந்த வார்த்தையை செயல் திறனுக்கும் உபயோகிக்கின்றார். மெய்யியல் என்ற வார்த்தைக்கு நேரடியான கருத்தாக 'அறிவின்மீது காதல்' எனச் சொல்கின்றனர். என்றாலும், இதனையும் பார்க்க வேறு பல அர்த்தங்களும் இதற்குத் தரலாம். உதாரணமாக, மெய்யியல் என்ற சொல்லின் சொல்லியல் அர்த்தம் அறிவின் மீது காதல் என்றிருந் தாலும், அது அனைத்தையும், கடந்ததாகும். இது உண்மையில் ஒருவனுடைய உண்மையான அறிவை தேடுவதையும் நுண்ணறிவையும், ஒழுங்கமைப்பதன் மீதான காதல் எனலாம்.

ஆரம்பகால மெய்யியல் வரலாற்றைப் பொறுத்த வரையும், பிந்திய மெய்யியல் வரலாற்றைப் பொறுத்த வரையும், மெய்யியலின் பிரதான நோக்கம் இந்தப் பிரபஞ்சத்தையும் மனித வாழ்க்கையையும், யதார்த்ததை யும் புரிந்து கொள்வதைச் சார்ந்ததாக இருந்தது. முக்கியமாகப் பாரபட்ச மற்ற விஞ்ஞான மனபாங்கும், அறிவாராய்ச்சியும் கொண்டதாகவும் பொதுவாக மனித அனுபவங்களினூடாகப் பகுத்தறிவு, நியாயம், தர்க்கம் என்பவற்றுக்குப் பொருந்தும் வகையில் விடயங்களைப் புரிந்து கொள்ளும் ஒரு பிரத்தியேகமான அறிவாகவும் மெய்யியல் உருவாகியது. இதனால் ஏனைய துறைகளிலிருந்து வேறுபட்ட ஒரு போக்கும் அணுகு முறையும்

Z. A. Zanhir
Subject Coordinator
Zonal Education Office
Puttalam.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இதில் உள்ளதாக கூறலாம். ஒரு வகையில் மெய்யியலின் காணப்படும் பல வகையான செயற்பாடுகள் உலகைப் பற்றி, இயற்கையைப் பற்றி, சுற்றாடலைப் பற்றி, மனிதனைப் பற்றி, வாழ்வைப் பற்றி, மனித இன்னல்கள், நம்பிக்கைகள் பற்றி அவை ஆராய்வதாக உள்ளன. இதனால் மெய்யியல் சிலர் கருதுவது போல் மனிதனுக்கு அப்பாற்பட்ட சிந்தனை அல்ல. ஆனால், மனித வாழ்வு மனித சிந்தனை முதலியவற்றை வேறு ஒரு கண்ணோட்டத்தில், இதுபற்றிய விடயங்களின் அடித்தளத்தையும், யதார்த்தத்தையும், உண்மையையும், தத்துவத்தையும், பாரபட்சமின்றிக் காணும் ஒரு விசாரணையாக அமைந்துள்ளது. அதன் நீண்ட கால வரலாற்றில் மெய்யியல் தனித்த சிந்தனைப் பாங்கானதாக மாத்திரம் அல்ல, இந்த விடயங்கள் எல்லாவற்றையும் ஒரு ஒழுங்குமுறையோடும் நியாயித்தலோடும் சொல்வதற்காக விஞ்ஞானரீதியாக நிர்ணயிக்கக் கூடியதாக முறைகளை அது வகுத்திருக்கின்றது. கடந்த காலத்திலும் தற்காலத்திலும் மெய்யியலானது சிந்தனை பூர்வமான ஆய்வுகளில் மட்டுமன்றிச் சாதாரண உலக நிகழ்வுகளையும் மனிதவாழ்வு அனைத்தை யும் பற்றிய விடயங்களையும் கவனத்திற் கொண்டுள்ளது.

பிளேட்டோவும், அரிஸ்டோட்டிலும் எல்லா மெய்யியல் தொடர்பிலும் 'ஆச்சரியம்' என்பது இருப்பதாக குறிப்பிடுகின்றனர். வாழ்வதற்கு உள்ள மனிதனின் ஆர்வம், இயற்கையை அறிதல் ஆகிய இரண்டுமே இதில் இணைந்துள்ளன. இது அறிவை நோக்கி மனிதனை ஆழமாக இட்டுச் செல்கின்றது. ஆச்சரியம் எனக்குறிப்பிடும்போது இது பலவிதமான அர்த்தங்களைத் தருவதாக உள்ளது. ஏதாவது புதிய, பொருட்களைக் காணும்போது ஏற்படும் பயம், இந்தப் பயத்திலிருந்து, இந்தப் பயத்துக்கு உரிய பொருள் எங்களுக்குச் சார்பானதா? எதிரானதா? எங்களுக்கு நண்பனாகக் கூடியதா எதிரியாகக் கூடியதா? என்ற வினாக்கள் எழுகின் றன. இவற்றோடு மனிதனுக்கு ஏற்படுகின்ற இயல்பான தொடர்புகள், உறவுகள், தருகின்ற அறிமுகத்தினால் அவை எமக்குப் பாதிப்பைத் தருவனவா அல்லவா என மனிதன் விளங்கிக்கொள்ள முயல்கிறான்.

இன்னொரு வகையான ஆச்சரியம் மிகவும் ஆழமானது. இது கோட்பாட்டு ரீதியிலான ஆச்சரியம், எனக் கூறலாம். இந்த ஆச்சரியம் உலகத்தைப் பற்றிய உண்மையான பார்வையையும், இந்த ஆச்சரியத்தி னால் எழும் விடயங்கள் பற்றிய கண்டுபிடிப்பும் இணையும் வரை இவ்வாச்சரியம் இது தீராது.

அதாவது, கோட்பாட்டுரீதியான விடயங்களை ஆராயும் ஆர்வம் மனித வாழ்க்கை முழுவதும் நீண்டு செல்கின்றது. இந்தக் கோட்பாட்டு ரீதியான ஆய்வு ஆர்வத்தின் முதலாவது தொடக்கம் என மெய்யியலைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

குறிப்பிடலாம். அது ஏதாவது ஒரு வகையில் சமயரீதியாக, மரபுரீதியாக ஒழுக்கரீதியாக, வழக்காற்றுரீதியாக, பழைமையான நம்பிக்கைகள் ரீதியாக மனிதனிடத்தில் ஒரு உலகப்பற்றையும், மனிதனின் பார்வையிலிருந்து கருத்து ரீதியான அல்லது கோட்பாட்டுரீதியான விடயங்களை ஏற்றுக் கொள்கின்ற தன்மையாகவும் இது இருக்கின்றது.

அதனுடைய பிரதான அறிவு முறையாக விசாரணை இருந்து வருகின்றது. ஒரு விடயத்தை ஏற்கப் போதிய சான்றுகளை தேவை. மெய்யியலானது ஒன்றின் உண்மை, யதார்த்தம், ஒன்றின் இயல்பு, ஒன்றின் பிரிக்க முடியாத தன்மை, அதன் நியாயம், அதன் ஏற்புடைமை, என்று ஒரு விடயத்தை அறியும் விதத்தினாலும் மெய்யியல் நோக்கினா லும், அது விஞ்ஞானத்தோடு நெருங்கிய தொடர்பு உடையது. மேலும், மெய்யியற் சிந்தனை சுதந்திரமானது, அதற்குக் கட்டுப்பாடுகள் இல்லை. அது எதிலும் தங்கியிருக்கவும் இல்லை.

விஞ்ஞானத்துக்கும் மெய்யியலுக்கும் இடையிலுள்ள தொடர்பில் மிக முக்கியமானது கிரேக்க காலத்தில் மெய்யியல் தோன்றியபோது, விஞ்ஞானத்துடன் மெய்யியல் பெற்றிருந்த நெருங்கிய தொடர்பாகும். ஆதி கிரேக்க காலத்தில் ஒவ்வொரு ஆய்வையும் தொடங்கும் போது அன்றைய (கிரேக்க) சிந்தனையாளர்கள் அதைத் தூய அறிவுக்காக என்ற நோக்கில் ஆராய்ந்தார்கள். அவர்களின் அந்த நோக்கம் அவர்களை மெய்யியற் சிந்தனைக்கு இட்டுச்சென்றது. அதாவது, அவர்கள் ஒரு பொருளில் பார்த்தால் மெய்யியலாளர்களாக இருக்கவில்லை. அவர்களது குணாம்சங்களும் கோட்பாட்டுரீதியான ஆர்வமும், அவர்கள் மேற்கொண்ட ஆய்வுகளும் மெய்யியலாக இருக்கவில்லை. ஆனாலும் அவர்கள் மெய்யியலாளர்களாகக் கருதப்பட்டனர்.

இங்கே நாம் மெய்யியலைப் பற்றிக்கூறப்படும் பல்வேறு கருத்துக் களை அவதானிப்போம். ஆனால், இக்கருத்துக்கள் மெய்யியலைப் பற்றிச் சரியானதும் திட்டவட்டமானவையுமான வடிவத்தைத் தரவில்லை, எனினும், இவை என்ன கூறுகின்றன எனப் பார்ப்போம்.

பல்வேறு விஞ்ஞானங்கள், அறிவுத்துறைகள், மனித அனுபவங்கள் முதலானவற்றின் முடிவுகளை மெய்யியல் தேடுகின்றது. அதன் மூலம் அவற்றை அடிப்படையாக வைத்து ஒரு பொருளின் பொதுவான உலகக் கண்ணோட்டத்தை உருவாக்க அது முற்படுகின்றது. உண்மையில் சோக்ரட்டீஸ், பிளேட்டோ, அரிஸ்டோட்டில், அக்குவைனாஸ், ஹெகல், மார்க்ஸ், வைட்ஹெட் போன்ற மெய்யியல்வாதிகள் இதே போக்கில் தமது மெய்யியல் கட்டமைப்பை உருவாக்கினார். உண்மையில் எல்லா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மெய்யியல்வாதிகளும் தமக்கென ஒரு பகுப்பாய்வு முறையைப் பயன் படுத்தியுள்ளனர். எல்லா மெய்யியல்வாதிகளும் மொழியியலைப் பயன் படுத்துவதில் அக்கறை கொண்டுள்ளனர். பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மெய்யியல் ஒரு போராட்டமாக அல்லது பிரச்சினைகளின் தொகுப்பாக தன்னை ஆக்கிக் கொள்கின்றது.

எவ்வகையான மனிதப் பிரச்சினைக்கு மெய்யியல் விடையளிக்க வேண்டும்.? அதாவது, மனித இருப்பைப் பற்றி மிகவும் ஆழமான விடயங்களை, அதாவது கண்ணாற் பார்ப்பதற்கும், காதாற் கேட்பதற்கும் முடியாதவற்றை மெய்யியல் ஆராயவேண்டும் எனவும் சிலர் விரும்புகின்றனர். இவ்விதமான பிரச்சினைகளுக்குரிய பகுதிகளுக்கும் மெய்யியலில் இடம் வழங்கப்பட்டது. இவ்வகையான பிரச்சினைகளுக்காக ஒரு தீர்வைக் காண்பது கடினம் எனினும், சில பிரச்சினைகளுக்குரிய விடைகளானது திருப்தியானதாக இருக்கவில்லை. சில திட்டவட்ட மானவையாகக் காணப்பட்டன. இன்னும் சில ஆராயப்பட வேண்டியவை யாகவே இருந்தன. இப்போது நாம் கேட்பது, உண்மையில் மெய்யியலில் எழக்கூடிய கேள்வி என்ன அல்லது மெய்யியலில் நாம் எழுப்பக்கூடிய கேள்வியின் தன்மை என்ன என்பதாகும். உண்மை என்றால் என்ன? நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான வேறுபாடுகள் என்ன? வாழ்க்கை என்பது என்ன? இந்தப் பிரபஞ்சத்தில் மனித வாழ்க்கைக்குரிய இடம் என்ன? இப்பிரபஞ்சம் மனிதனோடு நட்புறவு உடன் உள்ளதா அல்லது இல்லையா? ஏன், மனிதன் உரிமைக்காகவும் சமூக நீதிக்காகவும் போராட வேண்டும்? அரசு, நீதி, கடமை, கடப்பாடு, சுதந்திரம், சமத்துவம், இவற்றின் உண்மையான பொருள் என்ன? சமூகம் என்றால் என்ன? சமூகத்தையும் தனிமனிதனையும் எவ்வாறு வேறு பிரித்துப்பார்க்கலாம்? சமூகமா, தனிமனிதனா? முதலிடம் எதற்கு? நல்ல அரசு, நல்ல சமூகம், நல்ல தனிமனிதன் என்பவற்றின் பொருள் என்ன? சிலநேரம் மனிதர்களில் ஆண்களும் பெண்களும் தமது உயிரை அழித்துக் கொள்ளவேண்டும் என்று ஏன் கூறுகின்றனர்? சிலர் உயிர் பெறுமதிமிக்கது என்கின்றனர். இது ஏன்? எந்தப் பெறுமதிக்காக, எந்த இலட்சியத்துக்காக நாம் வாழ வேண்டும்? வாழ்க்கையின் பெறுமானங்கள் என்ன? அறிவின் ஊற்றுக்கள் என்ன? அறிவின் நம்பகத்தன்மை என்ன? அறிவின் வகைகள் என்ன? இவையும் இவை போன்ற பல பிரச்சினைகளும் மெய்யியலில் உள்வாங்கப் படும் பிரச்சினைகளாகக் காணப்படுகின்றன.

II

மெய்யியலுக்கு அதன் நீண்டகால வரலாற்றில் பல்வேறு அர்த்தங்கள் தரப்பட்டுள்ளன. ஆதிகிரேக்கர் ஞானத்தின் மீது காதல் என்று தான் மெய்யியலை அறிந்திருந்தனர். இன்று மெய்யியல் பல்வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பின்னணிகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. 'ஒன்றுக்கான' மெய்யியல் என்ற பொருள் அடிக்கடி இதற்குத் தரப்படுகிறது. ஒரு கண்ணோக்கைப் பெற்றிருப்பது (Point of view)சில பெறுமானங்கள் பற்றிய கண்ணோக்காக, வாழ்வு பற்றிய கண்ணோக்காக இது இருக்கலாம். அடுத்ததாக, மெய்யியல் சிலபோது தவறாக, பொருளாதார அர்த்தங்களிற்கும் இட்டுச் செல்லப்பட்டுள்ளது. சிலர் மெய்யியலைத் தனிநபரின் முற்கோட்ட எண்ணங்கள் (personal pregudice) எனக்கருதுகின்றனர். சிலர் மறைஞான அறிவுடன் (Occult science) வானசாஸ்திரம் போன்றவற்றுடன் சமப்படுத்து கின்றனர். இன்னும் சிலர் மெய்யியல் ஒரு மானிடவியல் சம்பந்தப்பட்ட பாடம் என்று கருதுகின்றனர். இதுவும் தவறானதொரு எடுகோளாகும். பொதிும் பேசப்படும் ஆதிகிரேக்க காலத்திலிருந்து கணிதம் அளவையியல், விஞ்ஞானம், முறையியல் என்பன மெய்யியலில் பிரதான இடத்தைப் பெற்றுள்ளன. மேலும் விஞ்ஞான மெய்யியல் இன்று அதன் பிரதான பாகங்களில் ஒன்றாகியுள்ளது.

மனித வாழ்வில் உண்ணுவது, தொழில் புரிவது, காதல் செய்வது என்பவற்றுடன் வேறும் சில நாளாந்தச் செயற்பாட்டிற்குப் புறம்பான தாகவோ அல்லது நாளாந்த நடவடிக்கைகளிலிருந்தோ சில கேள்விகள், பிரச்சினைகள் எழுகின்றன. காலையில் எழுந்து பல்கலைக்கழகம் வருவதற்காக பஸ்ஸைப் பிடிப்பதில், அல்லது பகல் 12.00 மணிக்கு உணவகத்திற்கு விரைவதில் நாளாந்த நடைமுறைதான் உள்ளது. இவற்றிலிருந்து அடிப்படைக்கருத்துக்கள் (Fundamental Ideas) எழுவ தில்லை. அதாவது ஒருவனின் அல்லது ஒரு குழுவின் அல்லது மனிதனின் வாழ்வையும் இருப்பையும் இலட்சியங்களையும் பாதிக்கும் கருத்துக்கள் இவ்வகை நடவடிக்கைகளில் இடம் பெறுவதில்லை. ஆனால் சில வேளைகளில் மனிதன் அவ்வாறான கேள்விகளுக்கும், பிரச்சினை களுக்கும் முகங் கொடுக்கின்றான்.

'நட்பு' உண்மையா, அஸீஸ் உண்மையிலேயே நல்லவனா, நன்மைக்கும் தீமைக்கும் வேறுபாடுகள் உள்ளனவா? ஒழுக்கம் ஒழுக்க மின்மை என்றால் என்ன? இவை சிக்கலானவை. இவைபற்றி நிரூபணங்கள் உருவாக்க ஆழமான கருத்துபலம் தேவை. காதல், அறிவு, நீதி, அவன் நீதி தவறி விட்டான் என்றெல்லாம் நாம் இதுபோன்ற பதங்களைப் பயன்படுத்தி வந்தாலும் இவை பற்றி அறிவுபூர்வமான ஆழமான கருத்துக்களை, வாதங்களை உருவாக்குதல் கடினமானதாகும்.

மெய்யியல் ஆய்வுகளில் மைய இடத்தை 'கருத்து' என்பதற்கு வழங்கலாம். நமது நோக்குகள் பற்றியும், பிறர்பற்றியும் சூழ உள்ள இயற்கை பற்றியும் நாம் தரும் விளக்கங்கள், விபரிப்புக்கள், கருத்துக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

என்ற கருவிகளால் தான் செயற்படுத்தப்படுகின்றன. கருத்துக்கள் என்பது என்ன? இதுபற்றிய விரிவான விளக்கம் இங்கு இப்போது அவசியமில்லா விட்டாலும் ஒரு முக்கிய குறிப்பை இங்கு தரலாம். நம்பிக்கைகள் அல்லது கோட்பாடுகள் இதில் அடங்கும். கடவுள் இருக்கிறார். உலகைப் புலன்களால் அறிகிறோம், அழகிய கலைவடிவம் என்பன போன்ற எமது உரைகளில் இது பிரதிபலிப்பதைக் காணலாம். இவ்வடிப்படையில் இருந்து பார்க்கும்போது மெய்யியல் அடிப்படைக்கருத்துக்களையே, அதாவது நம்பிக்கைகள், எடுகோள்கள், எண்ணக்கருக்கள் ஆகிய வற்றையே மெய்யியல் ஆய்வுக்குள்ளாக்குகிறது அல்லது இவைகள் தான் அதன் பரப்பிற்குள் அடங்குகின்றன எனலாம்.

அடிப்படைக் கருத்துக்கள் என்பது பொதுமையானவை. Mark B. Woodhouse தரும் உதாரணத்தின் மூலம் கூறுவதாயின் பொதுமை யாக்கம் அல்லது பொதுத்தன்மை (Generality) என்பது அது எடுத்துக் கொள்ளும் பரப்பின் அளவில் தங்கியிருக்கிறது. கிறிஸ்தவ சமயத்தை உதாரணத்திற்கு எடுப்போம் இதில் சமயம், கிறிஸ்தவம், புரட்டஸ்தாந்து மதம் என்ற மூன்று விடயங்கள் அடங்கியுள்ளன. புரட்டஸ்தாந்து மதம் என்பதை விட கிறிஸ்தவம் என்ற பதம் பொதுமைகூடியது. ஆனால், சமயம் என்பதிலும் பார்க்கக் குறைவானது. சமயம் என்றால் என்ன என்பது கிறிஸ்தவம் என்றால் என்ன? என்பதைவிட ஆழமானது மெய்யியலாளரின் கரிசனைக்குரியது பல பிரச்சினை விபரிப்புக்கு உட்பட கூடியது. அதனால் அடிப்படைக்கு அப்பால் இருக்கும் (சாதாரணமான) கருத்துக்கள் மெய்யியல் ஆய்வுகளில் குறைவான முக்கியத்துவத்தையே பெறுகின்றன. உதாரணமாக மெதடிஸ்ட் அல்லது கத்தோலிக்க வேறு பாடுகள் எவை? இதற்கான விடை அவற்றின் பொருள், உண்மை, இடைத்தொடர்புகள் பற்றிய விளக்கங்களை பெறுவது அல்லது அவ்வகையான விளக்கங்களைப் பரிசீலிப்பது ஆகும். சுருக்கமாகக் மெய்யியல் பிரச்சினைகள் பொருள், உண்மை, அளவையியல் தொடர்புகள் என்பவற்றில் தான் தங்கி உள்ளன.

இரு முரண்பட்ட நம்பிக்கைகள் ஒன்றுடன் ஒன்று மோதும் இடம் என்றும் மெய்யியல் பிரச்சினை தோன்றக் கூடிய இடம் என்றும் கூறலாம். M.B Woodhouse தரும் உதாரணத்தைப் பயன்படுத்தி மேலும் இதனை விளக்கலாம். மறை ஞானிகள் (Mystics) தாம் நேரடியாகவும் மிக நெருக்கமாகவும் கடவுள் அனுபவங்களைப் பெறுகிறோம் என்று கூறுகின்றனர். அதாவது அவர்கள் உணர்வுகளில் கடவுளை நேராகத் தரிசிக்கின்றனர். ஆனால், உளவியலாளர்கள் இவ்வகை அனுபவங்கள் ஒரு விசேட தன்மையான அனுபவம் அதாவது மருட்சி அடைதல் (halluciation) என்பதை விட இது ஒன்றுமில்லை என்று கூறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மெய்ஞானிகளும் (Mystise) உளவியலாளர்களும் சில மனிதர்கள் தமது, அனுபவத்தில் ஒரு உயர்ந்த பொருளை நெருங்கி இணைவதாக உணர்கின்றனர் என்பதை ஏற்றுக் கொள்ளுகின்றனர். ஆனால், இந்த அனுபவம் பற்றிய விபரிப்பில் அவர்கள் முரண்பட்டுள்ளனர்.

உண்மை என்ற விடயத்தையும் மறைஞானிகள் அனுபவ உதாரணத்துடன் நோக்கினால் மறைஞான அனுபவம் என்று உண்மையாக ஒன்று உண்டா? என்று ஒரு மெய்யியலாளன் அறிய முயல்கையில் அவன் தாயுமானவரின் அல்லது தற்கலை பீர்முஹம்மது சாஹிபின் கடவுள் அனுபவத்தை அதாவது தனிநபரின் அனுபவங்களாக அன்றி அவ்விடயம் பற்றிய முழு வகுப்பைத்தான் அவன் கருத்திற் கொள்கிறான். தனிநபர் ஒருவனின் அனுபவக் கூற்று மெய்யியலாளனுக்கு பெரும் ஆர்வத்தைத்தருவதில்லை. மெய்யியல் பிரச்சினைகள் விஞ்ஞானத்தினாலும் பொது உணர்வி (Commensense) னாலும் மட்டும் தீர்க்கப்பட முடியாதவை. மெய்யியல் பிரச்சினை மையங்களும் (Issues) அனுபவ நேர்வுகளும் மெய்யியல் ஆய்வுகளில் தொடர்புப்பட்டிருந்தாலும் நிலைமை இதுதான். குறிப்பாக மெய்யியல் பிரச்சினை மையங்கள் நேராக அனுபவ நேர்வு சார்ந்தனவாக இருப்பதில்லை.

அனுபவப் பிரச்சினைகளை அவதானம், பரிசோதனை மூலமாகத் தீர்க்க முடியும். பிரச்சினைக்குரிய பொருளை நேர் அவதானத்திற்கும் அளவீட்டிற்கும் உட்படுத்த வாய்ப்புண்டு. நேர் முறையில் அல்லது நேரல் முறையில் ஒரு அனுபவப் பிரச்சினையை (Empirical Issue) ஆய்வு செய்து அதன் முடிவைக் கண்டுபிடிப்பது ஒரு விஞ்ஞானியின் தொழிலாகும். அது மெய்யியலானனுக்குரியதல்ல. மெய்யியலாளான் அனுபவ எதிர்வு கூறல்களுக்கு முன்வருவதில்லை; அது அவர்களின் பணியல்ல. அனுபவரீதியான பிரச்சினைகளை வாய்ப்புப் பார்க்கலாம். அவை உண்மையா பொய்யா எனப் பரிசோதித்து அறியலாம். விஞ்ஞானம் அல்லது சமூகவிஞ்ஞான ஆய்வுகளிற்போல மெய்யியற் கோட்பாடுகளை அனுபவ ஆய்வுக்குட்படுத்த ஒரு மெய்யியலாளன் முயல்வதில்லை ஆனால் அனுவத்துடன் அவனது பிரச்சினைகள் பகுப்பாய்வுகள் சம்பந்த மற்றது என்பது அல்ல.

மெய்யியலாளர்கள் அனுபவப்பிரச்சினைகளை எழுப்பலாம். விஞ்ஞானிகள் மெய்யியல் பிரச்சினைகளை எழுப்பலாம். இருந்தபோதும் இவ்விருபகுதியினருக்குமிடையில் தொடர்புகள் இல்லாத பலபகுதிகள் உள்ளன. ஆதிகிரேக்கத்தில் சிலமெய்யியலாளர் அணுவை விளக்குதல் போன்ற விஞ்ஞான ஆய்வுகளில் ஈடுபட்டனர். இன்று பல விஞ்ஞானிகள் மனிதப் பெறுமானம், சுதந்திரம் கடமை போன்ற மெய்யியற் பிரச்சினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

களை எழுப்பி வருகின்றனர். எவ்வாறாயினும் விஞ்ஞானத்தினால் மெய்யியல் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைத் தரமுடியாது. சுதந்திர சமூகத்தில் தணிக்கை தேவைதானா? என்பதற்கு விஞ்ஞானிகள் விளக்கம் தரக்கூடிய நிலையில் இல்லை. சுக மரணத்தை மனிதன் எற்றுக் கொள்வது சரியா என்ற பிரச்சினைக்கும் விஞ்ஞானத்தில் விடை தேடுவது கடினம்.

விஞ்ஞானத்திற்கும் மெய்யியலுக்குமான வேறுபாடுகள் பற்றிக் கூறும்போது அதில் சில கருத்துத்தவறுகள் உள்ளன. விஞ்ஞானம் அவதானத்திற்குரிய உலகை மட்டும்தான் ஆராய்கிறது. மெய்யியல் மர்மமான, அவதானிக்கமுடியாத விடயங்களான ஆன்மா, கடவுள் பற்றியும் ஆராய்கிறது. ஒரு பௌதிகவியல் அறிஞன் புவியீர்ப்பு, நியூரோன் போன்ற அவதானிக்க முடியாதவற்றையும் இயற்கையை விளக்க கையாள்கிறான். மெய்யியல் பிரச்சினைகளைப் பொறுத்தவரை அவதானித்தல் ஒரு முக்கிய இடத்தைப் பெறவில்லை.

எவ்விதமான நடைமுறைச் சலுகைகள் பற்றிய நோக்கமுமின்றி மெய்யியல் பிரச்சினைகளை விளங்குவதற்கும் அவற்றிற்கான தீர்வுகளைப் பெறுவதற்கும் மெய்யியலாளர் முன்வருகின்றனர். கிரேக்கத்தில் சோக்ரட்டீஸ் அல்லது பிளேட்டோ மாதிரி அறிவைத் தேடுவதும் அதை அடைதலுமே பிரதான தமது இலட்சியம் எனக் கொள்கின்றனர். மேலும் மெய்யியலாளன் அன்றாட வாழ்வோடு தொடர்பற்ற தனக்கோ தான் வாழும் சமூகத்திற்கோ உடனடியாகவோ தாமதித்தோ உலகியல் நலன்களைத் தராத பிரச்சினைகளையே முதன்மையான பிரச்சினைகளாக அதிக சந்தர்ப்பங்களில் எடுத்துக் கொள்கிறான். என்ன பொருளில் எண்கள் இருக்கின்றன என்று கூறலாம்? என்ற கேள்வியை அவன் கேட்கிறான். சுயாதீன சித்தம் உண்மையா? நன்மை விவரிக்கக் கூடியதா என்பன போன்ற கேள்விகளிலும் அவன் ஆர்வமுள்ளவனாக இருக்கிறான். ஆனால், நடைமுறையில் மனிதர்களுக்குப் பயன்தரும் பிரச்சினைகளை அவன் கையாள்வதில்லை என்பது இதன் பொருள் அல்ல. வைத்தியர்கள் வேலை நிறுத்தம் செய்யும் உரிமை உள்ளவர்களா? தண்டனை நியாயப்படுத்தக் கூடியதா? வன்முறையின் சமூக யதார்த்தம், Social reality என்ன? என்ற கேள்விகளும் அவனது நிகழ்ச்சி நிரலில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன என்பது மனங்கொள்ளத்தக்கது.

III

மெய்யியலின் வரலாறு 2000ஆம் ஆண்டுகளுக்கு மேற்பட்டதாகும். மெய்யியலின் தோற்றமும், வளர்ச்சியும் பொதுவாக கிரேக்க நாகரிகத்தில் சோக்ரட்டீஸினுடைய காலத்துக்கு முன்பிருந்தே பேசப்பட்டு வந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உலகின் ஒவ்வொரு நாகரிகமும் தத்தமது பண்பாட்டுக்கு ஏற்றவகையில் அறிவையும், விஞ்ஞானத்தையும் பெற்றுவந்துள்ளன. ஆனால், மெய்யியல் என்பது ஒரு பிரத்தியேகமான முறையில் ஆரம்பத்தில் கிரேக்கத்தில் உருவானதைக் காணலாம். மனித அறிவில் ஒரு வித்தியாசமான பண்பினை மெய்யியல் என்ற சொல் ஏற்படுத்தியது.

ஒவ்வொரு நாகரிகமும் தமது சிந்தனையையும் மெய்யியலையும் பற்றிய கருத்துக்களை மனித சமுதாயத்திற்கு கூற விரும்புகின்றது. நாகரிகம், பண்பாடு என்ற சொற்களோடு இருக்கின்ற ஒன்று அந்த நாகரிகத்தின் அல்லது பண்பாட்டின் அறிவுபற்றிய நோக்கும் மெய்யியல் ரீதியான அதன் கருத்து வடிவமுமாகும். இதனால், ஒவ்வொரு நாகரிகமும் தனது மெய்யியல் பின்னணியை வலியுறுத்த விரும்புகின்றது.

மெய்யியலும் விஞ்ஞானமும்

வாழ்வின் பெரும் பகுதியை மனிதன் பொருளற்ற ஆராய்ச்சியில் வீண் செய்கின்றான். என்றாலும், அவ்வப்போது அவனது சிந்தனையில் ஆழமான மெய்யியல் சார்ந்த வினாக்கள் எழாமல் இருப்பதில்லை. அன்றாடப் பிரச்சினைகளின் ஆழத்திலிருந்து மனிதனை விடுவித்து மகிழ்ச்சி தருவது மெய்யியல் பிரச்சினைகளில் காணப்படும் தீர்வாகும். மெய்யியல் என்பது வரட்டுச் சிந்தனைகளின் தொகுப்பல்ல. அது வாழ்க்கை நெறி களின், சிந்தனைகளின், முறையியல்களின் பகுப்பும் தொகுப்புமாகும்.

விஞ்ஞான ஆராய்ச்சிக்கு இருக்கின்ற வளர்ச்சியும், ஆதரவும் மெய்யியல் ஆராய்ச்சிக்கு இல்லை. உடனடியான பொருளாதாரப் பயன்கள் மெய்யியலில் இல்லை. ஆனால், விஞ்ஞான ஆராய்ச்சிகளின் எல்லைக்கு அப்பாற்பட்ட கருத்துக்களை மெய்யியல் ஆராய்கின்றது. நன்மை -தீமை, அழகு- அழகின்மை, பிறப்பு-இறப்பு, விதி-சுயாதீனசித்தம் (சுயவிருப்பத் தீர்மானம்) என்பன போன்ற மெய்யியற் பிரச்சினைகள் விஞ்ஞான எல்லைக்குள் அகப்படாத கருத்துக்களாக உள்ளன. ஆயினும் விஞ்ஞானத்திற்கும் உள்ள தொடர்பு நுட்பமான வகையில் இருந்து வருவது அவதானத்திற்குரியதாகும். 'மெய்யியல் ஆராய்ச்சியின் தீர்வுகளே விஞ்ஞானத்தின் கருப்பொருளாக அமைகின்றன. வெற்றி தேடிப் போரிடுவது மெய்யியல். வென்றதைப் பேணிக்காப்பது விஞ்ஞானம்' என்ற கூற்றை இங்கு நோக்கலாம்.

இயற்கையை முழுமையாகச் சிறு சிறு பகுதிகளாகப் பிரித்து அவற்றைத் தனித்தனியே ஆராய்வது விஞ்ஞானத்தின் இயல்பாகும். இயற்கைக் கூறுகளை விபரிக்கின்ற அறிவியல் அறிஞன் அவற்றின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நோக்கம் பற்றியோ! அல்லது குறிக்கோள் பற்றியோ! ஆராய்ந்து நல்லது - தீயது என்று மதிப்பீடு செய்வதில்லை. எந்த மதிப்பீட்டோடும் தன்னை இணைத்துக் கொள்ளாமல் தனித்து நின்று ஆராய்ந்து பார்ப்பவனே அறிவியல் அறிஞன்.

ஒரு கருத்தில் மெய்யியல், இயற்கைக் கூறுகளை இணைத்து முழுமைப்படுத்தி இயற்கை ஒழுங்குகளின் இணைக்கப்பட்டிருக்கும் எண்ணற்ற கூறுகளின் ஆழ்ந்த குறிக்கோள்களை ஆராய்ந்து மதிப்பீடு செய்வதாக உள்ளது. மெய்யியல் அறிஞனுக்கும் ஆய்வுப் பொருளாக அமைவது இயற்கை தான். ஆனால், அறிவியல் அறிஞனைப் போல் இயற்கைக் கூறுகளை விபரிப்பதோடு நின்று விடாமல் மெய்யியல் அறிஞன் மதிப்பீடு செய்யும் நோக்கோடும் இயற்கையை அணுகுகின்றான்.

இயற்கையின் பல்வேறு கூறுகளை ஆராய்கின்ற பல்வேறு விஞ்ஞான இயல்கள் முடிவுகளை ஏற்படுத்துகின்றன. இம் முடிவுகள், முரண்பட்டுவிடாமல் ஒழுங்குப்படுத்தி முழுமையுடன் தொடர்புபடுத்திக் காண்பது மெய்யியலாகும்.

மெய்யியல், விஞ்ஞானம் ஆகிய இரண்டின் நோக்கங்களும் அறிவு பற்றிய தேடலில் அக்கறை செலுத்துவதாகவே இருக்கின்றது. மெய்யியலையும், விஞ்ஞானத்தையும் பற்றி அரிஸ்டோட்டில் கூறும்போது, அவற்றினுடைய மூலவோர்கள் 'ஆச்சரியம்' என்பதிலிருந்து தோன்றியது என்றார். முழு அறிவையும் அறிதல், அறிய வேண்டும் என்ற ஆவல் என்பதையே ஆச்சரியம் குறிக்கின்றது. ஒவ்வொருவரும் தமது முக்தியைப் பெறுவது எப்படி என யோசித்தால் அது பிரயோசனமளிக்காது. அறிவைப் பற்றி மேலே சொன்ன 'ஆச்சரியம்' என்ற விடயம் மெய்யியலின் தோற்றத்துக்குக் கொண்டு வருகின்றது.

பொதுவாக மெய்யியலை நான்கு கூறுகளாகப் பிரித்து நோக்கலாம்.

1. அளவையியல் (Logic)
2. அழகியல்,இரசனையியல் (Esthetics)
3. ஒழுக்கவியல் (Ethics)
4. பௌதிகஅதீதம் (Metaphysics)

ஐம்புலன்களின் தகவல்களைத் திரட்டியும், பகுத்தும், தொகுத்தும், சிந்தித்தும் ஏற்புடைய சிந்தனைக்கான முறைகளை எடுத்துச் சொல்வது அளவையியலாகும். மனிதனின் சிந்தனை வெளிப்பாடுகளில் நிகழக்கூடிய குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி நீக்குவதும் அளவையியலின் பணியாகும். அளவையியல் முறைகளைக் கொண்டு இயற்கையை ஆராய்வதால் ஏற்படுகின்ற முடிவுகளின் தொகுப்பே பல்வேறு விஞ்ஞானங்களாக உருவாகின்றன என்றும் கூறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பெறுமானங்கள்

உண்மையான இலட்சிய அழகு, மாறாத அழகு எதுவென ஆராய்வது அழகியல். அழகியற் கருத்துக்களின் அடிப்படையில் எழுவது இலக்கியம், சிற்பம், ஓவியம் போன்ற நுண்கலைகள் இவற்றின் உணர்வு களையும் இரசனையையும் மதிப்பீடு செய்வது அழகியலின் அல்லது இரசனையியலின் பணியாகும்.

அளவையியல், இரசனையியல், ஒழுக்கவியல் என்ற மூன்று அறிவுத் துறைகளும் புலன் சாராதவை. மேல்வரம்பிட்ட அல்லது நியமங்கூறும் விஞ்ஞானம் (normative) என்ற பிரிவுக்குள் வருபவை. இங்கு நேர்வுகள் (facts) பற்றிய ஆய்வுகள், தரவுகளின் ஒழுங்கு முறைகள் ஆய்வுக்கெடுக்கப்படுவதில்லை. ஆனால் அவற்றின் தராதரங்கள் அல்லது தரமதிப்புக்கள் ஆராயப்படுகின்றன. மெக்கன்ஸி, இதனை disscussion of standards என்று கூறுகிறார். அளவையியல் உண்மையில் தர மதிப்பினை ஆராய்கின்றது. சிந்தனைப் போக்குகளிற் காணப்படும் பல்வேறு படிமுறைகள் பெற்றுள்ள கூறுகளின் வாய்ப்பினை (வலிதினை)ப் பார்க்கின்றது.

ஒழுக்கவியலும், அழகியலும் தரப்பெறுமானத்தைப் பார்க்கின்றன. அழகியல் அழகின் தரமதிப்பைப் பார்க்கிறது. ஒழுக்கவியல் நன்மையின் தரமதிப்பைப் பார்க்கிறது. ஒழுக்கவியல் பெறுமானங்களை (Values) க் கையாள்கிறது. 'கலையும் அழகுபற்றிய கருத்தாக்கங்களில் மெய்யியல் பிரயோகிக்கப்படுவதே இரசனையியல்' என்று இதனைக் கூறலாம். அழகு புறவயமானதா? அகவயமானதா? கலையின் தொழிற்பாடு என்ன? இரசனை உணர்வுகளின் உளவியல் மெய்யியல் பிரச்சினைகள் என்ன என்பன இதில் இடம் பெறுகின்றன.

ஒழுக்கவியலும் பெறுமானங்களையே கையாளுகின்றன. நன்மை என்றால் என்ன? எது பிரதானமான நன்மை? நன்மையை விளங்க முடியுமா? நாம் ஒன்றைச் செய்துதான் ஆகவேண்டும் (Ought) என்று கூறுவது அகவயமானதா புறவயமானதா? ஏன் நாம் பொய் சொல்லக் கூடாது. நன்மை, சரி பற்றிய நியமங்கள் எவை? இவை மாற்றமடை யாதவையா? போன்ற பிரச்சினைகள் அல்லது வினாக்கள் இங்கு ஆராயப் படுகின்றன.

மனிதனின் செயல்களை நன்மை - தீமை, சரி - தவறு என்று மதிப்பீடு செய்வது ஒழுக்கவியலாகும். மனிதனின் பெரும்பாலான செயல்கள் ஒழுக்கவியலின் கருப்பொருளாக இருப்பதால், மெய்யியலில் ஒழுக்க வியலுக்கு பிரதான இடம் தரப்படுகிறது. சமய, சமூக, பொருளாதார, செயல்கள் அனைத்தும் ஒழுக்கவியல் கோட்பாடுகளின் மதிப்பீட்டுக்கு உட்பட்டவையாகும்.

Z. A. Zanhir
Assistant Director of Education
(Tamil Unit)
Zonal Education Office
Puttalam.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பௌதிகவதீதம்

பௌதிகவதீதம் (Metaphysics) என்ற பதம் Meta என்ற கிரேக்கப் பதத்திலிருந்து பெறப்பட்டதாகும். Meta என்பதன் பொருள் Beyond, அப்பால் என்பதைக் குறிக்கிறது. பௌதிகவதீதம் என்பதை அடிப்படை விதிகள் பொருட்களின் அடிப்படை இயல்பு சம்பந்தப்பட்ட அறிவு எனக் கூறலாம்.

பௌதிகஅதீதம் மெய்யியலின் பிறபகுதிகளிலிருந்து வேறுபட்டது. உதாரணமாக, அளவையியல், அழகியல், ஒழுக்கவியல், என்பன மனித அனுபவத்துக்கு உட்பட்ட செயல்களையும், பொருட்களையும், நிகழ்ச்சி களையும் ஆராய்ந்து மதிப்பீடு செய்கின்றன. ஆனால், பௌதிக அதீதவியல் புலன் அனுபவத்துக்கு அப்பாற்பட்டவற்றையே ஆய்வுப் பொருளாகக் கொண்டுள்ளது. உலக அனுபவத்துக்குள் வராத பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்ற மனித மனத்தின் ஆர்வம் புலன் எல்லையைக் கடந்து சிந்திக்கின்றது. அத்தகைய சிந்தனையின் விளைவாக உருவாகியதே பௌதிக அதீதமாகும். உயிரியின் தொடக்கம் முடிவு, மறுவுலகம், மறுபிறப்பு, கடவுள், வீடுபேறு, நன்மை, தீமை, சொர்க்கம், நரகம், விதி, அகம், ஆன்மா போன்ற கருத்துக்கள் இதில் அடங்கும்.

பௌதிகவதீதம் உள்பொருளின் இயல்பை ஆராய்கின்ற ஒரு துறை என்றுதான் பொதுவாக அறியப்பட்டுள்ளது. சடத்திற்கும் மனத்திற் கும் உள்ள தொடர்பு என்ன? இவற்றுள் எது முதலாவது மனிதன் சுதந்திரமானவனா? மனித அகம் ஒரு பதார்த்தமா அல்லது அடுத்தடுத்து நடக்கும் அனுபவங்களின் தொடர்ச்சி மட்டும்தானா? பிரபஞ்சம் முடி வற்றதா? கடவுள் உள்ளாரா? போன்ற கருத்துக்களையும் பிரச்சினை களையும் அது ஆராய்கின்றது.

பௌதிகவதீதம், சில சந்தர்ப்பங்களில் சிந்தனாமெய்யியல் (specu-lative philosophy) என்றும் கூறப்படுகிறது. மேற்கத்திய மெய்யியலில் மையக் கூறாக பௌதீகஅதீதம் காணப்பட்டது. கிரேக்ககாலத்திலிருந்து தொடரும் மெய்யியற் பிரிவு பல்வேறு பொருள்களையும் அர்த்தங்களையும் வெளிப்படுத்தியுள்ளது. அது இருப்புள்ளதை அல்லது உள்பொருளை (Reality) முழுமையாக வடிவப்படுத்தியது. கருத்துவாதம், ஒருமைவாதம், லைப்னிட்ஸின் மொனாடோலஜி போன்றன பௌதிகவதீதத்திற்கான நல்ல உதாரணங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அளவையியலில் காணும் உண்மையின் இறுதி வாய்ப்பினை நாம் அறிய முடிந்தாலும் மனித அறிவு உய்த்தறி முறையினால் மட்டும் திருப்தியடைவதில்லை. மனிதன் இயற்கையின் நேர்வுகளோடும் உண்மைகளோடும் தனது சிந்தனையைத் தொடர்புபடுத்தும் போது அங்கு தொகுத்தறி அளவையியல் முறை உருவாகிறது. இதிலிருந்தும் மனிதன் மீண்டும் யதார்த்தத்தின் அல்லது புறப்பொருளின் (Reality) உண்மையை அல்லது இலக்கைத்தான் ஆராய்கின்றான். இதனை பௌதிகஅதீத ஆய்வுக்கு இட்டுச் செல்லும் வழிமுறைக்கான உதாரணமாகக் காட்டலாம்.

பதார்த்தம்

பதார்த்தம் என்பது பற்றிய முழுமையின் அர்த்த விளக்கம் அரிஸ்டோட்டிலின் பௌதிகவதீதத்தில் இடம் பெறுகிறது. அரிஸ்டோட்டில் பௌதிகவதீதத்தை முதல் மெய்யியல் (first philosophy) எனக் கூறுகின்றார். விஞ்ஞானத்தைப் போல பௌதிகவதீதத்தையும் விவரிக்க முடியும் என்பது அரிஸ்டோட்டிலின் கொள்கை. அரிஸ்டோட்டில் பதார்த்தத்தை பிளேட்டோவின் பதார்த்தக் கோட்பாட்டிலிருந்து வேறு படுத்தி விளக்குகிறார்.

பிளேட்டோவிற்குப் பதார்த்தம் பொதுமையான வடிவம் (Universal Form) பிளேட்டோவின் இக்கருத்தை அரிஸ்டோட்டில் நிராகரித்தார். அதற்குப் பகரமாக முரண்நிலைக் கருத்தொன்றை அவர் முன்வைத்தார். அரிஸ்டோட்டிலுக்குப் பதார்த்தம் என்பது concrete individual ஆகும்.

இவ்வகையில் பௌதிகவதீதத்தின் பிரச்சினை உள்பொருளின் அடிப்படை விதிகளைக் கண்டுபிடிப்பதாகும். உலகை விபரிப்பது எவ்வாறு? அதன் சாரம் என்ன? என்ற வினாக்களுக்கு அரிஸ்டோட்டிலின் தீர்வு சடவாதிகளின் அணுவாதத்தையும் பிளேட்டோவின் கருத்துலகக் கோட்பாட்டையும் இணைத்த அடிப்படையில் அமைந்திருந்தது. அவர் டெமோக்ரட்டஸின், அணுக் கோட்பாட்டையும் எதிர்த்தார். அதேவேளை பிளேட்டோவின் கருத்துவடிவக் கோட்பாட்டையும் நிராகரித்தார். ஆனால், இவை இரண்டிற்கும் இடைநிலையாக ஒரு தீர்வைக் கண்டார்.

பிளேட்டோவின் கருத்துவடிவம் சுய இருப்புடையதல்ல. அதாவது சடத்துக்கு அப்பால் சடத்தின் அசைவு இயக்கம் இன்றி மாற்றம் பற்றி நாம் பேசமுடியாது. இதுசடப்பொருள்வாதிகளின் நிலைப்பாடாகும் பொதுமையான கருத்தின் அதாவது Universal Ideaவின் பூரணத்துவப் படுத்தப்படாத வெறும் பிரதிகளே அனுபவவிடயங்கள் ஆகும் என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பிளேட்டோவின் கருத்து. ஆனால், அரிஸ்டோட்டில் முன்வைக்கும் தீர்வுப்படி Particular objects (தனிப்பொருட்கள்) அல்லது தனியன்கள் பதார்த்தமாகும்.

உண்மையில் பௌதிகவதீதம் என்பது அரிஸ்டோட்டில் வழங்கிய பெயரல்ல. அவர் இதனை முதல் மெய்யியல் (first philosophy) என்றார். மிக உயர்வான முதலாவதான முக்கியமாக பிரபஞ்சம் பற்றிய பொதுக் கோட்பாடுகள் என்பதுதான் முதல் மெய்யியல் (அல்லது பௌதிக வதீதத்திற்கு) அரிஸ்டோட்டில் வழங்கிய பொருளாகும். ஏனைய விஞ்ஞானத்துறைகள் இதனளவு உயர்ந்ததில்லை என்பது அரிஸ்டோட்டிலின் கருத்து. ஏனெனில் ஏனைய விஞ்ஞானத்துறைகள் பொதுமை நோக்கிலும் தர்க்கரீதியான தொடர்பிலும் முதல் மெய்யியல் அளவு காணப்படவில்லை என்று அவர் கருதினார்.

மெய்யியலில் கருத்து வேறுபாடுகளும் வாக்குவாதங்களும், முரண்பாடுகளும் மலிந்து கிடக்கும் பகுதி இதுவே. இப்பிரிவுகள் அனைத்தும் மெய்யியலை நாம் புரிந்து கொள்வதற்காகச் செயற்கையாக ஏற்படுத்திய பிரிவுகள் எனக்கருதலாம். ஒருவகையில் இவைபெறும் முழுமையே மெய்யியல் ஆகும். பிற அறிவுத்துறைகள் பிறக்கும் முன்பே மெய்யியல் பிறந்தது. மனித சிந்தனையின் ஆரம்பமே மெய்யியல் எனலாம். இந்த மெய்யியலின் கிளைகலாகத்தான் இன்று நாம் காணும் பிற துறைகள் அனைத்தும் தோன்றியிருக்க வேண்டும்.

A. ZAHIR
B.A. (Edu.)
P.G.D. in Edu.
M. (Edu.) P.G. Advisor
Zonal Education Office - Service
PUTTALAM.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அத்தியாயம் 3

நவீன மெய்யியல்: அனுபவவாதம்

10த்திய காலத்தினைத் தொடர்ந்து வந்த நவீன யுகத்தில் மக்கள் சுதந்திர சிந்தனையைக் கோரினர். மரபுகளுக்கும், பிரமாணங்களுக்கும், அதிகாரத்திற்கும், எதிரான கிளர்ச்சிகள் தோன்றின. மறுமலர்ச்சிவாதத்தினதும் சீர்திருத்த வாதத்தினதும் ஆழமான கருத்துவெளிப்பாடுகள், அறிவுச் சீர்திருத்தம், சுதந்திர சிந்தனை என்பன இன்னும் பிரகாசம் குன்றாதிருந்தன. தேவாலயத்திற்கும் அரசிற்கும் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியில் பிரச்சினை அரசிற்குச் சார்பாகத் தீர்க்கப்பட்டது. அரசில், அரசியல் யாப்பு, ஜனநாயக நிறுவனங்கள் என்பன கலந்துரையாடல்களுக்குள்ளாகிக் கொண்டிருந்தன. இதே வேகம் பொருளாதாரத்திலும் வெளிப்பட்டது. அடிமைமுறையும் பழைய கில்டுமுறைமைகளும் படிப்படியாக மறைந்தன. தனிநபர் சுதந்திரமாகத் தனது பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள பொருளாதார விடுதலை அவனுக்கு வாய்ப்பளித்தது. இது பொருளாதாரத் தனிநபர் வாதத்தைத் தோற்றுவித்தது. பொருளியலில், இது, சுதந்தர வர்த்தகம் என அழைக்கப்படலாயிற்று.

அறிவுலகில் மாற்றங்கள் நிகழ்ந்தன. விஞ்ஞானத்திலும் மெய்யியலிலும் நியாயமும் பகுத்தறிவும், அதிகாரத்திற்கு வந்தன. அறிவு, அதிகார பூர்வமானதாக, மரபாக ஒருவர் கைமாறி இன்னொருவர் கைக்கு வந்து சேர்வதல்ல. ஆனால், அறிவு தேடிப் பெறப்படுவது. சுதந்திர விசாரணையினால் பெற்றுக் கொள்வது என்ற உணர்வு எங்கும் பரவியது. நவீன மெய்யியல் அதன் தொடக்கத்தில் நவீன யுகத்தின் உண்மைகளை உள்வாங்கிக் கொண்டது. அறிவைத் தேடுவதில் பகுத்தறிவை அதிஉயர் அதிகாரமாக அது ஏற்றுக் கொண்டது. பக்கம் சாராது, உண்மையை ஆராய்வதற்கு முன்னுரிமை தரப்பட்டது. இயற்கை கடந்த அனுபவங்கள் மர்மமான ஆற்றல்களில் அன்றி அதன் சொந்த இயற்கை ஆற்றலிலும், சுதந்திர அறிவிலும் மெய்யியல் தனது நம்பிக்கையை வெளிப்படுத்தியது.

நவீனகால மெய்யியலாளர்கள் இரு பிரதான சிந்தனைப் பள்ளிகளாக, இயக்கங்களாகப் பிரிக்கப்படுகின்றனர். ஒரு பிரிவு அறிவு முதல்வாதம் (Rationalism) என்றும் அடுத்த பிரிவு அனுபவமுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாதம் (empiricism) என்றும் அழைக்கப்படுகிறது. அறிவுமுதல்வாதம் பகுத்தறிவை அறிவின் நெறி முறையாக ஏற்கிறது. நவீன மெய்யியல் அனைத்தையுமே இந்தப் பொருளில் கொள்ளலாம்.

டேக்கார்ட், ஸ்பினோஸா, மெலிபோரான்ச்சி, லைப்னிட்ஸ் ஆகிய மெய்யியலாளர் அறிவுவாத அல்லது அறிவு முதல்வாதப்பிரிவைச் சேர்ந்தவர்கள். பேக்கன், ஹொப்ஸ், லொக், பார்க்லி, ஹியூம் ஆகியோர் அனுபவாதப் பிரிவைச் சேர்ந்தவர்கள். அனுபவ முதல்வாதிகள் பிளேட்டோ, அரிஸ்டோட்டிலின் அறிவுவாரிசுகளாகக் கருதப்படுகின்றனர். எவ்வாறாயினும், இவ்விரு பகுதியினரும் அறிவின் தோற்றமூலம் பற்றிய விடயத்தில் அவர்கள் வைத்துள்ள உறுதிப்பாட்டின் அடிப்படையில் அவர்களின் இந்நிலைப்பாடு தீர்மானிக்கப்பட்டாலும் அவர்கள் எல்லா சந்தர்ப்பங்களிலும் தமது கொள்கைகளில் உறுதியான அல்லது மாறாத நிலைப்பாட்டை வெளிப்படுத்தியதாகக் கொள்வதற்கில்லை.

பிரித்தானிய அனுபவவாதம்

நவீன யுகத்தின் சிறந்த பிரதிநிதி என பொதுவாக மதிக்கப்படுபவர் பிரான்ஸிஸ் பேக்கன், அரிஸ்டோட்டிலின் மெய்யியல் உட்படத்தொன்மை அதிகாரங்கள் அனைத்தையும் பேக்கன் எதிர்த்தார். பழம் மரபுகளில் தொடர்ந்தும் சிக்காது நாம் புதிதாக, சுதந்திரமாக நமது சிந்தனைகளை ஆரம்பிக்கவேண்டும் என்றார். பேக்கனின் அனுபவவாதம் தெளிவாகவும் திட்டவட்டமானதாகவும் வரையறுக்கப்படவில்லை. மனிதனின் அனைத்து அறிவும் இறைவெளிப்பாட்டைத்தவிர புலன் உணர்வுகளிலிருந்துதான் வெளிவருகின்றன. தனியன்கள்தான் உள்ளன. அறிவு பகுத்தறிவு பூர்வமானது. புலன்கள் வழங்கும் பொருள்களுக்கிசைவாகத்தான் மனம் அல்லது அறிவு இயங்குவதாக பேக்கன் குறிப்பிட்டார்.

தோமஸ் ஹொப்ஸ் (1588-1678) பருப்பொருள்களின் (bodies) இயக்கம் பற்றிய கோட்பாடே மெய்யியல் என்றார். எல்லா நிகழ்ச்சிகளும் அவை எவையாக இருந்தாலும் அவற்றை இயக்கமாக (Motion) இனக்குறைப்பு (reduce)ச் செய்யலாம். ஹொப்ஸைப் பொறுத்தவரை மெய்யியல் கோட்பாடுகள் பொதுமையானவை. அவை முழுமையான இயந்திரிக, சடப்பொருள்வாத பௌதிகவதீதத்தின் முடிவுகளுடன் தொடர்பு பட்டவை. சடஉலக நிகழ்வுகளுக்கான இயந்திரிக விளக்கங்களை அவர் வரவேற்றார். நனவையும் கூட அவர் இயக்கத்தின் பாகமாகவே கருதினார். சமூக வாழ்வின் நிலை இயந்திரிகமுறையில் அதிககூடிய சிக்கல் நிலையாகும். கொப்பனிக்கஸ், கலிலியோ, ஹாவி போன்ற விஞ்ஞானிகளை விஞ்ஞானத்தின் பிரதான தாபகர்கள் என வர்ணித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கணிதத்தின் அவசியத்தையும் விஞ்ஞானம் பற்றிய பேக்கனின் கருத்துக் களையும் அவர் வலியுறுத்தினார்.

பேக்கன், ஹொப்ஸ் ஆகியோர் அனுபவவாதத்தை நவீன மெய்யியலுக்கு அறிமுகப்படுத்தியதில் முக்கிய இடத்தைப் பெற்றிருந்த போதும் நவீன அனுபவவாதம் (New empiricism) அதன் திட்டவட்டமான வடிவத்தையும் இயல்புகளையும் ஜோன்லொக்கிடமிருந்தே (1632-1704) பெற்றுக் கொண்டது. இன்றுவரை நீடித்திருக்கும் அனுபவவாதச் செல்வாக்கிற்கும் அவரது பங்களிப்புக்களே குறிப்பிடத்தக்க பங்கை ஆற்றியுள்ளது எனலாம்.

ஹொப்ஸ் பேக்கனின் கருத்தை ஆதரித்து அறிவின் மூலம் புலன் உணர்வுகள் (sensation) தான் என்று கூறியபோதும் அனுபவம் மாத்திரம் எமக்கு உறுதியான அறிவைத்தரப் போதுமானது அல்ல என்ற டேக்கார்ட்டின் அறிவுமுதல்வாதக் கொள்கையையும் அவர் ஏற்றிருந்தார். ஜோன் லொக் இவற்றை முக்கியமான பிரச்சினைகளாக எடுத்துக் கொண்டார். அறிவின் மூலத்தை ஆராய்வது அவரது பிரதான நோக்கமாகியது. அத்துடன் அவரது புலமையின் காரணமாக மெய்யியல் அறிவாராய்ச்சியிலாக மாற்றப்படும் அளவு இவ்விடயம் அவரது An Essay Concerning Human Understanding நூலில் ஆராயப்பட்டுள்ளது.

உடன் பிறந்த எண்ணங்கள் மறுப்பு

உடன்பிறந்த எண்ண வாதத்தை (innatism) அவரது Essay நூல் நிராகரித்தது. எவ்வாறு எமது கருத்துக்கள் தோன்றுகின்றன. போலி அறிவிலிருந்து உண்மையான அறிவை எவ்வாறு வேறுபடுத்துவது என்ற கேள்விகளுக்கு அவரது Essay நூல் விடைகாண முற்பட்டது. அனுபவத்திற்கு முன்னதாக மனித மனம் எதுவும் எழுதப் பெறாத வெற்றுக் காகிதத்தைப் போன்றது, அனுபவத்தின் பின்னர் தான் அல்லது அனுபவத்துடன்தான் எல்லாம் ஆரம்பிக்கிறது. மேலும் அனுபவத்திற்கு முற்பட்ட மனத்தை அவர் வெற்றுப் பெட்டகம் என்றும் கூறுகிறார். மனம் இன்னும் எண்ணங்களைப் பெற்றுக்கொள்ளவில்லை என்பதற்கு வெற்றுத்தாள், வெற்றுப்பெட்டகம் போன்ற உதாரணங்களை அவர் பயன்படுத்தினார். ஆயினும் இங்கு எழும்கேள்வி எவ்வாறு மனத்திற்குள் விடயங்கள் (கருத்துக்கள்) வந்து சேர்ந்தன. அதற்கு அவர்தரும் விடை 'அனுபவம்', அனுபவங்கள் தான் மனத்திற்குக் கருத்துக்களைப் பெற்றுத் தருகின்றன. மனிதனின் எல்லா அறிவும் அனுபவத்தில் அமைந்துள்ளது அனுபவத்திலிருந்தே உருவாகிறது. அதனால் புலன் உணர்வுகளைத்தான் கருத்துக்களின் பிறப்பிடமாகக் கொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

லொக் கருத்துக்களை எளிய கருத்துக்கள், சிக்கலான கருத்துக்கள் என இரண்டாக வகுத்துள்ளார்.

எளியகருத்துக்கள்: சில எளிய கருத்துக்கள் ஒரு புலனினால் மட்டும் எமது மனத்தை வந்தடைகின்றன. நிறம், ஒலி, சுவை, வெப்பம், குளிர் முதலியன சில ஒன்றுக்கு மேற்பட்ட புலன்களினால் மனத்தை வந்தடைகின்றன. அவை கருத்துக்கள் வெளி அல்லது விரிவாக்கல், இயக்கம் முதலியன. இதில் தொடுதலும், பார்த்தலும் சம்பந்தப்படுகிறது. மறுவினை அல்லது ஆழ்ந்த எண்ணுதலில் சிந்தித்தல் நிகழ்கிறது. புலனுணர்வினதும் ஆழ்ந்த எண்ணத்தினதும் (மறிவினை) தொடர்பின் அல்லது இணைவின் மூலம் மகிழ்ச்சி, வேதனை ஆற்றல் என்பன உருவாகின்றன.

சிக்கல் கருத்துக்கள்: எளிய கருத்துக்களின் மாற்றமடைந்த நிலைகள் ஆகும். மனம் அதன் ஆற்றலின் மூலமாக எளிய கருத்துக்களை ஒன்று சேர்த்தும் புதிய சிக்கல் கருத்துக்களை உருவாக்குகின்றது. இரு கருத்துக்களை அதற்கு ஒன்றாகக் கொண்டு வரவும், கருத்துக்களின் உறவுகளை ஒன்றாக செய்விக்கவும் அதனால் முடியும். அத்தோடு எல்லாக் கருத்துக்களிலிலிருந்தும் கருத்துக்களை வேறு பிரித்துத்தரவும் அதனால் முடியும்.

உள்ளத்தில் கருத்துக்கள் உருவாகும் ஆற்றலை லொக் பண்புகள் (Qualities) எனக் கூறுகிறார். இதனை அவர் இரண்டாக வகுத்துள்ளார்.

1. Primary Qualities (முதல்நிலைப்பண்புகள்)
2. Secondary Qualities (வழிநிலைப்பண்புகள்)

விரிவுபெறல், இயக்கம் என்பன முதல்நிலைப்பண்புகள் ஆகும் (Primary Qualities) நிறங்களும் மற்ற புலன் உணர்வுக்குரியவைகளும் வழிநிலைப்பண்புகளாகும் (Secondary Qualities). முதல் நிலைப் பண்புகளும் வழிநிலைப் பண்புகளும் எம்மில் எளிய கருத்துக்களை உருவாக்குகின்றன.

புற உலக நிராகரிப்பு -பார்க்லி

ஜோர்ஜ் பார்க்லி (1685-1753) சடப்பொருளின் இருப்பை நிராகரித்தார். சடப்பொருள் பார்த்தலினால் இருப்பதாக அவர் கூறினார். பார்க்காத நேரத்தில் பொருள் (மரம், மலை, சூரியன்) இல்லாமலாகுமா என்பதற்கு அவர் இறைவன் எல்லாநேரத்திலும் எல்லாவற்றையும் பார்த்தவாறுள்ளதால் அப்பொருள் அங்கு இருக்கும் என்று பதில் தந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறிவாராய்ச்சியலில் (1) முதல் நிலை (primary) (II) வழிநிலைப்பண்புகள் (Secondary Qualities) என்ற இருமை வாதத்தை லொக் பூர்த்தி செய்தார். இதில் முதல் நிலைப்பண்பு புறவயமானது. வழிநிலைப்பண்பு அகநிலை அல்லது அகவயமானது முதல் நிலைப்பண்பு இயற்கையின் இருப்புடன் சம்பந்தப்பட்டது. வழிநிலைப்பண்பு மனம் சம்பந்தப்பட்டது. பார்ப்பவனின் தொடர்பின்றிப் பொருள்கள் உள்ளன என்று முதல் நிலைப்பண்பு கூறுகிறது. வழிநிலைப்பண்பின் படிநோக்கினால் பார்ப்பதனால் அவை இருக்கின்றன என்ற பொருளைப் பெறுகின்றன. லொக்கின்படி வழிநிலைப் பண்புகள் சிலவகைப் புலன் உணர்வுகள் சார்ந்தவை.

முதல்நிலைப் பண்பின் மூலம் நியூட்டேனியப் பௌதிகவாதம் உறுதிப்படுத்தப்படுகிறது. நியூட்டேனியப் பௌதிகவாதம் இயற்கையின் இருப்பைக் கூறுகின்றன. அவை துகள்களாக, ஏதாவதொரு பௌதிக இயற்கைத் துகளாக அது உள்ளது. இந்தப்பௌதிக அல்லது இயற்கைப் பொருட்கள் தான் பார்ப்பவனின் புலன் உணர்வுகளாக நிறமாக, ஒலியாக, புலன் உணர்வுகளாகின்றன. லொக்கிற்கு மாற்றமாக எல்லாப்பண்புகளும் மனதில் இருப்பதாக பார்க்லி கூறுகிறார். லொக்கின் இருமைக் கோட்பாட்டை அவர் உடைக்கிறார். பார்க்லி லொக்கைவிடவும் ஆழமான அனுபவவாதியாகிறார். உறுதியான அறிவு அனுபவத்தினால் சாத்தியம் என்பது மட்டும் அல்ல நம்பகமானதாக இருப்பது அக அனுபவம் மட்டும்தான். பார்க்லி சடமற்றவாதம் ஒன்றை உருவாக்கினார். அதாவது 'சடம்' சிந்திக்கப்பட அல்லது அனுபவத்திற்குரியதாகாதது என்பதை அவர் நிறுவ முயன்றார்.

லொக் எமது அறிவின் அடிப்படை புலன் உணர்வுதான், நாம் கருத்துக்களைத் தான் அறிகிறோம் என்று கூறினார். எமக்கு புறத்தே (வெளிவாரியாக) உள்ள சட உலகை நாம் எப்படி அறியலாம்? லொக்கின் கருத்துக்களையே பார்க்லி தனது கருத்துக்குச் சாதகமாகப் பயன்படுத்தினார். பார்க்லே கூறுகிறார், என்னிடம் கருத்துக்கள் இருப்பதை நான் அறிவேன். கருத்துக்கள் தாமாக இருக்கக் கூடியவை அல்ல. அவை எனது மனத்தில் உள்ளன. அதேபோல் மற்றவர்களின் மனத்திலும் உள்ளன. To be is to be percived இதுதான் அவர் முன்வைக்கும் முக்கிய கொள்கையாகும். எமது சிந்தனைகளும் கற்பனைகளும் மனத்திற்கு வெளியே இருப்பன அல்ல. அவை எமது மனத்தில் இருப்பவை. அவற்றின் இருப்பு மனத்தினால் (பார்ப்பதனால்) அறியப்படுவதனால் நிகழ்கிறது. எமது புலனுணர்வுக்கும் இதுதான் நடக்கிறது. இருப்பது காண்டலுடன் சமமாகிறது. நான் எழுதும் மேசை இருக்கிறது என்று நான் கூறினால் அதன் பொருள் நான் அதைப்பார்க்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வெளியே இருக்கும்போது மேசை இருப்பதாகக் கூறினால் நான் அறையினுல் இருந்தால் அதைப் பார்ப்பேன். அறைக்கு வெளியே இருந்தால் மற்றவர்கள் அதைப் பார்ப்பார்கள். ஒரு வாசம் வீசினால் அது நுகரப்படும். ஒரு ஒலி எழுந்தால் அது கேட்கப்படும். ஒருவர்ணமோ, உருவமோ இருந்தால் பார்வையின் மூலம் அல்லது தொடுவதன் மூலம் இது பார்க்கப்படும். இந்தவித வெளியீடுகள் பற்றி இவ்வளவுதான் என்னால் விளங்கிக் கொள்ளமுடியும். மனம் பார்க்காத போது பொருள் உள்ளதென்று கூறுவது பார்க்கப்படுதல் என்பதுடன் எந்த தொடர்பும் அற்றநிலையில் அது இருப்பதாகக் கூறுவது அறிவுக்குப் பொருத்தமற்ற வெளியீடாகும். அதனால் இருக்கிறது என்றால் அது பார்க்கப்பட வேண்டும். அது மனத்தில் இருக்கவேண்டும். அதனால் பருப்பொருட் களுக்கு மனமின்றி இருப்பில்லை எனவே, மற்றவர்களாலோ பார்க்கப் படாத போது பொருள்களுக்கு இருப்பில்லை என்று பார்க்லி தமது நிருபணத்தில் விவரிக்கிறார்.

Z. A. ZAHIR
B.A.(Econ), Dip in Edu.
In - Service Advisor
Zonal Education Office
PUTTALAM.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அத்தியாயம் 4

பகுப்பாய்வு மெய்யியல்

பகுப்பாய்வு மெய்யியலின் தொடக்கம் சோக்ரட்டீசின் தத்துவங்களில் (கி.மு 4ம் நூற்றாண்டில்) இருந்தே ஆரம்பித்துவிட்டது. பகுப்பாய்வு மெய்யியல் சோக்ரட்டீசின் மெய்யியலில் காணப்பட்டாலும், அது அக்காலத்திலோ அதற்குப் பின்னரோ பெரும் சிந்தனையாக வளர்ச்சி யடையவில்லை. உண்மையில் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தான் பகுப்பாய்வு மெய்யியல் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றது. குறிப்பாக, ஜி.இ. மூவர் பேர்ட்ரன்ட் றஸல், விக்கன்ஸ்டைன் போன்றோரின் சிந்தனையில் அது ஒரு தனி ஆய்வு முறையாக வளர்ந்து இன்றுவரை நிலைத்திருக்கின்றது.

பகுப்பாய்வு மெய்யியலில் அதன் சொல்லிற்கு ஏற்ப, இத்துறையில் ஈடுபடுவோரைப் பகுப்பாய்வாளர் எனக் கூறவேண்டும். ஆனால் பகுப்பாய்வு மெய்யியலுக்குரிய சொல்லாக இது இடம் பெறவில்லை. இது விஞ்ஞானத்துக்குரிய சொல்லாகவே இருந்தது. தான் வாழும் உலகை ஒழுங்காக விளங்கப்படுத்துவதற்கு விஞ்ஞானி ஒரு பகுப்பாய்வாளனாக செயற்படுகின்றான். இதற்காக ஒரு விஞ்ஞானி கட்டுப்பாட்டு அவதான முறையையும் பரிசோதனை முறையையும் பயன்படுத்துகின்றான். இவற்றில் வெற்றி பெறுவதற்காகக் கருவிகளைப் பயன்படுத்துகின்றான். இதனால், பகுப்பாய்வு மெய்யியலாளரைப் பகுப்பாய்வு விஞ்ஞானிக்கு நிகராக ஒப்பிடலாம். ஏனெனில், பகுப்பாய்வு மெய்யியலாளனின் நோக்கம் வேறுபட்டது. விஞ்ஞான விசாரணையில் பயன்படுத்தப்படும் அடிப்படைக் கோட்பாடுகளின் இயல்புகளையும் யதார்த்தத்தையும் அவன் தேட முனைகின்றான். இதனை விஞ்ஞானரீதியான பகுப்பாய்வு எனலாம். மெய்யியலாளனுடைய பார்வை விஞ்ஞான விசாரணையில் இடம்பெறும் நியாயப்படுத்தலையும், அதன் முறைகளின் இயல்பையும் பண்புகளையும் அறிவதாகும் என்று கூறலாம். உதாரணமாக, விஞ்ஞானம் காரண காரியவாதமாக இருப்பினும், காரணம், காரியம் என வேறுபடுத்த முடியாது. ஆனால், காரணம், காரியம் என்றால் என்ன என ஆய்வுக்குள்ளாக்கு கின்றார்கள். இந்த வகையில் பகுப்பாய்வு மெய்யியல் விஞ்ஞான ஆய்வு முறை பிரச்சினைகளை மட்டுமல்ல, மனிதன் ஆய்வு செய்கின்ற அனைத்துத் துறைகளிலும் பகுப்பாய்வு செல்வாக்குச் செலுத்துகின்றது. ஆகவே, இதில் மெய்யியலுக்கு வரையறைகள் இல்லை. அங்கு அவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நியாயப்படுத்துகின்ற வழிமுறையையே அவன் ஆராய்கின்றான். விடுபட்ட இடங்களை அவன் சுட்டிக் காட்டுகின்றான். இந்த வகையில் இதனை ஓரளவு நுணுக்க விமர்சன ஆய்வு எனவும் சிலர் கூறுகின்றனர்.

தற்கால ஆங்கிலம் பேசும் மெய்யியல் உலகில் ஒரு சக்திமிக்க இயக்கமாகப் பகுப்பாய்வு மெய்யியல் உள்ளது. இது ஒரு சிந்தனைப் பள்ளி என்பதை விட, இயக்கம் எனக் கூறும் வகையில் அமைந்துள்ளது. அதற்கெனச் சில பண்புகள் உள்ளன. பல மாற்றங்களைப் பல்வேறு வகைகளில் அது ஏற்படுத்துகின்றது. இதில் வேறுபாடான கருத்துள்ள வர்களும் இருந்தனர். எனினும் அவர்கள் எல்லோரும் ஒரு முக்கிய விடயத்தில் ஒருமைப்பாடானவர்களாக இருந்தனர். அது அவர்களுடைய மெய்யியலின் மைய நோக்கு என்ன? என்ற விடயத்தைப் பற்றியதாகும். அதாவது வேறுபாட்டிற்கு மத்தியிலும் மையநோக்கு என்ற விடயத்தில் அவர்களிடையே ஐக்கியம் இருந்தது.

பாஷையின் அர்த்தத்தைத் தெளிவாக்குவதுதான் மெய்யியலின் மைய இலக்கு எனப்பகுப்பாய்வு மெய்யியல் சிந்தனைப் பள்ளியைச் சேர்ந்தவர்கள் கருதினர். இந்தக்கருத்துத்தான் இந்த விவகாரத்தில் ஈடுபட்டிருந்தவர்களை ஒன்றிணைத்தது. இது 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட ஒரு கிளர்ச்சி உணர்வாகும். அதாவது மெய்யியலின் போக்கு மாற்றப்பட வேண்டும். விடயங்களைத் தெளிவுபடுத்த வேண்டும். என்ற கருத்தில் இது அமைந்துள்ளது. விடயங்களை எவ்விதத்தில் தெளிவுப்படுத்துவது, விடயங்களை விடயங்களால் தெளிவுபடுத்தும் முறை உள்ளது. ஆனால், இவர்கள் மொழியின் அர்த்தத்தை விளக்குவதன் மூலம் விடயங்களைத் தெளிவுபடுத்துவது என்ற வரையறையை ஏற் படுத்திக் கொண்டார்கள். இந்த விடயத்துக்கு அவர்களைத் தூண்டியவர் விக்கன்ஸ்டைன் என்ற 20ஆம் நூற்றாண்டின் பிரபல மெய்யியலாளர். அவரது ''Tractatus'' என்ற படைப்பு இந்தச் சிந்தனைக்கு முக்கிய பங்களிப்பைச் செய்த முதலாவது பிரசித்தி பெற்ற நூலாகும். இந்த நூலில்தான் பகுப்பாய்வு மெய்யியலுக்கு அடித்தளமாக அமைந்த பல்வேறு கூற்றுக்கள் இடம் பெற்றுள்ளன. இதில் விக்கன்ஸ்டைன் பின்வருமாறு கூறுகின்றார். ''மெய்யியலின் விடயம் என்னவென்றால், சிந்தனையை அளவையியல் ரீதியில் தெளிவுபடுத்துவதாகும்; அதாவது மொழியால் ஒரு விடயம் தெளிவுபடுத்தப்படல் வேண்டும். மற்ற முக்கிய விடயம் மெய்யியலின் பிரதான நோக்கம் பெருந்தொகையான மெய்யியல் கூற்றுக்களை உருவாக்குவதல்ல. ஆனால், வாக்கியங்களைத் தெளிவு படுத்தவேண்டும். இந்த வகையான கொள்கைக்குப் பெருமளவு செல்வாக்கும் ஓரளவு எதிர்ப்பும் ஏற்பட்டது. இதில் ஏற்பட்ட ஆதரவான அம்சங்களில் ஒன்று, மொழியினால் ஏற்படும் பிரச்சினைகளிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உருவாகும் தெளிவின்மைகளுக்கு இந்தச் சிந்தனை ஒரு தீர்வாக அமைந்தது. குறிப்பாக விஞ்ஞானிகள் தமது ஆய்வு முடிவுகளைக் கூறும்போது, மெய்யியலாளர்களும் விஞ்ஞானிகளும் விஞ்ஞானிகள் அல்லாதோரும் மொழியை ஒரு ஊடகமாகப் பயன்படுத்துகின்றார்கள். அவ்வாறாயின் இங்குள்ள பிரச்சினையை தீர்க்க ஒரு தெளிவான ஊடகமாக மொழி பயன்படுகின்றது. ஆனால், கலக்கங்கள், மனக் குழப்பங்கள், கவர்பாடுகள், ஒன்றுக்கு மேற்பட்ட அர்த்தங்கள் என்பன மொழியில் பாதகமான சூழ்நிலையை உருவாக்குகின்றன. மேலும், தர்க்க ஒழுங்கு உய்த்தறி, தொகுத்தறி போன்ற அளவையியல் முறைகள் மொழியோடு சிக்கல்பட வேண்டியேற்படும். மொழியின் இத்தகைய பிரச்சினைகள் பெரும்பாலும் கருத்தில் எடுக்கப்பட்டது. இதற்கு முந்திய காலங்களில் மொழியின் இத்தகைய பிரச்சினைகள் கருத்திற் கொள்ளப்படவில்லை. இதனால் மிக தீவிரமாக மொழியியல் பகுப்பாய்வு மொழியினுடைய பயனையும் அதன் துஷ்பிரயோகத்தையும் பற்றி ஒரு தெளிவான கருத்தை அது கொண்டு வந்தது. இந்த மாற்றங்கள் எவ்வாறு மெய்யியல் வரலாற்றில் நிகழ்ந்தனவென்றால், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பேர்ட்ரன்ட் றஸல் மற்றும் ஜி.இ.மூவர் போன்றோர் தங்களது காலத்திலும் அதற்கு முன்னரும் காணப்பட்ட மெய்யியல் போக்குகளுக்கு எதிரான ஒரு கிளர்ச்சியாக இதனை உருவாக்கினர்.

முக்கியமாக ஹெகலிய மெய்யியலும், பார்க்லி, மெக்டகாட் போன்றவர்களின் கருத்துமுதல்வாத மெய்யியலுக்கு எதிரான முறையாகவும், இது செல்வாக்கு செலுத்தியது. பௌதிகஅதீதத்தை ஓரளவுக்கு றஸல், ஜி.இ. மூவர் போன்றோர் ஏற்றுக் கொண்டாலும், அதனை எதிர்ப்பதில் தீவிரமாக இருந்தனர், குறிப்பாக, ஜி.இ.மூவர் இந்தப் பௌதிகஅதீத சிந்தனையாளர்கள் பயன்படுத்திய பௌதிகஅதீத மொழிபற்றி மிகவும் கலவரம் அடைந்திருந்தார். இந்தக் சொற்களையும் மொழி உணர்வுடைய சொற்களையும் அவர் ஒப்பிட முயன்றார். ஏனெனில், அவை ஏற்படுத்தும் நம்ப முடியாத மனித சிந்தனை கடந்த, விடயங்களை அவரால் ஏற்று கொள்ள முடியவில்லை. உதாரணமாக மெக்டகார்ட் என்ற மெய்யியலாளரது கூற்றுக்களில் முக்கியமான ஒன்று ''நேரம் என்பது உண்மையல்ல" என்பதாகும். இவ்வித நிலை தற்காலச் சிந்தனைக்கு பொருந்தாது என்றும், எல்லா விடயங்களையும் மொழிப் பகுப்பாய்வுக்கு உட்படுத்த வேண்டும் எனின், சாதாரண மொழியைத் தெளிவாகப் பயன்படுத்த வேண்டும் என்றார். மேலும் மொழியானது, தகுதியானதாக, பொருத்தமானதாக அமைவதற்கு நாம் அதனைப் பொது உணர்வுக்குரியதாக அதாவது Commensense ற்கு உரியதாக மாற்றவேண்டும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மறுபுறம், பேர்ட்ரண்ட் றஸல் மொழியை கணிதத்தோடு தொடர்பு படுத்தினார். பௌதிகஅதீத மொழியை அவர் மிகவும் இறுக்கமற்ற தாகவும், பல்வேறு இடையூறுகள் உடையதாகவும் கருதுகின்றார். ஆனால் அவர் பௌதிகஅதீதத்தை நிராகரிக்கவில்லை. பௌதிகஅதீதத்தை நிராகரிப்பதில் மூவருக்கு இருந்த வேகம் இவருக்கு இருக்கவில்லை. ஆனால், பௌதீகஅதீத மொழியை கட்டுப்படுத்த விரும்பினார். மூவர் பொது உணர்வைப் பயன்படுத்தியபோது றஸல் நேர்வுகள் (fact) என்ற விடயத்தைப் பகுப்பாய்வுக்குள் கொண்டு வந்தார்.

கணிதத் துறையோடு நெருங்கிய தொடர்புடைய றஸலின் இந்த முறை தர்க்கஅணுவாதம் எனப்பட்டது. நேரடியாக நேர்வுகளோடு தொடர்புடைய வகையில் மொழி அமையவேண்டும் என்ற விடயம் கணித முறையில் அவரால் விளக்கப்பட்டது. மெய்யியலாளர்கள் யதார்த்தத்தை விளக்கவேண்டும் என்ற கருத்தை மூவரோ அல்லது றஸலோ எதிர்க்காத போதும், எதிர்காலத்தில் மெய்யியல் புதிய கண்டு பிடிப்புக்களைச் சாதிக்க வேண்டியதில்லை எனக்கூறினர். தெளிவுதான் மொழியை ஆட்சி செய்யவேண்டும் என்ற கருத்தை அவர்கள் வலியுறுத்தினார்கள்.

ஒன்றின் உண்மையை அறிவதல்ல, ஒன்றைப் பற்றிக் குறிப்பிடும் மொழியின் பொருளை விளக்குவதுதான் இனி நிகழ வேண்டும் என 20 ஆம் நூற்றாண்டு மெய்யியல் கூறுகின்றது. இந்தப் பின்னணியில்தான் கணித, விஞ்ஞான, மெய்யியல் நிபுணர்களைக் கொண்ட ஒரு குழுவினர் 1923ஆம் ஆண்டில் வியன்னாவில் ஒரு அமைப்பை உருவாக்கினர். இக்குழுவினர் ''வியன்னா வட்டவாதிகள்'' என அழைக்கப்பட்டனர். இவர்கள் தாக்கஅணுவாதத்தில் கடுமையான ஆர்வம் காட்டினர். அனைத்தும் அனுபவத்துக்குரியதாக இருக்கவேண்டும் பௌதீகஅதீதம் நிராகரிக்கப்பட வேண்டும் என்ற கொள்கையைத் தீவிரமாக ஆதரித்தனர். இவர்களின் மெய்யியல் இலட்சியம் விஞ்ஞான முறையை ஐக்கியப் படுத்துவதாகும். அர்த்தமுள்ளதும் வாய்ப்புள்ளதுமான அறிவைக் கொண்ட முறையை உருவாக்க பாரிய முயற்சிகளை இவர்கள் மேற்கொண்டனர். இதில் கணித, பௌதிக, அளவையியல், சிந்தனையாளர்கள் சம்பந்தப் பட்டனர், மொரிஷ்ஷிலிக் ருடோல்ப் காணெப், வைஸ்மன், ஒட்டோ நியூரெத் போன்றவர்கள் முக்கியமான இடத்தைப் பெறுகின்றனர். இந்த வட்டத்தில் விக்கன்ஸ்டைன் இடம் பெற்றிருக்காவிட்டாலும் வியன்னாவட்ட வாதிகளிடம் நெருங்கிய தொடர்பு கொண்டவராக அவர் இருந்தார். ''எது எவ்வாறு சொல்லப்பட்டாலும், அது தெளிவாக சொல்லப்பட வேண்டும்'' என்ற விக்கன்ஸ்டைனின் கருத்து வியன்னா வாதிகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மனதை மிகவும் கவர்ந்திருந்தது. ''எங்கு ஒருவரால் பேச முடியாது எனக் தெரிகின்றதோ, அங்கு அவர் கருத்துக்களை மௌனிக்க வேண்டும்.'' என்றார். இதைவிடக் கடினமானவற்றை இவருக்கு முன்னரே ஹியூம், அவரது ''விசாரணை'' என்ற நூலில் தீவிரமான தொனியில் கூறியிருந்தார்:

''நாம் நூல் நிலையங்களுக்குச் சென்று பார்த்தால் இந்த பௌதிக அதீத கோட்பாடுகளைப் பற்றி என்ன பாரிய நிலைமைகள் ஏற்பட்டுள் ளது! எமது கைபடும் இடமெல்லாம் தெய்வீகத் தன்மைகளைப் பற்றி அல்லது பௌதிகஅதீத சிந்தனைகள் பற்றியுள்ள நூல்கள் தாம் நிறையக் கிடைக்கின்றன. உண்மையில் இவை கருத்துருவான நியாயம் எதனையும் கொண்டுள்ளனவா? என்றால், இல்லை. இவை ஏதாவது பரிசோதனைக்குரிய விடயங்களைக் கொண்டுள்ளனவா? சடப்பொருள் பற்றிய விடயங்களைப் பேசுகின்றனவா? இல்லை. அப்படியானால், இவை அனைத்தையும் தீயிடுங்கள். இவற்றால் எமக்கு ஏற்படுவது வெறும் மாயைகள் மட்டுமே.

இந்தப் பின்னணியில்தான் வியன்னாவட்டவாதிகளை அனுபவ வாதிகளாகக் கொள்ள முடியும். இங்கு அவர்கள் இதே விடயத்தை கணிதத்தோடும் விஞ்ஞானத்தோடும் தொடர்புபடுத்தி மிகத் தீவிரமாக தமது நோக்கத்தை நிறைவேற்ற ஒரு கட்டளைக்கல்லை அல்லது தகுதித்தேர்வு அளவை முறையை அவர்கள் உருவாக்கினர். அதுதான் மெய்யியல் உலகில் மிகவும் பிரபல்யம் அடைந்த (verification principle) எனும் வாய்ப்புபார்த்தற் கோட்பாடாகும். இப்போது பகுப்பாய்வு மரபிற்குள் மூன்று விதமான பிரிவுகளை நாம் பார்க்கின்றோம்.

1. பேர்ட்ரண்ட் றஸலினுடைய - தர்க்க அணுவாதம்
2. வியன்னா வட்டத்தினுடைய - வாய்ப்புப் பார்த்தற் கோட்பாடு
3. விக்கன்ஸ்டைனின் - மொழிப் பயன்பாடு

இந்த மூன்று பிரிவுகளையும் அடக்கியதுதான் பகுப்பாய்வு மெய்யியல் எனலாம்.

தர்க்கஅணுவாதம்

இக்கோட்பாட்டைப் பற்றி அதன் ஸ்தாபகரான பேர்ட்ரண்ட் றஸல் இவ்வாறு கூறுகின்றார், ''எனது கோட்பாட்டுக்கு நான் அணுக் கோட்பாடு என பெயரிட விரும்புகின்றேன். ஆனால் அது (இயற்கை) அணு பற்றிய தல்ல'' ஆனால் இது அவரது கணித மெய்யியல் சிந்தனையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அடிப்படையில் உருவானது என்கின்றார். கணிதத் தன்மை வாய்ந்த ஒரு அளவையியல் கோட்பாட்டையும் இதற்காக றஸல் உருவாக்கினார்.

முழுக்கணித உருவாக்கமும், சாரம்சத்தில் அளவையியல் அடித்தளமாகவும் அமைகின்றது. இதிலிருந்து ஏன் இந்த கணிதத்திற்கு அடிப்படையாக உள்ள கூறுகளில் மொழியியல் செயற்படவில்லை எனவும் அவர் ஆராய்ந்தார்.

றஸல் தனது தர்க்க அணுவாதம் என்ற கோட்பாட்டுக்கு சாதகமான கருத்துக்களை லைப்பினிஸிடைய மெய்யியலில் இருந்துதான் பெற்றுக் கொண்டார். அதாவது ஒரு எடுப்பிலுள்ள சிக்கலான எண்ணக் கருக்களை வேறுபடுத்தல் என்ற விடயத்தையும், சாதாரண பேச்சு மொழியில் காணப்படும் சொல்லமைப்பு முறையினையும் லைப்பினிஸி னூடாக றஸல் கண்டு கொண்டார். இதன் காரணமாக லைப்பினிஸின் மெய்யியலை றஸல் மேலும் விளக்க முயன்றார். இதனால் றஸல் பௌதிகஅதீத சிந்தனையில் இருந்து தூய அறிவு ரீதியான சிந்தனைக்கு வந்து சேர்ந்தார். உண்மையில் இந்தப் பின்னணியில் தான் றஸலின் தர்க்க அணுவாதம் வளர்ச்சியடைந்தது எனலாம். இந்த விபரங்களை "The Principia Mathamatica" என்ற நூலில் றஸல் அறிமுகப்படுத்து கின்றார்.

மொழியும் நேர்வும்

தர்க்க அணுவாதக் கோட்பாடானது புதிய, பிரத்தியேகமான பாஷை ஒன்றை உருவாக்க முற்படுகின்றது. இங்கு அணுவென்று கூறும்போது பௌதீக ரீதியான அணுவைப் பற்றியல்ல. ஆனால் தர்க்க ரீதியான அணுவாகும். அனுபவ ரீதியான உலகை அறிய முயற்சிக்கும் போது அதிலிருந்து ஏற்படும் ஏமாற்றங்களில் இருந்து தவிர்ந்து கொள்ள கணித ரீதியான தர்க்க அறிவியலில் ஒருவர் போதுமான அறிவைப் பெற்றிருக்க வேண்டும். றஸலினுடைய இந்தக் கூற்றில் இரண்டு விடயங்கள் வலியுறுத்தப்படுகின்றன.

கணித ரீதியான அறிவின் அவசியம்
கணித அளவையியலின் அவசியம்

இவை பற்றிய அறிமுகமில்லையெனின் கணிதவாதிகளால் முன்வைக்கப்படும் கருத்துக்களின் விளக்கத்தை நாம் சரியாகப் புரிந்து கொள்ள முடியாது. அவர்கள் முன்வைக்கின்ற கருத்துக்கள் பிரயோக அறிவியல் மூலமும் வெளிப்படுத்தப்படுகின்றன. விவரணப் பண்புரீதியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வேறுபட்ட மொழிகள் செயல்படுகின்றன. எனவேதான் றஸலின் தர்க்க அணுவாதக் கோட்பாடு ஒரு புதிய பிரத்தியேகமான பாஷையை அளவையியல் அறிவிலிருந்தும் அறிவாராச்சியியலிலிருந்தும் உருவாக்க ஆலோசித்தது.

உலகிலுள்ள பொருட்கள் யாவற்றிலும் பல்வேறு வகையான உறவுகள் உள்ளன. மேலும், அவை வெவ்வேறு தொடர்புகளையும் பெற்றுள்ளன. இந்தத் தொடர்புகளும், உடமைகளும், உறவுகளுமே நேர்வுகள் ஆகும். இந்த நேர்வுகள் யதார்த்த உலகைப் பிரதி பலிக்கின்றன. இவை பொருட்களுக்கிடையிலான சிக்கலான தொடர்பு களைக் காட்டுகின்றன. நேர்வுகளைப் பகுப்பாய்வு செய்யும்போது இந்த சிக்கல் பற்றிய பிரச்சினை உருவாகின்றது. நேர்வுகளின் சிக்கல் மொழிச் சிக்கலுக்குச் சமமானது. இதனால், பகுப்பாய்வின் நோக்கத்தின்படி ஒவ்வொரு கூற்றுக்களும் யதார்தத்தின் போதுமான அல்லது திருத்தமான சித்திரமாக அமைய வேண்டும். யதார்தத்தின் சரியான சித்திரிப்பை மொழி போதிய வகையில் தருகின்றதா? இது தான் பகுப்பாய்வின் முக்கிய பிரச்சினையாகும்.

மொழி, உலகத்தைப் பற்றிய மிகத் தனித்துவமான ஒழுங் கமைப்பை தருகின்றது. றஸலின் கருத்துப்படி மொழி உலகின் விளக்க மாகும். மொழி விளக்கத்திலிருந்து தப்புவதில்லை. ஆனால், றஸலின் கருத்தில் உலக விளக்கத்தை மொழி தருவதாக இருக்க வேண்டும். இருப்பதைப் பற்றி சொல்வதே மொழியாகும். நேர்வுகளே சொற்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. உதாரணமாக; கார், கல்பிட்டி, பேனா, தாமரை. தாஜ்மஹல், என யதார்தத்தை மொழி பெயர்த்து உண்மைக் கருத்தாக மனிதனுக்குத்தருகிறது.

இதிலிருந்து தான் மொழியின் அர்த்தத்தின் தன்மை வெளிப் படுகின்றது. மொழி யதார்த்தத்தை பிரதிபலிக்க வேண்டும். நேர்வு யதார்த்தத்தைப் பிரதிபலிக்கின்றது. மொழி நேர்வுகளை மொழிபெயர்த்துச் சொல்லும் இயந்திரிக வாய்ப்பாடு அல்லது வழிமுறை. இதுதான் உண்மை பற்றிய மையக் கருத்தாகும்.

நேர்வுகளை மொழி சரியாக மொழி பெயர்க்காவிட்டால் பிரச்சினைகள், மயக்கங்கள் ஏற்படும். இதை றஸல் பின்வருமாறு குறிப்பிடு கின்றார்: மொழி தர்க்கரீதியான பூரணத்துவமான நிலையில் இருக்க வேண்டும். தர்க்கரீதியான பூரணத்துவமான மொழி என்றால் ஒரு கூற்றிலுள்ள சொற்கள் அதனுடைய (தொடர்புடைய) நேர்வுகளையும், அதன் பகுதிகளையும் சரியாக தொடர்புபடுத்த வேண்டும். இவ்வாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

செய்யும் போது பகுப்பாய்வு மூலம் எளிய சொற்களை நாம் பெறலாம். எளிய சொற்கள் மேலும் பகுப்பாய்வு செய்ய முடியாதவை. இவை மிக அடிப்படையான சொற்கள். உதாரணம். ஒரு மலர், ஒரு கார்.

இந்தச் சொற்கள் எதை அடையாளப்படுத்துகின்றன, சொற்கள் ஒரு வகையில் அடையாளம் ஆகும். உதாரணம்: சிவப்பு. இதற்கு மேல் பகுப்பாய்வு செய்ய முடியாது.

'இரண்டு புத்தகங்களையும், இரண்டு பேப்பர்களையும் நான்கு மணிக்கு நேற்றும் நான் பார்த்தேன்' என்பது, சிக்கலான கூற்றாகும். இதில் புத்தகம் என்ற விடயத்துடன் பல வார்த்தைகள் அடங்குகின்றன. ஒவ்வொரு வாக்கியத்திற்கும் பல பதங்கள் உள்ளன.

புலன்தரவு

ஒரு எடுப்பு நேர்வை பிரதிபலிக்கின்றது. அந்த நேர்வு மேலும் பகுக்க முடியாத எளிய நேர்வாக இருக்கும்போது அந்நிலையை அணுநேர்வு எனலாம். அணுநேர்வினைக் கூறும் எடுப்புக்கள் அணு எடுப்புக்கள் எனப்படும். அணு எடுப்புப் பற்றி விக்கன்ஸ்டைனும் பேசியுள்ளார். அணுவெடுப்பு என்றால் என்ன என்பதை பின்வரும் உதாரணத்தின் மூலம் பார்க்கலாம். எனக்குத் தென்படும் பெரிய சிவப்பு நிறப்புள்ளி, நீல நிறப்புள்ளிக்கு தென்பக்கத்தில் அமைந்திருக்கின்றது. இது கூற்று ஒன்று. அது சிவப்பைப் போல் தென்படுகின்றது. இது கூற்று இரண்டு. இவ்விதமான கூற்றுக்களின் ஊடாகத்தான் விளக்கலாம் என ரஸல் கருதினார். இதில் காணப்படும் சாரம் புலன்தரவுகள் (Sense -data) எனப்பட்டது. எமது புலன் உணர்வுகள் அறிதல் தரவுகளைப் பயன படுத்துகின்றன. புலன்களுடன் நாம் பல விடயங்களோடு தொடர்பு பட்டிருக்கின்றோம். அவை எமக்குப் பல விடயங்களை அறிமுகப்படுத்து கின்றன. பார்த்தல், கேட்டல் முதலியன. உதாரணமாக, நான் மலையைக் கண்டேன். கார் வருகின்ற சத்தம் கேட்கின்றது. காண்பது ஸ்பரிசிப்பது பல்வேறு வகையில் நாமறிந்த விடயம் பொருட்களே ஆகும். ஆகவே இவ்வாறு நாம் பார்க்கும் கேட்கும் பரிச்சயங்களையே நாம் அனுபவிக்கி றோம். நாம் உண்மையில் இதற்கு காரணமாயிருக்கின்ற அடிப்படையான பொருட்கள் பற்றிய அறிவையல்ல நாம் அறிவது. பொருட்களில் காணப்படும் உடனடியான காட்சிப் பதிவுகளே அன்றி அப்பொருட்களைப் பற்றிய அறிவு அல்ல. இவ்வாறு நாம் பெறுபவற்றை புலன்தரவுகள் என்று சொல்லலாம். இவை பொருள்களின் நிறங்கள், ஒலிகள், அவற்றின் பருமன் போன்ற தன்மைகளைப் பற்றிய தரவுகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

றஸல் புலன் தரவு என்ற விடயத்திற்கு முதலிடம் தருகின்றார். இந்தவகையில் புலக்காட்சியில் சம்பந்தப்பட்ட மூல அம்சம் பற்றிய கருத்திற்காக, றஸல் உருவாக்கிய குறியீட்டு அளவையியல் முக்கிய இடத்தைப் பெற்றதாகக்கருதலாம். இந்த சிந்தனையின் அடிப்படையில் மெய்யியல் என்பதற்கு ஒரு புதிய அர்த்தத்தை றஸல் தர விரும்பினார். இது 20ஆம் நூற்றாண்டின் மெய்யியல் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்தியது. 1920 இல் வியன்னாவட்ட கணித தர்க்க சிந்தனையாளர் களுக்கு இது ஒரு பெரிய உந்து சக்தியாக அமைந்தது. றஸல் தனது தர்க்க அணுவாத கோட்பாட்டின் அடிப்படையில் மெய்யியல் பற்றி இவ்வாறு கூறினார். மெய்யியலுடைய சரியான முறை என்னவெனில் சிக்கலான எடுப்புகளிலிருந்து அவற்றில் காணப்படும் எளிமையான எடுப்புகளைக் கண்டுகொள்ள வேண்டும் என்பதாகும். இந்த வகையில் றஸல் மெய்யியலை எடுப்புக்கள் பற்றிய ஒரு விஞ்ஞானமாக கருதினார் எனலாம்.

புலக்காட்சி என்பது பெருமளவில் சிக்கலானதொன்றாகும். உணரும் பொழுது புலன் தரவுகளுக்கிடையே இங்கு ஒரு தொடர்பு காணப்படுவதுடன், புலக்காட்சியும் அதன் சிக்கலும் அவற்றிலிருந்து பிரித்து காட்டப்படுகின்றன. அறிவாராச்சியியல் நோக்கில் இதை மூன்று பிரிவுகளாக வகுக்கலாம்.

1 வது கட்டம் : புலன் உணர்வுகளுக்கும் புலன் தரவுகளுக்கும் இடையேயுள்ள தொடர்பு
2 வது கட்டம் : புலக்காட்சிக்கும் சிக்கலான தரவுகளுக்கும் இடையிலான தொடர்பு
3 வது கட்டம் : அவற்றிற்கும் அறிவுக்கும், இடையேயுள்ள தொடர்பு

புலக்காட்சி என்பது புலன்களுடன் தொடர்புடையதாக இருந்தாலும் அது முழுமையான காட்சியல்ல. புலனுணர்வை நாம் ஏற்கனவே பார்த்ததைப் போன்று, புலன்தரவு எனக்கூறலாம். ஆனால், புலன்தரவு புலக்காட்சியை ஒரு போதும் தருவதில்லை. மெய்யியலின் உண்மையான முறையென்பது விபரிப்புத்தான் என்று றஸல் கருதியிருந்தார். இங்கு அதன் பிரதிபலிப்பை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. அதாவது புலக்காட்சியென்பது மிகவும் சிறிய ஒரு அலகை நோக்கிய விபரித்த லாகும். புலக்காட்சியினுடைய மிகவும் சிறிய அலகு புலன்தரவாகும். எடுப்புக்கள் சம்பந்தப்படும் விடயங்களில் இந்தப் புலன்தரவுகள் எடுப்புக்களி னூடாக வெளிப்படுத்தப்படுகின்றது.

இதிலிருந்து உருவாவதுதான் அடிப்படையெடுப்பு. இதைத்தான் றஸல் அணு எடுப்பு என்று குறிப்பிட்டார். அணு எடுப்புக்கள் என்று அவர் கூறியது உண்மையில் புலனெடுப்புகளைத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அனுபவ அறிவு என்பது, மிகவும் பிரதானமாக பௌதீகப் பொருளோடு சம்பந்தப்பட்டிருப்பதை விடப் புலன் தரவோடு தொடர்பு பட்டவையாக அவை உள்ளன என்று; றஸல் நம்பினார். பௌதீகப் பொருள் பற்றிய அறிவு என்பது றஸலுடைய கருத்தில் கருதுகோளாகும் என்று கூறலாம். இது பௌதீக விஞ்ஞானிகளால் பயன்படுத்தப்படும் கருதுகோள்களுக்கு சமமானதாகும். இந்த நோக்கில் பார்க்கும்போது றஸலினுடைய மெய்யியல் கொள்கைகளில் பௌதீக விஞ்ஞானம் எந்தளவுக்கு தங்கியிருக்கின்றது என்பது தெரியவரும். விஞ்ஞான உலகில் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் கருதுகோள்கள் நிரூபிக்கப்படுமானால் அது விஞ்ஞான அறிவு என்பதற்கு பொருத்தமாகும். இதனால் றஸல் இந்த பௌதீகப் பொருள் பற்றிய கருதுகோள் உண்மையானதென்று ஏற்றுக்கொள்வதற்கு அங்கு செயல்பட்ட புலன் தரவுகளின் நடவடிக்கைகள் தான் காரணம் என்று கூறுகின்றார். ஆகவே புலன் தரவு நடவடிக்கைகள் நடைபெறும்போது எளிய சாதாரண தரவுகளிலிருந்து அது உருவாகிறது எனலாம்.

இதிலிருந்துதான் இந்த உண்மைக்கு மிகவும் நெருங்கிய விஞ்ஞானக் கருதுகோள்கள் உருவாயின. இங்குள்ள அடிப்படைப் பிரச்சினை என்னவென்றால் இதற்கெல்லாம் அடிப்படை அம்சமாக, மூல காரணமாக இருப்பது இந்த எளிமையான துண்டு துண்டான புலன் தரவுகளாகும். அப்படியென்றால் நாம் பெற்ற உண்மை என்று கருதுகின்ற விஞ்ஞான கருதுகோள்கள் கூட விஞ்ஞானம் என்று அழைக்கப்படுகின்றது. ஆனால், இதற்கு இருக்கும் பிரச்சினை யதார்த்தத்தை உண்மையென்று கருதுவதற்கு போதுமானதாக இருந்ததா? என்பது றஸலினுடைய கேள்வியாகும். இந்த அடிப்படையில் விஞ்ஞானத்தில் அல்லது உண்மை பற்றிய எமது கருத்துக்களில் காணப்படும் நம்பகத்தன்மை இயல்பானதா என்ற கேள்விக்கு இடமிருக்கிறது. இதனாலேயே றஸலின் காலத்தில் வாழ்ந்த மற்றொரு மெய்யியலாளரான மூவர் ''பௌதீக பொருட்களைப் பற்றி நாம் பெற்றுக் கொள்வதற்கு ஒன்றும் இல்லை. உண்மையில் எம்மிடம் இருப்பது உயர்ந்த நிலையிலான அல்லது குறைந்த நிலையிலான நிகழ்வுகள் பற்றிய அறிவுதான்" என்றார் (இந்த றஸலுடைய) மெய்யியல் பண்புகளின் இயல்பினை நாம் பார்க்கும்போதுதான் றஸல் கணிதம், விஞ்ஞானம், தர்க்கம் ஆகிய மூன்றையும் மெய்யியல் பகுப்பாய்வின் மையக் காரணிகளாக எவ்வாறு ஏன் மாற்றினார் என்பதும் புலப்படும். அவரது புலக்காட்சிக்கொள்கையின் அடித்தளம் விஞ்ஞான எண்ணக்கருக்களையே கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வியன்னா வட்ட தர்க்கப்புலனெறிவாதிகள்

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் மெய்யியலின் புதிய போக்குகளை வடிவமைப்பதிலும், நிர்ணயிப்பதிலும் ஒரு இயக்கமாகவும், சிந்தனைப் பள்ளியாகவும் தர்க்கப்புலனெறிவாதம் செயற்பட்டது. இவ்வாதத்தை உருவாக்குவதற்கு காரணமாய் இருந்தவர்கள் விஞ்ஞான முறையினாலும், கணிதத்தினாலும் அளவையியலினாலும் பாதிக்கப் பட்டவர்கள், அவற்றின் செல்வாக்குக்கு உட்பட்டவர்கள். இவர்கள் பௌதிக அதீதத்தை நிராகரித்தனர். றஸலுடைய அளவையில் படைப்புக் களையும் விக்கன்ஸ்டைனுடைய சக்திமிக்க உருவாக்கமான அளவையி யலுக்கும் மொழிக்குமிடையிலான தொடர்பற்றிய சிந்தனையையும் இவர்கள் தமது கொள்கைகளுக்கான அடிப்படையாக ஏற்றனர். 1920களில் ஆஸ்திரியாவில் ''வியன்னா" நகரில் முன்னணி விஞ்ஞான, கணித, அளவையியலாளர்கள், மெய்யியலாளர்கள் அனைவரும் சேர்ந்து வியன்னா வட்டம் என்ற ஒரு சங்கத்தை உருவாக்கினர். விரைவில் வியன்னா வட்டம் புதிய போக்கொன்றினை, மெய்யியலில் நிர்ப்பந்திக் கின்ற ஒரு அமைப்பாக மாறியது.

விக்கன்ஸ்டைனுடைய Tractatus எனும் நூல் இவர்களுடைய கருத்துக்களுக்கும் இலட்சியங்களுக்கும் ஒரு அடிப்படையாக விளங்கி யது. இந்நூலில் அவர் மொழிக்கும் அளவையியலுக்குமிடையே உள்ள தொடர்பை நிறுவியிருந்தார். மெய்யியல் வரலாற்றில் இதற்கு அடித்தளம் தரக்கூடிய தொடர்பினை ஏற்கனவே இருந்த அனுபவவாதிகளில் முக்கியமாக 'ஹியூம்' அவரது தீவிரமான அனுபவவாதக் கருத்துக்களில் முன்வைத்திருந்தார். 'நான்', 'அகம்' என்ற பதங்களை அவர் கேள்விக் குரியதாக்கினார்.

விக்கன்ஸ்டைன் Tractatus எனும் நூலில் நேர்வு பற்றிய ஆய்வினைத் தொடங்கினார். இப்பிரபஞ்சமானது நேர்வுகளின் முழுமை யாகும். பொருள்களின் முழுமையல்ல. இந்தப் பிரபஞ்சமானது நேர்வுகளி னால் பிரிக்கப்பட்டுள்ளது. மொழியின் உண்மை நிலை என்ன? என்று கூறுவதோடு இந்தப் பிரபஞ்சத்தினுடைய பௌதிகஅதீத நிலைக்குட் பட்ட ஒரு தன்மையை விளக்குவதற்கும் அல்லது அவ்வகையான கருத்தை முன்வைப்பதற்கும் அவர் துணிந்தார். ஆனால், அது சாதாரணமான வர்களால் கூறப்படும் பௌதிகஅதீதம் அல்ல. உலகம் பொருட்களினால் பிரிக்கப்படவில்லை. ஆனால் நேர்வுகளினால் பிரிக்கப்பட்டுள்ளது என்று அவரது நூல் கூறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாய்ப்புப்பார்த்தல் விதி

டேவிட் ஹியூமின் அனுபவமுதல்வாதச் சிந்தனை ஒரு புறமாக, மொழியின் இயல்பு பற்றிய கொள்கைகள் மறுபுறமாக, வியன்னாவட்ட வாதிகளை புதிய அணுகுமுறைகளை நோக்கித் திசைதிருப்பின. எவ்வாறாயினும் வியன்னா வட்டவாதிகளின் பிரதான நோக்கம் பௌதிக அதீதத்தினை மெய்யியலிருந்து எடுத்து விடுவதாகும். இதனை எவ்வாறு மெய்யியலிருந்து அகற்றுவது என்பது ஒரு சவாலாகவும் பிரச்சனையாகவு மிருந்தது. இதற்காக வாய்ப்புப் பார்த்தல் கோட்பாட்டை அல்லது ஒரு விதியை அவர்கள் உருவாக்கினர். வியன்னாவாதிகளின் அடிப்படைக் கருத்து மொழி அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும் என்பதாகும். அது வாக்கியங்களாக இருந்தாலும் சரி, எடுப்புக்களாக இருந்தாலும் சரி அவை அர்த்தமுள்ளவை என்பதை விசாரிப்பதற்கு அல்லது அளவீடு செய்வதற்கு இக்கோட்பாட்டை அவர்கள் பயன்படுத்தினர். இக்கருத்திற் கான சில அடிப்படை அம்சங்கள் விக்கன்ஸ்டைனின் நூலில் காணப் பட்டது. சரியான உண்மைகளை வெளிப்படுத்தாத எடுப்புக்களை நிராகரிக்க வேண்டும். இந்த விதியினுடைய தேவையை பூர்த்தி செய்யக் கூடிய எடுப்புக்கள் மட்டுமே அர்த்தமுள்ள எடுப்புக்கள் என்று கூறினர். இதனால் இந்த விதியை ஒரு உரைகல் அல்லது தரநிர்ணய, அளவு முறை என்று கூறலாம். இவ்வாறு மொழியில் அர்த்தமுள்ளதையும். அர்த்தமற்றதையும் வேறுபடுத்துவது மிகவும் கடினமானது. எனவே ஒரு கூற்று (Proposition) இந்த உரைகல்லினுடைய தேவையைப் பூர்த்தி செய்யுமானால் அது அர்த்தமுள்ளதாகக் கருதப்படும். இவ்வாறு பூர்த்தி செய்யத்தவறுமானால் அது அர்த்தமற்றது எனக் கொள்ளப்படும். இதனால் இக்கோட்பாட்டுக்கு முன்னணியில் இருப்பது வாய்ப்பு பார்த்தலாகும். வாய்ப்புபார்த்தல் என்பது புலன்சார் அனுபவமாகும். அனுபவ, அவதான முறையினூடாக ஒரு எடுப்பு வாய்ப்பு பார்க்க முடியாதென்றால் அதற்கு அர்த்தமில்லை. இதில் கணித எடுப்புக்களுக்கு விசேட சலுகை தரப்பட்டது. அப்படியானால், பௌதிகஅதீத மொழி அல்லது அவ்வகைக் கூற்றுக்கள் இந்த சோதனையில் சித்தியடையாது என்று அவர்கள் முடிவாக நிராகரித்து விட்டனர்.

பகுப்பெடுப்பு என்பது பயனிலையில் கூறியவற்றை ஏற்கனவே எழுவாய் தன்னுள் அடக்கியிருப்பது. பகுப்பு கூற்றுக்கள் பெரும்பாலும் மனித அறிவு வளர்ச்சிக்கு அதிகம் உதவுவது இல்லை. ஏனெனில் அது கூறியது கூறலாகும். தொகுப்பெடுப்பு ஒன்றில் உண்மையை அல்லது பொய்யை வெளிப்படுத்துகிறது. நாங்கள் தர்க்கம் சாராத அல்லது அளவையியல் சாராத, மொழியியல் சாராத தரவுகளை தாங்க வேண்டியுள்ளது. ஏனெனில் பயனிலை எழுவாயை நேரடியாக குறிப்பிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வில்லை. தொகுப்பெடுப்புக்கு புலனெனுபவம் உண்டு. அது கூறுவது பற்றி உண்மை சார்ந்த தரவுகளை வைத்துக் கொண்டுதான் உண்மை பொய் கூற முடியும். இந்த எடுப்பை அடிப்படையாக வைத்து தர்க்க புலனெறிவாதிகள் பகுப்பாய்வு எடுப்புக்கள் நியம அர்த்தங்களை கொண்டிருக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். ஏனெனில் அவற்றின் அர்த்தம் நேர்வுகளில் தங்கியிருக்கவில்லை. அவை அளவையியல் தொடர்புடையவை. கணிதத்தைபோல, தொகுப்பெடுப்புக்கள் நேர்வு அர்த்தங்களை அல்லது யதார்த்தத்தில் காணப்படும் அர்த்தங்களை கொண்டுள்ளன. ஏனெனில் அவற்றின் பொருள் ஒரு பொருளைப் பற்றிய அனுபவ அவதானத்தை உள்ளடக்கியுள்ளது. அதனால் தொகுப் பெடுப்புக்கள் நேர்வு விஞ்ஞானங்களின் மொழியாக அமைந்துள்ளன. உதாரணமாக பௌதிகவியல் உயிரியல் போன்றன. இங்கு தான் நாம் தர்க்கப் புலனெறிவாதிகளுடைய நிர்ணயமிக்க கருத்துக்கு வந்து சேர்கின்றோம். அதுதான் மொழியில் இருவகையான கருத்து தொகுதிகள் பற்றிய அவர்களின் நிலைப்பாடு எனலாம்.

அ. கணிதம், அளவையியல்
ஆ. பௌதிகவியல்,

இந்தத் துறைகளைத்தான் உறுதிவாய்ந்த உண்மைகள் என அவர்கள் கருதினார்கள். அதாவது இவை தவிர்ந்தவற்றில் எந்தவிதமான அர்த்தமுமில்லை. ஏனென்றால் பகுப்பெடுப்புக்கள் மிகவும் பொதுமை யானதும், மிகவும் கட்டாயமானதுமான உண்மையைக் கொண்டுள்ளன. மனிதனுடைய அனுபவத்திற்கு உட்பட்டவையாக இருப்பது இரண்டாவது விடயம்தான். ஏனெனில், அனுபவத்தினூடாக வாய்ப்புப் பார்த்தல் விதியை பயன்படுத்தி தொகுப்பெடுப்பு ஒன்றில் உண்மையை, பொய்யை காண அங்கு வாய்ப்பிருக்கின்றது. ஆகவே இந்த இரண்டிலும் சாராத கூற்றுக்கள் யாவும் அவை பகுப்புக் கூற்றுக்களோ, தொகுப்புக் கூற்றுக்களோ அல்ல. அவை உணர்ச்சித் தன்மை வாய்ந்த கூற்றுக்கள் அல்லது அறிவு சார்பற்ற வாக்கியங்கள் என்றனர். இத்தகைய வாக்கியங்களை தர்க்கப் புலனெறி வாதத்தின் அணுகு முறைக்குள் கொண்டு வந்தால் இறுதியில் அவை உணர்ச்சி மொழியாக அமைந்துள்ளன என்ற முடிவுக்குத்தான் வரநேரும் என அவர்கள் கூறினார்கள். இன்னொரு வகையில் சொன்னால் அவற்றை பௌதிக அதீதத்தினுள் அவர்கள் கொண்டு வந்தார்கள். இவற்றை நாங்கள் நிராகரிக்கின்றோம் என்றும் கூறினார்கள். இவற்றுள் முக்கியமாக ஒழுக்கவியல், இரசனையியல், சமயம், இறையியல், வரலாறு போன்ற பிரிவுகள் அடங்கியிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இந்த இயக்கத்தில் பிரதானமாக இடம்பெற்ற மொறிஸ்சிலிக், றூடோல்காணெப், வைஸ்மென் போன்ற சிந்தனையாளர்கள் இந்த விடயத்தில் கடுமையான போக்கைக் கொண்டிருந்தனர். ''Philosophy and Logical Syntex''எனும் நூலில் றூடோல்காணெப் பின்வருமாறு கூறினார். ''பௌதிக அதீத எடுப்புக்கள் அவை உண்மையுமல்ல. பொய்யுமல்ல. ஏனெனில் அவை எதையுமே உறுதி செய்யவில்லை. அவை அறிவு பூர்வமானவையுமல்ல, தவறானவையுமல்ல. ஆனால், அவை முழுமை யான அறிவுக்கு வெளியேயுள்ள விடயங்களில் தங்கியுள்ளன. உண்மை, பொய் என்ற உரைகளுக்கு வெளியில் அவை தங்கியிருக்கின்றன. அவை பாடல்களையும் இசையையும் போன்றவை. வியன்னா வட்ட வாதிகள் ஒரே தடவையில் பௌதிகஅதீதத்தை முற்றுமுழுதாக நிராகரித்தனர். இதே நோக்கில் ஒழுக்க பிரமாணத் தீர்வையும் அர்த்த மற்றவை என்றும், அறிவு சாராதவை என்றும் நிராகரித்தார்கள். வாய்ப்பு பார்த்தல் விதியை ஒரு கருவியாக பயன்படுத்திப் பௌதிக அதீதத்தை அவர்கள் இவ்வாறு நிராகரித்தனர். இதனால் ஒழுக்கவியல், இரசனையியல் போன்ற துறைகள் பெரும் பிரச்சினையை எதிர்நோக்கின. கடுமையான விமர்சனங்களுக்கு வியன்னாவட்டவாதிகள் முகம் கொடுக்க வேண்டி யிருந்தது. இதன் பிரதிபலிப்பாக இந்த சிந்தனைப் பள்ளியில் சில பிரிவுகள் ஏற்படத் தொடங்கின. ஏனெனில், தர்க்கப் புலனெறிவாதம் ஆரம்பத்திலிருந்து இதுவரையில் மனிதன் கொண்டிருந்த அறிவியல் ரீதியான கருத்துக்களை முற்றாக நிராகரிக்கின்றது எனச் சில அதிருப்தி யாளர்கள் யோசித்தனர். எனவே எல்லா பௌதிக அதீத கூற்றுக்களும் அறிவுரீதியாக அர்த்தமற்றவை என்றனர். அனுபவரீதியாக வாய்ப்பு பார்த்தல் என்ற எண்ணக்கருவைத்தான் இந்த புலனெறி வாதிகள் முக்கியமான ஆயுதமாகப் பயன்படுத்தினர்.

முடிவற்ற உள்பொருள் என்ற கருத்து என்ன? பௌதிகவதீதம் இவ்வாறு பல வாக்கியங்களை மொழியியல் கொண்டுள்ளது. இவை கூறுவனவற்றை நாங்கள் பார்க்கவில்லை என்பதற்காக நாங்கள் இதை நிராகரிக்கவில்லை. ஏன் இவற்றை நிராகரிக்கின்றோமென்றால் நேரடியாக வாய்ப்புப்பார்க்க முடியாத விடயங்களைப் பற்றிப் பேசுவதனாலேயே நாம் அவற்றை நிராகரிக்கின்றோம் எனத் தர்க்கப்புலனெறிவாதிகள் கூறினார்கள். ஒரு உண்மையான கூற்றை எவ்வாறு அறிந்து கொள்வது அல்லது தெரிவு செய்வது என்பது தான் இங்குள்ள பிரச்சனையாகும். இதற்கு இக்குழுவில் உள்ளவர்கள் ஒரு கடுமையான வரையறையை வகுத்தனர். ஒரு கூற்று அறிவுரீதியானது என்பதற்கு இவ்வாய்ப்பு பார்த்தல் முறை எவ்வளவு தூரம் சக்தியுள்ள உரைகல் என்பது பற்றிய கேள்விகள் மெல்ல மெல்ல எழலாயின. புலன் அனுபவங்கள்தான் அது என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவர்கள் கூறினார்கள். அப்படியானால் புலன் அனுபவம் என்றால் என்ன? யாருடைய அனுபவங்கள்? ஒரு அனுபவ எடுப்பு இனக்குறைப்பு செய்யப்பட உறுதியான நேர்வு என்பதன் உண்மையான பொருள் என்ன? இந்த வகையில் வாய்ப்புப் பார்த்தல் கோட்பாட்டின் இயல்பு பற்றியும், அது ஆராயும் நேர்வுகளின் தன்மை பற்றியும் கேள்விகள் எழுப்பப்பட்டன. வாய்ப்புப் பார்த்தல் கோட்பாடு விஞ்ஞானத்தோடு தான் மிகவும் பொருத்த மாக இருக்கும்.. விஞ்ஞானத்தினுடைய இயல்பு அது பொதுமையான விதிகளை உருவாக்குகிறது. எதிர்வு கூறலை சாத்தியமாக்குகிறது. விஞ்ஞான கூற்றுக்கள் அர்த்தமுள்ளவையா? எனப்பார்ப்பதற்கு வாய்ப்பு பார்த்தல் கோட்பாடு எவ்வளவு தூரம் சக்தி வாய்ந்தது என்ற கேள்வியும் எழுப்பப்பட்டது. ஒரு கூற்று முன்வைக்கின்ற எதிர்வு கூறலை எவ்வாறு வாய்ப்புபார்ப்பது. வாய்ப்புபார்த்தல் கோட்பாடு விஞ்ஞானக் கூற்றுக் களுக்கு பொருத்தமானது என்றால் விஞ்ஞானத்தில் இரு பிரதான பண்புகள் உள்ளன.

அ. பொதுமையான விதிகள்: இந்தப் பொதுமையான விதிகளை வாய்ப்பு பார்க்க இவ்விதி எவ்வளவு தூரம் சக்தி பெற்றுள்ளது.

ஆ. எதிர்வு கூறல்: ஒரு கூற்றினை உள்ளடக்கியிருக்கின்ற எதிர்வு கூறல் என்ற விடயத்தை இந்த வாய்ப்புப் பார்த்தல் விதி எவ்வாறு பரிசோதனைக்குட்படுத்தும் அதற்கு இக்கோட்பாட்டுக்கு சக்தியிருக் கின்றதா? அதை இதனால் அவதானிக்க முடியுமா?

இத்தகைய கேள்விகள் எழுப்பப்பட்டன. வாய்ப்புப்பார்த்தல் கோட்பாட்டை அல்லது விதியை உருவாக்கிய சிந்தனையாளர்களும் இத்தகைய கேள்விகளை உருவாக்கினர். அவர்கள் அனுபவம்தான் இந்த விடயங்களை தீர்மானிக்கின்ற சக்தி என்றால் யாருடைய அனுபவம்? எத்தகைய அனுபவம்? என்றும் பௌதிகஅதீதத்தின் சார்பாளர்கள் கேள்வி எழுப்பினர். எல்லாவற்றிற்கும் அனுபவம் தான் காரணமென்றால், ஆன்மீக அனுபவம், கலை அனுபவம் என்று அனுபவங்கள் வெவ்வேறு விடயங் களால் செயற்படக்கூடியது. இந்த வாய்ப்பு பார்த்தல் கோட்பாடு என்பது என்ன? இது ஒரு உரைகல் என்ற நிலையை எவ்வாறு பெற்றுக் கொண்டது, அதைத் தீர்மானிக்கும் கருவி என்ன? என்ற வகையில் விவாதங்கள் தொடங்கின. இதன் காரணமாக இணங்கிச் செல்லும், முறையைத் தர்க்கபுலனெறிவாதிகளில் சிலர் உருவாக்கினர். சிலர் தங்கள் அடிப்படைக் கருத்துக்களை விட்டுக்கொடுக்கவில்லை. அதனால் (i) பலம் வாய்ந்த உறுதியான வாய்ப்புப் பார்த்தல் விதிகளை ஏற்றுக் கொண்டவர்களும், (ii)உறுதி குன்றிய வாய்ப்புப் பார்த்தல் விதிகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஏற்றுக் கொண்டவர்களும் என்ற இரு நிலைப்பட்ட குழுவினர் உருவாகினர். அதாவது, இதில் பலவீனமான பகுதியைச் சேர்ந்தவர்கள் ஒரு கூற்று குறைந்தபட்சம் கொள்கையளவில் வாய்ப்புப் பார்க்க கூடியதாக இருப்பது அல்லது வாய்ப்புப் பார்த்தலுக்கு உள்ளாக்கக் கூடிய நிலை இருந்தாலும் அதையும் நாம் ஏற்றுக்கொள்ளலாம் என்றார்கள். அவதானத்தின் வெவ்வேறு படித்தரங்களையும் அவர்கள் ஏற்றிருந்தார்கள். அவதானம் அல்லது அனுபவம் அடிப்படையானது என்றாலும் ஓரளவு விட்டுக்கொடுக்கும் நிலையில் இப்பலவீனவாதிகள் இருந்தார்கள். இவ்வாறு வாய்ப்பு பார்த்தல் கோட்பாடு இருவகைப்பட்டதாகியது. இதில் எழுந்த விமர்சனங்கள் உரையாடல்களினால் ஏற்பட்ட வளர்ச்சியினூடாக ஓரளவு சுமூக நிலைமை தோன்றியது. வாய்ப்புப் பார்த்தல் வாதத்தின் பிந்திய கட்ட முன்னோடியான ஏ.ஜே.அயர் (A.J Ayer) புதிய போக்கைச் சுட்டிக் காட்டும்போது ''பௌதிக அதீதவாதிகளை குற்றவாளிகளாகக் கருதிய அந்தப் பழைய நிலைமாறி அவர்களை ஒரு நோயாளியாகக் காண்கின்ற'' ஒரு நிலையை நோக்கிப் புலனெறிவாதம் திரும்பியது என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அத்தியாயம் 5

நிர்ணயவாதமும் சுயாதீன சித்தமும்

மனிதர்கள் பொதுவாக ஏதோ ஒரு விதத்தில் விதி வாதத்தை ஏற்றுள்ளார்கள். தங்கள் வாழ்வின் நிகழ்வுகள் நம்பிக்கைகள், முன்னேற்றங்கள், தாழ்வுகள் போன்றவற்றுக்கு விதி தான் காரணம் என இவர்கள் கூறுகின்றனர். இது, பாரம்பரியப் பண்பாட்டு வழக்காறுகளினாலும், இறையியல் தொடர்புகளினாலும் மிகவும் பிரசித்தி பெற்ற கருத்தாக உள்ளது. விதி என்பதை மெய்யியற் பரிபாஷையில் நிர்ணயவாதம் (determinism) தீர்மானிக்கப்பட்ட ஒரு விடயம் எனலாம். அதாவது, ஒவ்வொன்றுமே முன்னரே தீர்மானிக்கப்பட்டது. இதற்கு அப்பால், முன்னரே தீர்மானிக்கபட்டது என்ற கருத்து சமூக விஞ்ஞானக் கோட்பாடுகளிலும் அளவையியலிலும் வலியுறுத்தப்படுகின்றது. இதனால், பரந்த செல்வாக்குள்ள ஒரு கருத்தாகவும், நிர்ணவாதம் காணப்படுகின்றது. இதை நாம் சுருக்கமாகப் பார்த்தால், மனிதனின் ஒவ்வொரு செயற்பாடும் மிகநுணுக்கமான தசம எண்களால் கூறக்கூடிய அளவு முன்னரே தீர்மானிக்கப் பட்டுள்ளது என இது வலியுறுத்துகிறது.

சில சந்தர்ப்பங்களில் வேதனை, பயம் போன்றவை நிகழும் போது விதி வாதம் பற்றிய கருத்து எங்களைச் சூழ்ந்து கொள்கின்றது. எவ்வளவு தூரம் நல்லதாக, தீயதாக இருந்தாலும் அதைப் பற்றி நாங்கள் எதுவுமே செய்ய முடியாமலிருப்பது அல்லது, எங்களால் ஒன்றுமே ஆகவில்லை என்று நினைப்பது இதன் பிரதான அம்சமாகும்.

நிர்ணயவாதம் எல்லா நிகழ்ச்சிகளையும் தவிர்க்க முடியாத வகையில் அதன் காரண காரிய செயற்பாட்டுக்குள் உட்படுத்தப்படும் எனக் கூறுகின்றது. விஞ்ஞானத்தில் இதற்கு அடையாளம் உண்டு. பொதுவாக, விஞ்ஞானம் காரண காரியத்தை ஏற்கின்றது. நிகழ்வுகளுக்குக் காரண காரியம் தான் காரணம் என்கின்றது.

நிர்ணயவாதம் என்பதற்கும், விதி வாதம் என்பதற்கும் உள்ள தொடர்புகளை நிறைய காட்டமுடியும். இங்கு விதி என்பதில் காரணம் காரியம் என்பதை அவர்கள் கருத்திற் கொள்வதில்லை. அதற்கு இடமளிக்காமலேயே விதிவாதிகள் அதை நம்புகின்றனர். அப்படியானால், நிர்ணயவாதிகளை விட விதிவாதிகள் தீவிரமானவர்கள். எதற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவர்கள் இடமளிப்பதில்லை. கொள்கை கடுமையானதாக இருந்தாலும் உண்மையில், சாதாரண வாழ்வில் இந்த வகை முழுமையான விதிவாதி களை வரலாறு முழுக்கத் தேடினாலும் கண்டுபிடிக்கலாமா என்பது ஒரு கடினமான விடயமாகும். குற்றம் செய்யும் மகனைத் தண்டிக்காத எந்த (விதிவாதத்) தந்தையுமில்லை.

விதிவாதத்தின்படி எது நடந்தாலும் அது தவிர்க்க முடியாததாகும். விதிவாதக் கோட்பாட்டுக்குக் கொடுக்கக்கூடிய ஒரு சிறந்த வரை விலக்கணமாக இதனைக் கூறலாம். ஒரு விதிவாதி எது நிகழ்ந்தாலும் அது தவிர்க்கமுடியாதது எனக் கருதுகின்றார். அதாவது, ஆயிரம் வருடங்களுக்குப் பிறகு நடக்கும் விடயமாக இருந்தாலும் சரி, அடுத்த வருடத்தில் அல்லது நாளைக்கு அல்லது அடுத்த கணத்தில் நடக்கும் விடயமாக இருந்தாலும் சரி தன்னால் இந்த விடயத்தில் ஒன்றுமே செய்ய முடியாது என விதிவாதி நினைக்கின்றான். உண்மையில் அவன் என்ன நிகழப் போகின்றது என்பதை அறிவதற்குத் தான் அறிய விரும்புவதாக அவன் நடிப்பதில்லை. சிலவேளை அவன் சில அடையாளங்களை அறிந்து கொள்வதற்கு முற்படுகின்றான். உதாரண மாகச் சோதிடவியலாளர்களைப் போலக் காலநிலை ஆராய்ச்சி யாளர்களைப் போலத் தனக்குத் தெரிந்த சில அடையாளங்களை அறிகின்றான். தனக்குத் தெரிந்த விடயங்களைப் பற்றி சிந்தனை ரீதியாக யோசிப்பதிலும் அவர் ஈடுபடுகின்றான். அவ்வாறு அவன் ஈடுபட்டாலும், அவனது இறுதியான எண்ணம் இவற்றில் எதையுமே தவிர்க்க முடியாது என்பதாகும். முற்றிலும் பாவப்பட்ட சுதந்திரம் அற்ற நிலைக்கு விதி வாதம் அவனை இட்டுச் செல்கிறது.

பெரும்பாலும், இந்த வகையான விதிவாத நம்பிக்கை சமய இறையியல் கருத்துக்களோடும் தொடர்புபடுத்திக் கூறப்படுகின்றது. சில வேளை விஞ்ஞானத்தோடும், அளவையியலோடும் சம்பந்தப்படுத்திக் கூறப்படுகின்றது. இறையியலுடன் நோக்கும்போது இறைவன் எல்லாச் சக்திகளையும் பெற்று யாவற்றையும் அறிந்திருப்பதால் ஒரு விடயம் எவ்வாறு நடைபெற வேண்டுமோ அவ்வாறு நடத்த அவனுக்கு ஆற்ற லுண்டு. இந்த உலக நடவடிக்கைகளின் இயக்கம், அசைவு எதிர்காலச் சம்பவம் என்பன யாவும் அவனுடைய திட்டத்துக்குக் கட்டுப்பட்டதாகும். இறைவன் இருகிறான் எல்லாம் அறிந்தவனாக இருக்கின்றான். அவரால் எல்லாவற்றையும் பூரணமாக அறிய முடிகின்றது. இதன் அடிப்படையில் மிகக் திருத்தமான முறையில் உலக நிகழ்வுகள் எல்லாவற்றையும் முன்கூட்டித் தீர்மானிக்கும் ஆற்றல் அவருக்குண்டு என்பது இறையியல் ரீதியாக மனிதனுக்குக் கூறப்படும் விதிவாதமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இதிலுள்ள மெய்யியல் ரீதியான நுணுக்கங்களை நாம் நோக்கும் போது ''ஒஸ்மோ''என்பவர் விதிவாதத்தை இறையியல்ரீதியில்லாது தர்க்க ரீதியிலும் வேறு வகையான வாதங்கள் மூலமும் நியாயப்படுத்த முற்படுகின்றார். ஒரு நிகழ்வு நடப்பதைப் பற்றி ஒஸ்மோ அந்த நிகழ்வு என்ன? என்பதைப் பற்றி கவலைப்படவில்லை. அது ஒரு தர்க்கரீதியான உள்ளடக்கம் வாய்ந்த ஒரு நம்பிக்கையாக இருக்கவில்லை. ''சிலநேரங் களில் ஒரு ஆகாய விமான விபத்தில் அவர் தான் அழியப் போவதாகவோ அல்லது ஒரு விளையாட்டில் தனது காலைக் காயப்படுத்திக் கொள்வ தாகவோ கற்பனைச் செய்கின்றார். இவ்வாறாகக் கற்பனை செய்வது உண்மையில் ஒரு நிகழ்ச்சியாக நடக்குமா? இந்த விதமாக எந்தக் கருத்தையும் மெய்யியலாளர்கள் மிக இலகுவாக நிராகரிக்கக் கூடும்" என ஒஸ்மோ கூறுகின்றார். ஆனால், இத்தகைய உதாரணங்கள் மூலம், தான் எழுதிய நூலில் விதிவாதத்தை மிக எளிதாக எவ்வாறு உணர்த்துவது என்ற முயற்சியை அவர் செய்தார். ''சில விடயங்களைப் பொறுத்தவரை நாம் விதிவாதிகளாகவே இருக்கின்றோம் எனக்கூறுகின்றார். சூரியன் நாளை உதிக்கும் என்று நாம் அறிவோம். நாம் இறப்போம் என அறிவோம். ஆனால் எதுவும் செய்யமுடியாது. உண்மையில் எது எப்போது நிகழக் கூடியதென அறியமுடியவில்லை. இந்த நிகழ்வுகள் எமது கட்டுப்பாட்டுக்கு அப்பால் உள்ளவற்றைக் காட்டுகின்றன. இந்த ஒரு காரணத்தினால் எங்களது கட்டுப் பாட்டுக்கு அப்பால் நடக்கின்ற நிகழ்வுகள் எங்களை அதனுடைய திட்டத்திற்கு ஏற்றவிதத்தில் நடத்திவிடலாம். அப்படியானால் நாம் அவற்றின் கைதிகள்தான்.

நேரங்காட்டியின் செயலைப் போல மனித வாழ்க்கை முன்னரே தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஷோப்பனவர் கூறியுள்ளார். பாரன்வொன் ஹெல்பாஹ் என்ற பிரான்ஸியக் கவிஞன் கூறும் 'எமது அலுவல்கள் எமது அதிகாரத்திற்குட்பட்டதல்ல' என்பது போன்ற கருத்துக்கள் மெய்யியல் வட்டத்திலும் முன்னரே தீர்மானிக்கப்பட்டது என்ற கருத்து ஏற்கப்பட்டிருந்ததைக் காட்டுகிறது.

விஞ்ஞானமானது காரணகாரியக் கோட்பாட்டின் மூலம் மனிதன், இயற்கை யாவும் நிர்ணயவாதத்திற்குட்பட்டிருப்பதாக வலியுறுத்துகிறது. முந்திய நிகழ்வுகளைக் கொண்டு உலகின் எல்லா நிகழ்வுகளையும் விளக்க முடியும். நிகழ்வுகளுக்குக் காரண காரியத் தொடர்ச்சியுள்ளது. பிரபஞ்சத்தில் ஒரு ஒழுங்கு உள்ளது. பிரபஞ்சத்தில் இயற்கை விதி செயல்படுகிறது. அதனால் எல்லா நிகழ்வுகளும் மனித நடவடிக்கைகளும் இயற்கை விதிகளால் ஆளப்படுகின்றன. சூரியன், சந்திரன், நட்சத்திரம் அனைத்தினது அசைவுகளும் பருவகாலங்களின் தொடர்ச்சியான ஒழுங்கமைவான மாற்றங்களும் இந்த இயற்கைவிதியின் படியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நிகழ்கின்றன. விஞ்ஞானமும், சமூகவியலும் மார்க்ஸிய வரலாற்று பொருள் முதல்வாத விதிகளும், சிக்மண்ட் புரோய்டின் மறைநனவுக் கோட்பாடும் மனிதன் தனிப்பட்டவனாகவும், சமூகமாகவும், வரலாற்று பூர்வமாகவும் முந்திய நிகழ்வுகளால் கட்டுப்படுத்தப்படுவதாகவும் தப்ப முடியாத கைதிகள் போல் இருப்பதாகவும் எடுத்துக்காட்டுகின்றன. இவ்வாறு நோக்கும் விஞ்ஞானமும் விஞ்ஞானரீதியான சமுதாய வரலாற்றுக் கோட்பாடுகளும் மனிதன் சுதந்திரமற்றவன் என்று கூறுகின்றனவா?

மெய்யியலாளர் ஸ்பினோஸாவின் Spinoza கருத்துக்களும் நியதி வாதத்தையே ஆதரிக்கின்றன. கடவுளும் இயற்கையும்தான் சுய இருப்புள்ள பதார்த்தங்கள். மனமும், சடமும் இவற்றின் பண்பு வெளிப் பாடுகள். இயற்கை சடமாக விரிவாக்கம் ஆகின்றது. இயற்கை மனமாகிச் சிந்திக்கின்றது. அறிவு சிந்தனையின் முறையாக உள்ளது. ஸ்பினோஸா வின் இக்கருத்தை ஒருமைவாத நிர்ணயவாதத்திற்கான முன்னோடி உதாரணமாகக் கூறலாம். அதாவது, ஒரே ஒரு பிரபஞ்ச ஒழுங்குமுறை உள்ளது யதார்த்தம் அறிவு நிலைப்பட்டதாகவும் ஒருமைப்பாடுடைய தாகவும், ஒழுங்குடையதாகவும் அவரால் விளக்கப்படுகிறது. அதனால், அங்கு தற்செயல் விடயங்களோ தான் தோன்றித்தனமானவையோ இடம் பெறவாய்ப்பில்லை. ஏனெனில் இயற்கையில் ஒரு கட்டாய ஒழுங்கு அங்கு அறிவு பூர்வமாகச் செயற்படுகிறது.

அப்படியானால் மனிதன் எவ்வாறு தான் சுதந்திரமானவனாக இயங்குகின்றேன் என்று நம்புகின்றான்? அவனுக்கு சுதந்திரத் தேர்வுக்கு இடமிருக்கின்றதா? இதற்கு ஸ்பினோஸா கூறுவது. மனிதன் தனது செயல்களை நினைவில் வைத்திருக்கிறான். ஆனால் இச்செயல்களுக்கான காரணகாரியம் பற்றி அவன் அறிவற்றவனாக உள்ளான். இச்செயல்கள் தன்னால்தான், தான் தான் இதற்குக்காரணம் என்றும் கருதிக் கொள்கிறான். ஆனால், மனிதனின் எல்லா அகமற்றும் ஒழுக்கச் செயல்களையும் காரணகாரியத்தினால் விளக்க முடியும். அதாவது, 'செய்துதான் ஆகவேண்டும்' 'இது கடப்பாடு' என்பன போன்ற ஒழுக்கவியல் நியாயங்கள் மட்டுமல்ல, புகழ்ச்சி, இகழ்ச்சி எல்லா வற்றிற்குமே உலகில் உண்மையான இடமில்லை. எல்லாமே அவை எவ்வாறு இருக்க வேண்டுமோ எவ்வாறு நடக்க வேண்டுமோ அதன் படித்தான் நடக்கின்றன.

மறுபுறம் எவ்வளவுதான் மனிதன் பூரண நிர்ணயவாதத்தை ஏற்பவனாக இருந்தபோதும் நாளாந்த வாழ்வில் அவன் அதற்கு அளிக்கும் முக்கியத்துவம் மிகவும் பலவீனமானதாகும். பாடசாலையில் குற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

செய்த மாணவனை ஆசிரியர் தண்டிக்கிறார். பழுதடைந்த பொருட்களை விற்பனை செய்ததற்காக ஊர்மக்கள் கடைமுதலாளியைத் திட்டுகின்றனர். விதி இங்கு செயல்படுவதில்லை. தனிமனிதனும் சரி சமுதாயமும் சரி மனிதனுக்கு ஒழுக்கப்பொறுப்புக்கள் இருப்பதாக ஏற்கின்றன. அது மனித கலாசாரத்தின் ஏற்கப்பட்ட ஒரு பகுதியாக உள்ளது. நிர்ணயவாதம் உண்மையாயின் இது எவ்வாறு சாத்தியமாகும். நிர்ணயவாதம் உண்மையாயின் ஒருவனால் சுதந்திரமாகத் தெரிவு செய்து ஒரு செயலைச் செய்ய இடமில்லை. அவன் செய்கை ஒவ்வொன்றும் முந்திய நிகழ்வுகளால் அல்லது வேறு சக்திகளால் தீர்மானிக்கப்பட்டு விட்டது. எது நடக்க இருக்கிறதோ அதுதான் நடக்கும். அதனால் சுதந்திரம் என்பது வெறும் மாயை. மனிதர்கள் அவர்களின் எந்தச் செய்கைக்கும் பொறுப்பாளர்கள் அல்ல. அவர்கள் கருவிகள், கைதிகள் மற்றுமே.

இக்கருத்து, நிர்ணவாதத்திற்கும் மனிதனின் தேர்வுச் சுதந்திரத் திற்கும் இடையில் ஒரு போராட்டத்தை உருவாக்குகிறது. போல் எட்வர்ட் தரும் பின்வரும் உதாரணத்துடன் இதனை நோக்குவோம் :

ஹெரிட்ரூமன் ஹிரோஷிமாவில் அணுகுண்டைப் போட்டான். ஹெரிட்ரூமன் இதைச் செய்வதற்கு சுதந்திரமுள்ளவன் என்பது தான் நாம் பொதுவாகக் கொள்ளும் கருத்து. அவனுக்குப் பல மாற்றுவழிகள் இருந்தன. குண்டுபோட்டதற்காக பலர் அவனைப் பாராட்டினர். பலர் அவனைத் திட்டினர். ஆனால் எல்லோரும், ஹெரிட்ரூமன் உட்பட பொறுப்பை அவன் ஏற்றுக் கொண்டான் என்றுதான் நினைத்தனர். இப்போதுநிர்ணயவாதம் உண்மை என எடுத்துக்கொள்வோம். குண்டு போட்டதற்கான பொறுப்பு ஹெரிட்ரூமனைச் சாராது. அவன் மீது குற்றம் சுமத்துவது அவ அபத்தமான செயல். ஏனெனில் ஹெரிட்ரூமன் பிறப்பதற்கு எவ்வளவோ காலத்திற்கு முன்னரே இந்நிகழ்ச்சி தீர்மானிக்கப் பட்டு விட்டது. எல்லாமே முன்னர் தீர்மானிக்கப்பட்டு விடுகிறது என்பது உண்மையாக இருக்குமாயின் உலகில் நடக்கக் கூடிய எல்லாவற்றையுமே முன்கூட்டியே எதிர்வு கூறலாம் என்பதை கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளலாம். எமது அறியாமை காரணமாக இதனை நாம் அறிய முடியாத நிலையில் இருக் கின்றோம்.

இந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டுதான் மெய்யியலா ளர்கள் தேர்வுச் சுதந்திரமா? நிர்ணயவாதமா? எது உண்மை என்று கேட்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அத்தியாயம் 6

அறிவும் நம்பிக்கையும்

அறிவும், நம்பிக்கையும் தொடர்புள்ள வாக்கியங்களாகும். அறிவையும், நம்பிக்கையையும் தனிப்படுத்தி அவற்றுக்குரிய தனித்தனி வேறுபட்ட வரைவிலக்கணங்களை கூறுவது கடினம். அறிவு என்றால் என்ன? நம்பிக்கையென்றால் என்ன? இது பற்றிய தெளிவான விளக்கங்களை அளிப்பதும் கடினம். இதனால் அறிவுக்கும் நம்பிக்கைக்குமிடையே உள்ள தொடர்பை சொல்வதும் கடினமாகும். அதேவேளை அறிவும் நம்பிக்கையும் இருவேறுபட்ட முறைகளாகவும் உள்ளன.

அறிவுக்கும் நம்பிக்கைக்குமிடையே உள்ள வேறுபாட்டை முதன்முதலில் எடுத்துக் கூறியவர் பிளேட்டோவாகும். அறிவு பற்றி பிளேட்டோ கூறும் போது இன்றியமையாத உண்மைகளை அறிவு என்றும், அவ்வாறு அல்லாதவற்றை நம்பிக்கை, என்றும் குறிப்பிட்டார். மேலும் பிளேட்டோ உலகத்தை 'கருத்துலகு' என்றும் 'தோற்றப் பாட்டுலகு' என்றும் இருபிரிவுகளாக எடுத்துக் கூறினார். கருத்துலகை நாம் அறிவது அறிவென்றும், தோற்றப்பாட்டுலகை அறிவது நம்பிக்கை என்றும் கூறினார். தோற்றப்பாட்டுலகு மாறக் கூடியதும், வளரக் கூடியது மாகும். ஆனால் கருத்துலகு மாற்றமற்றது. ஆகவே உறுதியான அறிவென்பது மாற்றங்களில்லாத எக்காலத்தினாலும் பாதிக்கப்படாத கருத்துலகில் தான் சாத்தியம். தோற்றப்பாட்டுலகு அவ்வாறானதல்ல. அது மாறக் கூடியது வளரக் கூடியது, அது நம்பிக்கைக்குரியது.

போதிய உறுதியளிக்கக்கூடிய சான்றாதாரங்களில் அமைய கூடியவை அறிவாகலாம் என ஜே.எஸ். மில் கூறுகின்றார். இதை இன்னொரு வகையிலும் பிரித்துக் கூறுவதுமுண்டு. நம்பிக்கையையும் அறிவையும் வேறுபடுத்தும்போது பூரண உறுதி வாய்ந்த உளவியல் மனப்பான்மை இருக்குமானால் அப்போது அது அறிவாகும். என்றும் பூரணமற்ற மனப்பான்மையை இருக்கும்போது அது நம்பிக்கை என்றும் கொள்ளப்படுகின்றது. ஆனால் இந்த விதமான கருத்தை அவ்வளவு வலிதானதாகக் கொள்ள முடியாது. ஏனெனில் அறிவையும் நம்பிக்கையை யும் வேறுபடுத்துவதற்கு உளவியலை அல்லது மனப்பான்மையை லெயாட் என்பவர் முக்கியமாக கொள்கின்றார். இது பற்றி வில்லியம் ஜேம்ஸ் கூறும்போது பூரண உறுதித் தன்மை வாய்ந்த மனப்பான்மை, நம்பிக்கையிலும் இருக்கலாமென்று குறிப்பிடுகின்றார். அறிவு என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஏற்றுக் கொள்ளப்பட்டது, இசைவுடையது. நம்பிக்கையென்பது ஏற்றுக் கொள்ளப்படமுடியாதது.

மற்றோர் சாரார் அறிவையும் நம்பிக்கையையும் வேறுபடுத்த இன்னொரு முறையைக் கையாள்கின்றார்கள். அவர்களது கருத்தில் சான்றுகளை ஆதாரமாக வைத்து அறிவையும் நம்பிக்கையையும் வேறுபடுத்தலாம் என்கின்றனர். எவ்வளவு தூரம் சான்றுகள் அதிகமாக உள்ளதோ அது அறிவு எனபதும், சான்றுகள் குறைந்தது நம்பிக்கை என்பதும் அவர்களது கருத்து. உண்மையில் அறிவு பற்றிய பிரச்சனை சிக்கலான ஒன்றாகும். ஏனெனில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மைகள் ஒரு காலத்தில் மாற்றமடைந்ததை நாம் வரலாற்றில் காண்கின்றோம். பூமி தட்டையானது என்று ஒரு காலத்தில் சமய ரீதியாகவும், அறிவு ரீதியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. ஆனால் பிற்காலத்தில் பூமி உருண்டையானது என காண்பித்ததும் அவை பொய்யாகியது. அப்படியானால் இங்கு அறிவு உண்மையாகுமா? அல்லது பொய்யாகுமா என்ற பிரச்சனை ஏற்படுகின்றது.

பின்னர் பூமி உருண்டையானது என்ற கருத்து விஞ்ஞான ரீதியாகவும், பொது உணர்வுரீதியாகவும், சமயரீதியாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த மாதிரியான சந்தர்ப்பங்கள் ஏற்படும் போது அவற்றை விஞ்ஞான நம்பிக்கைகள் என்று கூறலாம்.

சிலர் இவ்வாறும் கூறுகின்றார்கள், நம்பிக்கை என்பது நம்பும் ஒன்று என்றும் அறிவு என்பது ஒன்றை அறிந்து கொள்வது ஆகும் என விளக்கமளிக்கிறார்கள். நம்பிக்கைக்கும் அறிவுக்குமிடையில் பூரண வித்தியாசம் ஏதுமில்லை. ஆனால், அவற்றின் அளவுகளில் வித்தியாசங்கள் இருக்கின்றன. சிலவேளைகளில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அறிவையும் நம்பிக்கையாகக் கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களுமுண்டு. தற்கால மெய்யியல்வாதியான பேர்ட்ரன்ட் றஸல் நம்பிக்கையையும் அறிவையும் வேறுபடுத்துவது மிகவும் கடினமான விடயம் என்று கூறினார். பகுத்தறிவு உருவாவதற்கு முன் ஏற்படுவது நம்பிக்கை என்றும், உண்மையான நம்பிக்கை ஒன்று அறிவாக இருக்கலாம் என்றும் ஆயினும் உண்மையான நம்பிக்கைகள் எல்லாம் அறிவாகாது என்றும் கூறுகின்றார். சுருக்கமாக றஸலின் கருத்தானது நம்பிக்கைக்கும் அறிவுக்குமிடையில் பாரிய வேறுபாடில்லை என்பதாகும். மற்றொரு தற்கால மெய்யியல் வாதியான ஏ.ஜே. அயர் இதை ஒரு பாஷை ரீதியான பிரச்சினை என்கின்றார்.

Z. A. ZANUIR
B.A (Econ) P.G.D. In Edu
In - Service Advisor
Zonal Education Office
PUTTALAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறிவின் ஏற்புடைமை

அறிவின் இயல்புகள் பற்றிய பிரச்சினைகளிலும், ஆய்வுகளிலும் இருந்துவரும் மற்றொரு பிரச்சினைதான் அறிவின் ஏற்புடைமை பற்றிய தாகும். அறிவு என்பதனாலேயே அது உண்மையாகிவிடுமா?

அரிஸ்டோட்டில் ஒரு அறிவாளியாக இருந்தார். அவர் தனது அறிவைப் பயன்படுத்தி உலகம் தட்டையானது எனும் கொள்கையினை முன்வைத்தார். பின்வந்த அறிவாளிகளால் அது பொய்யாக்கப்பட்டது. ஆகவே, காலத்துக்குக் காலம் உண்மையாக இருப்பது அதாவது உண்மை என்று நம்பிவந்த அறிவு பொய்யாக ஆகின்றது. இதனால், அறிவை அல்லது சில நம்பிக்கைகளை உண்மை என்றும், பொய் என்றும் ஆக்குவது எது? எதனை ஆதாரமாக வைத்து ஒன்றைப் பிழை அல்லது சரியென்று கூறுவது,? உண்மையான அறிவு என்றால் என்ன? இவ்வாறாயின், உண்மை என்றால் என்ன? இங்கு (1) அறிவு (2) உண்மை போன்ற பதங்கள் உள்ளன. சரியான திட்டவட்டமான உண்மையைப் பெற்றுக் கொள்ளுவதற்கு மனத்துக்குப் போதிய சக்தி உள்ளதா? ஒரு உண்மையை வலியுறுத்துவதில் நாம் நியாயமான சான்றுகளில் தங்கியிருக்கின்றோமா? இது நீண்டகாலமாக இருந்துவரும் பிரச்சினையாகும்.

உண்மை

சோக்கிரட்டீஸிற்கு முன்னரும் பின்னரும் இந்தக் கேள்விகள் எழுப்பப்பட்டன. 'ஜீஸஸ்' குற்றஞ்சாட்டப்பட்டுக் கூண்டில் நிற்கின்ற போது இவரை நோக்கிக் கேட்கப்பட்ட கேள்வி, 'உண்மை என்றால் என்ன'? என்பதாகும். இது இன்று வரைக்கும் கேட்கப்படும் கேள்வி. ஆனால், காலவோட்டத்தில் அபிப்பிராயங்கள் மாறுகின்றன. சாதாரணமாக நம்பிக்கையில் மட்டுமல்ல, அறிவியல் விஞ்ஞானத்திலும், இருந்துவரும் கோட்பாடுகளைப் பின்னர்வரும் கோட்பாடுகள் மாற்றுகின்றன. ஏன் இவ்வாறு இருக்கின்றது எந்த அடிப்படையில் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கலாம், எந்தவொரு விடயத்தைப் பொறுத்த வரையிலும் அபிப்பிராயங் களும் ஊகங்களும் முன்வைக்கப்படுகின்றன என்ற எண்ணம் எழுகின்றது. எந்தவொரு பொருளும் அதன் அடிப்படையில் உண்மையும் அல்ல, பொய்யும் அல்ல என்பதுதான் உண்மையா?

உண்மை பற்றிய எமது அறிவு, பொருள்களைப் பற்றி நாம் பெற்றுள்ள அல்லது பெறுகின்ற அறிவைப் போன்றதல்ல. உண்மைக்கு ஒரு எதிர்நிலை இருக்கின்றது. அங்கு சரி, தவறு என்ற எதிர்நிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

செயல்படுகிறது. இது றஸலின் கருத்து. பொருள்களைப் பொறுத்தவரை அவற்றை நாம் அறியலாம் அல்லது அறிய மாட்டோம் எனக்கருதலாம். ஆனால், தவற்றினைக் கூறக்கூடிய ஒரு மனப்பதிவு நம்மிடமில்லை. பொருள்களைத் தெரிந்து கொள்வதில் இருமைநிலை இல்லை. எதுசரி எதுபிழை என்பது பற்றி நாம் அறிந்திருக்கலாம். அதே நேரம் பல்வேறு விடயங்களில் வெவ்வேறு அபிப்பிராயங்களையும் திருப்தியற்ற அபிப் பிராயங்களையும் மனிதர் கொண்டிருக்கலாம். சில நம்பிக்கைகள் தவறானவையாகும். இவ்வாறு உண்மையின் பிரச்சினையை விளக்கும் றஸல் நாம் பெற்றுள்ள நம்பிக்கை ஒன்று தவறானதல்ல என்று நாம் எவ்வாறு அறிவோம். என வினாவெழுப்பினார். இவ்வகைக் கேள்வி கடினமானதென்று றஸல் கூறுகிறார். இதன் கடினத்தைக் குறைத்துப் பின்வருமாறு அக்கேள்வியை இலக்குப் படுத்திக் கேட்கலாம். உண்மை என்றும் பொய் என்றும் நாம் கூறுவதன் பொருள் என்ன? அதாவது ஒரு நம்பிக்கை உண்மையா? பொய்யா? என்று கூறுவதன் பொருள் என்ன என்று தான் நாம் பார்க்க வேண்டும் என்று றஸல் கூறுகிறார்.

அதேவேளை அர்த்தமும் (Meaning) உண்மையும் ஒரே வகையினது அல்ல. ஒரு கூற்று உட்கருத்துவளமுடையதெனில் அது உண்மையான தாக இருக்கவேண்டும். என்ற (நிபந்தனை) அம்சம் அதில் உள்ளடங்கி யிருக்கத் தேவையில்லை.'செய்வாய்க்கிரகத்தில் ஆறுவகை உயிரினங்கள் இருக்கின்றன' என்பது அர்த்தமுள்ள கூற்றாகும். அது உண்மையா இல்லையா என்பதை நாம் அறியோம். இந்த நிலையில்தான் உண்மையை அறிவதற்காக உண்மை பற்றி அதன் இயல்பு பற்றி நாம் சில பரிசோதனைகளை உருவாக்க வேண்டியுள்ளது.

ஆகவே, இதிலிருந்து நாங்கள் என்ன கருத்துக்கு வர முடியுமென்றால், பொருட்களைப் பற்றிய தீர்ப்புக்களைத்தான் உண்மை அல்லது பொய் எனலாம். இவ்வாறு உண்மையை நாங்கள் ஆராயும்போது உண்மையைப் பரிசோதிப்பதற்கு மெய்யியலில் சில முறைகள் உள்ளன. இதனை நாம் உண்மை பற்றிய சோதனை முறை எனலாம்.

தற்காலத்தைப் பொறுத்தவரையில் மிகச் சிலர் தான் பாரம்பரியம், வழக்காறுகள் என்ன கூறுகின்றனவோ அவற்றைச் சரியானதென ஏற்றுக் கொள்கின்றனர். அதை அவர்கள் போதுமான ஆதாரங்கள் என்றே ஏற்றுக்கொள்கின்றனர், ஆனால், தற்காலத்தில் பெரும்பாலும் அவை பயன்படுவது இல்லை. எவ்வாறுதான் பாரம்பரியங்கள், வழக்காறுகள் பெறுமதியானதாக இருந்தாலும், அவை பல சந்தர்ப்பங்களில் பிரச்சினை களை உருவாக்குகின்றன. அவை முன்னேற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் தடையாக உள்ளன. உண்மையைப் பரிசோதிக்கும் விடயத்தில் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

முழுமை முறை இருக்கின்றது என்று நாம் கூறமுடியாது. இது பற்றி மூன்று கோட்பாடுகள் உள்ளன. இவை ஒவ்வொரு விதத்தில் வித்தியாசப் படுகின்றன. சில ஏற்கத்தக்க நியாயங்கள் எடுத்துக்காட்டுவனவாக இருக்கின்றன. எதுபொய் அல்லவோ அது உண்மை என எதிர்கணியமா கவும் இதை பார்க்கலாம்.

உண்மையின் பொருத்தக் கோட்பாடு

நேர்வோடு பொருத்தத்தைக் காணும் சோதனை முறை என இதனைக் கூறலாம். யதார்த்தவாதிகள் இந்தக் கோட்பாட்டை உண்மைக்கு மிகவும் பொருத்தமானது என்று கருதுகின்றனர். அவர்களது கருத்துப்படி, ''உண்மை என்பதானது நேர்வு பற்றிய கூற்றுக்கும், உண்மை பற்றிய கூற்றுக்கும் இடையில் ஏற்படுகின்ற இணக்கம்'' என்கின்றனர். அல்லது இதனை ''ஒரு சூழ்நிலைக்கும் தீர்ப்புக்கும் உள்ள தொடர்பு'' எனலாம்.

ஒரு தீர்ப்பு குறித்த சூழலை விபரிக்க முற்படுகின்றது. அதனால், உண்மை என்பது பொருளைப் பற்றி மனிதன் தருகின்ற உறுதிப்பாடு அதாவது தீர்ப்பு / கூற்றாகும். உதாரணமாக, கொழும்பு இலங்கையில் இருக்கின்றது என்றால் அது உண்மை. இங்கு நாம் ஒரு புவியியல் சூழ்நிலைக்குப் பொருத்தமான கருத்தைக் காண்கிறோம்.

பொருத்தக் கோட்பாட்டின்படி உண்மை, பொய் என்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலையில் உறுதிப்படுத்துவதிலும் நிராகரிப்பதிலும் தான் தங்கியுள்ளது. ஒரு தீர்மானம் ஒரு நேர்வுடன் பொருத்தமானதாக இருந்தால் அது உண்மை என்றும், பொருத்தமற்றதாக இருந்தால் அது பொய்யானது என்றும் கருதலாம்.

அடுத்த அறையில் இரண்டு மேசைகள் இருக்கின்றன என்பதும், 'ஷம்ஸ் வீட்டுவாசலின் முன்பு ஒரு 'வேன்' நிறுத்தப்பட்டிருக்கின்றது என்பதும் அனுபவ ரீதியாக வாய்ப்புப் பார்க்கக் கூடிய விடயங்களாகும். எனினும், இந்தப் பொருத்தக் கோட்பாட்டை விமர்சனம் செய்பவர்கள் எடுப்புக்கள் பற்றி வாய்ப்புப்பார்த்தல் என்ற பிரச்சினையைப் பற்றிக் கூறும்போது அவ்வளவு திருப்திகரமான அபிப்பிராயத்தைக் கொண்டிருக்க வில்லை. அவர்கள் பின்வரும் கேள்விகளைக் கேட்கின்றனர். அதாவது, எமது அனுபங்களை மட்டுந்தானா? எமது அனுபவங்களை நாம் எவ்வாறு வெளியில் கொண்டுவர முடியும்? உண்மையிலேயே யதார்த்தம், புறப்பொருள் எப்படி உள்ளது என்பதைப் பற்றி நாம் அறிந்து கொள்ள வாய்ப்புள்ளதா? அவ்வாறு அறிந்தால் அதை எமது கருத்துடன் ஒப்பிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாய்ப்பு உள்ளதா? எனப் பலவாறாகப் பொருத்தக் கோட்பாடு விசாரணைக் குள்ளாகிறது. எமது புலன் தரவுகள் சரியானதும் சரிநுட்பமானதுமான ஒன்றுதான். ஆனால் அவர்கள் விடுகின்ற தவறு யாதெனில், இயற்கை உலகமானது எப்படித் தோற்றமானதோ, அவ்வாறு தான் இருக்கின்றது என்று கருதுவதாகும். இருந்தாலும் கருத்து முதல்வாதிகளும் பயன்நல வாதிகளும் கூட இந்தக் கருத்தைக் கேள்விக்குறிக்குள்ளாக்குகின்றனர்.

மனிதனது மனம், காட்சியை ஏற்றுக்கொள்ளும்போது ஒரு திருத்தப் பட்ட நிலையில்தான் இந்த உலகம் பற்றிய கருத்தை வெளியிடுகிறது. இந்தக் கருத்தானது மனித மூளை தொடக்கம் மனம் வரை செல்கின்றது.

பொதுவாக நாங்கள் இதனைப் பொருத்தம் அல்லது இயைபு அல்லது ஒருசீர்மை எனலாம். பொதுவான சூழல்களில் ஒரு தீர்மானம் உண்மை என்று கூறுவதற்கு அல்லது பொய்யென்று உணருவதற்கு அது எவ்வளவு தூரம் புற உலகோடு ஒரு சீர்மை பெற்றுள்ளது என்பதில் தங்கியுள்ளது. அவ்வாறு இல்லாதபோது அக்கருத்துக்களை நாம் நிராகரிக்கின்றோம். ஆனால், இவ்வாறு கடந்தகால விடயங்களிலும் நடந்து முடிந்த விடயங்களிலும் கேட்கினறோம். இப்படி நாம் செய்வதால் புதிய கருத்துக்களையும் புதிய உண்மைகளையும் நாம் நிராகரிப்பவர்கள் என்று பொருளல்ல. ஏனெனில், பல சந்தர்ப்பங்களில் புதிய உண்மைகள் மிகவும் வலிமையானவை. அப்போது நாம் முன்னர் கொண்டிருந்த கருத்துக்களைப் பரிசீலனை செய்யவேண்டி ஏற்படுகின்றது. அல்லது முழுச் சிந்தனைகளையும் மறுபரிசீலனை செய்யவேண்டி ஏற்படுகின்றது. தெளிவான பிற உண்மைகளில், உண்மை தங்கியிருக்கின்றது என்பதையே இது குறிக்கின்றது.

இங்கு பொருத்தக் கோட்பாட்டின் எளிய வடிவம் கூறுவது யாதெனில், முழுப் பிரபஞ்சத்தையும் கருத்திற் கொள்ளாது கவனத்தில் கொள்ளப்படவேண்டிய ஒரு தனித் தொகுதியை அல்லது முறையை அல்லது பண்பை எடுத்து அதன் பொருத்த வடிவத்தை நிரூபிப்பதைப் பற்றியே கூறுகின்றது. ஏனெனில், இங்கு பொருத்தம் என்பது முக்கியமான தாகும்.

உண்மையின் இசைவுக்கோட்பாடு

நேர்வுடன் ஒத்திருக்கும்போது அல்லது நாம் பெற்றுள்ள அறிவுத் தொகுதியுடன் ஒத்திருக்கும்போது தான் ஒரு நம்பிக்கை உண்மையா கின்றது என்று இக்கோட்பாடு கூறுகிறது. ஒரு புதிய நம்பிக்கையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உண்மையானதென்று நாம் ஏற்றுக் கொள்ளும் நிலையை நாம் ஏற்கெனவே பெற்றுள்ள அறிவுத்தொகுதியுடன் அது இசைவு பெறும் போதுதான் பெற்றுக்கொள்கிறோம் என இதனைக் கூறலாம்.

பிரித்தானிய மெய்யியலாளர் F.C.S. ஷில்லர் (1864-1957) ஒரு நம்பிக்கையை நாம் உண்மை என்று கூறினால் நாம் அதனைப் பெறுமானப்படுத்து (Valuation) கிறோம் எனக் கூறுகிறார். சில விடயங்களை நாம் நல்லது தீயது என்றும் அழகியது அழகற்றது என்றும் கூறுவது போல் எடுப்புக்களையும் (கூற்றுக்களையும்) நாம் உண்மை, பொய் என்று கூறுகின்றோம். நல்லது தீயது என்று சில விடயங்களை பெறுமானப்படுத்தப்பட்டது போல உண்மை, பொய் பெறுமானப்படுத்தல் இங்கு நிகழ்கிறது. ஷில்லர் உண்மை ஒரு பெறுமானம் எனக் கூறுகிறார். உண்மை, பொய்க்குரிய அர்த்தம் என்ன? இதற்கு ஷில்லர் தரும் பதில் பயனுள்ளதும் (உண்மை) பயனற்றதுமாகும் (பொய்).

பெறுமானம் (value) எனும்போது அது உளவியல் சம்பந்தப்பட்ட விடயம். எது உண்மை எது பொய் என்பது தனிநபர் விடயமல்ல. இதில் சமூக உறவு சம்பந்தப்பட்டுள்ளது. மனிதன் தனிப்பட்டவன் மட்டும் அல்ல அவன் சமூக உயிரி. அவன் சமூக உயிரியாக இருக்கும்வரை உண்மை சமூகப்பொருளாகும். இதனால் தனிநபர் பெறுமானங்கள் சமூகச் செல்வாக்கினால் மாற்றத்திற்கு அல்லது திருத்தத்திற்கு உள்ளாகலாம். மீண்டும் இசைவு (Coherence) அல்லது ஒத்திருத்தல் என்ற கருத்திற்கு வருவோமாயின் இக்கோட்பாட்பாடு இசைவை அல்லது ஒத்திருந்தலை வலியுறுத்துகிறது. இது ஒத்திருத்தலை (இசைவை) அல்லது பொருத்தப் பாட்டை இயற்கை நேர்வுகளில் அன்றிக் கூற்றுக்களுடன் அல்லது தீர்ப்புக்களுடன் தொடர்புபடுத்துகிறது. ஒரு கூற்று உண்மையாவதற்கு அதற்குரிய இயற்கை நேர்வுகளில் தங்கியிருக்காது உண்மை என ஏற்றுக்கொள்ளப்பட்ட கூற்றுக்களுடன் உள்ள இசைவை ஒப்பிட்டுப் பார்த்தலை இந்தக் கோட்பாடு வலியுறுத்துகிறது. அதனால் கருத்துக்கள், கூற்றுக்கள் நாம் முன்னரே உண்மை எனத் தெரிந்திருப்பனவற்றுடன் இசைவு பெறாது போனால் அவை நிராகரிக்கப்படும்.

இந்த கோட்பாடு புதிய நம்பிக்கைகளின் அங்கீகாரத்திற்குத் தடையாக இருப்பதில்லை. விஞ்ஞான கோட்பாட்டு வரலாற்றில் விஞ்ஞான அறிவின் பிரதான பாகத்துடன் ஒத்துச் செல்லும் நிலையில் உள்ள கோட்பாடுகள் உண்மை என ஏற்கப்பட்டிருக்கின்றன. கொப்பனிக்கஸ் விதி, பரிணாம வாதம் போன்ற புதிய நம்பிக்கைகள் எமது அறிவு முறைமையில் இவ்வாறு புதியதாக ஏற்கப்பட்டுள்ளன. இசைவுக்கோட்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எளிய முறையில் தர்க்க ரீதியான அந்த அறிவுத்தொகுதியின் ஒத்திருத்தலைத் தான் கோருகின்றது. கணிதத்திலும் அளவையியலிலும் ஒரு இசைவுமுறை உள்ளது. ஒழுங்கமைக்கப்பட்ட அறிவு முறையிலும் இதனைக் காணலாம். கருத்து முதல்வாத மெய்யியலாளர்களான பிளேட்டோ, ஹெகல், பிரெட்லி போன்றோர் இசைவுக் கொள்கையை பொதுமைக்கும் முழு யதார்த்தத்துக்குமுரியதாக விரிவுபடுத்தினர். இதன்படி ஒவ்வொரு உண்மையான தீர்ப்பும் முழுமை பெற்ற யதார்த்தத்தின் தொடர்ச்சியில் அடங்குகின்றன. அந்த முழுமையில் இருந்துதான் அத்தீர்ப்புக்கள் அவற்றிற்கான அர்த்தத்தையும் பெற்றுக் கொள்கின்றன.

பயன்நலவாதக் கொள்கை

பயன்நலக் கோட்பாடு (Pargmatism) அல்லது செயல்நிலைக் கொள்கை அமெரிக்காவில் அண்மைக் காலத்தில் செல்வாக்குப் பெற்ற ஒரு மெய்யியலாகும். உண்மையை அறிந்து கொள்வதில் அல்லது உண்மை என்றால் என்ன என்பதை விளங்கிக் கொள்வதில் பயன்நல வாதம் சில கருத்துக்களை முன்வைத்தது. இது தற்காலத்தில் முக்கியம் பெற்றுள்ளதோடு இது பொருத்தக் கொள்கைக்கும் இயைபுக் கொள்கைக் கும் எதிரான கருத்துக்களை முன்வைத்துள்ளது. இக்கொள்கையின் முக்கிய பிரதி நிதிகளாக வில்லியம்ஜேம்ஸ், ஹில்லர், டியர்ஸ், டூயி போன்றவர்களைக் குறிப்பிடலாம். நாம் முன்பு பார்த்தபடி, யதார்த்தத் தோடு உண்மை எவ்வாறு தொடர்புபடுகின்றதோ, அவ்வாறு தொடர்புபடும் போது ஏற்படும் பிரச்சினை, உண்மையோடு தொடர்பு படக்கூடிய வாய்ப்பு உண்டா? நாம் எமது அனுபங்களைத்தான் உண்மை எனக்கூறுகின் றோமே தவிர, புறத்தே உள்ள யதார்த்தத்தை நேரடியாகவே உண்மை குறிப்பிடுவதாகக் கொள்ள முடியாதுள்ளது. இதனால், இயைபுக் கோட்பாடு பகுத்தறிவுரீதியானதும் நியமரீதியானதுமாகும். இது இசைவுக் கோட் பாட்டில் காணப்படும் பலவீனத்தைக் காட்டுவதாக உள்ளது.

பயன்நலவாதம் என்ன கருதுகின்றதெனில் யதார்த்தம் அல்லது புறப்பொருள் ஒன்றின் பொருள் தன்மையை பற்றியும் ஒன்றின் சாரத்தைப் பற்றியும் ஒன்றின் அடிப்படையான யதார்த்தம் பற்றியும் நாம் அறிய முடியாது என்றும் கூறுகின்றது. அதாவது, பயன்நலவாதம் அறிவு ரீதியான உண்மை எனக் கூறுபவற்றை நிராகரிக்கின்றது. பயன்நலவாதிகள் உண்மையைப் பரிசோதிக்கக் கூடிய சில உரைகளை முன்வைத்தனர். அதாவது, ''உண்மையைச் சோதிக்கக் கூடியது பயன்''. உண்மையை அறியக் கூடியது செயல்படு தன்மை, திருப்திகரமான விளைவுகள் மூலமே நாம் உண்மையை அறியலாமேயன்றி, பொருத்தக் கோட்பாடு கூறுவதைப் போன்று யதார்த்தமான இருப்பைக் காண்பது இயலாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உலகில் அசைக்க முடியாத உண்மை அல்லது முழுமையான உண்மை என்று நாம் எதையும் கூற முடியாது. உண்மை என்பது மனித தகவமைப்புக்களின் படிமுறையிலிருந்துதான் உருவாகின்றது. ஒன்றுக்கொன்று பொருத்தமான முறையில் வழிசெய்யும் படிமுறை உள்ளது. இதனூடாகத்தான் நாம் உண்மையை அறிய முடியும் எனப்பயன் நலவாதிகள் கூறுகின்றனர். இதைப்பற்றி வில்லியம் ஜேம்ஸ் பின்வருமாறு கூறுகின்றார்: ''உண்மையான கருத்துக்களில் நாம், அவற்றோடு தொடர்பு கொண்டிருப்பதால், வாய்ப்புப் பார்க்கக்கூடியதாக இருப்பதால், வலிதாகக் கூடியதாக இருந்தால், அதுதான் உண்மை''. அதாவது பயனின் ஊடாகத்தான் இதைச் செய்யலாம். இதனால் ஒரு கோட்பாட்டின் உண்மை யென்பதை அதன் நடைமுறை பயன்படுத்தலிலிருந்துதான் புரிந்து கொள்ள முடியும். எனவே, திருப்தியான முடிவுக்கு இட்டுச் செல்கின்ற ஒன்றை நாம் உண்மையெனக் கூறலாம். ஆனால் உண்மையில் இந்தத் திருப்தியான முடிவென்பது சிக்கலான கவர்பாடுடைய ஒரு சொல்லாகும். மேலும், இவர்களது கருத்து யாதெனில், மனிதனது தேவையை எது திருப்திப் படுத்துகின்றதோ அது உண்மை. பரிசோதனை யூடாக நன்கு விளக்கமளிக்கக் கூடியது எதுவோ அது உண்மை. இது ஆய்வு கூடத்திலும் செய்யலாம். மனிதனின் நாளாந்த வாழ்வில் செய்யக் கூடியதாகவும் இருக்கலாம். வாழ்வதற்காக உயிரியல் ரீதியான போராட்டத்துக்கு எது உதவுகின்றதோ, அது உண்மை.

இந்தக் கருத்துக்கள் குறிப்பாக ஒன்றின் செயல் அல்லது பயன் பற்றிய பரிசோதனை என்ற விடயமாக விமரிசனம் செய்யப்படுகின்றது. ஏனெனில், இந்தக் கருத்துக்களில் நம்பிக்கைகளைத் திருப்திப் படுத்தக்கூடிய பல விடயங்கள் இருந்தாலும், இதில், எது திருப்திப் படுத்தக்கூடிய விடயம் என முன்வைக்கப்பட வேண்டியுள்ளது. இன்னொரு பிரச்சினை, சமயத்திலும், பொருளாதாரத்திலும், வாழ்க்கையிலும், விஞ்ஞானத்திலும், ஏனைய பல துறைகளிலும் எண்ணிக்கையற்ற கோட்பாடுகள் மிக நீண்ட காலமாகச் செயற்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. சில வேளையில் இந்தக் கோட்பாடுகள் பல உண்மைப்படுத்த முடியா தவைகளாக இருந்தாலும் திருப்திகரமான முடிவைத் தரக்கூடியனவாக உள்ளன. மேலும், சில தீர்மானம் பற்றி பயன்பாட்டு ரீதியாக அவற்றினது உண்மை, பொய்யினை வாய்ப்புப் பார்க்க முடியாத நிலை இருக்கின்றது. எனவேதான் பயன்பாட்டுவாதிகள் கூறும்பயன், செயல், திறன், திருப்திகர மான விடயம் போன்ற அம்சங்களை முன்வைத்து உண்மையென்பதை விளங்கப்படுத்தப் போதுமானதாகக் கொள்ள முடியுமா என்பது ஐயத்துக் குரியது எனக் கூறப்படுகிறது. பயன்நலக்கொள்கை உலகைப் பற்றிய கொள்கையன்று. அதாவது கருத்தமைவுகள் Concepts கருத்துரைகள் ஆகியவற்றின் பொருளை விளக்குகின்ற முயற்சியே பயன்நலக் கொள்கை யின் அடிப்படைத் தத்துவமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஐயவாதம்

ஐயத்திற்கு இடமளிக்காத அறிவு உண்டா? என்பது அறிவா ராய்ச்சி இயலில் கேட்கப்படும் மற்றொரு முக்கிய கேள்வியாகும். இது பற்றி றஸல் கூறும்போது இந்தக் கேள்வி ஒரு இலகுவான கேள்வியாகத் தென்படலாம். ஆனால் உண்மையில் இது ஒரு கடினமான கேள்வியாகும். இக்கேள்விக்குரிய திடமான, தெளிவான பதிலைப் பெறமுயன்றால், அவ்வாறு பதிலைப் பெறும்போது ஏற்படுகின்ற இடையூறுகளை அறிந்து கொண்டால் நாம் உண்மையில் மெய்யியல் ஆராய்ச்சியினை ஆரம்பித்து விட்டோம் என றஸல் கூறுகிறார்.

மெய்யியலின் பிரதான பண்பு ஒவ்வொரு விடயத்தினதும் அடிப்படைகளை அல்லது அடிப்படையாக எடுத்துக் கொள்பவற்றை ஆராய்ச்சி செய்வதாகும். அவ்வாறு அடிப்படையாகக் கருதுபவற்றில் உள்ள தெளிவின்மை, போலித்தன்மை முதலியவற்றை எடுத்துக்காட்டுவது அத்தன்மைகளை விமர்சன நோக்கோடு பரிசீலிப்பது என்றும் இதனை விளக்கலாம்.

''அறிவின் நிச்சயத் தன்மை பற்றி ஆராய வேண்டும். அவற்றை எமது அனுபவங்களோடு ஆராய வேண்டும். அனுபவங்களினூடாகத்தான் அறிவை ஆராயலாம் என்று றஸல் கூறுகிறார். ஆனால் அனுபவங்களி னூடான அறிவினை நாம் நம்பலாமா? என்ற ஐயத்தையும் றஸல் முன்வைக்கிறார். ஏனெனில், அனுபவம் கூறும் விடயங்கள் சில நேரங்க ளில் தவறாக இடமிருக்கிறது. நாளாந்தம் எமது வாழ்க்கையில் நாம் ஈடுபடுகின்ற ஒரு செயலை, உதாரணமாக நாம் உட்கார்ந்திருக்கும் கதிரை, எழுதும் பேனை, தாள்கள், இந்தப் பூமி உருண்டையானது, சூரியன் இருக்கின்றது என்பவையெல்லாம் அப்படியே தொடர்ந்து நடக்குமென்றும் ஒவ்வொரு நாளும் காலையும் மாலையும் தோன்றும், சூரியனும் அவ்வாறே ஒவ்வொரு நாளும் உதிக்கும் என்றும் நாம் நம்புகின்றோம். நான் எழுதிக் கொண்டிருக்கும் போது எனது அறைக்கு யாரும் வந்தால் அவரும் நான் எழுதுவதைப் பார்த்து இந்த விடயங்களை அவரும் நம்பலாம் நான் நம்புவதுபோல மற்றவர்களும் நம்பலாம். ஆனால் இங்கு எழும் பிரச்சினை என்னவென்றால் இவை எல்லாவற்றை யும் ஆதாரங்களோடு நியாயமான முறையில் சந்தேகிக்க முடியும். இங்கு நாம் பல விடயங்களைக் கூறினோம். ஆனால் ஒரு விடயத்தை மாத்திரம் உதாரணத்திற்கு எடுத்துக்கொள்வோம். மேசையைப் பொறுத்தவரை அது எமது காட்சிக்குப் புலனாகும் ஒரு பொருள். கண்களுக்கு அது ஒருவித வடிவத்தைத் தருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

விளக்கொளியில் அது கண்ணுக்கு மின்னுவதாகவும் தெரிகிறது. அதை நாம் தொட்டுப்பார்க்கும் போது மென்மையானதாகவும் கடின மானதாகவும் இருக்கிறது. மற்றவர்களும் அதைச் செய்து பார்த்தால் இந்த விடயத்தை நாம் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், இதுபற்றி திட்டவட்ட மாகப் கதைக்க முற்பட்டால் அங்கு பிரச்சினை எழுகிறது. சாதாரண ஒரு மனிதனுக்கும் சரி, மெய்யியல் அறிஞனுக்கும் சரி, பொருட்களின் சாதாரண தன்மையை (அதாவது இயல்பான தன்மையை) அறிய விரும்பும்போது சாதாரண மனிதனைவிட மெய்யியல் அறிஞனின் நோக்கு ஆழமானதாகிறது.

நாம் மேசையை மீண்டும் உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால் மேசையை நாம் முழுமையாக பார்க்கிறோமா, நாம் பார்க்கின்ற கோணத்தில் நாம் எடுத்துக்கொண்ட மேசையின் நிறம் அதற்கு எதிர்க் கோணத்தில் இருந்து பார்க்கும்போது அதே நிறத்தைப் பிரதிபலிக்கிறதா? ஆகவே இங்கு மேசையின் நிறம் என்ன என்ற ஒரு பிரச்சினையைப் பார்த்தல் வேண்டும். நீலக்கண்ணாடி அல்லது சிவப்புக் கண்ணாடி அணிந்து பார்ப்பவன் வேறு நிறத்தைப் பார்க்க முடிகிறதா? அப்படியானால் நிறம் எதற்குரியது? மேசைக்குரியதா அல்லது வெளிப்புறச் சூழலுக்குரிய தாயின் மேசையின் நிறம் என்ன?

மேசையின் நிறமென்பது அந்த மேசையைப் பார்ப்பவனையும் அந்த அறையில் காணப்படும் ஒளியையும் பொறுத்து அமையும். மேசையைப் பலகோணங்களில்தான் நாம் பார்க்கிறோம். பல பக்கங்களில் இருந்து பார்க்கிறோம். மேலிருந்து கீழ் எனும் கோணத்திலும் மேசையைப் பார்க்கலாம். எவ்வாறு மேசையைப் பல கோணங்களில் பார்த்தாலும் மேசையைப் பல பகுதிகளாகத்தான் பார்க்க முடிகிறது. குறிப்பிட்ட பகுதிகளைத்தான் பார்க்க முடியும். மேசையின் முழுமைத் தோற்றத்தை யும் அல்ல.

நடைமுறையில் உண்மையான உருவமே எமக்குத் தேவையாக இருப்பதால் பல தோற்றங்களிலிருந்து உண்மையான உருவம் என்ற கருத்தை வழங்குகின்றோம். ஆகவே கேள்வியானது அது உண்மையான உருவமா? றஸலின் கருத்தில் நாம் உண்மையான மேசையின் உருவத்தைப் பார்க்கவில்லை. ஆனால், மேசையை அனுமானிக்கிறோம், இது அறிவா?

ஆகவே பொருட்களைப் பொறுத்தவரை நாம் பார்க்கின்ற, நிற்கின்ற நிலைக்கேற்ப அது மாறி இருக்கிறது. ஒவ்வொரு ரீதியாக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

விதமாக அது இருக்கின்றது. நாம் பெற்றிருப்பது அறிவா அல்லது அனுமானமா? இதனால் எமது புலன்கள் உண்மையான மேசைக்குரிய தன்மைகளை வெளிப்படுத்தவில்லை. ஆனால் மேசையின் தோற்றத்தைப் பற்றி சில விபரங்களை அவை எமக்குத் தருகின்றன. புலன்கள் சார்ந்த ஒவ்வொரு துறைக்கும் இதை நாம் பயன்படுத்தலாம். ஏனையவை களுக்கும் அதாவது பார்வை, கேள்வி, சுவை போன்றவற்றிற்கும் இம்முறையைப் பயன்படுத்தலாம்.

இதை நாம் ஏற்றுக்கொண்டால் உண்மையிலேயே எமக்கு அப்பால் அல்லது வெளியே ஒரு மேசை இருக்குமானால் அந்த மேசை நாம் பார்க்கும், தொடும், ஸ்பரிசிக்கும் அல்லது கேட்கும் மேசைதான் என்று கூறுவதற்கு ஆதாரமிருப்பதாகத் தெரியவில்லை. இவை இந்த நிலை இன்னும் சில கடினமான கேள்விகளை எமக்கு எழச்செய்கின்றன. அவை மெய்யியலில் அறிஞர்களால் மிகத் தீவிரமாக ஆய்வுக்குட்படுத்தப் பட்டிருக்கிறது. இவற்றை மெய்யியல் வரலாறு கடினமான கேள்விகள் என்று வர்ணிக்கிறது. அந்தக் கேள்விகள் இரு வகைப்படும்.

எமது அனுபவ உணர்வுகளுக்கு அப்பால் உண்மையில் ஒரு மேசை இருக்கிறதா? அவ்வாறு உள்ளதாயின் அதனை எவ்விதப் பொருள் எனக் கொள்ளலாம்?

Z. A. ZAHIR
B.A. (Econ) P.G.D. in Edu.
In - Service Advisor
Zonal Education Office
PUTTALAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அத்தியாயம் 7

உடல் உளப் பிரச்சினைகள்

மனித இயல்பு

உன்னையே நீ அறிவாய், இது சோக்கிரட்டீஸின் பிரதான வாக்கிய மாகும். மனிதனைப் பற்றிய மிகத் திருத்தமான ஆய்வு என்பது மனிதனை ஆராய்ச்சி செய்வதாகும். மனிதனை ஒரு நபராகக் கொண்டுள்ள பிரச்சினைகள் உளவியல், உயிரியல், மெய்யியல் போன்ற துறைகளில் ஆராயப்படுகின்றன. இவை மனிதனின் இயல்பு பற்றிய ஆய்வுக்கு அடித்தளமாகவும் அமைகின்றது. மனிதன் சுய உணர்வு உள்ளவன். இது சமூக, தனிநபர் பொறுப்புக்கு ஒரு ஆதாரமாக அமைகின்றது. இது விளங்குவதற்கும், கற்பனை செய்வதற்கும், நீண்ட தூரம் உணரவும் ஒரு வழியாக அமைகின்றது. மனிதனுக்காக மனித நடத்தையை ஆராய் கின்றோம். ஏனெனில், மிருக உதாரணங்களை ஆய்வுக்கு எடுப்பதை விட மனிதனையே ஆய்வுக்காக கொள்ளல் சிறப்பு. அவ்வாறு மனிதனை ஆய்வு செய்யும் போதுதான் அவனைப் பற்றிய பெறுமதிமிக்க தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆயினும், இன்னும் மனிதனை சரியாகவும், முழுமையாகவும் ஆய்வு செய்யும் பணி பல பிரச்சினைகளை எதிர்நோக்கி நிற்கிறது.

சோக்ரட்டீஸ் அவரது ஒழுக்கவியலில் தன்னைப்பற்றி அறிந்து கொள்வதே எல்லா அறிவுகளினதும் ஆரம்பம் என கூறுகிறார். டெல்பீக் என்ற கிரேக்க தேவாலயத்தில் சோக்ரட்டீஸ் மனிதர்கள் அனைவருக்கும் மத்தியில் அதி ஞானம் உள்ள மனிதன் இவன் தான் என்று எடுத்துக் கூறப்பட்டது. இவ்வாறு சொல்வதற்கு ஒரு காரணம் முன்வைக்கப்பட்டது. அது அவர் ஒருவர் தான் தம்முடைய அறியாமையை அறிந்திருந்தார் என்பதாகும். அது தன்னைப்பற்றிய அறிவாகும். இதன் அர்த்தம் சோக்ரட்டீஸ் அறிவற்றவர் என்பதல்ல அவர் தன்னை அறிந்திருந்தார் என்பதாகும். இது மனித இயல்பு பற்றிய ஒரு உண்மையை முன் வைக்கின்றது. அதாவது மனிதன் தன்னைப்பற்றிய தீர்மானம் ஒன்றை ஏற்படுத்திக்கொள்வது அவசியமானதாகும். அறிவைப்பற்றிய அதேவேளை மனித இயல்பைப்பற்றிய ஆராய்ச்சியின் ஆரம்பத்தை இந்த நிகழ்வு விபரிப்பதாக காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மனித வரலாறு தற்காலத்திலும், கடந்த காலத்திலும் மெய்யியல், சமய, ஏனைய மனித பண்பாட்டு துறைகள் யாவும் மனிதனின் இயல்புகளை வெளிப்படுத்துகின்றன. மனித இயல்புகள் பற்றிய இயக்கத்தை மனிதனுக்குத் தருவதற்காக மேலே குறிப்பிட்ட துறைகள் முயற்சிக்கின்றன. இது உண்மையில் மனிதன் அவனது சொந்த வாழ்வை விளங்கிக்கொள்ள அவனே எடுக்கும் ஒரு பிரயத்தனம் ஆகும்.

மெய்யியல் மட்டுமல்லாது ஏனைய துறைகளும் இவற்றைத் தான் ஆராய்கின்றன. அடிப்படையில் ஒருவகை தத்துவார்த்த வினாக்களுக்கு அதாவது மனிதன் என்றால் என்ன? ஒழுக்கம், பெறுமானம், விழுமியம், மனிதநேயம் என்பவற்றின் அடித்தளங்கள் எவை? இக்கேள்விகளும், இலட்சியங்களும் மனிதனைப் பற்றியதாக இருப்பதால், இவை மெய்யியலில் ஒரு அர்த்தமும் தேவையும் உள்ள சிந்தனை பகுதிகள் எனக் கூறலாம்.

மனிதன் அடிப்படையில் இயற்கையின் ஒரு பாகம். அவன் அதனால் கட்டுப்படுத்தப்பட்டு இருக்கின்றான். சிலவேளைகளில் இயற்கையை வெற்றி காண்கின்றான். இருந்தாலும் மனிதன் இயற்கையுடன் தான் ஒன்றிணைந்துள்ளான். மனிதன் இயற்கையைப் பற்றிச் சிந்திக்கும் போது பின்வருமாறு மூன்று கேள்விகளை எழுப்பலாம்.

அ. நான் யார்?
ஆ. எங்கிருந்து நான் வந்தேன்?
இ. நான் எங்கு செல்லுகின்றேன்?

உலக அறிவு வரலாற்றைப் பொருத்தவரை மனித இயல்பை பற்றிய விளக்கங்கள் மூன்று உள்ளன.

அ. பகுத்தறிவு ரீதியான நோக்கு:
இந்நோக்கு மனித இயல்பை விளக்குகின்றது. இம்முறை கிரேக்கத்தில் இருந்தது.

ஆ. இஸ்லாமிய, யூத, கிறிஸ்தவ நோக்கு:
இந்த ஆய்வுகள் மிக அதிகமாக மத்திய கிழக்கு பலஸ்தீன நிலப்பரப்பில் உள்ள மூலங்களில் இருந்து வெளிவந்தது.

இ. உயிரியல்ரீதியான நோக்கு:
இது இயற்கை ரீதியான ஆய்வில் அல்லது இயற்கை விஞ்ஞானம் என்னும் தொடர்பில் இயங்குகிறது. மிக அண்மை நூற்றாண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உண்மையிலேயே இந்தக் கண்ணோட்டங்கள் எல்லாம் ஒருமுக மான கருத்துக்கள் என்பதைவிட பல உபவகைகள், திருத்தங்கள், மாற்றங்கள் யாவும் இவற்றில் அடங்கியுள்ளன. இடையிடையே சில கருத்துக்கள் இணைந்து முடிவுகளைத் தரவல்லன.

பகுத்தறிவுநோக்கு

மனிதனைப் பற்றிய பகுத்தறிவு நோக்கைப் பொறுத்த வரையில் இந்நோக்கு கிரேக்கத்திலும், உரோம நாட்டிலும் காணப்பட்டது எனலாம். ஐரோப்பாவின் மறுமலர்ச்சிக் காலத்தில், மனிதன் ஒரு பகுத்தறிவுப் பிராணி அல்லது உயிரி எனக் கருதப்பட்டது. கிரேக்க மெய்யியலாளர் களில் பிளேட்டோ ''அறிவுதான் ஆன்மாவின் மிக உன்னதமான உயர்ந்த பாகம்" என்று குறிப்பிட்டார். இந்த அறிவு முறையின் வேலை மனிதனின் நடத்தைகளுக்கு வழிகாட்டியாக இருப்பது, இது சுதந்திரமானது, இது அழியாதது. அரிஸ்டோட்டில் இது பற்றிக் கூறும்போது, அவரும் ஆன்மாவின் மிக உயர்ந்த பாகமாக அறிவையே கூறுகின்றார்.

கிரேக்கத்திலிருந்த ''ஸ்ட்டோயிக்" வாதிகள் ஒரு பொதுமை தெளிவு ரீதியாக இருந்ததாக கருதினார்கள். இது எல்லா பொருட்களிலும் அடங்கியிருப்பதாக அவர்கள் கூறினார்கள். ஒரு இலட்சிய மனிதன் அல்லது ஒரு புத்திசாலியாக உள்ளவன் கீழான உணர்ச்சிகளையும், தேவையற்ற எண்ணங்களையும் அடக்கியாள்பவனாக இருப்பான். இது பகுத்தறிவு பற்றிய கிரேக்கத்தின் நிலைப்பாடாகும். கிரேக்க தத்துவ வியலில் மனிதனைப் பற்றிய மிகவும் விரிவாக பேசப்பட்டவற்றில் மனிதன் இயற்கையோடு தொடர்பாகவும் தனித்துவமாக அவனுள் விளங்கும் பகுத்தறிவு ஆற்றல்களோடு தொடர்பாகவும் மனிதன் ஆராயப்பட்டான். மனிதன் அவன் பெற்றுள்ளதாகக் கூறப்படும் பல பாகங்களின் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட சித்தாந்ததைப் போன்று விளங்கும் பகுத்தறிவை உடம்பிலிருந்து தனியாகப் பிரித்து பார்க்க முடியாது.

சமயநோக்கு

யூத, கிறிஸ்தவ இஸ்லாமிய நோக்கானது மனிதன் தெய்வீக மூலாதாரத்தை உடையவன் என்று குறிப்பிடுகின்றது. மனிதனுடைய சிறப்புத் தன்மை அவனுடைய பகுத்தறிவையோ அல்லது அவன் இயற்கையோடு கொண்டிருக்கும் தொடர்பையோ அடக்கவில்லை. மனிதன் இறைவனால் படைக்கப்பட்டவன், கடவுளின் சாயலிலேயெ அவன் படைக்கப்பட்டுள்ளான் என்று கிறிஸ்தவக் கோட்பாடுகள் எடுத்துக் கூறுகின்றன. உண்மையில் மனிதன் இயற்கை, ஆன்மா, இவ்விரண்டினதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சந்திப்பாக இருக்கின்றான். இதனுடைய பொருள் மனிதன் ஒரு முடிவுப் பொருள், அவன் இந்தப் பூமியோடு கட்டுப்பட்டிருப்பவன். அவனுடைய பருவத் தன்மைகள், பலவீனங்கள் யாவும் இதில் அடங்குகின்றன. இது ஒரு பகுதியாகும். மற்றொரு பகுதி அவன் ஒரு ஆன்மீகப் பொருள் ஆவான். இயற்கையையும், அதன் ஆற்றல்களையும் கடந்து அதற்கு அப்பால் இயங்கக் கூடிய சக்தி மனிதனுக்கு இருக்கின்றது. இக்கருத்து யூத, கிறிஸ்தவ, இஸ்லாம் சமயங்களுக்கு பொதுவானவையாக உள்ளன. இது சமய ரீதியானதும் இறையியல் ரீதியானதுமான ஒரு கருத்து. இவற்றை இந்தச் சமயங்களும் அவற்றினுடைய இறையியல்களும் வலியுறுத்துகின்றன. சமயரீதியான கண்ணோக்கில் மனிதன் அர்த்த முள்ள ஒரு நோக்கமுள்ள பிரதிநிதியாக விளங்குகிறான் என கூறப் படுகின்றது.

மனிதன் தன் அறிவையும், ஒழுக்கத்தையும் இந்த பிரபஞ்சத்தில் வழங்குகின்றான். முக்கியமாக ஒழுக்கத்துக்காகப் பாடுபடுகின்றான். சமயங்கள் ஒழுக்கமுள்ள மனிதனை எதிர்ப்பார்க்கின்றன. அல்லது ஒழுக்கமுடைய ஒரு சூழல் வரவேணடும் எனப் போதனை செய்கின்றன.

யூத, கிறிஸ்தவ சமயங்களில் மனிதப்படைப்பு எல்லையற்ற விதத்தில் நன்மையையும், தீமைகளையும் உள்ளடக்கியனவாக வர்ணிக்கப்படுகின்றது. யூத கிறிஸ்தவ சமயங்களில் கடவுளது பண்புகளாக அன்பு, சுயநலமின்மை, சமுதாய உணர்வு முதலிய கருத்துக்கள் உயர்ந்த இடத்தில் வைத்துப் பேசப்படுகின்றன.

விஞ்ஞான நோக்கு

தற்கால விஞ்ஞான நோக்கில் மனிதனைப் பற்றிப் பல கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. அவை ஒரு சமமானதல்ல. அவை வெவ்வேறு விதமானவை. விஞ்ஞானிகள் அதனை வித்தியாசமான முறையில் பாகுபடுத்தி இருக்கின்றார்கள். ஆனாலும், இவ்விஞ்ஞானங் கள் அனைத்திலும் ஒருமித்த கருத்தையும் காணக் கூடியதாக உள்ளது. விஞ்ஞான நோக்கில் முதலாவது, மனிதன் இயற்கையின் ஒருபாகம் ஆவான். அதனால் அவன் பௌதீக இரசாயன மாற்றங்களுக்கும், விதிகளுக்கும் ஏனைய உயிரினங்கள் எவ்வாறு உட்படுகின்றனவோ அவ்வாறு அவனும் பௌதிக, இரசாயன மாற்றங்களுக்கு உட்படுகிறான். ஏனெனில், அடிப்படையில் எந்தவொரு உயிர்ப் பொருளுக்கும் இருப்பது போல மனிதனுக்கும் ஒரு குறிப்பிட்ட அளவு, நிறை, வடிவம், நிறம் ஆகிய பண்புகள் இருக்கின்றன. விலங்குகள் போல உண்ணல், உணரல், உறங்கல், இனவிருத்தி செய்தல் என்ற செயற்பாடுகளும் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மனிதன் காலத்திலும், இடத்திலும் அமைந்திருக்கின்றான். அத்தோடு இயற்கையின் விதிகளுக்கு அவன் கட்டுப்படவேண்டும். உண்ணும் போதும் பருகும்போதும் சுவாசிக்கும்போதும் பல்வகை இரசாயனச் சேர்க்கைகளை அவனது உடல் உள்வாங்குகிறது. அவனில் உள்ள சுரப்புக்கள் இரசாயன மாற்றங்களை வெளிப்படுத்துகின்றன. மனித உடலைப் பகுப்பாய்செய்யும்போது ரசாயனச் சேர்க்கைகளின் முக்கியத் துவம் வெளிப்படுகிறது. காற்றில், நீரில், நிலத்தில் உள்ள இரசாயனங்கள் தான் அவை, இதனால் மனிதனை இரசாயன ரீதியில்தான் நோக்க வேண்டும் என்று சில கோட்பாடுகள் கூறுகின்றன.

இன்னொரு நோக்கில் மனிதன் விலங்கினத்திற்குச் சமமானவன் என விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர். இப்பூமியில் வாழும் உயிரினங் களில் இவனும் ஒருவன்.

இம் மூன்று கருத்துக்களையும் மனிதனுடைய இயல்பை எடுத்துக் கூறும் மூன்று வித நோக்குகளாக நாம் கொள்ளலாம். இதில் சமய நோக்கில் மனிதன், விஞ்ஞான நோக்கில் மனிதன் என்னும் இரு விடயங்களை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம். என்றாலும் எதிரான கண்ணோக்குகளும் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

அதாவது, விஞ்ஞான நோக்கிற்கு உட்படாத பகுதிகளும் மனிதனில் அடங்கியிருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குறிப்பாக உணர்ச்சிகள், நம்பிக்கைகள், உட்தூண்டல்கள் இந்த விபரங்களின் சில கூறுகளை விஞ்ஞானம் ஆராய்கின்றது. ஆனால், மிகத் தெளிவான விளக்கத்தைத் தருவதில் விஞ்ஞானத்தால் முன்னேற முடியாது. நம்பிக்கை, அறிதல், உணர்ச்சிகள் என்ற விடயங்களை மனித வாழ்வின் அத்திவாரமான அம்சங்கள் என்பதை நாம் கவனத்தில் கொள்ளல் வேண்டும். மனித ஒழுக்க அல்லது பெறுமான விடயங்கள் என்பனவும் இதில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

மனிதனையும், மிருகங்களையும், ஒப்பிடும்போது மிருகம் உணர்வுடையது, மனிதனும் உணர்வுடையவன். ஆனால், இவற்றுக் கிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. மனிதன் சுய உணர்வுடைய வனாக இருக்கின்றான். மனிதனையும், மிருகங்களையும் வித்தியாசப் படுத்துவது அதுதான். தனக்காகவும், தான்வாழும் சமூகத்துக்காகவும் உள்ள பொறுப்புக்களோடு அவன் காணப்படுகின்றான். தனது சந்ததிகளுக் காகப் பாடுபடுகிறான் சேர்த்து வைக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கருத்துருவமான சிந்தனை, இதுவும் மனிதனுக்கும் மிருகத்துக்கும் வித்தியாசப்படுகின்றன. மிருகங்கள் கேட்கின்றன, பார்க்கின்றன. அந்தளவில் மனிதனும் சமமே. ஆனால் மனிதனால் தான் கருத்துருவமான சிந்தனையை வகுக்க முடியும். அவ்வாற்றல் மனிதனுக்குத்தான் இருக்கின்றது. இவ்வாறு தான் ஒழுக்கவியல் தேர்வு, இரசனையியல், நயப்பு, வழிபடும் நம்பிக்கை போன்ற விடயங்களும் மனிதனிடத்தில் தான் இருக்கின்றன எனலாம். அதாவது பெறுமான அம்சங்களும் விடயத் தேர்வுகளும் மனிதனைச் சாந்தனவாக உள்ளன.

அகம்

மனித மனதைப் பற்றிக் குறிப்பிடும்போது தான் அல்லது நான் என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது. இது ஆங்கிலத்தில் 'Self' (அகம்) எனப்படுகின்றது. ஆதி கிரேக்க காலத்திலிருந்து 'Self' and 'Mind' இரண்டையும் ஒரே விதமான பொருளில் கிரேக்க மெய்யியலாளர்கள் பயன்படுத்தி வந்துள்ளனர். உள்ளம் (mind) என்பதை ஒரு வடிவத்திற்கு ஒப்பிடலாம். அதுதான் மூலாதாரமான ஒரு ஒழுங்கமைப்பு எனினும், உள்ளத்தையும், ''Self''யும் ஒன்றாக இனங்காண்பதில் சில பிரச்சினைகள் எழுந்துள்ளன. நான் எனும் கருத்து மூன்று கூறுகளால் அமைக்கப்பட்டுள்ளன. இன்னும் பல கூறுகள் இருக்கலாம்.

(I) சிந்தனை
(II) உணர்ச்சி
(III) விரும்புதல்

பாரம்பரிய அடிப்படையில் இம்மூன்று பண்புகளும் மனித அனுபவத்தில் பல வேறுபாடுகளை ஏற்படுத்துபனவாக உள்ளன. அகம் என்பது இன்னொரு வகையில் சிந்திப்பது, விரும்புவது, தீர்மானிப்பது என்ற பல அம்சங்களையும் கொண்டுள்ளது. மனிதனால் மிக நெருக்கமாக உணரப்படும் ஒன்றாகவும் அகத்தைக் கருதலாம். புற உலகை விட மிக நெருக்கமாக நேராக உணரப்படுவது இதுதான். அவர்கள் என்னைத் துன்புறுத்தினார்கள், நேற்று நடந்த நிகழ்ச்சியால் நான் மிகவும் துன்பப்படுகின்றேன், இன்று எனக்கு மகிழ்ச்சிக்குரிய நாள் போன்ற வாக்கியங்கள் இந்தநெருக்கத்தன்மையை உணர்த்துவதாகும். அகம் என்பதை இன்னொரு வகையில் கூறினால் உடம்பிலிருந்து வேறுபட்ட ஒரு பொருளாகவும், உணரக்கூடிய நிலையில் உள்ளது. எவ்வாறாயினும் எமக்குப் புறத்தே உள்ள பொருள் ஒன்றைப் போல் அல்லது பிறபொருளாக கூறுவதற்கு சமமாக இதை கூற முடியாது. இதனால் வரைவிலக்கணப்படுத்தக் கடினமான சில சொற்கள் எம்மிடத்தில்

Z. A. Zanhir
Assistant Director of Education
(Tamil Unit)
Zonal Education Office
Puttalam.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இருப்பதுபோல, உதாரணமாக, வாழ்க்கை போல அகமும் அமைந் துள்ளது. இதனால் இவற்றை விளக்குவது கடினமாகும். அது முக்கியமான எண்ணக்கரு எனச் சிலர் கூறுகின்றனர். மனித வாழ்வில் அகம் என்பது மிக முக்கிய விடயம் அகத்தை இல்லாமல் அகற்றுவது என்பது அறிவை அகற்றுவதற்கும், விஞ்ஞானத்தை நிராகரிப்பதற்கும் சமமாகும். என வாதிடப்படுகிறது. ஆனால், இருக்கிறது. என்ற சொல் அதாவது, மனம், 'இருக்கிறது' இச்சொல் மனவிடயத்தில் சில பிரச்சினைகளைத் தருகிறது. இதைப் பற்றிய கொள்கைகளும், கருத்துக்களும் எவ்வாறு இருந்தாலும் அதை மறுப்பவர்கள் கூட ஒரு விடயத்தில் ஒற்றுமைப்படுகின்றனர். அது அனுபவங்களின் தொகுதி என்கின்றனர். மனத்திற்கும் உடலுக்கு மிடையிலுள்ள தொடர்பினை தற்கால மெய்யியல் பல்வேறு கோணங்க ளில் ஆராய்ந்து வருகின்றது. இப்பிரச்சினை வரலாற்றில் மிக நீண்ட காலமாக மனிதனைப் பாதித்து வந்துள்ள விடயங்களில் முக்கியமான தொன்றாகும். இவற்றைப் பற்றி பண்டைய காலம் தொட்டு மனிதன் அதை விளக்குவதற்கு முயன்றுள்ளான். பொதுவாக மனத்தைப் பற்றி பேசும்போது நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல பல்வேறு மொழிகளிலும் எல்லா நாடுகளிலும் இவை வழங்கி வந்துள்ளன. உண்மையில் இந்த சொற்களுக்கிடையே உள்ள தெளிவின்மை, வரைவிலக்கணப் பிரச்சினை கள் இன்னும் தீர்க்கப்படவில்லை. இதை எடுத்துப்பேசும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகவே கூறுகின்றனர். இதனால் ஆன்மா, மனம், தன்னுணர்வு அல்லது சுயஉணர்வு சுயம் இவை பற்றி ஒரு தெளிவான விளக்கத்தை செய்வது கடினமாகும்.

மனம்

கிரேக்க காலத்தில் இதற்காக வழங்கப்பட்ட சொல் 'Psyche' என்பதாகும். குறிப்பாக, பிளேட்டோவே இந்த சொல்லைப் பயன் படுத்தினார். வழமையாக இச்சொல் ஆன்மாவுக்கு பயன்படுத்தப்பட்டது. மனிதனைச் சார்ந்துள்ள அம்சங்களை வேறுபடுத்தி, அவனில் அடங்கி உள்ள பௌதீகம் சாராததாக, வேறுப்பட்டதாக ஆன்மா என்பது சுட்டிக் காட்டப்பட்டது. பிளேட்டோவின் காலத்தில் இந்த Psyche என்று கருதியது. உடம்பில் தங்கியிருக்கக் கூடிய 'ஆன்மா' எனப்பட்டது. ஒவ்வொரு மனிதனுக்கும் அது இருக்கின்றது. இறக்கும்போது அது உடம்பை விட்டுபிரிகின்றது. அது அழிவதில்லை என்று பிளேட்டோ கூறுகின்றார். அரிஸ்டோட்டிலும் கூட இந்தக் கருத்திலேயே இருந்திருக்க வேண்டும். Psyche என்பது மிகவும் தவறாக மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றது. Psyche என்பதற்கு Soul (ஆன்மா) என்ற கருத்தைக் கொடுத்தார்கள். அரிஸ்டோட்டில் இதனைப் பயன்படுத்தும் போது எது வாழ்கின்றதோ அது Psyche (மனம்) என அர்த்தம் கொடுத்தார். மனத்தினுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

செயற்பாடுகள் என்று குறிப்பிடுவது பார்ப்பது, சிந்திப்பது, கற்பனை செய்யப்படுவது, சமிபாடு அடைவது, வளர்வது இயங்குவது இவைதான் மனம் சார்ந்திருக்கும் விடயம் என்றார் அரிஸ்டோட்டில். அவர் உடலின் செயற்பாடுதான் மனம் என்றார். கண்பார்வைச்சக்தியைப் பெற்றிருப்பது போல உடம்பு மனத்தை பெற்றுள்ளது.

ஆன்ம வாதம் இறையியல் கொள்கைகளில் மிக முக்கியமான தாக உள்ளது. சில நேரங்களில் ஆன்மாவையும் Self யும் ஒரே பொருளில் பார்க்கும் இடங்களுண்டு. ஆனால் தற்காலத்தில் நாம் முன் கூறியதுபோல் இதில் ஒரு தெளிவான வேறுபாடு காணப்படவில்லை. உண்மையில் ஆன்மா என்ற பதம் இன்று அகம், சுயம், மனம், அறிவு, தான் போன்றவாறு எடுத்தாளப்படுகின்றது.

மனம், நனவு இவை இரண்டும் ஒரே தன்மையானதல்ல. சில வேளைகளில் மனத்தையும், நனவையும் சமமாகக் கருதுவதுண்டு. ஆனால், அவை அவ்வாறில்லை. நாம் ஏதாவது ஒரு பிரச்சினையைப் பற்றி முடிவுக்கு வரவேண்டுமாயின் சில தொடர்ச்சியான உளப்போக்கு களுக்கு நாம் உள்ளாக வேண்டும். ஆனால், கட்டாயமாக அது நனவாக இருக்க வேண்டியதில்லை. இவ்வாறு நாம் ஆராயும்போதும் இதுவரை நாம் ஆராய்ந்தவற்றை கவனத்திற்கொள்ளும் போதும் மனத்தைப் பற்றிய ஆய்வு ஒரு சிக்கலான ஆய்வு என்று குறிப்பிடலாம். ஆகவே, சுருக்கமாக கூறுவதனால் மனம் பெற்றுள்ள சமூக உறவுகள் கடந்த காலங்களில் மிக குறைவான கவனத்தையே பெற்றுவந்துள்ளது. தற்காலத்திலும் இயற்கை ஆராய்ச்சிக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. உண்மையில் இயற்கையையும், மிருகங்களையும் மனிதனைவிட மனிதன் கூடுதலாக அறிந்திருக்கின்றான். ஒரு கால ஒழுங்கில் இதனைக் கூறுவதானால் விஞ்ஞான முறை முதலில் அறிமுகமானது, கணிதத்திலும், வானவியலிலும் பின்னர் பௌதீகவியல் அதற்குப் பின் இரசாயனவியல், அதைத் தொடர்ந்து உயிரியலுக்கு வந்தது. மிகவும் இறுதியாகத்தான் உளவியலும் சமூகவியலும் வந்தன. உளவியல் மிக அண்மைக் காலத்தில்தான் விஞ்ஞான முறைக்கு வந்துசேர்ந்தது. பல கண்டு பிடிப்புக்களை நிகழ்த்தியுள்ளபோதும் இது இன்னும் முன்னேற வேண்டி யிருக்கின்றது. உளவியல் மனத்தைப் பற்றிய பல ஆழமான ஆய்வு களைத் தொடங்கியிருந்தாலும், அங்கேயும் மனத்தைப் பற்றி ஒன்றுக் கொன்று முரணான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. திட்டவட்டமான கருத்துக்கள் இன்னும் கூறப்படவில்லை. அதாவது என்ன முறையைப் பயன்படுத்துவதன் மூலம் மனத்தை ஆராயலாம் என்பதற்காக பல முறைகள் கையாளப்படுகின்றன. உதாரணமாக, மூளை ஆராய்ச்சி, நடத்தை ஆராய்ச்சி, பிறப்பியல் ஆராய்ச்சி, குழந்தை ஆராய்ச்சி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மிருகங்களின் நடத்தை ஆராய்ச்சி, பிறழ்வு நடத்தை ஆராய்ச்சி, உடலியல் இயந்திரமுறை, உள்நோக்கல்முறை போன்ற பல முறைகளில் மனிதனின் மனம் ஆராயப்படுகின்றது. மனித மன ஆய்வில் சிக்மன்புரொய்ட், J.B வொட்சன் போன்றவர்களின் ஆய்வு முடிவுகள்பெரும் திருப்பு முனைகளை ஏற்படுத்தின.

மனத்தைப் பற்றிய ஆய்வில் இன்னொரு முக்கியமான பிரச்சினை மனதை ஒரு புறப்பொருளாக ஆய்வு செய்ய அடிப்படை உண்டா? என்பதாகும். இந்தவகையில் மனத்தை ஒரு புறவய கண்ணோக்கில் பார்ப்பதற்கு வழிகள் தேடப்படுகின்றன. அல்லது மனம் என்பது புறவயம், அகவயம் என்ற இரண்டையும் கொண்டதா?

இறுதியாக இன்னொரு பிரச்சினை உள்ளது. மனிதனின் பரிணாம வளர்ச்சியில் இந்த மனம் எப்போது உருவாகியது என்பதாகும். இந்த எண்ணங்களின் அடிப்படையில் மெய்யியலாளர்கள் மத்தியில் உடல்-உளப்பிரச்சினைப் பற்றி பல்வேறு கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றை நாம் மனம் பற்றிய கோட்பாடுகள் என்று குறிப்பிடலாம். இந்த கோட்பாடுகளில் சிலவருமாறு:

அ. மனம் ஒரு பதார்த்தம்
ஆ. மனம் ஒரு சூழ்நிலை ஒருமைப்பாடு
இ. மனம் ஒரு அனுபவங்களின் இயல்பு
ஈ. மனம் ஒரு நடத்தை

பிளேட்டோ

மனம் பற்றிய ஆய்வில் மனம் சடநிலையற்றது என்ற கருத்தை முன்வைத்தவரும் மனத்தைப் பற்றி ஆரம்பத்திலே பேசியவரும் பிளேட்டோதான். பிளேட்டோவின் முக்கியமான கரிசனை மனிதனைப் பற்றியதாக உள்ளது. இதிலும் விசேடமாக மனித உள்ளம் பற்றி அவர் விபரித்துள்ளார். பிளேட்டோ மனிதனுடைய இயல்பை 3 வகையாக வகுத்துள்ளார்.

ஆன்மாவின் இருவகைச் செயற்பாடுகள் பிளேட்டோவினால் சுட்டிக்காட்டப்பட்டது. ஆன்மா nous (mind) என்றும் கூறப்படும். இவ்வகையில் ஆன்மா அழியாதது. அதன் மற்றப்பண்பு அதன் சுய இயக்கத்தன்மையாகும். சுய இயக்கத் தன்மை மூலமாக ஆன்மா சடத்துடன் தொடர்புறுகிறது. அது சட இயக்கத்திற்குள்ளாகிறது. உலக சடம், மனிதசடம் இரண்டும் இதில் சம்பந்தப்படுகின்றன. இதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மனத்திற்கும் (nous) சடத்திற்கும் இடையில் ஒரு பதற்ற நிலை உள்ளது. மனஆன்மா மனித உடம்பிற்குள்ளாகும் போது அது உடம்பிற்குரியதாக வரையறுக்கப்படுகிறது. இந்தச் சடரீதியான வரையறையிலிருந்து அல்லது சிறையிலிருந்து விடுபட அது விரும்புகிறது.

இரு ஆன்மாக்களிற்கிடையிலான வேறுபாடுகளைக் காட்டுவதற்கு மூன்று ஆன்மாக்கள் பற்றி அல்லது மனிதனின் மூன்று நடவடிக்கைகள் பற்றி பிளேட்டோ கூறுகிறார். மூன்று பிரிவுகள் மூலம் மனித இயல்பை பிளேட்டோ விளக்கும் விதம் என்றும் இதனைக் கூறலாம்.

மனிதனின் உயரியபாகம் அல்லது ஆன்மாவின் உயரியபாகம் பகுத்தறிவு அல்லது மெய்யறிவு (Reason). அது கருத்துத் தன்மையானது அதை அழிக்க முடியாது.

அ. பகுத்தறிவு

ஆ. மனிதனுடைய உணர்ச்சிகளும் புலணுணர்வுகளும்

இ. ஆவலை ஏற்படுத்தும் கூறுகள்

இவை மூன்றையும் பிளேட்டோ, முறையே மூன்று உடல் உறுப்புகளுடன் தொடர்புபடுத்தினார்.

அ. மூளையுடன் பகுத்தறிவு

ஆ. இதயத்துடன் புலன் உணர்ச்சி

இ. வயிற்றுடன் ஆவலை ஏற்படுத்தும் தூண்டல்கள் தொடர்புபடுத்தப் பட்டன.

வயிற்றுடன் தொடர்பான விடயங்கள் உணர்வுரீதியான கோரிக்கை யாக உள்ளன. அறிவின் ஆட்சிக்கு இதுதான் கிளர்ச்சியாளனாகிறது.

மனிதனைப் பிளேட்டோ ஒரு தேருக்கு ஒப்பிடுகிறார். அறிவு ஆன்மா தேரோட்டியாக உள்ளது. ஏனைய இரண்டும் தேருக்கான இரு குதிரை களாகும். ஒரு குதிரை அடங்கிச் செல்கிறது. (irascible soul) அடுத்த குதிரை அடங்காது, திமிறி ஓடுகிறது, தேரோட்டிக்கும் பிரச்சினைகளைத் தருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பிளேட்டோ தனது குடியரசு நூலில் சோக்ரட்டீஸ் (பாத்திரம்) மூலம் இவ்வாறு கூறுகிறார்.

சோக்ரட்டீஸ்:

> தனிப்பட்ட ஆன்மா நாட்டைப்போலவே இருப்பதாகக் கொண்டு நாம் அதை மூன்று கொள்கைகளாகப் பிரிப்போம். இந்த மூன்று கொள்கைகளுக்கும் மூன்று சுகங்கள் பொருந்தும். முதல் கொள்கை அறிவுநாட்டம், அடுத்தது அவனைச்சினமூட்டுவது, மூன்றாவது பல பண்புகளையுடையது. அதை ஆசை என்ற பெயரால் குறிக்கலாம். உண்மை, குடித்தல் இதில் அடங்கும், புலன் உணர்ச்சிகளும் இதில் சேரும். அது வலிமையும் வேகமும் கொண்டது. பண ஆசையும் இதைச்சார்ந்ததே. ஏனெனில் பணத்தின் உதவியினாலேயே இந்த ஆசைகள் நிறைவேற்றப்படுகின்றன.

ஒரு கருத்தில் பிளேட்டோ உள்ளத்தையும், உடம்பையும் ஒன்றோடொன்று தொடர்புபட்டதாகக் கருதினார். ஆனால் அவை இரண்டுக்கும் தெளிவான வேறுபாடுகள் இருப்பதையும் எடுத்துக் காட்டினார். பிளேட்டோவின் மனத்தைப் பற்றிய சிந்தனைகள் பின்னர், கிறிஸ்தவ சமயவாதங்களில் செல்வாக்கு செலுத்தியது. பிளேட்டோவின் மனம் பற்றிய கருத்து மத்திய காலத்திலும் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தது. பிளேட்டோவின் சிந்தனையை அடியொற்றி இன்னும் ஆழமான கருத்துக்கள் வெளியிடப்பட்டன.

அரிஸ்டோட்டில் ''மனம் என்பது உயர்தரமான ஆற்றல் அதுதான் மனித ஆன்மாவின் மிக உயர்தரமான பகுதி" என்று கூறினார். இங்கு அரிஸ்டோட்டில் பிளேட்டோவில் இருந்து சிறிது விடுபட்டு செயற்படும் ஒரு போக்கிலிருந்து தனது கருத்தை விளக்கினார்.

நான்

இந்த விடயத்தைப் பற்றி வரலாற்றுரீதியாக எடுத்துக் கூறியவர் றேனேடேக்கார்ட் என்பவராகும். இவர் நவீன மெய்யியலின் தந்தை யாகவும் கருதப்படுகின்றார். இவர் இந்த வினாவுக்கு மிகவும் நேரடியாக விடை தந்தார். இந்த விடயத்திற்கு விடை தந்த மற்றுமொரு மெய்யியலாளர் டேவிட்ஹியூம் என்ற பிரித்தானிய அனுபவ முதல்வாதி யாவார். மேற்கூறிய இருவரும் இந்த விடயத்தில் முற்றாக வேறுபட்ட கருத்தையே தந்தனர். நான் யார்? என்ற கேள்விக்கு டேக்கார்ட் சில தெளிவான கருத்துக்களை முன்வைத்தார். ஆயினும் அக்கருத்துக்கள் உண்மைகள் என்று கூறுவதற்கில்லை. தெளிவாக இருந்தது என்றுதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கூறவேண்டும். இவர் 1596-1656 காலப்பகுதியில் வாழ்ந்தவர். இவருடைய அறிவு ஆற்றல் பல துறைகளில் இருந்தது. உதாரணமாக உளவியல், உடலியல் போன்றனவற்றில் மாத்திரமன்றி ஒரு தத்துவ ஞானியாகவும் அதேவேளை ஒரு குறிப்பிடத்தக்க கணித நிபுணராகவும் இருந்தார். அவர் வகுத்த கொள்கைகளில் ஐயவாதம் முக்கியமானது.

அவருடைய ஐயவாதத்தில், ஐயப்பட முடியாத ஒன்று இருக்குமா என்பது முக்கிய வினாவாகும். அவர் தமது ஐயவாதத்தில் இருந்து ஒவ்வொன்றையும் சந்தேகத்திற்கு உட்படுத்தினார். ஐயவாதத்தில் இருந்து அறிவை, உணர்வை, பிரபஞ்சத்தை, விருப்பு போன்ற ஒவ்வொன்றையும் சந்தேகத்திற்குட்படுத்தினார். இறுதியாக சந்தேகிக்க முடியாத ஒன்று இருக்குமானால் அது 'நான்' என்ற ஒன்று மட்டுமே தான். ஏனெனில் மற்றவர்களையும் மற்றவிடயங்களையும் ஐயப்படுவதற்கு நான் இருந்தாக வேண்டும். இல்லையென்றால் ஐயம் என்பதற்கு இடமில்லை. எல்லா வற்றையும் நன்கு ஆராய்ந்த பிறகு நுணுக்கமாக அளவீடு செய்த பின்பு இறுதியாக ஒரு விடயத்திற்கு வந்து சேர்வேன் அதுதான் 'நான் இருக்கின்றேன்.' என்ற அடிப்படை. டேக்கார்ட்டைப் பொறுத்த வரையில் இது மறுக்கப்பட முடியாத விடயம். இந்த கருத்து எனது மனதில் உருவாகின்றது என்று கூறினார். மேலும் டேக்கார்ட் விளங்கப்படுத்தும் போது நான் (நான் இருக்கின்றேன்) என்பதை ஏற்றுக் கொண்டார். ஒரு பொருள் இருக்கின்றது அந்தப் பொருள் சிந்திக்கின்றது, அது சந்தேகிக் கின்றது, புரிந்து கொள்கின்றது, நிராகரிக்கின்றது. விரும்புகின்றது, கற்பனைசெய்கின்றது. மேலும் அது புலன் உணர்வுகளைக் கட்டுப் படுத்துகின்றது. இது தான் டேக்கார்ட் 'நான்' என்பதற்கு கொடுத்த வரைவிலக்கணம்.

இவர் கட்டி எழுப்பிய இவ்இருமை வாதத்தின் (Dualism) மூலம் மனிதன் உடல், உள்ளம் என்னும் இரு வஸ்துக்களால் ஆனவன் என்னும் விஞ்ஞான பூர்வமான கருத்தை அவர் முதன் முதலில் முன்வைத்தார். மனம் ஒலி, ஒளி போன்ற சூழ்நிலையில் ஏற்படுகின்ற தூண்டலினால் ஏற்படுவதாகும். சூழலில் இருந்துவரும் தூண்டல்கள் பொறிகள் வாயிலாக மூளையை சென்றடைந்து ஒரு வகையான சக்தியை நரம்புகள் வாயிலாக உடலின் பாகங்களுக்கு அனுப்பி உடலை செயற்படத் தூண்டுகின்றது என அவர் கூறுகின்றார். டேக்கார்ட் மேலும் மனத்தை ஒரு கடிகாரத்திற்கும் உடலை ஒரு கடிகாரத்திற்கும் ஒப்பிட்டு விளக்கியுள்ளார். அதாவது இரண்டு கடிகாரங்களும் ஒரே நேரத்தைக் காட்டுகின்றன. ஆனால் இரண்டு கடிகாரத்திற்கும் எந்தவிதத் தொடர்பு மில்லை. இவற்றின் மூலம் உடல்-உளம் பற்றி விளக்கியுள்ளார். ஒரு சந்தர்ப்பத்தில் அவர் உடலையும் உள்ளத்தையும் அவர் இரு கூறுக ளாக்குகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

டேவிட் ஹியூம் டேக்கார்ட் பற்றி கூறும்போது 'டேக்கார்ட் கருத்து ரீதியாக பகுத்தறிவு விதிகளில் நம்பிக்கைக் கொண்டவர்" எனக்கூறினார். எனினும் ஹியூம் அனுபவங்களில் நம்பிக்கை வைத்தார். அதாவது புலக் காட்சியில் நம்பிக்கை வைத்தார். இவரது கொள்கைப்படி எமது புலன்கள் எதை அனுபவங்கள் மூலம் ஏற்கின்றதோ அது அறிவு ஆகும். இவரும் டேக்கார்ட் கேட்டுகொண்டதுபோல், நான் என்னை அறிவேனா? என்ற கேள்வியை எழுப்பி அதற்கு விடைதர முன்வந்தார்.

இவர் டேக்கார்ட் கூறிய விளக்கங்களில் இருந்து வேறுபட்டதாக தனது கருத்தைக் கூறினார். நான் ''Self''பற்றி பேசுவதானால் அதைப்பற்றி உண்மையாகவும், உறுதியாகவும் எடுத்து சொல்லக் கூடியதாக இருக்க வேண்டும் என்றார்.

டேக்கார்ட்டின் கருத்துப்பற்றி டேவிட் ஹியூம் கூறுகையில் டேக்கார்ட் போன்ற மெய்யியலாளர்கள் நாம் ஒவ்வொரு கணமும் நான் (நான், தான், அகம், மனம், ஆன்மா) தம்மோடு மிக நெருக்கமாக மிக அந்நியோன்யமாக உணரப்படக்கூடியதாக இருக்கின்றது என்று மெய்யியலாளர்கள் கூறுகின்றார்கள். ஆனால் இதை உறுதிப்படுத்து வதற்காக அவர்கள், டேக்கார்ட் உட்படக் கூறும் சான்றுகள் போதிய ஆதாரமாக அமையவில்லையென ஹியூம் கூறுகின்றார். அவருடைய கருத்துப்படி ஏதாவது ஒன்றைப்பற்றிய ஒரு கருத்து புலப்பதிவு அல்லது புலப்பதிவுகளில் இருந்துதான் உருவாகின்றது. இவர் கேட்கின்ற கேள்வி நான் ''Self''என்பதற்கு அடிப்படையாக இருக்கின்ற புலன் அனுபவம் என்ன? அதற்கான அனுபவ ஆதாரம் என்ன? 'நான்' என்பதை உறுதிப் படுத்தக்கூடிய அனுபவ ஆதாரம் என்ன?

நாம் பொருள் அல்லாதவற்றையும் பிரிக்கப்படமுடியாதவற்றையும், ஆன்மப் பதார்த்தத்தையும் அறிய முடியாது. பதார்த்தம் (substance) என்பது அர்த்தமற்றது. மனம் பற்றியதாயிருந்தாலும் சடப்பொருள் பற்றியதானாலும் நிலைமை அதுதான். அனுபவ ஆதாரங்களின் மூலம் பதார்த்தத்தை நிரூபிக்கவோ நிராகரிக்கவோ முடியாது. 'தான்' அல்லது அகம் (Self) பற்றிய எளிய கருத்தும் அவ்வாறுதான் இருக்கின்றது என்பதற்கு அனுபவச்சான்று இல்லை. இதுதான் ஹியூம் முன்வைக்கும் பதார்த்தம் பற்றிய self பற்றிய பௌதிகவதீதமாகும். 'A Treatise of Human Nature' என்ற நூலில் ஹியூம் இது பற்றித்தந்துள்ள பின்வரும் விவரணம் முக்கியமானதாகும்.

நான், நான் என்று கூறுகின்ற ஒன்றினுள் எவ்வாறு நெருக்கமாக உள்ளே சென்றாலும் ஏதாவது ஒரு புலன்காட்சி, சூடு, குளிர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஒளி, நிழல், அன்பு, வேதனை, வெறுப்பு, மகிழ்ச்சி இவற்றைத்தவிர நான் ஒன்றையுமே அறிந்து கொள்ளவில்லை. புலக்காட்சி Per ception) *என்பதைத்தவிர என்னை நான் கண்டு பிடிக்கவில்லை. புலக்காட்சியைத் தவிர வேறு எந்த அவதானத்தையும் நான் காணவில்லை. எனது எல்லா புலன் காட்சிகளும் மரணத்தினால் அழிக்கப்பட்டால் என்னால் சிந்திக்கவோ, உணரவோ, பார்க்கவோ, வெறுக்கவோ, நேசிக்கவோ முடியாது தூங்கும்போதும் இது நிகழலாம். தூங்கும் போது புலன் உணர்வுகள் பூரணமாக இயங்கு வதில்லை"*

மனம் என்பது 'Collection of Different Perceptions ', பல்வேறு புலக்காட்சிகளின் தொகுதிதான் மனம், தாரை தாரையாக அவை ஒன்று கலக்கின்றன. மனம் ஒரு நாடக அரங்கம் போன்றது. அங்கு பல்வேறுபட்ட புலக்காட்சிகள் தொடர்ச்சியாகத் தோன்றுகின்றன, சந்திக்கின் றன என்றும் ஹியூம் கூறுகின்றார். இது மனம் பற்றிய கருத்தில் அடுத்துவரும் நூற்றாண்டுகளைப் பணியவைக்கும் அளவு ஹியூம் அவ்விளக்கத்தை மிகவும் முன்னேற்றமானதாக வழங்கியிருந்தார்.

புலன் உணர்வுகள் உயிர்ப்புடன் இருக்கும் வரையில்தான் 'நான்' இருக்கின்றது. மரணத்தினாலோ, தூக்கத்தினாலோ அது அழிக்கப்படும் போது 'நான்' இல்லாமல் போகின்றது. 'புலக்காட்சிகள் இருந்தால் 'நான் இருக்கின்றேன்,' புலக்காட்சிகள் இல்லை என்றால் நான் 'இல்லை'. அப்படி என்றால் நான் எனும் நான் யார்? புலக்காட்சிகளின் தொகுதி என்பதுதான் 'நான்' எழுப்பும் பிரச்சினைக்கான தீர்வாகக் கொள்ள வேண்டும்.

நான் என்ற ஹியூமின் கருத்து அவருக்கு முன்னர் இருந்த டேக்கார்ட் வழங்கிய கருத்தில் இருந்து வேறுபட்டிருந்தது. நான் என்பதை எவ்வாறு விளங்கப்படுத்தலாம் என்பதற்குரிய ஹியூமின் விளக்கம் பல்வேறு வகைப்பட்ட புலன்காட்சிகளின் தொகுதி தான் 'நான்' என்பதாகும் எனலாம். இந்த விடயமானது இன்னுமொரு பிரச்சினையை ஏற்படுத்து கின்றது. அதாவது இரண்டு பகுதிகள் இதில் உள்ளன.

அ. ஞாபகம் ஆ. கற்பனை

இவைதான் மனித மனதில் உள்ளத்திற்குரிய செயற்பாடாக உள்ளது. ஞாபகம் ஒரு விடயத்தை பதிவு செய்கின்றது. சரிநுட்பமாக ஒரு விடயத்தை பதிவு செய்ய அது முற்படுகின்றது. இருந்தாலும் அதில் ஒரு அடிப்படை குறைபாடு உள்ளது. ஒரு நிகழ்வின் உண்மையான நிலை ஞாபகத்தில் முழுப்பகுதியாகத் தோன்றுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சரியான சில விடயங்களை/சில கருத்துக்களை உருவாக்கவும் இது உதவுகின்றது. மனித மனதில் உருவாகின்ற எல்லா சிக்கலான கருத்துக்களும் இந்த ஞாபகம், கற்பனையில் தான் தங்கியுள்ளன. உண்மையில் ஞாபகமும், கற்பனையும் மனித அனுபவத்தைச் சேர்ந்தவை. இவை மனதின் முக்கியமான செயற்பாடுகள், இவற்றைக் கொண்டுதான் ஒரு மனிதனைப் பார்க்கின்றோம். அவனை மனிதன் என உணருகிறோம்.

சொந்த அனுபவங்களில் நிகழ்ந்த ஞாபகத்தையும் கற்பனைகளையும் கொண்ட அமைப்புதான் ''நான்" எனவே நான் என்பதை நேரடியாக நம்முள்பார்க்க எதுவுமில்லை. இந்தவகையில் ஹியூம் தனியான ஒரு மனிதனை இனம் காண அனுபவக்கோட்பாட்டை ஒரு தீர்வாக முன் வைத்தார்.

இதே கேள்விக்கு அடம்சிமித் இன்னொரு வகையில் விளக்கம் தருகின்றார். இவரது முக்கியமான கேள்வி நான் யார்? என்பதாகும். ஒரு மனிதன் அவனது தொழிலினால் வாழ்கின்றான். இந்தக் கூற்று வெளிப்படுத்துவது யாதெனில் அவர் சமூக பொருளாதார நிலைமைக்கு ஏற்ப இதனை விளக்கிக் கூறுகின்றார்: நான் பொருளாதார முறையைத் தழுவியதாக விடை தருகின்றேன். ஒவ்வொரு மனிதனும் அவன் ஒரு பணக்காரனாக இருந்தாலும் சரி, அவன் ஒரு ஏழையாக இருந்தாலும் சரி மனித வாழ்க்கையில் சில கட்டாய நிலைமையில் சில சௌகரியங்களையும் சில மகிழ்ச்சிகளையும் அனுபவிக்கக் கூடியவன் என விளக்கினார். அதாவது இவர் நாளை மனித நேயங்களைப் பயன்படுத்தி விளக்கினார்.

ஆஸ்திரியா உளவியல் நிபுணரான சிக்மன்ட் புரோயிட் (Sigmund freud) மனிதனின் ஆழ்மனத்தின் இயல்பை கருத்திற் கொண்டார். அதாவது மனதில் மிக ஆழமாக மறைந்துள்ள ''Self" பற்றிப் பேசினார். மனிதனுடைய சிந்திக்கும் படிமுறையின் ஒரு பகுதி மறைநனவு ஆகும் என்றார். உள மருத்துவ வைத்தியத்துறைக்கு அடிப்படையாக இந்தக் கோட்பாடு உருவாகியது. உளநோய்களை சுகப்படுத்துவதில் சிக்மன்ட் புரோயிட் புரட்சிகரமான முறையை அறிமுகப்படுத்தினார். அதாவது மறைநனவின் மீதான ஆய்வின் மூலம் இதையவர் ஏற்படுத்தினார். சிக்மன்ட்புரோயிட் தனது வைத்திய தொழிலை செய்து கொண்டிருக்கும் போது தீர்க்க முடியாத உள நோயால் பாதிக்கப்பட்டவர்களை தனது மருத்துவ ஆய்விற்குப் பயன்படுத்தினார். இதற்காக அவர் நரம்பியலில் நிபுணத்துவம் பெற்றதோடு, மூளை பற்றியும் ஆராய்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பின்பு, தனது வைத்தியத்தில் ஆழ்துயில் முறையைப் பயன் படுத்தினார். இதிலிருந்துதான் அவர் தனது பிரசித்தி பெற்ற உளப் பகுப்பாய்வு (Psychoanalytic theory) என்ற கொள்கையையும் உருவாக்கி னார். இதனூடாகத்தான் மனித மறைநனவு பற்றிய விளக்கங்களை அவர் உலகுக்கு வழங்கினார்.

நாம் இங்கு நோக்கிய சிக்மன்ட் புரோயிடின் மனம் பற்றிய கருத்து ஆளுமைப் பண்பு பற்றியதும் ஆகும். மனிதன் பிறந்த தினத்தில் இருந்து அவனுக்கு இருக்கின்ற அறிவும் அனுபவமும் சேகரிக்கப்பட்டு அவை சிந்தனைகளாக பிறக்கின்றன என்றார். அகம் என்பதின் உருவாக்கத்தில் மறை நனவுதான் ஆதிக்கம் செலுத்துகின்றது என்பது அவரது கருத்து.

ஜோன் லொக் மனித மனம் ஒரு எழுதப்படாத வெற்றுப்பலகை என்று கூறினார். செயல்களினூடாக புலன்கள் சில பதிவுகளைப் பெறுவதன் மூலம் மனம் உருவாகின்றது என்பது அவரது கருத்தாகும்.

இமானுவெல்காண்ட் பாரம்பரியமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட மனம் ஒரு பதார்த்தம் என்ற கருத்தை நிராகரித்தார். அறிவினூடாக ஒவ்வொரு தனிமனிதனும் தனது சுயத்தை, மனத்தை உருவாக்க முடியும் என்ற கருத்தை அவர் முன்வைத்தார். நாங்கள் என்ன அனுபவங்களை பெற்றிருக்கின்றோமோ அதைத் தான் நாம் உறுதியாக பெற்றிருக்கின் றோம் இவைகள்தான் அகம். இவர் உள்ளம் என்பது ஒரு செயல் என்று கூறுகின்றார். வெவ்வேறு புலன் உணர்வுகளைச் சேகரித்து தருகின்ற தரவுகளை ஒரு முறைபடுத்தப்பட்ட அறிவாக வைத்திருப்பது மனம். மனம் என்பது ஒரு பிரத்தியேகமான உளப் பதார்த்தமல்ல. ஆனால் மனிதனுடைய சொந்த அனுபவங்களின் ஒரு ஒருமைப்பாடும், ஒரு ஒழுங்கமைப்பும்தான் 'மனம்' ஆகும். இது பாரம்பரிய மனம் பற்றிய கருத்துக்களை உடைத்தெறிந்தது.

கார்ட்டீஸிய மரபு

டேக்கார்ட்டின் சிந்தனை இதில் முக்கியமானது. மனம் என்பது நேராகவும் உடனடியாகவும் நாம் எதையெல்லாம் நரம்புகளுக்கு கொண்டு வருகின்றோமோ, அவையனைத்தும் அதில் அடங்குகின்றன. அவரது கருத்தில் மனம் -உடல் என்ற இரு பாகங்கள் உள்ளன. டேக்கார்ட் இந்த விடயங்களில் கருத்து செலுத்தும் வரை உலகம் மனித மனதைப் பற்றி மிகக் குறைவாகவே அறிந்து இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கார்ட்டீஸிய சிந்தனையில் மனம் சார்ந்த, மனம் சாராத அதாவது உடல் ரீதியான என்ற இரண்டு தன்மைகள் முன்வைக்கப்பட்டன. இதில் ஒன்று அறிவாராச்சியியல்ரீதியாக நனவு என்ற விடயம் சுட்டிக் காட்டப் படுகின்றது. அடுத்தது, அளவையியல் உரைகளில் ஒன்று இங்கு பயன்படுத்தப்படுகின்றது. இந்த இரண்டையும் பயன்படுத்தி கார்ட்டீஸிய மனம் உடல் என்ற விடயத்தை நாம் ஆராய முடியும். நாம் பிறருக்கு எம்மில் நடக்கும் பிற விஷயங்களை விளங்கப்படுத்தும் போது சில சொற்கள் உடல் ரீதியானதொன்றா, உளரீதியானதொன்றா எனத் தெளிவு படுத்துவது கடினமாக உள்ளது. உதாரணமாக:

- எனக்கு பல்வலிக்கிறது.
- எனக்கு துக்கமாக இருக்கிறது.
- நான் களைப்பாக இருக்கிறேன்.

இவ்வுதாரணங்கள் உடல் ரீதியானவற்றைச் சுட்டுகின்றனவா அல்லது மன ரீதியானவற்றைச் சுட்டுகின்றனவா என்பதில் தெளிவு குறைவாக உள்ளது. ஆகவே, இதில் எது உடல் ரீதியானது, எது மனரீதியானது என்னும் பிரச்சினை உடலுக்கும் மனதுக்கும் உள்ள தொடர்பை வெளிப்படுத்துவது போல் உள்ளது. மனம் சார்ந்த விடயங்கள் உடல் சார்ந்த விடயங்கள் என இரு வேறுபட்ட விடயங்களை நாம் ஏற்படுத்துவது சாத்தியமானதுதான். ஆனால், இவை இரண்டையும் இணைத்துக் கருதுவதுதான் பொருத்தமானதுபோல் தெரிகிறது. உண்மை யில் உடல், உளம் என்ற வேறுபாடான இரு முடிவுப் பொருட்களை மனிதன் பெற்றுள்ளானா? இது ஒன்றில் ஒன்று தங்கியுள்ளதா? எவ்வாறு இந்த நிலைகளை நிரூபிப்பது? இதற்கு எதிரான நிருபணங்களை வழங்குவது எப்படி? சில கோட்பாட்டாளர்கள் இதற்கு ஒருமைப்பாட்டுக் கருத்தை வலியுறுத்துகின்றனர்.

உதாரணமாக A, B யுடன் ஒருமைப்பாடு உடையவராயின் B, A யுடன் ஒருமைப்பாடு உடையவர். ஆகவே, இங்கு நாம் பார்ப்பது எல்லா மன நிகழ்வுகளும் உடல் நிகழ்வுகளாயின், சில உடல் நிகழ்வுகள் மன நிகழ்வுகள் ஆகும். எவ்வாறாயினும், சில ஒருமைப்பாட்டுக் கோட் பாட்டாளர்கள் உடல் சார்ந்ததாக இக்கருத்தை வலியுறுத்த முற்படு கின்றனர். அதாவது மனம் என்பதைவிட உடல் என்பதற்கு அவர்கள் கூடிய இடத்தை தர முனைகின்றனர். ஒருமைத் தன்மையை தீர்மானிப் பதற்கு உண்மையில் தேவையானது எண்ணங்களோ நோக்கங்களோ அல்ல. ஆனால் அவ்வாறான எண்ணங்களும் நோக்கங்களும் ஒரு நிகழ்வாக இடம் பெறுவதுதான் தேவை. இன்னொரு வகையில் அதை மூளைவின் நிகழ்வு எனக் கூறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதாரணமாக, ஒரு குதிரையைப் பற்றிய எண்ணத்தைப் பெறுவதும் ஒரு குதிரையை நேராகக் காண்பதும் ஒரு வேதனையை உணர்த்துவதற்கு சமமாக அமையாது. இந்தக் காரணங்களால் இந்த ஒருமைக் கோட்பாடு அனுபவ உதாரணங்களைச் சார்ந்ததாக அமைய வில்லை. இது முன்னது ஏதுவான ஒன்றாக அமைகின்றது. இது காரண காரியக் கோட்பாட்டின் அடிப்படையினைப் பெற்றுக் கொள்கின்றது. இவ்வாறு உடல் மன நிகழ்வுகளையும் தெளிவான வார்த்தைப் பிரயோகங் களுக்கு கொண்டு வருவதன் மூலம் நாம் பயன்படுத்துகின்ற வார்த்தைப் பிரயோகங்களினூடாக நமது எண்ணத்தை இது உடல் ரீதியானது, இது மனரீதியானது என வகுத்துக் கொள்வது கடினமானதொன்று என இந்த ஒருமைக்கோட்பாடு விளக்குகின்றது.

இன்னொரு கோட்பாடு ஒருமைவாதம் சார்ந்தது. இங்கு உடல் தோற்றப்பாடும் உளத்தோற்றப்பாடும் ஒன்றல்ல. அதாவது ஒருமைத் தன்மையானது அல்ல என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது. இது கூறுவதாவது, இது உண்மையில் உண்டாக்கப்பட்ட ஒரு விடயம் என்று கூறுகின்றது. இதைச் சுருங்கக்கூறின், இரு வேறுபட்ட விடயங்களாக உடல், உள தோற்றப்பாடுகளைக் கொள்ளவேண்டும். இந்தக் கருத்துக் களோடு நாம் நடத்தைவாதிகளின் உடல் உளப்பிரச்சினை பற்றிய தீர்வுகளையும் கவனித்தால், முன்னர் கூறியபடி உடல் மன தோற்றப்பாடு அடிப்படையில் உடல் ரீதியான தோற்றப்பாடு என இவர்கள் கூற முற்படுகின்றனர். இதை நாம் உள்ளமும் மூளையும் என்ற உறவுக்கு மாற்றி நோக்கலாம், தற்காலச் செயற்பாட்டுவாதிகள் இந்தக் கருத்தை ஆதரிக்கின்றார்கள். உடல் - உளம் என்பதைவிட மனம் - மூளை என்ற கருத்தை இவர்கள் தற்போது வலியுறுத்துகின்றனர்.

மனித உளத்தை ஆராய்கையில் உளவியலின் பங்கு தற்காலத் தில் முக்கியமாகக் கணிக்கப்படுகின்றது. நடத்தைவாதிகள் மனம், மனநிலை என்று கூறும் பேச்சையே நிறுத்தவேண்டும் என்று கூறினார்கள். உளத் தோற்றப்பாடு ஒன்று உள்ளதை அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயங்கினர். இன்னும் சிலர் அவ்வாறு கொள்ளத் தேவையில்லை என வாதிட்டனர். இக்கருத்தைச் சுருக்ககமாக பின்வருமாறு கூறலாம்.

வூண்டின் உண்ணோக்குகை முறைக்கு எதிராக நடத்தைவாதம் உருவாகியது. மனத்தை ஆராய்வதற்காக உண்ணோக்குகை (Intro-spective) முறை விஞ்ஞான ரீதியற்றதென்றும் அவதானத்திற்குரிய விடயங்களையே உளவியல் ஆராய முன்வரவேண்டும் என்றும் நடத்தை வாதிகள் கூறினர். இதற்கும் பயன்படுத்தக் கூடியது நடத்தை ஒன்றுதான் என்றனர். ஜோன் B.வொட்சன் Pychology as the behaviorist views it

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

என்று எழுதிய கட்டுரை உளவியலில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியது. உளவியல் நடத்தை பற்றிய ஆய்வு என்ற கருத்தை வெட்சன் இதில் வரையறுத்தார். நடத்தை என்பது அவதானிக்கக்கூடிய, பதிவு செய்யக் கூடிய அளக்கக்கூடிய விடயங்களை கொண்டிருந்தது. உயிரினங்களின் அசைவு, மனிதர்களின் பேச்சு, உளவியல், உடலியல் மாற்றங்கள், குருதி ஓட்டம், மூளையின் நுண் அலை மாற்றங்கள் யாவும் நடத்தை என்ற கருத்தில் உள்ளடங்கின. உளம்பற்றிய அறிவில் இது புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டு வந்தது.

மனம் ஒரு புராணம்

கில்பர்ட் றைல் தனது Concept of Mind என்ற நூலில் மனத்தைப் பற்றி விளக்கும்போது, உடலும் உள்ளமும் வேறுபட்டது என்ற இருமை வாதக் கருத்தைக் கடுமையாகத் தாக்குகினார். உடலும் உள்ளமும் என இரண்டாக வேறுபட்டிருக்காது என்று விளக்குகின்றார். இவரது கொள்கை மனம் என்பது ஒரு மனிதன் இயங்கும் வழிமுறைதான் என்றும் மனம் என்பது மனிதனின் நடத்தைக் கோலம்தான் என்றும் விளக்குகின்றது மனிதனின் மனம் ஒரு பொருளாக அல்லது பதார்த்த மாக இருக்கின்றது என்ற கருத்தினை இக்கொள்கை உடைத்தது. மனம் பற்றிக் கூறப்பட்டு வந்த பல கருத்துக்கள் கட்டுக்கதை என றைல் ஒதுக்கினார்.

கில்பர்ட் றைலின் (Gilbert Ryle) கருத்தில், டேக்கார்ட் வெளியிட்ட உடல் உளம் பற்றிய இருமைவாதம் கற்பனை வரலாறு ஆகும். அது ஒரு புராணம் (Myth). கற்பனைக்கதை அல்ல. இது நேர்வுகள் (facts) அவற்றிற்குரிய இடத்திற்கு அல்லாது மற்றோர் இடத்திற்கு வகை மாற்றம் செய்யப்படுவதனால் எழுந்த பிரச்சினை என அவர் கூறுகின்றார். அதன் புராணத் தன்மையை உடைப்பதாயின் நேர்வுகளை மறுக்காது அவற்றை மீள் ஸ்தானப்படுத்தலின் மூலம் இதன் யதார்த்தத்தை விளங்கலாம் என அவர் எடுத்துக்காட்டினார்.

சமயங்களாலும் வேறு துறைகளாலும் கூறப்பட்டுவந்த உடல் உள இருமைவாதக்கருத்து டேக்கார்ட்டிடம் உத்தியோக பூர்வமான அங்கீகரிப்பைப் பெற்றது. அதாவது ஒவ்வொரு மனிதனும் மனத்தையும் உடலையும் பெற்றுள்ளான். மனிதனானவன் (i) உடல் (ii) மனம் என்ற இரண்டையும் பெற்றுள்ளான் எனச் சிலர் கூற முற்படுகின்றனர். அவனது உடலும் மனமும் ஒன்றாகப் பிணைக்கப்பட்டுள்ளன. மனிதனின் உடம்பு இறந்த பின்னர் உள்ளம் அழிவற்றுத் தொடர்ந்து இருந்து செயல்படுகிறது என்று அவர்கள் கூறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மனித உடலானது இடத்தில் அல்லது வெளியில் (space) உள்ளது. இடத்தில் செயற்படும் எல்லா வகை விதிகளுக்கும் அது உள்ளாவது தவிர்க்க முடியாதது. உடம்பின் செயற்பாட்டை அவதானிக்க முடியும். மனிதனின் உடற் செயற்பாடு பொதுச் செயற்பாடு. அதாவது புறத்தில் பார்க்கபடக் கூடியது. ஆனால், மனம் இடத்தில் இல்லாதது. மனம் இடத்தில் இல்லாததினால் இடத்தின் பொறி முறை விதிகளுக்கு அது கட்டுப்படாது. ஒருவனின் மனம் செயற்படுவதை இன்னொருவனால் பார்க்க முடியாது. அதனால் அது தனிப்பட்ட, புறத்திற் தெரியாத விவகாரம். எனது மனத்தை என்னால் மட்டுமே அவதானிக்க முடியும். மனிதனில் அகம் என ஒன்றும் புறம் என ஒன்றும் என இருவேறுபட்ட விடயங்கள் ஒன்றாகக் கலந்துள்ளன. இதில் அகம் என்பது Mental world ஐயும் புறம் (உடல்) என்பது Physical world ஐயும் குறிக்கிறது என றைல் விளக்குகிறார்.

அகம் புறம் என்ற இருவிடயங்கள் மனிதனில் செயற்பட்டாலும் மனமும் (அகம்) உடலும் (புறம்) எவ்வாறு செயல்படுகின்றன? எவ்வாறு ஒன்றில் ஒன்று செல்வாக்குச் செலுத்துகின்றன? இவை கடினமான கேள்விகள்.

புராணத்தன்மை வாய்ந்த இந்த இருமைவாதக் கோட்பாட்டை றைல் வகைக்குளறுபடி (Category mistake) என விளக்குகிறார். ஒரு நேர்வை அதற்குரியதல்லாத இடத்திற்குக் கொண்டு செல்வது இதில் நிகழ்கிறது. ஒரு வெளிநாட்டவர் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தைப் பார்ப்பதற்காக முதல் தரம் விஜயம் செய்தபோது அங்கு பல கல்லூரி களையும், பல நூலகங்களையும், பல விளையாட்டு மைதானங்களையும், பல அரும்பொருளகங்களையும், பல நிர்வாகக் காரியாலயங்களையும் காண்கிறார். இவற்றைப் பார்த்த பின்னர் அவர் கேட்கிறார்:

நீங்கள் கூறிய ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் எங்கே உள்ளது? பல கல்லூரிகளைப் பார்த்தேன், பல பதிவாளர் காரியாலயங்களைப் பார்த்தேன், பல விளையாட்டு மைதானங்களைப் பார்த்தேன் பல்கலைக் கழகம் எங்கே என வினவினார். பின்னர், அவருக்கு நீங்கள் பார்த்த கல்லூரித் தொகுதிகள், விளையாட்டு மைதானங்கள், பல அரும்பொருள் காட்சி நிலையங்கள், இவை யாவும் கொண்டதும் ஒருங்கிணைந்ததுமான பொது நிறுவனம்தான் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் என்று விளக்கப் பட்டது. இந்தக் கருத்தின் ஏற்புத்தான் ஒக்ஸ்போர்ட் உள்ளதென்பதை விளக்கும் விடயம் ஆகும். ஆனால், புதிய வெளிநாட்டவர் விட்ட தவறு அல்லது அவரால் கருதமுடியாது போனது என்னவெனில் அவர் அதுவரை ஒரு நிறுவனம் எவ்வாறு இருக்கும் என்பது பற்றி அறிந்திருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கிறிஸ்தவ தேவாலயம், பிரித்தானிய அரும்பொருளகம், பிரித்தானிய தேசிய நூலகம் என்ற ஒற்றைக்கட்டிட அடிப்படையில் ஒக்ஸ்போர்ட் பல்கலைகழகத்தையும் அவர் பார்க்க முற்பட்டதுதான். அவர் அறிந்த ஏனைய நிறுவனங்கள் பெற்றுள்ள அமைப்பிற்கு ஏற்ற விதத்தில் (ஒக்ஸ்போர்ட்) பல்கலைக்கழகத்தையும் வைத்ததுதான் அவர் செய்த தவறாகும் என றைல் கூறுகிறார். அதாவது, பல்கலைக் கழகம் என்ற எண்ணக்கருவை எவ்வாறு உபயோகிப்பது என்று தெரியாத நிலையில் இந்தத் தவறுக்கு அவர் ஆளாகியுள்ளார் அல்லது இங்கு ஒரு வகைக்குளறுபடி நிகழ்ந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அத்தியாயம் 8

கடவுள் இருப்பும் சமயங்களும்

சமயத்தின் தோற்றம் பற்றிய கருத்துக்கள் பல்வேறாக அமைந்துள்ளன. சமயத்தின் தோற்றத்தைப் பற்றிச் சமயங்களும் கூறுகின்றன. இது தவிர ஏனைய துறைகளும் கூறுகின்றன. சமயம் என்பது மனிதனின் அச்சத்திலிருந்துதான் வந்தது என்றும், இன்னும் சிலர் மனிதன், தான் வாழ்ந்து தீர வேண்டுமென்ற உறுதியான நிலையிலிருந்து சமயம் உருவான தென்றும், தன்னுடைய வாழ்வு பூர்த்தியடைய வேண்டும் என்ற நோக்கில் மனிதன் உருவாக்கியதே சமயம் என்றும் கூறுகின்றனர்.

சமயம்

இன்றைய சிக்கலான பரபரப்பான நவீன வாழ்க்கைக் காலத்திலும் மனிதன் சமயத்தில் ஆர்வம் குன்றாதவனாக உள்ளான். எவ்வளவு நாகரிகம் முதிர்ந்த சமுதாயத்திலும் புனிதப்பொருள்கள், சமயப் பெறுமானங்கள், நம்பிக்கைகள், திருவிழாக்கள், பெருநாள்கள் எதிலாவது குறைந்த அளவிலேனும் அவன் நம்பிக்கை பாராட்டி வருகிறான். யுத்தங்களின் போதும், தேசங்களின் தேசிய வைபவங்களின்போதும் சமயங்களின் புனித வசனங்கள், சமயத் குருமார்களின் பிரசன்னங்கள் இன்றும் முக்கியமுள்ளதாகவே திகழ்கின்றன. ஆயினும், சமயப்பங்காற்று தலில் மனிதன் கொண்டுள்ள தொடர்புகளில் ஏற்ற இறக்கங்கள் இடைவெளிகள் காணப்பட்ட காலங்களும் உள்ளன. சமயங்களை மறுப்பவர்களும் உள்ளனர்.

சமயம் புனிதத்துவம், நம்பிக்கைகள், சடங்குகள் மட்டும் அல்ல. அது ஒரு சமூகத்தோற்றப்பாடுமாகும். சமயங்கள் சமூகத்திற்கு அவசியமான சமூக ஒழுக்கக்கட்டமைப்பினைப் பெற்றுள்ளது. சமூக உருவாக்கத்தில் சமயத்திற்கும் ஒரு பங்கிருக்கின்றது. பொதுவான நம்பிக்கைகளையும் பொதுவான வாழ்க்கைக் நடைமுறைகளையும் தமக்குள் பகிர்ந்து கொண்டு ஒழுக்க மரபுகளைக் கடைப்பிடிக்கக்கூடிய ஒழுக்க சமுதாயம் (moral community) சமயவரம்புகளுக்குள் உட்பட்டிருப் பதை சமூக வாழ்வு காட்டுகிறது. சமூகவியலாளர் டெர்க்ஹெய்ம் இனது கருத்தில் சமூகமும் சமயமும் பிரிக்கப்பட முடியாதவை. பொதுவான நம்பிக்கையைக் கொண்டுள்ள ஒரு குழுவினர் தமது வழிபாட்டினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உருவாக்கிக் கொள்ளுகையில் சமயம் தோற்றம் பெறுகிறது என்றும் அவர் கூறுகிறார். நெருங்கிய சமூகத்தொடர்புகளும் சமூகப் பெறுமானங்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையும் தனிநபர்களைக் கூட்டாக ஒரு சமுதாயத்தொடர்புக்குக் கொண்டுவரும் இச்செயற்பாட்டை சமயம் அதன் நம்பிக்கைகள், புனிதங்கள், சடங்குகள், கிரியைகள் மூலம் நிறைவேற்றுகின்றது.

சமயம் பல்வேறு விதமாக வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. சமயம் (Religio)என்ற பொதுமைப்படுத்தப்பட்ட சொல் ஆரம்பத்தில் எல்லா மொழிகளிலும் இருக்கவில்லை. இலத்தீன்மொழியில் religio என்பது ஆதி உரோமர்களின் தொன்மை மக்கள் வழிபாடு, சடங்குகள் என்ப வற்றைக் குறிக்கம் சொல்லாகவே அமைந்தது. கிரேக்க உரோம கலாசாரத்தின் தோற்றத்தோடுதான் வட ஆபிரிக்கா முதல் பிரித்தானியா வரை, இந்தியா முதல் அத்லாந்திக் பகுதிகள் வரை சமயம், Religion பொதுமைச் சொல்லாகப் பரவியது. சமயத்தின் வரைவிலக்கணத்திற்குள் பின்வரும் ஐந்து அம்சங்கள் அவசியம் இடம்பெற வேண்டியன என Radoslav Jsnoff கருதுகிறார்.

1. இறை நம்பிக்கைகளும் ஏனைய நம்பிக்கைகளும்
2. சமய வழிபாடுகள், கிரியைகள்
3. மறைஞான வழிமுறைகள்
4. புனிதத்துவ வழிபாடுகள்
5. விழுமியங்களை (Values) பற்றிய நம்பிக்கைகள்

மனிதன் தனது வாழ்க்கைக்கு எனக் கொள்ளக் கூடிய, மிகவும் இலட்சியத் தன்மை வாய்ந்த விடயத்தை பற்றிய ஒரு அங்கீகரிப்பினை அல்லது விழிப்புணர்வை அவன் வளர்த்து வந்ததில் இருந்து உருவானது தான் சமயம் எனலாம் என்பர். இன்னொரு கருத்து அவனால் காண முடியாத உலகு பற்றிய அவனது பொறுப்புத்தான் சமயம் எனக்கூறுகிறது. இது வெவ்வேறு வழிகளிலிருந்து வருகின்றது. இறையியல் என்பது பொதுவான சமய சித்தாந்தமாகும். இதை சிந்தனையினூடாக நோக்கினால் சமயம் எவ்வாறு உருவானது என்பதை அறியலாம். புராதன மனிதன் இயற்கைக்கு பயந்து வாழ்ந்தான். இயற்கை அவனது கட்டுப்பாட்டுக்கு அப்பால் இருந்ததை அவன் உணர்ந்தான். இந்த அடிப்படை, மனிதனின் ஆதி நாகரிக, இனக்குழு வாழ்க்கையில் காணப்பட்டது. இவற்றின் பின்னணியில்தான் பல்இறைவாதம், பலதெய்வ நம்பிக்கைகள் பிறந்தன. இவை பரிணாமம் பெற்றுத்தான் ஓர் இறைவாதம் அல்லது ஏகத்துவம் தோன்றியது. குறிப்பாக கிரேக்கர் செய்யுஸை ஒரு பெருங் கடவுளாகக் கருதினர். ரோமர் ''ஜுபீட்டஸ்'' தெய்வத்தை வழிபட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

யூதர்களிடமும் ஓரிறை வணக்க கோட்பாடு வளர்ந்தது. உண்மையில் சமய வளர்ச்சியின் வரலாறு என்பதானது கடவுள் வளர்ச்சி பற்றிய வரலாற்றுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டது.

சமய நடைமுறையில் கடவுள் நம்பிக்கை ஒரு முக்கிய இடத்தினை பெறுகின்றது. மனிதன் தனது அனுபவ உலகிற்கு அப்பால் ஏதோ ஒன்று இருப்பது பற்றி அவ்உணர்வில் நம்பிக்கை வைத்திருக்கின்றான். கடவுள் நம்பிக்கை என்று கூறும்போது சில அம்சங்களை நாம் கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது. கடவுள் என்பதற்கும் கடவுள் பற்றிய கருத்துக்கும் வித்தியாசம் உண்டா? என்பது விவாதத்திற்குரியதாகும். மனிதர் ஒவ்வொரு விடயத்திலும் சில குறியீடுகளை பயன்படுத்துகின்றனர். இது மாற்றத்திற்கு உள்ளாகின்றது. மனிதன் வளர வளர மாற்றம் ஏற்படுகின்றது. கடவுள் பற்றிய விவாதங்கள் ஆரம்பிப்பதற்கும், கோட் பாடுகள் உருவாவதற்கும், இவை பற்றி மெய்யியல் ஆய்வுகள் நடைபெறுவதற்கும் முன்னதாகவே கடவுள் வழிபாடு தொடங்கிவிட்டது. கடவுள் பற்றிய விளக்கங்கள் ஒரே விதமான கருத்துக்களைக் கொண்டதல்ல. சில குழுக்கள் சிலவகை கருத்துக்களுக்கு முக்கியத் துவம் தந்தன. இருந்தும் ஒரு பரந்தரீதியிலான கருத்தும் உள்ளது. கடவுள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டபோது அதன் மூலமும் கடவுள் கருத்துக்கள் வளர்ந்தன.

மனிதனது அறிவு வளர வளர பழைய எண்ணங்கள் போது மானவை அல்ல என்பதை அவன் அறிகின்றான். தற்போதுள்ள வகையில் கருத்துக்களை மாற்றுகின்றான். இது பல்வேறு நாகரீக முயற்சிகளால் நடக்கின்றது. கடவுள் நம்பிக்கையை வெறும் நம்பிக்கையாக கொள்ளாமல் நவீன அறிவுக்கு பொருந்தக்கூடிய வகையில் விளக்கமளிக்க முடியுமா? எனப் பலசமய மெய்யியலாளர்கள் முயன்றனர். கடவுள் பற்றிய வரை விலக்கணங்களையும், இயல்புகள் பற்றிய விளக்கங்களையும், அவர்கள் வழங்கினர். கால மாற்றத்திற்கேற்றதாக கருத்து மாற்றங்கள் தொடர்ந்து நிகழ்ந்ததில் கடவுள் கருத்திற்கும் விதிவிலக்கிருக்கவில்லை.

இந்திய தேசத்துக் குருவைப் பொறுத்தவரை சமயத்தை நீங்கள் எவ்வாறு வரையறை செய்வீர்கள்? என்ற கேள்விக்கு அவர் ஒரு நேரடியான சிக்கலில்லாத விடையை வைத்துள்ளார். சமயம் உலகம் முழுவதிலும் தெளிவாகக் கொண்டிருப்பது 'devotion to God'. அதாவது இறைவன் மீது பக்தி என்று அவர் கூறுகின்றார். இப்பொது உண்மை சமயத்தோற்றப்பாட்டை விளக்கப் போதுமானதா? சமயம் பற்றிக் கூறப்படும் எந்த விளக்கத்திலும் குறித்த வகையிலான சிக்கல்கள் காணப்படுவதாக நவீன ஆய்வாளன் சுட்டிக்காட்டுகிறான். பெரிய, சிறிய சமயங்களாகவோ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறு சிறு வழிபாட்டுக் குழுக்களாகவோ எவ்வாறிருந்தாலும் இறை பக்தி என்பதுதான் உண்மை. இதில் போட்டியோ பிரச்சினையோ இல்லை என்ற இந்திய குருவின் வாதம் எவ்வளவு தூரம் பொருத்தமானது.

மனித வரலாற்றைப் படிக்கும்போது சமயம் என்பது எல்லாச் சமூகங்களிலும் இருந்துள்ளதை அறிய முடிகிறது. சமயங்களுக்கிடையில் பொதுத்தன்மைகள் காணப்பட்டாலும் அங்கு வேறுபாடுகள் இருக்கின்றன சமயங்கள் பற்றிய பொதுமைப்படுத்தலின் போது இந்த வேறுபாடுகள் கைவிடப்பட்டு விடுகின்றன.

'இறைபக்தியை' எல்லா சமயங்களுக்குமான பொதுவரை விலக்கணமாகக் கொள்வதில் குறைபாடுகள் உள்ளன. சிறு வழிபாட்டு சமயங்கள், பௌத்த சமயம் போன்றவற்றிற்கு இது பொருந்தாது.

நாம் சமயத்தைப்பற்றி ஆழமாகச் சிந்திக்கும்போது சமய அக்கறைகள் மனிதனின் நடவடிக்கைகளோடும் ஆவல்களோடும் ஒன்றின் மேல் ஒன்றாகச் சம்பந்தப்பட்டிருப்பதைக் காணலாம். அதனால் மிகத்தனித்துவமான சமய உணர்ச்சி அல்லது சமய நிலைப்பட்ட உணர்வு ஒன்று இருக்கும் என்பதும் நிச்சயமற்றதாகும். சமய மரபுகளை சமயத்திற்குச் சமயம் ஆராய்ந்தால் மிகவும் வேறுபாடான யதார்த்தத்தைத்தான் காணமுடியும். பண்டைய மெசபொட்டேமிய மக்கள் தமது கடவுள்களை வெவ்வேறு நோக்கங்கள் கருத்துக்களை மையப்படுத்தியதாக கற்பித்திருந்தனர். கடவுள்கள் பல்வேறு வடிவங்கள் கொண்டு உலகம் முழுக்கப் பரவியிருந்ததாகவும் அவை ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டு வந்ததாகவும் கருதினர். இஸ்லாமும், யூத சமயமும் தனி நபர் கடவுள் (One Personal God) என்று அவற்றிற்கு மாற்றமான கடவுள் கருத்தை முன்வைத்தன. உலகத்தைப் படைத்துப் பரிபாலிக்கும் ஏக இறைவன் என்று இச் சமயங்கள் கடவுளை விவரித்தன. ஹிந்துமரபில் non personal absolute reality அதாவது நபர் அல்லது ஆள்தன்மையற்ற முழுமுதல், இருமையற்றது என்ற கோட்பாட்டைக் கடவுள் கோட்பாடாக காண முடிகிறது.

சமயத்தோற்றம்

தொன்மை மனிதன் இயற்கையைப் பற்றி மிகச் சிறிதளவே அறிந்திருந்தான். இயற்கை அவனது கட்டுப்பாட்டிற்கு அப்பால் இருந்தது. இயற்கையையிட்டு அவன் பயம் அடைவதற்கு அதிக சந்தர்ப்பங்கள் இருந்தன. அச்சமுற்ற மனநிலையில் இருந்து சமயம் உருவாகி இருத்தல் கூடும் என்ற கொள்கையைத் தொடர்ந்து மனா (Mana) கொள்கை முன்வைக்கப்பட்டது. அது ஆற்றல் (Power) என்பதைக் கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மனா என்பதற்கு உயிர்ப்புடைய ஆற்றல் என்றே பொருள் கூறப்படுகிறது. ஏதாவது வழமைக்கு மாற்றமான செயல்கள் நடைபெறுவது அல்லது இயற்கையில், மனிதர்களில் அவ்வாற்றல் காணப்படுவது மனா எனப் படுகிறது. அவ்வாற்றல் பெரும் அனர்த்தங்களை, வியாதிகளை, மரணத்தை ஏற்படுத்தும். பயிர்களும், விலங்குகளும், மனித பிறப்புக்களும் பல்கிப் பெருகச் செய்யும். அது போர் செய்பவனுக்கும், வேட்டையாடுப வனுக்கும் பலத்தை வழங்கும். ஆபத்துக்கள் ஏற்படுவதற்கும் ஏற்படாமல் இருப்பதற்கு மனாவே காரணம் எனவும் பழங்குடி மக்கள் நம்பினர்.

மனா இடம் பெயரும் தன்மையுடையது. ஒருவரிலிருந்து மற்றவருக்கு செல்லக்கூடியது. பயிர்விளைச்சலை அதிகரிக்க, ஒரு பழங்குடியினன் ஒரு கல்லை நட்டுவித்து, பயிர்ச்செய்கை அதிகரித்தால் அந்தக்கல்லில் மனா ஆற்றல் இருப்பதாக நம்புகிறான். மனா ஆற்றல் நன்மை தரக்கூடியது போல தீமையும் தரும். மனித சக்திக்கு அப்பாற்பட்ட செயல்களை இது செய்கிறது. தொன்மைச் சமயத் தோற்றத்திற்கு மனாவும் முக்கிய அடிப்படையாகக் கொள்ளப்படுகிறது.

தொன்மைச் சமயத் தோற்றத்திற்கு, முன்வைக்கப்படும் அடுத்த கோட்பாடு Animism, அதாவது ஆவியுலகக் கோட்பாடு அல்லது உயிர்ப் பொருள் வணக்கக் கோட்பாடு. தொன்மை மக்கள் கண்ணுக்குப் புலனாகாத ஆவிகள் சூழ்ந்துள்ளதாகவும் செயல்களை விளைவிப்பதும் அவ்ஆவிகளே என்றும் அவர்கள் நம்பினார்கள். இயற்கையின் விளைவுகளை ஆவிக்கருத்து மூலம்தான் அவர்கள் விளங்கிக் கொண்டனர். தான் கண்டு பயந்து அதிர்ச்சியடைந்த பேரழிவு, கனவு போன்ற ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் பின்னால் ஒரு ஆவி இருப்பதாகவும் அதுவே அவற்றை செயற்படுத்துவதாகவும் அவர்கள் நம்பினர். வாழ்வுக்கும், இறப்பிற்கும் ஆவிகளே காரணம் என அவர்கள் நம்பினர். அது ஒரு கண்ணுக்குத் தெரியாத சக்தி என்றும் அது மனிதனுள் இருக்கும்வரை மனிதன் வாழ்கிறான். அது வெளியேறியதும் மனிதன் மரித்து விடுகிறான் என்றும் அவர்கள் கருதினர்.

இக்கோட்பாட்டின் ஸ்தாபகரான டைலர் இன்றுள்ள சமுதாயங்கள் அனைத்தும் ஆவியுலகக் கோட்பாட்டை பெற்றுப் படிப்படியாக வளர்ச்சி பெற்றதே எனக் கூறுகிறார். ஆவியுலக நம்பிக்கையாளர்கள், ஒருவரின் இறப்பிற்குப் பின்னர் அவரது உயிர் வாழ்ந்து வருவதாகவும் நம்புவர். இவ்ஆவியுலகக் கோட்பாடு, வளர்ச்சி பெற்ற சமயங்களிலும் இருப்பதாக டைலர் கூறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சமயம் பற்றிய நம்பிக்கையை மனிதன் முதலில் அவன் இயற்கையின் ஆற்றலில் கொண்ட நம்பிக்கையிலிருந்தே பெற்றுள்ளான் என்ற கருத்தை மாக்ஸ் முல்லர் முன்வைத்தார். இவரது கோட்பாடு இயற்கைக் கோட்பாடு (Naturism) எனக் கூறப்படுகிறது. அகழ்வாய்வுகள் மூலம் பெற்ற சான்றுகளிலிருந்து பழங்குடி மக்கள் இயற்கைப் பொருட்களில் கொண்டிருந்த அச்சத்தையும் வழிபாட்டுப் பொருட்களாக அவற்றை அவர்கள் பயன்படுத்தியதையும் அவர் எடுத்துக் காட்டியுள்ளார்.

இந்த நம்பிக்கைகளைத் தொடர்ந்து விலக்கு (Taboo) மந்திரம், குலக்குறி, போலிப் பொருள் வழிபாடு (fetishism) என்பன தொன்மை மனித சமுதாயங்களில் நிலை கொண்டன. சில சமூகத்தவர்கள் தமது குலத்தினர் சில பொருள்களிலிருந்து தோன்றியதாக நம்புகின்றனர். அவ்வாறு நம்பும் பொருளை குலக்குறி (Totem) எனக் கொள்கின்றனர். குலக்குறிகளாக இயற்கைப் பொருள்கள், தாவரங்கள் விலங்குகள் இடம் பெறுகின்றன. இக்குறியீடு அந்தச் சமுதாய மக்களின் திருமணம், உறவுமுறை, உணவுமுறை, வணக்கமுறை போன்ற பலவகைச் சமுதாய நிறுவனங்களோடு தொடர்புற்றதாகக் காணப்படுகிறது. குலக்குறி சமுதாய அமைப்பு முறையைக் கடந்தே சமுதாயங்கள் வளர்ந்து வந்துள்ளதாக குலக்குறிவாதம் விளக்குகிறது.

வேட்டையாடுதல் முறையினாலும் காடு அடர்ந்த வனச்சூழலில் தொன்மை மனிதன் வாழ்ந்ததனாலும் விலங்குகளுடன் ஏற்பட்ட தொடர்புகள் நம்பிக்கைகளிலிருந்து இக்குலக்குறி முறை வளர்ந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. பாம்பு, எருமை, ஆமை, மீன், பறவை, புலி, நாய், செம்மறியாடு, சூரியன், சந்திரன், தங்கம், சங்கு, பால், மஞ்சள், பேய் என இக்குலக்குறிகள் அமைந்திருந்தன.

போலிப்பொருள் (fetishism) வழிபாட்டில் உயிருள்ள, உயிரற்ற பொருட்கள் சம்பந்தப்பட்டுள்ளன. சில பொருள்களில் பெரும் சக்திகள் இருப்பதாகவும் அல்லது மந்திர சக்தி காணப்படுவதாகவும் இவை மனிதனுக்கு நற்பலனைக் கொண்டுவரக் கூடியன என்றும் போலிப் பொருள் வழிபாடு கூறுகிறது. மண்டையோடுகள், மரப்பொருள்கள், கற்கள், சிற்பங்கள் சித்திரங்கள் போன்றவை இதில் அடங்கும். தாம் எடுத்துக் கொண்ட இவ்வகைப் பொருகளில் பெரும் மந்திர சக்தி இருப்பதாக தொன்மை மக்கள் நம்புகின்றனர்.

உலகின் பல்வேறு சமயச் சடங்குகளில் மாந்திரீக (magic) அம்சங்கள் காணப்படுகின்றன. ஒருவனின் நகத்துண்டையோ, ஒருவனின் தலைமயிரையோ எடுத்து அதற்குரியவனின் மீது ஒரு மந்திரவாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மந்திர ஆற்றலை ஏவிவிடுதல் இதில் காணப்படும் ஒரு அம்சமாகும். பல்வலியை நீக்க மரத்தில் ஆணிஅறைவது, தண்ணீர் துளிகளைப் பூமியில் சிதறச் செய்து மழை வருவிக்கச் செய்வது போன்ற அசகாயச் செயல்களில் ஒரு மந்திரவாதி தனது மாந்திரீக வலிமையைக் காட்டு கிறான். மக்கள் இவற்றை நம்புகின்றனர்.

தொன்மைச் சமய வளர்ச்சியில் மாந்திரீகம் ஒரு முக்கிய பகுதியாகக் காணப்படுகிறது. இயற்கைச் சீற்றங்களுக்குப் பயந்த மனிதன் அச்சீற்றங்களிலிருந்து பாதுகாப்புப்பெற அந்த இயற்கை ஆற்றலை வசப்படுத்த முற்பட்டான். அந்த ஆற்றலை வசப்படுத்த மந்திர உச்சாடனங் களைப் பயன்படுத்தினார் மனிதர் இயற்கையாற்றலை தம் வசப்படுத்தி தமது ஆணைக்குப் பயன்படுத்தும் ஒரு முயற்சியாக இது அமைந்தது. வேட்டையிலும், பயிர்ச் செய்கையிலும், கால்நடை வளர்ப்பிலும் அதிக பலன் கிடைப்பதற்காக இம் மாந்திரீகச் செயற்பாடுகள் நடைபெற்றன. அதே நேரத்தில் மாந்திரீகவினை மற்றவர்களுக்குத் தீங்கு விளைவிப்பதற் காகவும் பயன்படுத்தப்பட்டது. அநேக சமயச் சடங்குகளில் மாந்திரீக அம்சங்கள் இடம் பெற்றிருப்பதை காணலாம்.

ஆன்மாவும் மரணத்திற்குப்பின் ஆன்மாவின் நீடித்த வாழ்வும் என்ற நம்பிக்கைகள் சமய எண்ணங்களில் ஆழமாக வேருன்றியுள்ள பழைமையான கருத்துக்களாகும். நீடித்த வாழ்வுக்குப் போய்ச் சேருங்கள், எங்களை மறந்துவிடாதீர்கள் என்றுதான அநேக பழங்குடியினர் தமது இறந்த உறவினர்களின் புதைகுழியில் கூறுகின்றனர். மனிதனின் ஆள்தன்மை அவன் இறந்த பின்னரும் நீடித்திருக்கும், ஆன்மா அழியாதது என்ற நம்பிக்கை ஆதிகாலம் முதல் இன்றுவரை நிலவிவருவதை டெர்க்ஹைம், பிரிசர் போன்றோர் எடுத்துக்காட்டுகின்றனர்.

இயற்கை கடந்த ஆற்றல், மரணித்த பின்பும் நீடித்திருக்கும் அழியாத ஆன்மா என்ற இருகருத்துக்கள் சமயத்தின் தோற்றக் காலமுதல் இருந்துவரும் அடிப்படை நம்பிக்கைகளாக உள்ளன. ஆவியுலகக் கோட்பாடு ஆவி ஒன்றைப்பற்றியது. ஆவிகள் சுதந்திரமாகத் திரியக் கூடியவை. ஆவிகள் பல்வேறு வகையின என்று நம்பப்பட்டது. சந்திரன், சூரியன் என்பன இயற்கை ஆவிகளாகும். சில ஆவிகள் இறந்தவர் களிலிருந்து பிரிந்தவை. இவ்வாறு பல ஆவிகள் உண்டென்ற மனிதனின் தொன்மை நம்பிக்கை plolydaemonism என்ற கொள்கைக்கு இட்டுச் சென்று பின் இந்த ஆவிகளுக்குத் தனித்தனியான பெயர்கள் இடப்பட்ட காலத்தில் அது பல்லிறைவாதமாக மாற்றம் பெற்றது. அதாவது ஆவிகள் கடவுளர் நிலைக்கு உயர்த்தப்பட்டு அக்கடவுளர் அனைவரும் வழிப்படப் பட்டனர்.

Z. A. ... M.A., M.Ed.
B.A. (ECON), PG.Dip.Ed.
In - Service Advisor
Zonal Education Office
PUTTALAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பழங்குடிவாழ்வு நகரவாழ்வாக மாற்றம் பெற்றபோது Polydae monism, என்பது பல்லிறைவாதமாக (Polythesism) ஆகியிருக்கலாம். இதைத் தொடர்ந்து கடவுள் பற்றியும் அதன் செயல்கள், ஆற்றல்கள் பற்றியும் பல்வேறு கதைகள் உருவாகின. நம்பிக்கைகளும் வழக்காறு களும் வளர்ச்சி பெற்றன. இந்தக் கதைகள்தான் புராணங்களாகும் (Myths). புராணங்கள் எல்லாத் தொன்மை மக்களிடமும் காணப்படு கின்றன. புராணங்கள் சமயங்கள் அல்ல. அவை புராதன அல்லது பூர்வீக இறையியல் ஆகும். பல்லிறைவாதத்தைத் தொடர்ந்து ஓரிறை வாதம், (Monotheism) வளர்ந்தது.

கடவுள் கோட்பாடுகள்

கடவுளர் என்ற பதம் பல்வேறு சிறிய, பெரிய மதங்களுக்குச் சொந்தமானது. இவை பல்வேறு வடிவங்களில் பயன்படுத்தப்படுகின்றது. சமய அடிப்படைக்கு இது ஒரு பிரதான எண்ணக் கருவாகும். கடவுள் பற்றிப் பல்வேறு வகையாகவும் பல்வேறு வடிவமைப்பிலும் மனித நாகரிக வளர்ச்சியோடும், மனித நாகரிக சிந்தனையோடும் கற்பனை செய்யப் பட்டுவந்துள்ளன. அத்துடன் கடவுள் பற்றிய கருத்துக்கள் பல்வேறு சமூகங்களுக்கிடையேயும் பல்வேறு வடிவங்களில் காணப்படுகின்றன. கடவுள் பற்றிய கருத்துக்கு வரலாற்றில் ஒரு தொடக்கமும் அதற்கென்ற வரலாறும் உண்டு. அந்த வரலாறு மனித நாகரிக, பண்பாட்டு வளர்ச்சியுடன் தொடர்புபட்டது. அதுதான் கடவுள் பற்றிய கருத்தையும் அதன் வளர்ச்சியையும் மிகவும் தெளிவாக விளக்குகின்றது. கடவுள் பற்றிய பல்வேறு கருத்துக்கள், காலாகாலமாக முன்வைக்கப்பட்ட கோட்பாடுகள் நூல் வடிவில் அல்லது மொழி உருவில் முன்வைக்கப் பட்டுள்ளன. அதுமட்டுமன்றி உலகில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கை யிலும், நம்பிக்கைகளிலும் அவை ஒன்று கலந்துள்ளன. இக்கருத்துக் களின் வளர்ச்சியும் மாற்றமும் இன்னும் தொடர்கின்றன.

சுமேரியக் கடவுள் கொள்கை

ஆதி சுமேரியரின் சமய நம்பிக்கைகளை மிச்சம் மீதியாகக் கிடக்கும் தொல்பொருள், பழம் நூல்கள் தரும் தரவுகளிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. அழிந்துபோன பல சமயத் தேவாலயங்கள், வழிபாட்டிடங்களின் இடிபாடுகள் பல கண்டு எடுக்கப்பட்டுள்ளன. தேவால யத்தினுள் ஒரு மாடாக்குழியும் அதன் அருகில் தெய்வச்சிலையும் அதன் முன்னால் நேத்திப்படைப்புக்களுக்கான மேசையும் காணப் பட்டுள்ளது. ஆரம்பக் கோயில்கள் மிக எளிமையான கட்டிட அமைப்பைப் பெற்றிருந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவர்கள், வணக்கமுறை, சடங்குகள் பற்றிய விவரணங்களையும், புராணவியல் நூல்களையும் பயன்படுத்தினர். வணக்கங்கள் சடங்குகளுடன் சம்பந்தப்பட்டிருந்தன. ஆராதனைகள் மூலம் மக்கள் கடவுளிடம் உதவிகளைத் தேடினர். கடவுள் தமக்குச் செய்த நன்மைகளுக்கும் உதவிகளுக்கும் மனிதன் நன்றி தெரிவிப்பதும் இதில் நடைபெற்றது. சுமேரிய மெசெப்பொட்டேமிய சமயங்கள் மனிதனுக்கும் இயற்கை சக்திகளுக்குமிடையில் ஒரு இசைவினை ஏற்படுத்தும் தன்மையையே அடிப்படையாகப் பெற்றிருந்தன.

நகரங்களின் ஆட்சியாளர்கள் என்ற வகையில் முழு சமுதாயத்தினதும் நல்வாழ்வுக்கான பொறுப்பையும் கடவுள்கள் ஏற்றிருந்தன. சுமேரியரின் கடவுள்கள் கருத்தில் ஒரு ஜனநாயகத் தன்மை இருந்தது. கடவுள்கள் உலக பிரச்சினைகள் தொடர்பாக ஒரு அசெம்பிளியில் ஒன்று கூடினர். வானக் கடவுள் என் (an) தலைமையில் இந்தச் சபை கூடியது.

கிரேக்கக் கடவுள்கள்

இலியாது, ஒடிசி போன்ற கி.மு 9ம் நூற்றாண்டளவில் எழுதப்பட்ட பெரும் காவியங்களில் ஆதிகிரேக்கரின் கடவுள் கொள்கைகள் இடம் பெற்றுள்ளன. இக்காவியங்களின்படி சர்வவல்லமையுள்ள கடவுள்களாலேயே முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அக்கடவுளரின் தயவைப் பெறுவதற்காக மக்கள் நேத்திகளையும் படையல்களையும் பலிகளையும் படைத்தனர். பசுமாடுகளும், ஆடுகளும் பலியிடப்பட்டன. கடவுள்களை மகிழ்ச்சிப்படுத்துவதற்காகத் திருநாள்கள் (பெருநாள்கள்) கொண்டாடப்பட்டன.

கிரேக்ககடவுள்கள் அனைத்துமே மனித வடிவங்களைக் கொண்டிருந்தன. இன்னும் பழைமையான காலத்தில் விலங்குக் கடவுள்களும் இருந்துள்ளன. ஸெயூஸ் (Zeus) அல்லது ஜுப்பிட்டர் எல்லாக் கடவுள்களுக்கும் தந்தையாவார். அவரே இப்பிரஞ்சம் முழுமைக்கும் அதிபதியாவார். மின்னலையும் புயலையும் ஜுப்பிட்டரே கொண்டு வருகிறது. அரைநிலைக் கடவுள்கள் அல்லது சிறுகடவுளர் பலரைத் தோற்றுவித்தவரும் ஜுப்பிட்டர் கடவுளே. ஸெயூஸின் அடையாளப்பறவை கழுகு ஆகும். ஸெயூஸின் மகன் அப்பலோ.

டயானா, சந்திரனதும், வேட்டையாடலினதும் பெண் கடவுள் நெப்டியூன் கடற்கடவுள், அத்தினா அறிவுக் பெண் கடவுள், ஆர்ஸ் யுத்தத்தின் கடவுள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

யூத கடவுள் கொள்கை

இக்கொள்கையில் கடவுள் ஒரு தன்னாதிக்கமுள்ளவராகச் சித்திரிக்கப்படுகின்றார். இதன் அடிப்படையில் இந்த பிரபஞ்சத்தை உருவாக்கியவர் அவரேயாவார். அவர்தான் இந்த உலகைப் படைத்து பரிபாலிப்பவராகவும், நீதியாளராகவும், சட்டங்களை இயற்றுபவராகவும் உள்ளார். அவர் ஒரு ஆள் (Person) வடிவமானவராக இருக்கின்ற போதிலும் அவர் உயர்ந்த தன்மை பெற்றவராகவும் மனிதனுக்கு அப்பால் அதாவது இயற்கைக்கு அப்பால் அவர் காணப்படுகின்றார். கடவுள் மனிதனிடம் நேர்மையையும், நீதியையும் எதிர்பார்க்கின்றான். தனது அடியானிடம் அவர்களின் சிந்தனை, செயல்களில் அடிபணிவையும் அவன் எதிர்ப்பார்க்கிறான். அவர்களின் செயல்களுக்கு ஏற்ப தண்டனையையும் வெகுமதிகளையும் வழங்குகின்றான். வரலாற்று நிகழ்வுகளின் மூலம் கடவுள் சில சந்தர்ப்பங்களில் வரலாற்று மனிதனாகவே இயங்கியதையும் யூதக் கடவுள் நெறியில் காணமுடிகிறது.

யூதத்துவம் (Judaism) என்பது யூத இனத்தவர்களின் விசுவாசத்தையும் வாழ்க்கையையும் குறிக்கிறது. கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டு கடவுளுடன் உடன்படிக்கை செய்து கொண்டவர்களாக யூத இனமக்கள் தம்மைக் கருதுகின்றனர். 'தொராவின் (Torah) கடவுளும் இஸ்ரேலரும் ஒன்றாக இணைக்கப்பட்டவர்கள்' என்ற கருத்து இந்த உடன்படிக்கைக் கருத்திலிருந்து வருவதாகும். 4000ம் வருடங்களின் முன்னர் மத்திய கிழக்கில் யூதசமயம் தோன்றியது. அதிவல்லமையுள்ள தெய்வமாகத் தமது கடவுளை யூதர் அடையாளப்படுத்தினர். தமது கடவுளின் தனித்துவத்தை நிலை நாட்டுவதற்காக குறிப்பாக மோஸஸின், மூஸா நபியின் காலத்தில் ஏனைய கடவுள்களையும் உருவச் சிலைகளையும் இவர்கள் நிராகரித்தனர்.

கடவுளைச் சிலையாக வடிப்பதை தவ்ராத் (Torah) சமயம் கண்டிக்கிறது. எல்லாவகைப் பல்லிறைவாதங்களையும் அது கண்டித்துத் தடை செய்கிறது. கடவுளுடன் தொடர்பு கொண்ட இனம் என்ற அடிப்படையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை யூத இனத்தவர்க்கு மட்டுமான உடன்படிக்கையாக வரையறுக்கப்பட்டது. யூதர்களின் கடவுள் கடந்த நிலைத்தன்மை, பெற்றதல்ல. கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையிலான வரலாற்றுத் தொடர்பை அது வலியுறுத்தியது. கடவுள் மனிதனுடன் உடன்படிக்கை செய்துகொண்டது. தோரா வேதத்தின் மூலமாக கடவுளுக்கும் யூதர்களுக்குமான தொடர்பும், யூதர்களின் கடவுள் மீதான அர்ப்பணிப்பும் ஒன்றிணைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மத்தியகிழக்கின் செமித்திய இனப் பிரிவின் சமயங்களில் ஒன்றே யூதசமயம். பலிச்சடங்குகள், அறுவடை தினங்கள், புதிய வருடப் பிறப்புக்கள் அப்பிரதேசம் முழுக்கப் பொதுவாகக் கொண்டாடப்பட்டன. யூதசமயவாதிகள், ஒரேகடவுள் என்ற கொள்கையை வலியுறுத்தினர். அக்கடவுளே இயற்கைக்கும் வரலாற்றிற்கும் அதிபதி என்று அவர்கள் தமது சமய நோக்கையும் இக்கடவுள் கருத்தை மையப்படுத்தி திசை திருப்பினர்.

பொதுவாக மத்திய கிழக்கில் காணப்பட்ட சூரிய, சந்திர, நட்சத்திர மற்றும் விலங்கு வழிபாடுகளில் இருந்து வேறுபட்டு ஆள்தன்மையுள்ள கடவுள் கருத்துடன் தமது வாழ்வையும் வரலாற்றையும் யூதர் இணைத்தனர். ஹிப்றூக்களின் உலக நோக்கு புராணத்தன்மையான தல்ல. பிரபஞ்சம் தெய்வீகமானதாகக் கருதப்படவில்லை. உலகைப் படைத்து அதனைப் போஷிப்பவன் இறைவன் என்பதையே ஹிபுறூக்கள் வலியுறுத்தினர். மத்திய கிழக்கில் ஏனைய சமய வழிபாடுகளில் கடவுள்கள்களை உலக நடவடிக்கைகள் போஷித்தன. யூதர்களின் கடவுள் அதற்கு மாற்றமாக மக்களைத் தனக்கு அடிபணியுமாறு கட்டளையிட்டது. மக்களினால் போஷிக்கப்படத் தேவையற்றதே கடவுள் என்ற கருத்தை அவர்கள் கடவுளில் தாபித்தனர்.

கிறிஸ்தவ கடவுள் கொள்கை

கிறிஸ்தவ நம்பிக்கை ஏசுகிறிஸ்த்துவின் வாழ்வுடனும் போதனை யுடனும் ஆரம்பிக்கிறது. கிறிஸ்தவம் அதன் பிறப்பில் யூத சமயத்துடன் போட்டியினை வெளிப்படுத்திய சமயமாகும். கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் பின்னர் முதலாவது கிறிஸ்தவ சமூகத்தினர் ஏசுநாதரின் கொள்கைகளான நோயாளரைக் குணப்படுத்தல், ஏழைகளுக்கு உண வளித்தல், கடவுளின் இராஜ்யம் வரவிருப்பதைப் போதித்தல் என்ற எளிய ஆரம்பநிலை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். எனினும் கிறிஸ்து தமது இறப்பின் பின்னர் மரித்தவர்களிடையே இருந்து எழுவார் என்ற வாக்கை அவர்கள் மக்களுக்கு அறிவிப்புச் செய்து வந்தனர்.

விரைவில் ரோமநாட்டின் கிறிஸ்தவ சமூகத்தினர் யூத வழி பாட்டாலயத்திற்கு மாற்றமாக தனித்துவமான வேறுபட்ட (சமய) நடவடிக்கைகள் பலவற்றை தாபித்துக் கொண்டனர். கிறிஸ்தவ உலகப் பார்வையை அவர்கள் படிப்படியாக உருவாக்கினர். ரோமரின் எதிர்ப்புக் களுக்கு மத்தியில் தமது நம்பிக்கைகளையும் வாழ்க்கை முறைகளையும் அவர்கள் போதித்தனர். இவ்வாறு கிறிஸ்தவத் தலைவர்கள் போதனை களின் வழியாக தேவாலயத்தை உருவாக்கினர். கடவுளினால் வெளிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

படுத்தப்பட்ட புதிய ஏற்பாடு என்ற ஆவணம் அங்கீகரிக்கப்பட்டது. அவர் புதிய ஏற்பாட்டின் (New Testement) மூலம் ஏசு ஊடாக இறைவனுக்கும் மனிதர்களுக்குமிடையில் ஒரு புதிய உடன்படிக்கையைச் செய்து கொண்டார். கிறிஸ்தவர்கள் தமது சமய மூல நூலாக யூதர்களின் பழைய ஏற்பாட்டை ஏற்றுக் கொண்டபோதும் தமது திருத்தூதரான ஜீஸஸில் இருந்தே தமது சமயத்தொடக்கத்தை நிலை நாட்டிக் கொண்டனர்.

இயேசு கிறிஸ்து கி.மு 5 நூற்றாண்டில் பலஸ்தீனத்தில் நாஸேரத் என்ற இடத்தில் பிறந்து ஜெரூஸலத்தில் 29 அல்லது 30 கி.பி. ஆண்டில் சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டார். ஜீஸஸின் வாழ்வும் போதனைகளும் நான்கு நற்செய்திகளாக (Gospeles) வகுத்துத்தரப்பட்டுள்ளன. அவற்றில் ஏசு ஏனைய மனிதர்களுடன் மனிதராக வாழ்ந்த வரலாற்று விபரங்கள் காணப்படுகின்றன. அதே நேரத்தில் அவரே ஆண்டவர் மெசையா, கடவுளின் புதல்வர் என்ற உறுதிமொழிகளும் அவற்றில் பதியப்பட்டுள்ளன.

கிறிஸ்தவயியலில் திரித்துவக் கோட்பாடு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. கடவுள் பற்றிய மூன்றுவித பரிமாணங்கள் அல்லது தன்மைகள் இங்கு காட்டப்படுகின்றன. கடவுள் முதலாவதாக ஒரு கடந்த நிலைப் பொருள், திருத்தூதுவர்களுக்கு விளக்கங்களை வழங்கியவர் என்ற யூதமத மரபுக்குரிய நம்பிக்கை. இரண்டவது, அவர் உலகில் கிறிஸ்துவாக மானிடவாழ்வில் இருந்துள்ளார். மூன்றாவது, தூயஆவி இது கடவுளின் ஆவி எனக் கூறப்படுகிறது.

கடவுள் தந்தையாகவும் மகனாகவும் உள்ளார் என்ற கருத்து இதன் பின்னணியில் இருந்து விளக்கப்படுகிறது. கடவுள் உலகை படைத்துப் பரிபாலிப்பதோடு கிறிஸ்துவாகவும் அவரே அவதரித்தார்.

யூதசமயத்தில் கடவுள் கேள்விக் கிடமின்றி அப்பாலைத்தன்மை வாய்ந்தது. கிறிஸ்தவத்திலும் முதல் நிலையில் இவ்யூதமரபு ஏற்கப் பட்டுள்ளது. ஆயினும் திரித்துவக் கோட்பாட்டில் இறைவன் மனுஷனானார் என்ற கிறிஸ்துவின் அவதாரம் பிரபல்யமானதாக உள்ளது. இறைவன் கிறிஸ்து ஆனதன் மூலம் தேவ சுபாவத்தோடு மனித சுபாவத்தையும் ஏற்றக் கொண்டதாகவும் ஏசுவில் மனிதனுக்குரிய, தேவனுக்குரிய இரு சுபாவங்கள் உண்டு என்றும் கிறிஸ்தவ நம்பிக்கை கூறுகிறது.

கிறிஸ்துவின் போதனையில் அவர் தேவனின் ராஜ்யம் அல்லது இறையாட்சி என்ற கருத்தை வலியுறுத்தினார். அவர் கூறிய கடவுளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பொருள் என்ன? அவரது போதனை சமய நோக்குடையது. அதில் அவர் நல்லொழுக்க போதனைகளை சம்பந்தப்படுத்தினார். கிறிஸ்த்து கடவுள் பற்றி புதிய செய்திகளைத் தந்தாரா? அவரது கடவுள் கருத்து புதியதாக இருக்கவில்லை. பழைய ஏற்பாட்டின் கடவுள் கருத்தே அவரால் முன்வைக்கப்பட்டது. தனது கடவுள் ஏப்றஹமின், ஐஸக்கின், யாக்கோபின் கடவுள் என்றே அவர் கூறினார். பழைய ஏற்பாட்டில் பேசப்பட்டிருப்பதைப் போலவே கிறிஸ்துவும் எமது ஆண்டவரே எமது கடவுள் எமது ஆண்டவர் (Lord) ஒருவரே என ஓரிறைவாதம் ஏசுவினால் வலியுறுத்தப்பட்டது. இறைவன் உலகைப் படைத்தவன் அல்லது இறைவன் படைப்பாளன் என்ற கருத்தும் கிறிஸ்தவத்தினால் மீளவும் கையாளப்பட்டது. மனிதனை யும் இறைவனே படைத்தான். அவனுக்கு முத்தியை வழங்குபவனும் இறைவனே என்றும் அது கூறியது.

கிறிஸ்தவ சமயத்தில் உயிர்தெழுதல் கோட்பாடு ஒரு முக்கிய இடத்தைப் பெறுகிறது. அப்போஸ்தலர்களில் ஒருவரான புனித பவுல் இயேசுவின் உயிர்தெழுதலை விவரிக்கும் போது ''கிறிஸ்து உயிர்தெழ வில்லையானால் எங்கள் தூதுரை பொருளற்றதாகும்" எனக் கூறியுள்ளார். திருச்சபையின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் இக்கோட்பாடும் முக்கிய பங்காற்றியுள்ளது.

கிறிஸ்தவக் கோட்பாட்டில் கடவுள் அந்நியோன்னியமாகவும், நெருக்கமாகவும் மனிதனுடன் காணப்படுகின்றான் என கூறப்படுகின்றது. இது யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கிடையே காணப்படும் வேறுபாடா கும். கடவுள் கருத்தை பரிசுத்த ஆவி அல்லது அன்பு வடிவமானவர் என இந்தக் கொள்கையினால் விவரிக்கப்படுகிறது. மனிதனுடைய செயல் களை கடவுள் கண்காணித்து விசாரணை மேற்கொள்கின்றார் என்பதும் நியாத்தீர்ப்பு நாள் ஒன்று உண்டு என்பதும் இது இவ்விரு சமயத்தவர் களுக்கிடையே காணப்படும் ஒற்றுமையாகும். யூத, கிறிஸ்தவ சமயத்தில் கடவுள் இருப்பு முற்றாக ஏற்கப்படுகின்றது. இது சம்பந்தமான ஐயப்பாடு, விவாதம் அங்கு இல்லை.

கடவுள் இருப்புப் பற்றிய நிரூபணங்கள்

அரிஸ்டோட்டில் முழுமுதற்பொருளை (Absolute) காரணம் எனக் கொண்டார். அவருக்கு உலகம் காரியம் ஆகும். காரியத்தை விடவும் காரணம் கால அளவில் முற்பட்டது. கடவுளுக்கும் உலகுக்குமான தொடர்பு அதன் கால அளவைவிட தர்க்க அளவினால் அரிஸ்டோட்டிலிய மெய்யியல் காட்டுகிறது. கடவுளும் உலகமும் காரணகாரியத் தொடர்புடையன அல்ல. காலத்தோடும் அவற்றிற்குத் தொடர்பில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அது அளவையியல் தொடர்பாகும். அளவையியல் ரீதியில் கடவுள் ஒரு அளவையியல் எடுகூற்று. உலகம் அதன் முடிபு. தரப்பட்ட கடவுள் என்ற எடுகூற்றிலிருந்து உலகம் என்பது தானாகப் பெறப்படுகிறது. அதாவது கடவுள் என்ற முதல்விதியில் இருந்து உலகம் அனுமானிக்கப் படுகிறது. அரிஸ்டோட்டிலின் இவ்வாதத்தை ஸ்ட்டேஸ் தரும் விளக்கத் தோடு நோக்கினால் முழுமுதல் என்பதை நேர அளவில் உலகத்திற்கான காரணம் மட்டுமே என்று கொண்டால் அது உலகத்திற்கான விளக்க மாகாது. காரணங்கள் எதனையும் விளக்குவதில்லை. ஆனால் உலகம் முழுமுதலிலிருந்து அனுமானிக்கப்படுமானால் (If the world be deducible from the absolute) உலகம் விளக்கப்பாட்டிற்குரியது. இங்கு தரப்படுவது நியாயம் அன்றிக் காரணம் அல்ல. அதாவது முடிவிற்கான நியாயத்தை (Reason) எடுகூற்று தொகுதித் தருவதனைப்போல இதை அணுகவேண்டும்.

முக்கூற்று நியாயத்தொடையின் முடிவுகள் எடுகூற்றுக்களில் இருந்து பெறப்படுகின்றன. எடுகூற்றுக்கள் முதலாவதாகவும் முடிவு இரண்டாவதாகவும் வருகின்றது. இங்கு பெறப்படுவது அளவையியல் திட்டமேயன்றிக் காலத்தின் திட்டம் அல்ல. வடிவம் (அதாவது முழுமுதல் வடிவம்) அது நேர ஒழுங்கில் முதலாவது அல்ல. அது தர்க்க ஒழுங்கின் வடிவம் அதாவது முழுமுதல் முதலாவது. மறுவார்த்தைகளில் கூறினால் முதல்விதியிலிருந்து உலகம் அனுமானிக்கப்படுகின்றது என்பது இதிலிருந்து பெறப்படுகிறது.

அரிஸ்டோட்டிலின் மெய்யியலில் கடவுள் absolute form ஆகும். வடிவம் உண்மையானது. கடவுள் மட்டும்தான் முழுமையான உண்மைத் தன்மையானது. கடவுள் மட்டும்தான் யதார்த்தம் அல்லது உள்பொருள். கடவுள் ஒரு கருத்து, சிந்தனை அதாவது அறிவுநிலை (Reason) இறுதிக்காரணம் என்றவகையில் கடவுள் தான் முழுமையான முடிவு. கடவுள் முழுமையான முடிவுப்பொருள் என்ற அர்த்தத்தில் (God is absolute perfection) கடவுள்தான் எல்லா இயக்கத்திற்கும் ஆதல் (becoming) களுக்கும் அடிப்படைக்காரணமாக உள்ளார். அசைவு அல்லது இயக்கம் தான் ஒரு பொருளின் இடைமாறும் காலப்பகுதியாகும். அதன் மூலமாகத்தான் அது முடிவை எய்துகிறது.

ஏனைய பொருள்களைப்போல, முழுமுதல் மாற்றங்களுக்குள்ளா வதில்லை. அதனால் அதன் வடிவம் இயக்கம் அற்றது. முதல் இயக்கி நிலையில் இருப்பது அதாவது இயங்கா இயக்கியாக இருப்பது அசைவற்ற ஒன்று. அதாவது முழுமுதல் (கடவுள்) இயக்கத்தில் இல்லை. இயங்கும் பொருள் ஒன்றினால்தான் இன்னொரு பொருள் இயங்குகின்றது. அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஒரு தொடர்நிலை. இயக்கங்களில் இருந்து இயக்கங்கள். ஆனால் இதனை, இயக்கம் மீண்டும் இயக்கம், மீண்டும் இயக்கம் என்று எவ்வளவு தூரம் தொடர்ச்சியாகக் கொண்டு செல்லலாம்? அவ்வாறு சென்றால் இயக்கம் விளக்கப்பட முடியாததாகிவிடும். அதனால் அரிஸ்டோட்டிலிய மெய்யியல் 'இயக்கமற்ற' நிலையைச் சிபாரிசு செய்கிறது. அதாவது இயக்கங்களைச் செயல்படுத்தும் இயக்கமற்ற இயக்கி, இயங்கா இயக்கி (Unmoved mover), இன்னொரு வகையில் முதல் இயக்கியாக காணப் படுகிறது. கடவுளை முதல் இயக்கி என அரிஸ்டோட்டில் கொள்வதாகக் கூறலாம்.

எவ்வாறாயினும் இவ்விடயம் அதன் வெளிப்படையான பொருளினாலன்றி அதாவது காலத்தின் அளவினாலன்றிப் பார்க்கப்பட வேண்டும். W.T. ஸ்ட்டேஸ் இதனைப் பொறிமுறைக் காரணம் எனப்பார்க்க வேண்டும் என்பார். இதன்படி முதலாவது பொறிமுறைக்காரணி (first mechanical cause) உலகிற்கு முன்னர் இருந்தது. கடவுள் முதற்காரணம் அல்ல. ஆனால் முதல் பொறியியற்காரணம் எல்லாவற்றிற்கும் முன்னதாக முதலாவதானதாக இருப்பதனால் கடவுள் முதல் இயக்கியும் இயக்கியு மாகும்.

அரிஸ்டோட்டில் கடவுளை சிந்தனையின் சிந்தனை எனக் கூறுகின்றார். சிந்தனை முழுமுதல் வடிவ நிலைப்பட்டது. அது சடவடிவம் அல்ல. அது அதன் சிந்தனையாக உள்ளது. கடவுள் சுய நனவுடையது என்ற கருத்தும் இதில அடங்கியிருந்தது.

புனித என்ஸலம்

மத்தியகால புலமைவாதம் (Medieaval scholasticism) பெரும் பாலும் அரிஸ்டோட்டிலின் மற்றும் பிளேட்டோவின் கடவுள்வாதக் கருத்துக்களை அதிக அளவு பயன்படுத்தியது. பிளட்டோவின் எண்ணக் கருவிற்கமைவாக புனித என்ஸலம் (St. Anselm) (1033-1109) கடவுள் இருப்புப்பற்றி சில நிரூபணங்களை முன்வைத்தார். இதற்கு முன்னரே புனித அகஸ்டீன் தமது கடவுள் கருத்தில் இதே வித விளக்கங்களைப் பேச ஆரம்பித்திருந்தார்.

அகஸ்ட்டினின் இறையியலில் நவபிளட்டோனிய கடவுள்வாதம் முக்கியம் பெற்றிருந்தது. கடவுள் முழுமுதல் தன்மையுடையது. அது அழிவற்றது. கடந்த நிலையானது. எல்லா வல்லமையும், எல்லா அறிவும், எல்லா நன்மையும் கொண்ட பூரண வடிவமாக கடவுள் கருத்து அவரால் விளக்கப்பட்டது. கடவுள் சுதந்திரமானவன், அவனது இயல்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மாறுவதில்லை. அது முழுமையானது, புனிதமானது, தீமைகளற்றது என்றும் அகஸ்ட்டீன் விளக்கினார்.

கடவுள் உலகை எதுவுமற்றதிலிருந்து படைத்தார். அவனது படைப்பாற்றல் நித்தியமானது, இடையூறின்றித் தொடர்வது. கடவுள் உலகைப் படைப்பதற்கு முன்னர் காலமோ, இடமோ இருக்கவில்லை. கடவுள் தன்னளவில் காலமற்றது இடமற்றது. ஆயினும் கடவுளின் படைப்புக்கள் நித்தியமானவை அல்ல. உலகிற்கு ஒரு தொடக்கம் இருக்கிறது. அவை மாற்றமடைகின்றன. இறுதியில் அழிகின்றன. சடத்தைப் படைத்தவரும் கடவுளே. வடிவத்தின் அளவையியல் மூலமாகச் சடம் இருக்கிறது. என்ஸலம் பிளட்டோனிய உள்பொருள்வாதத்தின்படி ஒரு நிரூபணத்தை முன்வைத்தார். இது ontological proof (உள்பொருள் வாத நிரூபணம்) என்று கூறப்படுகிறது. கடவுள் எண்ணக்கருவில் இருந்து கடவுள் இருக்கிறார் என்பதை அனுமானிப்பதே இந்நிரூபணமாகும். இதை விடவும் பெரிதாகவும் விசாலமாகவும் எதை எண்ணுவதற்கு முடியாதோ அதுவே கடவுள் கருத்து. அது பூரணத்துவமான ஒன்றைப் பற்றிய எண்ணமாகும்.

கடவுள் இல்லையாயின் இதைவிடப் பெரியதொன்றைச் சிந்திக்க முடியாது என்ற சிந்தனைக்கும் இடமில்லை. கடவுளே பரிபூரணமானது. பரிபூரணமானது என்ற கருத்தில் எல்லாம் உள்ளடங்குகின்றன. இருக்கின்றது அல்லது இருப்புடையது என்ற அம்சமும் அதில் உள்ளடங் கின்றது. எனினும் என்ஸலம் கூறும் இந் நிரூபணத்தின் தர்க்க ஒழுங்கில் தவறுகள் உள்ளன. அதாவது என்ஸலத்தின் முடிவு எடுகூற்றுக் களிலிருந்து பெறப்படவில்லை. நாம் ஒரு பொருள் இருப்பதாக எண்ணு கிறோம். அது இல்லாத ஒரு பொருளைவிடவும் பூரணமானது என்றும் கருதுகிறோம். இருக்கின்ற ஒரு விடயத்தை அல்லது பொருளைப் பற்றிய எண்ணம் இல்லாத ஒன்றைப்பற்றிய எண்ணத்தைவிட பண்புரீதியாக அதிக மதிப்புடையது. என்ஸலம் தமது வாதத்தின் மூலமாக கடவுள் இருக்கிறார் என்பதை நிரூபிக்கவில்லை. கடவுளும் அவரது இருப்பும் ஒன்று சேர்ந்ததாக இருக்கலாம், ஆனால், என்சலத்தின் வாதத்தில் அது ஒரு அவசியப் பண்பாக நிரூபணமாகவில்லை.

எண்ணத்தில் இருப்பது யதார்த்தத்தில் இருப்பதற்கான சாட்சியம் அல்ல. என்சலமின் இவ்வாதத்தை விமர்சித்தவர்களில் ஒருவரான கௌனிலோ பாதிரியார் அவ்வாதத்தில் இருந்த போலியை எடுத்துக் காட்டினார். மனத்தில் கடவுள் உள்ளார் என்ற கருத்தைப்போல மனத்தில் வேறு எந்த ஒரு பொருள் பற்றி எண்ணும் போதும் இது நிகழலாம். சிந்தித்தலின் மூலம் கடவுள் இருக்கிறார் என்ற நிரூபணத்தைப் பெற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

முடியுமாயின் ஒரு பரிபூரணமான தீவு ஒன்றைப் பற்றிச் சிந்திப்பதன் மூலம் அவ்வாறான தீவு உண்மையில் இருப்பதாக ஏற்கலாமா? என்ஸலத்தின் தர்க்கத்தின்படி அப்படி ஒரு தீவு இருப்பது சாத்தியமே.

புனித தோமஸ் அக்வைனஸ்

தோமஸ் அக்வைனஸ் (St. Thomas Aquinas) (பிற:1225) என்ஸலத்தின் உள்பொருள் நிரூபணத்தை நிராகரித்தார். அக்வைனஸ் அரிஸ்டோட்டில், அல்- பாரபி, அகஸ்டின் ஆகியோரின் கடவுள் இருப்புக் கோட்பாடுகளைப் பயன்படுத்தி கடவுள் இருப்பு நிரூபணங்களை முன்வைத்தார். (I) ஒவ்வொன்றும் இயக்கமுள்ளதாயின் அவற்றை இயக்க ஒரு இயக்கி வேண்டும். (II) இயற்கைப் பொருட்கள் சாத்தியமானவை அல்லது தற்செயலானவை. ஏதாவதொரு பொருள் இருக்கவேண்டும் என்பது கட்டாயமல்ல. ஆனால் மற்றொரு பொருள் (கடவுள்) உண்டு அது தற்செயலானதல்ல, கட்டாமானது, உண்மையானது. அதுதான் கட்டாயமாகத் தேவையானது. இவை இரண்டும் பிரபஞ்சவியல் வாதங்கள். (இதுபற்றிய மேலதிகவிளக்கங்களை அல்-பாரபியின் கடவுள் கோட் பாட்டில் காண்க ஆ-ர்) (III) ஒவ்வொரு செயலுக்கும் ஒரு காரணம் இருக்குமாயின் அதற்கு ஒரு முதற்காரணம் வேண்டும். அந்த முதற்காரணம்தான் பூரணத்துவம் வாய்ந்ததாக இருக்கவேண்டும். (IV) இயற்கையில் உள்ள அனைத்தும் முடிவை அல்லது நோக்கத்தைக் கொண்டுள்ளன. அப்படியானால் அதற்குவழிகாட்ட ஒரு அறிவு வேண்டும். நோக்கத்தைப் பிரதிபலிக்கும் பிரபஞ்சம் நோக்கத்தைத்தரக் கூடிய ஒருவர் இருக்கிறார் என்பதையே உணர்த்துகிறது. அவர்தான் கடவுள். இந்த இறுதி வாதங்கள் இரண்டும் அக்காலத்தில் கிரேக்கத்தில் சாதாரணமாக அறியப்பட்டிருந்தன.

ஆகவே கடவுள் பரிபூரணத்துவம் உள்ளவர். முதலும் முடிவு மானவர். பிரபஞ்சத்தின் காரணம் கடவுளே. கடவுள் முழுமுதல், பூரணத்துவம் வாய்ந்தது. கடவுள் உலகைப் படைத்தார். சடத்தையும் படைத்தார். இவற்றை வெறுமையில் இருந்து படைத்தார். கடவுள்தான் எல்லாவற்றிற்குமான காரணம் என்றால் சடத்திற்கும் வடிவத்திற்கும் அவரேதான் காரணம் என்று அக்வைனாஸின் கடவுள் கொள்கை கூறுகிறது.

பின்னர் டேர்க்கார்ட் இவற்றைப் பயன்படுத்தி கடவுள் இருப்பு நிரூபணங்கள் சிலவற்றை முன்வைத்தார். இதுபற்றி பேர்ட்ரண்ட் றஸல் கூறும் போது டேக்கார்ட்டின் இந்த நிரூபணங்கள் மத்தியகால புலமை வாதத்திற்குரியவை என்றும் இவற்றை டேக்கார்ட்டைவிட லைப்னிஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

செம்மையாகவும் தர்க்கரீதியாகவும் பயன்படுத்தியுள்ளதாகக் குறிப்பிடு கிறார். றஸலின் கருத்தில் கடவுளின் இருப்புப்பற்றிய பௌதிகவதீத நிரூபணங்களுக்கு நீண்ட வரலாறு உள்ளது. இது பிளேட்டோ, அரிஸ்ட் டோட்டிலிலிருந்து ஆரம்பமாகிறது. மத்தியகால புலமைவாதிகளால் அவை வடிவமைக்கப்பட்டன. உள்பொருள்வாதத்தைக் கண்டு பிடித்தவர் என்ஸலம்.

பழைய ஏற்பாட்டின் கடவுள் ஆற்றல் மிக்கவர் (God of Power). புதிய ஏற்பாட்டின் கடவுள் அன்பின் கடவுள் (God of love). ஆனால் அரிஸ்டோட்டில் முதல் கல்வின் வரை கடவுள் அறிவுடன் இணைக்கபட்டது கடவுள் இருப்புப்பற்றி லைப்னிட்ஸ் (1646-1716) நான்கு வாதங்களை முன்வைத்துள்ளார்.

அ. உள்பொருள்வாதம்
ஆ. பிரபஞ்சவியல்வாதம்
இ. முடிவற்ற உண்மைகள் வாதம்
ஈ. முன்னரே நிர்மாணிக்கப்பட்ட இசைவு வாதம். அல்லது வடிவமைப்பு (design) வாதம்

உள்பொருள்வாதம் இருப்பிற்கும் சாரத்திற்கும் இடையிலான வேறுபாட்டில் தங்கியுள்ளது. சாதாரண பொருளில் சாரம் இருப்பினைத் தருவதில்லை. கடவுளைப் பொறுத்தவரை கடவுள் மிகவும் பரிபூரண மானவர். என்ஸலம், டேக்கார்ட் போன்றவர்கள் சாரத்திலிருந்துதான் இருப்பினைத் தீர்மானிக்கின்றனர் கடவுள் எல்லாவற்றையும் பூரணமாகப் பெற்றிருப்பதனால் சாரத்தில் இருப்பு உள்ளடங்குகிறது என்று அவர்களின் வாதம் கூறுகின்றது. லைப்னிட்ஸ் இந்த நிரூபணத்தை முழுமையாக ஏற்றுக் கொள்ளவுமில்லை, முழுமையாக நிராகரிக்கவுமில்லை. இந்த நிரூபணம் கடவுள் மிகவும் பரிபூரணமானவர் எனக் கூறுகிறது. எல்லாப் பரிபூரணங்களும் என்று கூறப்படுவதனால் எல்லாப் பூரணங்களும் கொண்ட ஒன்று இருக்கலாம். ஆகவே அவன் இருக்கிறான். ஏனெனில் பல்வேறு பூரணங்களில் இருப்பும் ஒன்றாகும். காண்ட் இவ்வாதத்தை ஆதரிக்க வில்லை. (பரிபூரணத்தில்) இருப்பு பயநிலை அல்ல என்றார்.

காண்ட்டின் நிராகரிப்பு

பொதுவாக பாரம்பரியக் கடவுள் இருப்பு வாதங்கள் நான்கு, ஐந்து என்றிருந்தபோது காண்ட் அவற்றை மூன்றாகக் குறைத்தார். அவருடைய கருத்தில் மூன்று நிரூபணங்கள்தான் இதுவரை முன்வைக்கப் பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

1. The Physic- Teleological proof - இயல்திட்ட நிரூபணம்
2. The Ontological proof - உள்பொருள் நிரூபணம
3. The Cosmological proof - பிரபஞ்சவியல் நிரூபணம்

பூரணத்துவத்தில் எல்லாம் உள்ளடங்கியுள்ளது. அதில் இருப்பும் அடக்கம் என்று முன்வைக்கப்பட்ட கருத்தில் காண்ட் இருப்பு அடங்காது என்றார். வெற்று எண்ணக்கருவிற்கு இருப்பு இல்லை. நாமாக எழுந்த மானமாக ஒரு எண்ணத்தை வெளிப்படுத்தி அதனை இருப்புடன் தொடர்புபடுத்த முடியாது. பிரபஞ்சவியல் நிரூபணத்தின் முடிபின்படி கடவுள் என்ற பரிபூரணத்தில் இருப்பும் உள்ளதென்ற முடிவுக்கு வருகிறோம். நாம் எண்ணுவதனால் மட்டும் ஒரு முழுமுதற் பொருள் இருக்கும் என்றும் அதற்கு இருப்பு உள்ளதென்றும் முடிவு கூற எமக்கு (தர்க்க ரீதியான) உரிமை இல்லை. இவ்வாறு கூறுவது உள்பொருள் வாதத்தையே பிரதி பலிக்கிறது.

இந்த வாதம் தற்செயலிலிருந்து காரணத்திற்கு மாறுகின்றது. இத்தகைய அனுமானத்திற்கு தோற்றப்பாட்டு உலகத்திற்கு வெளியே அர்த்தம் எதுவுமில்லை. பிரபஞ்சவியல் நிரூபணத்தில் கடந்த நிலை அனுபவம் பிரயோகிக்கப்பட்டுள்ளது. அது விலக்கப்பட்ட ஒன்று.

எல்லா சாத்தியமான காரியங்களுக்கும் காரணம் இருப்பது போல கடவுள் இருக்கிறார் என்று கருத முடியுமாயினும் அவ்வாறு கருதுவதற்கு அவ்வாறானதொரு பொருள் (கடவுள்) கட்டாயமாக இருக்கிறது என்று கூறுவது மொழி ரீதியில் தகைமை பெற்ற (ஏற்கக்கூடிய) கருத்தல்ல. காண்டின் கருத்தில், தோற்றப்பாட்டுலகின் தற்செயல் தன்மைக்கும் (contingency) கடவுளின் கட்டாய இருப்புப்பற்றிய கருத்திற்கும் இடையில் உள்ள ஆழமான பிளவினை மனித அறிவினால் ஒருபோதும் பாலமிட்டு ஒன்றிணைக்கமுடியாது.

றஸலின் கருத்தில் லைப்னிஸின் முடிவற்ற உண்மை (Eternal truth)க் கோட்பாட்டை விவரிப்பது சற்றுக் கடினமானது. இதை றஸல் ஒரு எளிய உதாரணத்தின் மூலம் விளக்குகிறார். மழை பெய்கிறது என்பது சில வேளைகளில் தவறு, சிலவேளைகளில் சரி. ஆனால் இரண்டும் இரண்டும் நான்கு (2x2=4) என்பது எப்போதும் உண்மை. எல்லாக் கூற்றுக்களும் அவற்றின் தொடர்பைப் பெற்றிருப்பது சாரத்துடன்தான் இருப்புடன் அல்ல என்பது ஒன்றில் எப்போதும் உண்மை அல்லது உண்மை அல்ல. எப்போதும் உண்மை என்று கூறப்படுவன முடிவற்ற ஒன்றாகும். இந்த வாதத்தின் சாரம்: உண்மைகள் உள்ளத்தின் உள்ளடக்கத்தின் பகுதியாகும். முடிவற்ற உண்மை முடிவற்ற மனத்தின் அதாவது eternal mind இன் உள்ளடக்கமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

லைப்னிஸ் கருத்தில் தற்செயல் உண்மைகளுக்கான அடிப்படை நியாயத்தை கட்டாய உண்மையிலிருந்து பெறவேண்டும். இதன் வாத வடிவத்தை றஸல் கூறும் ஒழுங்கில் சுருக்கி பின்வருமாறு தரலாம்: இது பிரபஞ்சவியல் வாதமாகும். தற்செயல் உலகிற்கு நியாயம் உண்டு. இந்த நியாயம் (Reason) அது அதனளவில் தற்செயலானது அல்ல. அதை முடிவற்ற உண்மைகளில்தான் காணவேண்டும். நியாயம் இருக்குமாயின் முடிவற்ற உண்மையும் இருக்கும். ஆனால் அவை கடவுளின், மனத்தின சிந்தனையில்தான் இருக்கும்.

அல்- பாரபியின் கடவுள் கொள்கை

இப்பிரச்சினையை ஆராய்ந்த மத்தியகால முஸ்லிம் மெய்யியலாளர்களில் ஒருவரான அல்பாரபி (870-950) பின்வருமாறு கூறுகிறார். கட்டாயத்தையும் (Necessary), தற்செயலையும் (Contingents) விளக்கும் போது கட்டாய இருப்புள்ளது என்பது தானாகத் தனக்குரிய இருப்பைப் பெற்றிருக்கும் ஒன்று. அதற்கு இருப்பு இல்லை என்பதைச் சிந்திக்கவும் இயலாது. அவ்வாறான சுயத்தில் இருப்பைக் கட்டாயமாகப் பெற்ற பொருள் கடவுள் ஒன்றுதான். இதிலிருந்துதான் உலகில் உள்ளவைகள் அனைத்தும் அவற்றிற்கான இருப்பைப் பெற்றுக் கொள்கின்றன.

அல்பாரபியின் கடவுள் இருப்புப் பற்றிய இக்கருத்தை பின்வருமாறு விவரிக்கலாம். எமது மனத்தில் உள்ள ஏதாவது பொருள் பற்றிய கருத்து அப்பொருளின் இயல்பை உறுதி செய்கிறது. அவர் உள் பொருளை (being) இரண்டாக வகுக்கிறார் (1) கட்டாயத்தன்மை (2) மற்றொன்றைச் சார்ந்திருக்கின்றமை (தற்செயல்). கட்டாயத்தன்மை தானாக இருப்புடையது. மற்றொன்றில் அது சார்ந்ததல்ல. தற்செயலுக்கு கட்டாயத்தன்மை அவசியத் தேவையாகும். சாரம், இருப்பு என்பவைகளை அல்லாரபி பின்வருமாறு விளக்குகிறார்: சாரம் (essence) என்பதுதான் ஒரு பொருளின் இயல்பைக் காட்டுகிறது இருப்பில் இருப்பு என்பது சாரத்தின் உண்மைத் தன்மை அல்லது actuality யாகும். அதனால் இருப்பு ஒருவகையானது. சாரம் இன்னொரு வகையானது. சாரமும் இருப்பும் ஒரு பொருளாயின் நாம் ஒன்றில்லாது மற்றொன்றை எண்ணிப் பார்க்க இயலாது போகும். படைக்கப்பட்ட பொருள்களின் இருப்பு என்பதில் சாரம் கட்டாயமானதாகக் காணப்படுவதில்லை. அதனால், அதன் சாரத்தை அது இருக்கின்றதா இல்லையா என்று அறியாமலேயே எண்ணிப் பார்ப்பது சாத்தியம். ஆனால், இன்னொரு பொருள் இருக்கிறது. அதன் சாரம் அதன் இருப்புடன்தான் சார்ந்துள்ளது. அந்தப் பொருள் கடவுள். கடவுள் ஏனையவற்றிலிருந்து அதன் சுய இருப்பினாலும் அதன் கட்டாய உள்பொருள் தன்மையினாலும் அதுவே தூய உண்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நிலையைப் பெற்றிருப்பதனாலும் அது பரிபூரணத்துவம் வாய்ந்ததாகவும் உள்ளது. ஏனையவற்றுக்கான இருப்பிற்குக் கட்டாய உள்பொருள்தான் காரணமாக உள்ளது. அந்த உள்பொருள்தான் முழுமுதற்பொருளுமாகும். இதுவே இருக்கின்ற பொருள்களுக்கான முதல் கோட்பாடாகவும் உள்ளது. அதன் மூலம், இருக்கின்ற பொருள்களின் அல்லது இருப்புடைய அனைத்தினதும் முதற்காரணி இதுவாகும். அதுதான் ஏனைய அனைத்தை யும் விட பூரணத்துவப் பொருளுமாகும்.

அல்பாரபியின் இந்த தர்க்கரீதியான விளக்க ஒழுங்கு கடவுள் பற்றிய பிரபஞ்சக்கோட்பாட்டிற்கான பிரதான வாதங்களாக அமைந்துள்ளன. இவை என்ஸலத்திற்கு முன்னரே முன்வைக்கப்பட்ட வாதங்களாகும். அல்பாரபியின் மூல நூல்களைப் பயன்படுத்தி அவரது பௌதிகவதீத மெய்யியலை ஆராய்ந்த அலி மஹ்தி கான் என்பவர் மத்தியகாலச் சிந்தனையாளர்களான அல்பேர்ட்டாஸ், மெக்னஸ் போன்றோர் பாரபியின் இவ்வாதத்தைப் பயன்படுத்தியுள்ளனர் என்றும் புனித என்ஸலமும் அவரது நூல்களில் இதனை பயன்படுத்தியுள்ளதாகவும் கூறியுள்ளார். அதனால் இவ்வாதத்தின் மூலச்சிந்தனையாளராக அல்பாரபியே குறிப்பிடுவது பொருத்தமானது.

அல்- பாரபி முன்வைத்துள்ள கடவுள் இருப்பு நிரூபணங்களாவன:

(அ) இயக்க நிரூபணம்
(ஆ) செயலாற்றலுள்ள காரணகாரிய நிரூபணம்
(இ) மற்றொன்றைச்சாராமை (தற்செயல்) நிரூபணம்.

(அ) இவ்வுலகில் பொருள்கள் இயங்குகின்றன. ஒரு பொருளின் இயக்கத்திற்கு இன்னொரு இயக்கி வேண்டும். இது ஒன்றினைத் தொடர்ந்து மற்றொன்றினைத் தொடர்ந்து, செல்கிறது. இது இவ்வாறு எல்லையற்றுச் செல்லமுடியாது. ஆகவே இயங்கா இயக்கி ஒன்று வேண்டும். அதுவே கடவுள்.

(ஆ) எண்ணமுடியாதவை சாத்தியமற்றவை. செயலாற்றலுள்ள காரண காரியத்திற்கு அப்பால் காரணகாரியமற்ற செயலாற்றும் காரணி இருக்க வேண்டும். அதுவே கடவுள்.

(இ) தற்செயற்பொருள் ஒன்று அதன் இருப்பினை இன்னொன்றிலிருந்து பெறுகின்றது. கட்டாய இருப்புடையது அது தானாக இருக்கிறது உலகம் இருக்கிறது. ஆனால், அதன் இருப்பு இன்னொன்றினால் தான் சாத்தியமாகிறது. அதாவது அது அதற்குரிய இருப்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பெறவில்லை. அந்த விடயம் தான் அல்லது பொருள்தான் உலகின் இருப்பிற்கான காரணம் ஆகின்றது. அப்பொருள் தற்செயலான ஒன்று அல்ல. தற்செயலான பொருள் அதன் இருப்பிற்குச் சுயகாரணம் ஆவதில்லை. இவ்வாறு ஒரு தற்செய லான பொருளுக்கு இன்னொரு பொருள் காரணமாகிறது. அதற்கு இன்னொரு பொருள் காரணமாகிறது. இவ்வாறு, இறுதியில் ஒரு கட்டாயப் பொருளுக்கு வந்து சேர்கிறோம். அதுதான் அதற்கு கென்ற சுயஇருப்பினைப் பெற்றுள்ள கடவுளாகும்.

சயித்ஷைக் என்ற ஆய்வாளர் இந்த பிரபஞ்சவியல் வாத ஒழுங்கைப் பின்வருமாறு தருகிறார்: இந்த மூன்று நிரூபணங்களிலும் அல்-பாரபி நேர்விலிருந்து அல்லது காரணியிலிருந்து ஆரம்பிக்கிறார். விதிகளைப் பயன்படுத்துகிறார். இறுதியில் முடிவினை அடைகிறார். 'எது இயங்குகிறதோ அது மற்றொன்றினாலேயே இயக்கப்படுகிறது. காரியம் காரணத்திலிருந்து நிகழ்கிறது. தற்செயற் பொருள் கட்டாயப் பொருளிலிருந்து நிகழ்கிறது. இவ் ஒவ்வொன்றிலும் கிடைக்கப்பெறும் முடிவு கடவுள் இருக்கிறார் என்பதாகும். அல்-பாரபியின் இறையியற் பௌதிகவதீதவாதம் கடவுளை அறிய முடியுமா என்ற கேள்வியில் இருந்து ஆரம்பிக்கிறது. கடவுள் அறியப்படக்கூடியதா அல்லது அறியப்பட முடியாததா என்பது அவரது இறையியலின் அடிப்படைக் கேள்வியாக இருந்துள்ளது. ஒரு கட்டத்தில் இதற்கு பின்வருமாறு ஒரு விடையைத் தருகிறார்: 'கடவுள் அறியப்படக் கூடியதும் அறியப்படமுடியாததும் ஆகும். அது பிரத்தியட்சமானதும் மறைவானதும் மனத்தினால் அறியக் கடின மான ஒன்றுமாகும். மனிதனின் அறிவு மட்டுப்படுத்தப்பட்டதாக இருப்பத னால் மனிதன் கடவுளை அறிவது கடினமானது.'

கடவுளின் பண்புகளைக் கூறும்போது கடவுள் எளிமையானது. எல்லாவகைக் கூட்டு அல்லது இணைப்புக்களிலிருந்தும் அது சுதந்திர மானது. கடவுளுக்குப் பௌதிகக் கூறுகளும் கிடையாது. முடிவற்ற பொருள் அழியக்கூடிய ஒன்றின் கூட்டினைப் பெறுவது அதன் சுய பண்புக்குப் புறம்பானதாகும். பௌதீகக் கூட்டு இல்லாதது போல் பௌதிகவதீதக் கூட்டும் கடவுளில் கிடையாது. அதனால் சாரமும் இருப்பும் என்ற கூட்டு கடவுளில் இல்லை. அது எல்லாவற்றையும் கடந்தது. எல்லாவற்றிற்கும் ஆதாரமானது.

கடவுள் ஒன்று மட்டுமே. இரு தன்மைகளுக்கு அதில் இட மில்லை. கடவுள் எளிமையானது என்பதன் தர்க்கரீதியான பொருள் அது மற்றொன்றுடன் தொடர்பற்று சாராது இருக்கிறது என்பதே. இறைவன் எல்லாவற்றையும் உள்ளடக்கியுள்ள முழுமையான ஆற்றலாகும். அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எல்லாவற்றையும் உள்ளடக்கிய பேராற்றலாயின் அது முடிவற்றதும் முழுமுதலுமாகும்.

இமாம் கஸ்ஸாலி

அல்-கஸ்ஸாலி, மேற்கத்திய மரபில் அல்கஸல் (Algazal) என்று கூறப்படுகிறார். இவர் வடகிழக்கு ஈரானில் 1059ல் பிறந்தார். அல்கஸ்ஸாலி கடவுள் நித்தியமானது, முடிவற்றது எனக் கூறுகிறார். கடவுள் முழுமுதல் ஐக்கியத்தன்மை கொண்டது, அப்பாலைத் தன்மை யானது. கடவுள் மிக உயர்வானது, அதன் சாரம் சிந்தனையாகும். கடவுள் எதனையும் சுதந்திரமாக எண்ண, செயற்படுத்தச் சக்திபெற்றது. அதனுடைய அறிவு பூரணமானது, கால இட வரையறைகளைக் கடந்தது.

கடவுள் தற்செயலானது (Accident) அல்ல. தற்செயலானது என்றால் அது பருப்பொருள் தன்மையை உடையதாக இருக்க வேண்டும். தற்செயல் அம்சம் கொண்டவை, தமது இருப்பிற்கு வேறொன்றில் தங்கியிருக்கும் தேவை உள்ளவை. கடவுள் தற்செயலானது அல்ல. அதனுடைய இருப்பு கட்டாயமானது என்று கஸ்ஸாலி சில வாதங்களின் மூலமாக நிரூபிக்கிறார். இதனை (அரிஸ்டோட்டிலிய) முக்கூற்று நியாயத் தொடையில் கூறுவதாயின்.

எல்லா தற்செயலானவைக்கும் பருப்பொருள் தொடர்பு உண்டு.
கடவுள் பருப்பொருளுடன் தொடர்புட்ட தல்ல
ஆகவே கடவுள் தற்செயலானது அல்ல.

கடவுளின் இருப்பு கஸ்ஸாலியின் கருத்தில் அதன் சாரத்தினால் நிகழ்வது. அது பருப்பொருள் தொடர்பற்றது. ஒவ்வொரு பருப்பொருளும் தொகைரீதியாக அல்லது அளவுரீதியாக பகுதிகளாகப் பிரிக்கப்படக் கூடியவை. அவற்றிற்குரிய பாகங்களினால் அவை கட்டமைக்கப் பட்டுள்ளன. எல்லா மொத்தத்தன்மை கொண்டவையும் வெவ்வேறு பாகங்களினாலானவை. இத்தன்மை கடவுளுக்கில்லை. கடவுள் தூய உள்பொருள். அதனுடைய சாரம் பாகங்களினாலானதல்ல. பருப் பொருளுக்கு சடமும் வடிவமும் உள்ளது. அதனால் அது அளவு ரீதியான பாகங்களையுடையது. சடத்தில் வடிவம் அமைகிறது. வடிவமின்றி சடம் தன்னைப்படைக்க அல்லது வெளிப்படுத்த முடியாது. கடவுள் சடமும் வடிவமும் கொண்டதல்ல.

அல்-கஸ்ஸாலி, கடவுளின் ஒருமைப்பாட்டை (Unity) வலியுறுத்து கிறார். கடவுள்தான் அதன் இருப்பிற்கான முழுக்காரணமும் எல்லாப் பொருட்களின் இருப்பிற்குமான காரணமும் கடவுள்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்னுசீனா, அவ்ரோஸ் போன்ற (மத்தியகால) முஸ்லிம் மெய்யியலாளர் மற்றும் கிரேக்க மெய்யியலாளர் கடவுள் இருப்பினை நிறுவுவதற்காகவும் நியாயத்தையும் அளவையியலையும் பயன்படுத்தி வந்ததை அல்கஸ்ஸாலி ஏற்றுக் கொள்ளவில்லை. கடவுள் இருப்பு, கடவுள் மறுப்பு இரண்டிற்கும் நியாயத்தையும் தர்க்கத்தையும் கிரேக்க மெய்யியலாளர் பயன்படுத்தி இருந்தனர். கடவுள், ஆன்மா மற்றும் அவை போன்றவற்றை நியாயத்தினாலும் தர்க்கத்தினாலும் நிரூபிக்கவோ மறுக்கவோ முடியாது என்று அவர் கூறினார். அவதானம், உள்ளுணர்வு, சிந்தனை ஆகியவற்றினால் தான் கருத்து வடிவான விடயங்களை (கடவுள், ஆன்மா) உணரமுடியும். இந்த விடயங்களில் கஸ்ஸாலி இமாம் உள்ளுணர்வுக்கு முக்கிய இடம் தந்தார்.

பொதுவாக மத்திய காலப்பகுதியின் இயல்பை ஆராயும்போது குறிப்பாக கடவுளின் பண்புகள் தன்மைகள் அனைத்திலும் முழுமையாக மனிதத் தன்மையிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் இறையியல் கருத்துக்கள் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டன. குறிப்பாக எல்லாம் வல்லவன். எல்லாம் அறிந்தவன். எங்கும் நிறைந்தவன் போன்ற கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இந்தப் பண்புகளுக்கு ஏனைய கடவுள் இருப்பு பற்றி விளக்கிய காலப் பகுதியை விட முன்னுரிமை வழங்கப்பட்டன. கடவுள் பற்றிய நம்பிக்கை ஒரு பாரம்பரியத் தன்மையையும், ஒரு விசுவாசத் தன்மையையும் அடிப்படையாக கொண்டது. பொதுவாக இதனை நம்பிக்கையாக, பாரம்பரியமாகக் கொண்டதால் கல்வியும் நாகரிகமும் வளரவளர மனிதனில் சில பிரிவுகள் எழுந்தன. நவீன உலகத்திற்காக எந்த வகையில் கடவுளை ஆராயலாம். அதனை என்னவென்று அறியலாம் என இப்பிரிவினர் ஆராய முனைந்தனர். இதன் விளைவாக கடவுளின் இயல்பையும் இருப்பையும் பற்றிய நிரூபணங்களை வெளியிடச் சிலர் முன்வந்தனர். கிரேக்க மற்றும் மத்தியகால வாதங்களைப் பயன்படுத்தி இந்நிரூபணங்களை நவீன மெய்யியலில் பயன்படுத்தினர்.

கடவுள் பற்றிய வியாக்கியாணத்திற்கும், அவர் உள்ளார், என்ற நிரூபணத்துக்குமிடையே தொடர்புள்ளது. கடவுள் என்ற எண்ணக்கருத்து அல்லது கடவுளின் இயல்பு என்பவற்றிற்கான தற்கால முன்னோடிகள் ஏற்கனவே கூறிய எல்லாம் வல்லவன், எல்லாம் அறிந்தவன் என்பன வற்றின் மூலமாக கடவுளின் இருப்பை நிலைநாட்ட அல்லது ஆராய முனைந்தனர். அனுபவ அறிவினால் விளக்கப்படமுடியுமா? தர்க்கத்தின் துணை இதற்கு இன்றியமையாததா? என்ற கேள்விகள் எழும்போது அவை இயல்பான மெய்யியல் பிரச்சினைகளுக்கு இட்டுச் செல்வதாகக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உள்பொருள்வாதம்

முன்னர் விளக்கியவாறு மத்திய காலத்தில் அல்-பாரபி, என்ஸலம் போன்றவர்களால் இவ்வாதம் முன்வைக்கப்பட்டது. இந்த வாதத்தை பயன்படுத்திய பல சிந்தனையாளர்கள் இதிலிருந்து பல வாத வடிவங்களை உருவாக்கினர். மனித மனதில் விளங்குகின்ற (கடவுள்) கருத்தைப் பயன்படுத்தி கடவுள் இருக்கின்றார் என்பதை நிருபிக்க இவ்வாதம் முற்படுகின்றது. இதை என்ஸலம் பின்வருமாறு கூறுகின்றார். ''எமது மனதில் முழுமைத் தன்மை வாய்ந்த ஒன்று இருக்கின்றது. அதுதான் கடவுள் என்ற கருத்து''. அதாவது, அதைவிடப் பெரிதாக வேறு எதையும் நாம் நினைத்து பார்க்க முடியாதோ அதுதான் கடவுள். இப்போது இது மனித மனதில் உள்ளது. எந்த ஒரு மனிதனாலும் இதனை மிக எளிதாக சிந்திக்கக் கூடிய வழியிருக்கின்றது. குறைந்த பட்சம் அதனை விட உயர்வானது ஒன்றுமில்லை எனச் சிந்திக்கலாம். ஆனால் இதைவிடப் பெரியவொன்றை எண்ணமுடியாது. அது அவரது விளக்கத்தில் கருத்தில் மாத்திரம் தான் உள்ளது. கடவுள் எமது மனதில் வெறும் கருத்தாக மட்டும் இருந்தால் நாம் அதைவிடப் பெரிய தொன்றைச் சிந்திக்கலாம். கடவுள் மனதைச் சார்ந்தது அல்ல அவ்வாறு யதார்த்தத்தில் ஒன்று உள்ளது எனும்போது அதைவிடப்பெரியதான ஒன்றைச் சிந்திப்பது எவ்வாறு, மீன்வடிவிலான மங்கை ஒருத்தியைக் கற்பனை செய்யலாம். அது இருப்பதாகவும் கூறலாம். ஆனால் அது உண்மையில் இருக்கிறதா இல்லையா என்பதை நிரூபிக்க முடியாது. பொருள் உண்மையில் இருக்கிறது என்பதில்தான் இருப்பு என்பதன் நிரூபணம் சாத்தியம். ஆகவே மனிதனால் அதனை விடப் பெரிய ஒன்றை உருவாக்க முடியாது. என்று என்ஸலம் எடுத்துக் கூறிய வற்றை பின்வருமாறு வாதவடிவில் தரலாம்.

1. கடவுள் என்ற பதம் மூலம் ஏற்படும் விளக்கம் என்னவெனில் எது அதைவிடப் பெரிதாக இருக்க முடியாதது என்னவோ அதுவே கடவுளாகும்.

2. கடவுள் இருப்பு என்ன விதத்தில் நோக்கினாலும் அதைவிட பெரியதாக நினைக்க முடியாதோ அந்த நினைவு மனிதனிடம் இருக்கின்றது. ''ஒரு பூரண பொருளைப் பற்றிய ஞானம் கடவுளாகும்''

3. எதைவிடப்பெரியதாக எண்ண முடியாதோ எது எங்களுக்குள் உள்ளதோ அது யதார்த்தத்தில் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

4. அந்தப் பொருள் மனிதனுடைய யதார்த்தத்தில் மட்டும் எனக் கொண்டால் அதைவிடப் பெரியதொன்றை நினைக்க முடியாதோ அது அதனைவிடப் பெரியதாக இருக்க முடியாது.

5. எதைவிடப் பெரியவொன்றை சிந்திக்க முடியாதோ அது உயர் தரத்தில் காணப்படுகின்றது.

எனவே இந்த வாத அமைப்புக்கள் ஒரு கட்டுப்பாட்டைக் கொண்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. இந்த வாதங்களைப் பற்றி பின்வரும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. கடவுளை பற்றி நாம் அறிவதற்கு அவர் மனதில் இருக்கின்றார் என்பதைப் பற்றி அல்ல. அவர் வெளியில், உள்ளார் என்ற கருத்து முக்கியமானதாகும். என்ஸலம் கூறுவது போல கடவுள் ஒரு சிந்தனையென்றால் கடவுள் என்பதைவிட (அது எவ்வளவு பெரியதாக இருந்தாலும்) அதைவிட பெரிய சிந்தனையை மனதால் உருவாக்க முடியும். அப்படியானால் நாம் கடவுள் பற்றி கூறும் வரைவிலக்கணத்திற்கு இது முரண்படுகின்றது. அவன்தான் பெரியவன் என்பதிலிருந்து முரண்படுகின்றது. இது மனதில் உள்ள கருத்து மட்டுமல்ல. உண்மையில் அது சுதந்திரமாக இருக்கக் கூடியதாக இருக்க வேண்டும். சிந்திக்க முடியாத அல்லது சிந்தனைக்கு எட்டாத ஒரு உள்பொருளைப் பற்றிச் சிந்திக்க முடியும். ஆனால் அதற்கு பிரத்தியேகமான, சுதந்திரமான இருப்பு சாத்தியமா? அது எங்கே உள்ளது.? அது எவ்வாறு உள்ளது? நாம் எண்ணத்தில் நினைத்ததை உறுதிப்படுத்த முடியுமா? என்பது பிரச்சினைக்குரியது. ஏனெனில் நாம் பல்வேறு விடயங்களைப் பற்றி சிந்திக்க முடியும். மனிதப் பெண்மீனின் தலையையும் யானையில் மனித முகத்தையும் சிந்திக்க முடியும். ஆனால் அவை எல்லாம் இருக்கின்றன என்று நிரூபிக்கமுடியாது.

பிரபஞ்சவியல்வாதம்

போதுமான காரணம் என்ற கோட்பாட்டை அடிப்படையாக கொண்டு இவ்வாதம் அமைந்துள்ளது. அதாவது ஒவ்வொரு நிகழ்வுக்கும் ஒவ்வொரு காரணம் உண்டு என்பதோடு உலகம் என்பது ஒரு நிகழ்வு, காரியம். ஆகவே இந்த நிகழ்வுக்கு, காரியத்திற்கு ஒரு காரணம் உண்டு என்ற அனுமான முறையை இது பயன்படுத்துகின்றது. நிகழ்வுகள் ஒன்றின் பின் ஒன்றாக நிகழ்கின்றன. இந்த நிகழ்வுகள் அனைத்துக்கும் ஒரு காரணம் இருக்க வேண்டும் என்று இந்த வாதம் கூறுகின்றது.

இவ்வாதத்தை பற்றி பிளேட்டோ, அரிஸ்டோட்டில், தோமஸ் அக்குவைனாஸ், டேக்கார்ட், லைப்னிஸ், காண்ட் உட்பட, சமகால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உரோம கத்தோலிக்க கோட்பாட்டாளர்களும், இஸ்லாமியக் கோட்பாட்டாளர்களும் இந்த எண்ணக்கருவுக்கு முக்கியத்துவம் தந்துள்ளனர்.

பொதுவாக, சமகாலத்தில் இவ்வாதம் பெருமளவில் பேசப்படுகிறது. நாம் வாழும் இந்த உலகமானது கடவுள் இருக்கின்றார் என்பதற்கு நல்ல சான்றாக இருக்கின்றதென இவ்வாதத்தை ஆதரிப்பவர்கள் கூறுகின்றனர். அதிலும் இயற்கை இறையியலாளர்கள் இவ்வாதத்தை அதிகமாக ஆதரிக்கின்றனர்.

இக்கொள்கையை முதலில் பேசிய அரிஸ்டோட்டில் புலனாகக் கூடிய உலக ஆக்கம், இயக்கம் என்பவற்றிலிருந்து தனது கருத்துக்களை முன்வைத்தார். அதாவது, ஒவ்வொரு பொருளும் இயங்குகின்றன. மாற்றமடைகின்றன. இந்த மாற்றங்கள், இயக்கங்கள்தானாக இயங்க முடியுமா? இந்த மாற்றங்களுக்கு காரணமாக ஓர் மூலப்பொருள் இருக்க வேண்டும் என அவர் எண்ணினார். மாற்றங்களை இயங்கச் செய்வது இந்த இயங்கா இயக்கி. இது ஆற்றலுடையதாகவும் என்றைக்கும் நிலைத்ததாகவும் இருத்தல் வேண்டும். அதுவே முழுமையானதாகவும், உண்மையானதாகவும் இருக்கவேண்டும். அரிஸ்டோட்டில் கடவுளுடைய இருப்புத் தன்மையை மெய்ப்பிப்பதற்கு எந்தத் தோற்றப்பாட்டிற்கும் காரண முண்டு என்ற உண்மையிலிருந்து தனது கருத்துக்களை வெளிப்படுத்துகின்றார். ஒவ்வொரு தோற்றப்பாட்டினதும் காரணங்களைக் கண்டு கொள்ளும்போது அனைத்துக்கும் காரணமான, முழுமையான, முதன்மையான காரணமொன்று நிச்சயம் இருத்தல் வேண்டுமென்ற வினாவுக்கும் நாம் வர கட்டாயப்படுத்தப்படுகின்றோம்.

உதாரணமாக எமக்கு காரணம் எமது பெற்றோர், அவர்களுக்கு காரணம் அவர்களது பெற்றோர். இந்த வகையில் நோக்குகின்றபோது இறுதியில் எது இறுதி காரணமாக காரணமாக அமைகின்றதோ அதுவே கடவுள். இருப்புடைமை அனைத்திற்கும், தோற்றப்பாடுகள் அனைத்திற்கும் காரண கர்த்தாவே இறைவன் ஆகும் என்று அக்குவைனாஸ் கூறுகிறார். இவருடைய வாதம் ஒரு கட்டாய தேவையில் உள்ள, அவசியமாக இருக்கின்ற ஒன்று வேண்டும் எனக் கூறுகின்றது. ஏனெனில் நாம் காணுகின்ற (உலக) பொருட்களின் இருப்பு என்பது ஒரு கட்டாயத் தேவையாக இல்லை. இந்தப் பொருட்கள் எல்லாம் அழிவுடையன. ஒரு நிலையான, அழிவிற்கு அப்பாற்பட்ட ஒரு உள்பொருள் இருக்க வேண்டும். இவ்விதமான ஒரு உள்பொருள் தனது இருப்பை தனது சக்தியினாலேயே நிலைநிறுத்திக்கொள்கிறது. ஏனைய அனைத்து இருப்புக்களுக்கும் அதுவே காரணமாக இருக்கவேண்டும். அவ்வாறு இருப்பதுதான் கடவுளாகும் என இவ்வாதம் கூறுகிறது.

Z. A. ZAHIR
B.A. (Econ) P.G.D. In Edu
In - Service Advisor
Zonal Education Office
PUTTALAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நோக்கக்கொள்கை

இது இயல்திட்டக்கொள்கை என்றும் கூறப்படும். பிரபஞ்சத்திற்கு ஒரு நோக்கம் உண்டு என்று இக்கொள்கை கூறுகிறது. உலகில் நோக்கம் மட்டுமல்ல அதன் அமைப்பு, அதன் முன்னேற்றம், ஒழுங்கு என்பன இவ்வுலகிற்கு ஒரு நோக்கமும் அதற்குத் துணை நிற்கக் கூடிய அறிவும் இருக்கவேண்டும் என்று உணர்த்துகிறது. அமீபாவின் அமைப்பு தாவரங்களின் உயிரினங்களின் பரிணாம வளர்ச்சி, மனித மூளை பல்லாயிரம் வருடங்களாக படிப்படியாக வளர்ந்துள்ள விதம், இதில் காணப்படும் முன்னேற்றப்போக்கு என்பன நோக்கக்கோட்பாட்டிற்கு வலிமை சேர்ப்பதாகக் கூறப்படுகிறது. பிரபஞ்சமும், வாழ்க்கையும் அளவிடமுடியாத உயர்ந்த நோக்கம் கொண்டு இயங்குகின்றன என்பதை மையப்படுத்தியதாகவும் இவ்வாதம் அமைக்கப்பட்டுள்ளது. கடவுளின் இருப்புத் தொடர்பாக முன்வைக்கப்பட்ட வாதங்களில் இது அனுபவத் தன்மை வாய்ந்தது. ஏனைய வாதங்களை விட கருத்தில் கொள்ளக் கூடிய நுட்ப முறைகள் இதில் இருப்பதாகக் கருதப்படுகிறது. இந்த வாதத்திற்கு சமய மெய்யியற் சிந்தனையாளர்களிடத்தில் அதிகமான ஆதரவு இருந்து வருகிறது.

''கண் பார்வைக்கென உருவாக்கப்பட்ட கண் என்ற உறுப்பு. எமது முன் பற்கள் உளிபோல் வெட்டவும், மற்றயவை அரைக்கவும் ஆக்கப்பட்டுள்ளன. அவை ஒரு நோக்கமின்றி செயற்படவில்லை. தெய்வீக நோக்கம் எல்லா நிகழ்வுகளிலும் உண்டு" எனச்சிலர் இதனை விளக்கி இந்த பிரபஞ்சம் இயற்கையாகத் தோன்றியதல்ல. அதற்கு ஒரு திட்டம் நோக்கம் உள்ளது. இங்கு பிரதானமாக காணப்படுவது ஒழுங்குகளான காலை-மாலை, இரவு-பகல் மாறுவது, குழந்தை பிறந்து வளர்ந்து பெரியவர்களாவது போன்ற விடயங்கள் உலகில் ஒரு திட்டமிடப்பட்ட அமைப்பு, முறையாக இயங்கி வருகின்றன, ஒரு நுண்ணறிவுமிக்க ஆற்றல் ஒன்று இவற்றை நடத்தி வருகிறது என்பதற்கு இவை சாட்சி களாகும். றஸல் இந்த திட்டஒழுங்கை ஒரு பிரதானமான கருத்தாக எடுத்துகொள்ள முடியாதது என கருதுகின்றார். திட்டங்களின்படி இயங்கவில்லை பூமி அதிர்ச்சி, பெரும்வெள்ளம், பெரும்புயல் போன்றவை இந்த வாதத்திற்கு சாதகமானதாக இல்லை எவ்வாறாயினும் இவ் வாதத்தை ஆதரிப்போர் இந்த நுண்ணறிவுத் தன்மை இயற்கையாக நிகழ்வதற்கு கடவுள் என்ற புதிய சக்தி ஒன்று இல்லாமல் இதை ஒழுங்குபடுத்த முடியாது என இவ்வாதம் கூறுகிறது. காண்ட் இந்த வாதத்திற்கு சிறிது மதிப்பளித்துள்ளார். ஆயினும் ஒரு designer அல்லது ஒரு வடிவமைப்பாளன் இருப்பதை இவ்வாதம் வலியுறுத்தும் அளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அந்த வடிவமைப்பாளன் பிரபஞ்சத்தைப் படைத்த எல்லாம் வல்ல படைப்பாளன்தான் என்பதை இவ்வாதம் நிரூபிக்க தவறிவிட்டது என்று காண்ட் கூறுகிறார்.

ஒழுக்கவாதம்

இவ்வாதம் மனிதனுடைய ஒழுக்கவியலில் காணப்படும் விழுமியங்களின் பெயரிலுள்ள நம்பிக்கையைச் சார்ந்ததாகும். இது மனிதனுடைய மனச்சாட்சியிலும் கடமை உணர்விலும் அமைந்துள்ளதாகும். மனிதன் இயற்கையில் வெறும் சடமாக மாத்திரம் இருப்பானாயின் இயற்கையின் விதிகளுக்கு மாத்திரம் கட்டுப்பட்டு நடப்பதை மையமாகக் கொள்வானாயின், அது அர்த்தமற்றதாகும். மனிதனுடைய கடமையுணர்வு கடவுளுக்கு ஆதாரமாக அதாவது இறைவன் உள்ளான் என்ற உணர்வை ஏற்படுத்துகின்றது. ஒழுக்க வாழ்வுக்கு ஏதாவது அர்த்தம் உண்டா? மனிதாபிமானம், இரக்கமாக நடப்பது, அன்பு பாராட்டுவது, மற்றவரை மதிப்பது இவற்றிற்கு ஏதாவது அர்த்தம் உண்டா? இந்த ஒழுக்கவியல் கேள்விகளுக்கும் செயல்களுக்கும் ஓர் அர்த்தமும் நோக்கமும் இருக்க வேண்டுமாயின் கடவுள் இருப்பதும் அவசியமாகின்றது. கடவுள் தன்னளவில் மேலே கூறிய ஒழுக்கப் பண்புகளைக் கொண்டவர் எனக் கொள்ளலாம். ஒழுக்கமும், மகிழ்ச்சியும் ஒன்றாகவே செல்ல வேண்டியவை. ஒழுக்க ரீதியில் எவன் நல்லவனாக இருக்கின்றானோ அவனுக்கு மகிழ்ச்சி சேர வேண்டியுள்ளது. தீமை செய்பவனை மகிழ்ச்சி சேராது.

ஆனால், அது அவ்வாறில்லை. ஆகவே, இந்த வாதம் அப்படியொரு நிலை இருந்தால் கட்டாயம் கடவுளின் தேவையுண்டு என்று வலியுருத்துகின்றது. நாம் ஏற்கனவே பார்த்த மூன்று வாதங்களையும் பிரபஞ்சவியல் வாதம், உள்பொருள்வாதம், இயல்திட்டவாதம் ஆகியன கடவுளின் இருப்பை நியாயப்படுத்தக் கூடிய வாதங்களல்ல என்று காண்ட் நிரூபித்துக் காட்டினார். அத்துடன், கடவுள் அவசியம் என்பதையும் அவர் வலியுறுத்தினார். முக்கியமாக ஒழுக்கச் சீரமைப்பு ஒரு யதார்த்த பூர்வமாக அல்லது அறிவு பூர்வமாக சமுதாயத்தில் இயங்குவதற்கு கடவுள் இருக்க வேண்டும். அதாவது நியாயபூர்வமாகக் கடவுளின் இருப்பை நிரூபிக்க முன்வைக்கப்பட்ட வாதங்கள் கடவுள் இருப்பை வலியுறுத்தப் போதுமானதாக இல்லை. ஆனால், வாதங்களால் நிரூபிக்கப் படாத போதும் கடவுள் இருந்தேயாக வேண்டும் என்று ஒழுக்க கருத்து வலியுறுத்துவதாக காண்ட் கூறுகிறார்.

தூய அனுபவங்களின் வெளிப்பாடுகளின் மூலமாக பொது மக்களும் கடவுள் உள்ளார் எனத் தொன்றுதொட்டு கூறி வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சில ஞானிகள் நேரடியான அனுபவத்தில் கடவுள் இருப்பதைத் தாம் அறிந்துள்ளதாகக் கூறுகின்றார்கள். இன்னும் சிலர் சில அபூர்வமான சிந்தனை மூலம் கடவுளை நம்புவதாகக் கூறுகின்றார்கள். ஆயினும் கடவுள் இருப்பதாக, கூறும் கருத்துக்களையும் வாதங்களையும் நிரூபிப்பது கடினமானது. கடவுள் படைத்தவை எனக் கூறப்படும் படைப்புக்கள் தொடர்பாக என்ன கூறலாம்? இதுவரை முன்வைக்கப்பட்டுள்ள கடவுள் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு பிரபஞ்சத்தைப் படைத்தவன் என்றும் அத்தோடு எல்லாம் வல்லவன், எல்லாம் நல்லவன், எல்லாம் அறிந்தவன் என்ற பண்புகள் எல்லாவற்றையும் கடவுளில் அமைத்துக் கடவுளை முழுப்பூரணத்துவப் பொருளாக வடிவமைக்கலாம். இந்த நிலையில், இந்தப் பிரபஞ்சம் ஏன் பரிபூரணத் தன்மையுடையதாக இல்லை என்று ஒருவர் வினவ முடியும். தீமையும் துன்பமும் ஏன் உள்ளன? இவை எவ்வாறு படைக்கப்பட்டன? என்று வினாக்கள் எழமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அத்தியாயம் 9

சமூக அரசியல் சிந்தனைகளில் நீதி எண்ணக்கரு

உரிமை, கடமை, ஒழுக்கம் என்பன சாராமை (Independent)க் கருத்துக் களாகும். நீதி அவ்வாறானதல்ல. அது உரிமை போன்ற கருத்துக் களையே முன் அனுமானிக்கிறது. அதனால் அது இரண்டாம் நிலை யானது. ஒவ்வொருவனுக்கும் அவனவனுக்குரியதைக் கொடுப்பதே நீதி என அடிக்கடி கூறப்படுகிறது. மனிதனுக்கு உரியதென்றால் என்ன?

அது அவன் தனக்குரித்தானதெனக் கோரக் கூடிய அல்லது அவனது உரிமை பற்றியது ஆகும். அதனால் நீதி பற்றிய பேச்சுக்களில் உரிமை எண்ணக்கரு பிரதான இடத்திற்கு வருகிறது. மனிதனுக்கு என்ன வேண்டும் என்பதில் பொருள்கள் மட்டும அடங்குவதில்லை. அவன் ஒரு தனிநபராக இருப்பதற்குரிய தகுதித்தன்மைகளும் இருக்க வேண்டும். இங்குதான் வெகுமானத்திற்கு (desert) முக்கியத்துவம் ஏற்படுகிறது.

'கண்ணுக்குக்கண்' 'பல்லுக்குப்பல்' என்பது பழிக்குப்பழி வாங்கும் காட்டுமிராண்டுச் சட்டம் மட்டுமல்ல புராதன மக்கள் தமது வழக்காறு களிலிருந்து உருவாக்கிக் கொண்ட முன்னேற்றமான சட்டமே அது. பேக்கன் இதனை கானக நீதி (Wild Justice) எனக் கூறினார். தொன்மை சமூகத்தில் குற்றவியல் சட்டங்கள் தான் காணப்பட்டன. சிவில் மற்றும் ஒழுக்கச்சட்டங்கள் பின்னர் வளர்ச்சியடைந்தவைகளாகும்.

ஹியூம்

நீதி மனிதனுக்கு நலன் தருவனவற்றுள் ஒன்று. இதை மனிதன் தனது அனுபவத்தில் கண்டுணர்ந்துள்ளான். ஹியூம் (Hume) ஒழுக்கங் களை இயற்கை ஒழுக்கங்கள், செயற்கை ஒழுக்கங்கள் எனப் பிரித்துள் ளார். துணிவு, புத்திநுட்பம் போன்றவை இயற்கை ஒழுக்கங்கள். அவை இயல்பாகத் தோன்றுபவை. இவற்றினால் மனிதன் நன்மை அடைகிறான். அறிவும், துணிவும், பிறர் நலன் பேணுதலும் மனிதனுக்குப் பாதுகாப்பை மாத்திரமன்றி மனிதனுக்கு இன்பத்தையும் தருகின்றன. இவற்றை விட நீதி போன்ற ஒழுக்கங்கள் மனிதனால் அவனது தேவை கருதி தோற்று விக்கப்பட்டவை. மக்களின் இணக்கத்தைப் பெற்று அவை மனித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாழ்வில் இணைந்த பகுதியாக வளர்ச்சியடைந்து வருகின்றன. இவை செயற்கை ஒழுக்கங்கள் என ஹியூம் கூறுகிறார்.

நீதியும் அநீதியும் மனிதன் அறிந்த ஒழுக்கங்களாக அல்லது வழக்காறுகளாக இருந்து வந்துள்ளபோதும் மனிதனின மனச்சாய்வு அநீதிக்கு விரைவாகத் திரும்புகிறது. நீதியினைக் கடைப்பிடித்தொழுகுவதனால் வெளிப்படும் நலன் வெளிப்படையானதாகவோ, கவர்ச்சியான பயன்களைத் தருவனவாகவோ இல்லை. இவை எளிதில் புலனாவதுமில்லை. மனிதன் (பிளேட்டோ கூறுவதுபோல) அநீதியினால் உடனடியாகப் பெறக் கூடிய நன்மைகளுக்கே மதிப்பளிக்கிறான். ஹியூம் இது ஒரு பெருங்கேடு எனக் கூறுகிறார். ஹியூமின் Treatise இல் இருந்து ஹியூம் தந்துள்ள கருத்துக்களின்படி நோக்கினால் ஹியூம் இதனை ஒரு நோயாகக் கருதுகிறார். இந்நோய் தனக்குத்தானே மருந்தாகிறது. நீண்ட நாள் கழித்து நடக்கக் கூடிய நிகழ்ச்சிகள் பற்றி நாம் பொருட்படுத்துவதில்லை. இது தவறானது இதைத்தடுக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

ஹியூமின் கருத்துக்களை நோக்கினால் அநீதியை விரும்புவது மனிதனின் இயல்பு போலக் காணப்படுகிறது. அதை மாற்றவேண்டுமாயின் சூழ்நிலைகளை மாற்றவேண்டும் என்ற ஹியூம் கூறுகிறார். நீதியை நிலை நிறுத்த ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். சிவில் நீதி அமைப்புக்களைப் பலப்படுத்துவதன் மூலம் இதைச் சாதிக்கமுடியும் ஹியூமின் நீதிக்கருத்து சொத்துடைமையுடன் சம்பந்தப்பட்டது. சொத்துடைமையை மதிப்பதும் நீதியும் ஹியூமினால் அடிக்கடி தொடர்புபட்ட நிலையில் ஆராயப்படுகிறது. எல்லாச் சமூகங்களிலும் திருடனைப் பிடித்ததும் தண்டிக்கின்றனர். இத்தகைய தண்டனைகள் அல்லது நீதி வழங்கல்கள் வழக்காறுகளாக மனித வரலாற்றில் நிலை பெற்றுள்ளன. ஹியூம் இவற்றை சொத்துடைமை பற்றிய வழக்காறுகள் எனக் கூறுகிறார். சொத்துடைமை பற்றிய வழக்காறுகள் மனித சமுதாயத்தில் எப்போது தோன்றின என்று வரையறுத்துக் கூற முடியாதிருந்தாலும் அவ்வழக்காறுகளுக்கு மக்கள் மதிப்பளிக்கின்றனர், கட்டுப்படுகின்றனர். சொத்துடைமையில் ஏற்படும் வேறுபாடுகளில் இருந்து, இருப்போர்- இல்லாதோர் என்ற வேறுபாடு உருவானதையும் ஹியூமின் நீதிக்கருத்து விளக்குகிறது.

நீதியின் தோற்றத்திற்குப் பழிக்குப்பழிக் கொள்கை மூலகாரணமாக இருந்திருக்கலாம் என்று லொக்கின் கருத்துக்கள் உணர்த்துகின்றன. தீங்கு செய்தவனைத் தண்டிக்கவேண்டும் என்ற விருப்பம் நீதி உணர்ச்சியின் இன்றியமையாத கூறாக இருப்பதாக லொக் கூறுகிறார். விளைவிக்கப்பட்ட தீங்கும் அவ்வாறு, தீங்கு விளைவிக்கப்பட்டுள்ளது என்ற நம்பிக்கையும் நீதிக்கருத்துக்கு மிக முக்கியமான மூலப்பொருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

களாகும். தீங்குகள் தனிமனிதனுக்கும் சமூகத்திற்கும் ஊறுசெய்வன. அதற்கு ஏற்பாடுகள் அவசியம். அந்தத் தேவையை நீதி எண்ணக்கரு நிறைவு செய்கிறது.

பழங்காலத்தில் நீதி என்பது சட்டப்படி நடப்பதையே குறித்தது. மில்லின் கருத்தில், இது சரியானதாக இருந்தாலும் பைபிள் கால யூத சமூகத்திற்குத்தான் இது பொருந்தும். அதைவிட வளர்ச்சி பெற்ற கிரேக்க, ரோம நாகரிகங்களில் சட்டத்திற்கும் ஒழுக்கத்திற்கும் அல்லது ஒழுக்க ரீதியான நேர்மைக்கும் உள்ள வேறுபாடு பற்றிப் பேசப்பட்டது. அநீதியான சட்டம் என்ற கருத்துக்கள் இந்தவகைச் சமுதாயத்தில் தான் முன்வைக்கப் பட்டன. சட்டமும் நேர்மையும் சமாந்தரமாகச் செல்லாத சந்தர்ப்பங்களை இது சுட்டிக்காட்டுகிறது. சட்டமும் அறரீதியான நேர்மையும் மோதுகின்ற சந்தர்ப்பங்கள் என்றும் இதனைக் கூறலாம்.

இயற்கையாக எழும் பழிவாங்கும் உணர்ச்சியில் இருந்துதான் நீதி தோன்றுகிறது. ஆயினும், இரக்க உணர்வும், அறிவும் அதில் ஒன்று கலந்துள்ளன. இதனால் பழிவாங்கும் இயற்கை உணர்ச்சியினால் நடைபெற்றுள்ள தீங்குகளுக்கு அல்லது குற்றச்செயல்களுக்குத் தண்டனை விதிக்கும் போது தகுந்த அளவிலும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலுமே தண்டனை வழங்கப்படுவதனால் மனிதனின் பண்டைய பழிவாங்கும் உணர்வு சீராக்கம் செய்யப்பட்டுள்ளது அல்லது செய்யப்பட்டு வருகிறது.

பிளேட்டோவின் நீதி

நீதிக் கோட்பாட்டை பிளேட்டோ தனது குடியரசின் பல்வேறு பாத்திரங்களினூடாக முன்வைக்கின்றார். குடியரசு நூல், நீதி என்ற கருத்தை முன்வைக்கும்போது நீதி என்பது ஒவ்வொருவருக்கும் அவர வர்க்கு ஏற்றதைக் கொடுப்பதாகும் என்ற தொனியில் கூறியுள்ளது. அப்படியானால் நீதி யாருக்கு என்ன கொடுக்கின்றது. நீதி என்பது நண்பர்களுக்கு நன்மையையும், பகைவர்களுக்குத் தீமையையும் வழங்குகின்றதா? நீதி என்ற கருத்தை திராசி மாக்கஸ் என்ற குடியரசுப் பாத்திரம் பின்வருமாறு எடுத்துக்கூறியிருக்கின்றது. நீதி, அநீதி என்பவை ஆளப்படுவோரின் நடத்தையையன்றி மற்றவர்களின் நடத்தையையே உண்மையாக குறிக்கின்றது. ஆள்பவன், வறியவன் ஆகியோருக்கு நலனைத் தேடுவதும் குடிமகன், பணியாள் ஆகியோருக்கு நன்மையைத் தருவதாக உள்ளதுமே நீதி. நீதி, அநீதிக்கு எதிர்மறையானது. (நீதியை நோக்கிய எங்கள் முயற்சி மிகவும் சிறப்புடையதாகும். பல பொன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

காசுகளை விட நீதி சிறப்புடையது; போற்றத்தக்கது'. என்று சோக்கிரட்டீஸ் பாத்திரம் முன்வைக்கும் இக்கருத்து பிளேட்டோவின் நீதி குரல் எனக் கூறலாம்.

பிளேட்டோவின் கருத்தில் நீதி என்பது நல்லுணர்வாகும். உண்மை கூறுவதும் கடனைத் திருப்பிக் கொடுப்பதும் நீதி என்று குடியரசு கூறுகிறது. கடன் என்பதை பணமாக மட்டும் குடியரசு கருதவில்லை. ஒவ்வொரு வனுக்கும் அவனவனுக்கு ஏற்றதைக் கொடுப்பதே நீதி, அதுதான் கடன் என்பதற்கான பொருள். பகைவருக்குச் சேரவேண்டியதை அது தீங்குடையதாக இருக்கலாம் - பொருத்தமானதை- அவனுக்குக் கொடுக்கக் கடமைப்பட்டிருப்பது என்பதும் கடனுள் அடங்குகிறது. நீதி தனி மனிதனுக் கும் அரசிற்கும் பயன்தருகிறது. அமைதியான காலத்திலும் நீதி செயல்பட வேண்டும் போர்க்காலத்திலும் நீதி செயல்படவேண்டும். கூட்டாளிகளுடன் நடக்கும் ஒப்பந்தங்களிலும் நீதி செயல்படவேண்டும்.

தீயவர்களுக்கு நன்மையும் நல்லவர்களுக்குத் தீமையும் கிடைப்பதை குடியரசு சுட்டிக்கட்டுகிறது. அநீதியின் இலாபங்களையும் அநீதியின் சக்திகளையும் குடியரசு காட்டுகிறது. அநீதிக்கு சமுதாயத்தில் ஒரு அந்தஸ்து தரப்படுகிறது என்பதை குடியரசு ஏதாவது ஒருவகையில் ஏற்றுக்கொள்கிறது அல்லது அப்படி இருப்பதை நீங்கள் அவதானிக்க வில்லையா என்று சமுதாயத்தை நோக்கிக் கேட்கிறது. அநீதியாளனின் வாழ்க்கை நீதியாளனின் வாழ்க்கையை விடப் பயன்தரத்தக்கதாக இருக்கிறதே என்பது நீதிபற்றிய விசாரணையில் பலமுறை முன்வைக்கப் படுகிறது

அநீதிக்கு, வெளியில் எதிர்ப்பும் உள்ளுர மதிப்பும் தரும் மனித மனோபாவத்தையம் பிளோட்டோ எடுத்துக்காட்டுகிறார். அநீதியில் வினைத்திறன், உபாயம், முன்ஜாக்கிரதை, அறிவு போன்றனவும் இடம் பெற்றிருக்கிறது. இப்படியான பண்புள்ளவர்கள்தான் நாடுகளையும் அரசுகளையும் தம் காலடிக்குக் கீழ் கொண்டு வருகிறார்கள். எனினும் குடியரசின் நீதி இலட்சியம் இது அல்ல. சோக்ரட்டீஸ் பாத்திரம் பின்வருமாறு கூறுகிறது: நீ (திராஸிமாக்கஸ்) அநீதியை விவேகத்துடனும் நற்பண்புடனும் சேர்த்து, நீதியை அவற்றுடன் மாறுபட்டதோடு சேர்த்து நீ பேசுவதைக் கேட்க என்னால் வியக்காமல் இருக்கமுடியவில்லை.

நீதிபற்றிய விசாரணையில் அநீதியை பிளேட்டோ சமுதாயத்தின் உண்மை நிலையில் இருந்து காட்டுவது ஒரு சிறப்பான கருத்துக் காட்சியாகும். குடியரசின் இரண்டாம் புத்தகத்தில் இதனைப் பார்க்கலாம். அதை மாந்தஸ் என்ற பாத்திரம் இவ்வாறு கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மனித இனத்தின் பொதுமைக்குரல் நீதியும் அறமும் எந்நாளும் மதிப்பிற்குரியன எனச் சாற்றுகின்றது. ஆனால் அவற்றின் நெறி நிற்போர் துன்பத்திற்கும் உழைப்பிற்கும் உள்ளாகின்றனர். மறத்தாலும் அநீதியாலும் விளையும் இன்பங்களோ எளிதில் அடையத்தக்கன ஆனால் பொது மக்களாலும் சட்டங்களாலும் மட்டும் கடியப் பெறுவன. நேர்மை, நேர்மையில்லாததை விடப் பயன் குறைந்தது. அறநெறி பிறழ்ந்தோரை அவர்களிடம் பொருள் வளமிருப்பின் மக்கள் மதிக்கின்றனர். அவர்கள் வறியவாகளாயின் மக்கள் அவர்களைப் புறக்கணிக்கின்றனா.

இவ்வாறு நீதிபற்றிய பிளேட்டோவின் ஆய்வு, சமுதாய மட்டத்திலும் மக்களின் சமூகச் செயற்பாட்டிலும் இருந்துவரும் நிலையையும் கணக்கிற் கொண்டதாகவே ஆரம்பிக்கிறது எனலாம்.

பிளேட்டோ நீதியின் பல்வேறு குணாம்சங்களை விளக்குகையில் பின்வருமாறு கூறுகிறார். முறையாக வாழ்பவர்களைவிட முறையற்றோர் அதிகமான நலன்களை அனுபவிக்கின்றனர் எனக் கூறுகிறார். சமுதாய அமைப்பில் முறையானோரைவிட முறையற்றோர் தான் அதிகமான சௌகரியங்களையும், இலாபங்களையும், பயன்களையும் பெறுகின்றனர். முறையானோரை நேர்மையானவர் என்றும், முறையற்றோரை நேர்மையற்றோர் என்றும் கூறுவதோடு நேர்மையானவர் நேர்மையற்றவர்களுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தம் அல்லது நட்புறவு முறியும்போது முறையற்றோர் அதிக லாபத்தைப் பெற்றுக்கொள்கின்றனர். வருமானவரி செலுத்துகின்றபோது முறையற்றோர் அதை செலுத்தாமல் தப்பிக்கொள்ளுகின்றனர். முறையானோர் அவற்றை நேர்மையான முறையில் செலுத்துகின்றனர். அரசாங்கத்திலிருந்து ஏதேனும் கிடைப்பதானாலும் முறையற்றோரே அதில்பெரும் பாகத்தைப் பெறுகின்றனர். முறையானோர் நேர்மையான முறையில் பெறுகின்றனர் அல்லது பெறாமலேயே விடுகின்றனர். இதேபோல் நீதியான முறையில் இருக்கின்ற அலுவலக உத்தியோகத்தர்கள் அவர்கள் தம் சொந்த அலுவல்களையும் புறக்கணித்து அலுவலகங்களின் முன்னேற்றங்களையும், வளர்ச்சியையும் முழுப்பொறுப்பாக ஏற்றுக்கொள்கின்றனர். மேலும், தமது நடவடிக்கையில் முழுமையான கடமையுணர்ச்சியுடன் செயற்படுகின்றனர். சமுதாயம் இதைப்பற்றி என்ன நினைக்கின்றது. அவர்களை விட அநீதியாக நடக்கும் ஒருவன் படிப்படியாக வளர்ந்து முன்னேற்றமடைகின்றான். என குடியரசு நூல் விளக்குகிறது.

அதாவது மனிதர்களுக்கு உள்ளேயே கொடிய குற்றவாளிகள் மிக உன்னத நிலையில் இருப்பதுடன் மிகுந்த மகிழ்ச்சிகரமான வசதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

களுடன் வாழ்கின்றனர். பாரதூரமான குற்றங்களைச் செய்து கொண்டு சமுதாயத்தில் நன்மதிப்பைப் பெறுகின்றனர். இது அநீதியின் உச்ச நிலையென்று பிளேட்டோ கூறுகின்றார். அநீதியை மறுப்பவர்களுக்கு துன்பம்தான் நேரிடும். நீதியானவனை மற்றவர்கள் மதிப்பதில்லை. அவர்களின் உடைமைகளைப் பறிக்க முற்படுகின்றனர். இந்தப் பாரபட்சம் சமுதாயத்தில் நடந்து கொண்டிருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. மக்கள் நீதியையா, அல்லது அநீதியையா? விரும்புகின்றனர். அநீதியைப் பொதுவாக வெறுக்கின்றார்கள். ஆனால், நீதியானவன் கண்ணியப் படுத்தப்படுவதில்லை. அவனுக்கு மரியாதைக் கொடுப்பதும் கிடையாது. ஆனால், அநீதியை மக்கள் கண்டிக்கின்றனர். ஏனெனில், அந்த அநீதியால் தாம் பாதிக்கப்படுவோம் என எண்ணுவதே இதற்குக் காரணம். எனவே, சுருக்கமாகக் கூறினால் மாக்கஸ் என்ற பாத்திரம் நீதியை விட அநீதிதான் தலைமைப் பெற்று விளங்குகின்றது என விளக்குகின்றது. அதாவது அநீதியென்பது ஒருவனின் சொந்த நலனும் நன்மையுமாகும். இந்த இடத்தில் சோக்கிரட்டீஸ் என்ற குடியரசின் பிரதான பாத்திரம் நீதி, அநீதி பற்றி வேறுவிதமாக விமர்சிப்பதைப் பார்க்கலாம்: ''அநீதி கட்டுப்படுத்தப்படாத ஆட்டிப்படைக்கும் முழு அதிகாரத்தைக் கொண்டிருந் தாலும் அது நீதியை விட உயர்ந்தது என நான் நம்பவில்லை. மேலான பலனையும், நன்மையையும் அநீதி தரமுடியாது.

நீதியாளனுடைய வாழ்க்கை அநீதியானவனுடைய வாழ்க்கையை விட உயர்ந்ததும் நலன்மிக்கதுமாகும்". எனவே, நாம் நீதியைப் பற்றி ஒரு வரைவிலக்கணத்தை வகுக்கமுயன்றால் நீதியென்பது நல்ல பண்பு, அநீதி தீய பண்பு. அநீதி பயன் தருவதாக இருந்தாலும் அது நற்பண்பல்ல. நீதியாளனிடமும் நேர்மையாளனிடமும் முன்னேற்றம் இல்லாமல் இருக்கலாம். அவன் துன்பத்தையும் கடின வாழ்வையும் எதிர்நோக்கி னாலும் நற்பண்பு நீதிக்கே உரியது. நீதி விவேகத்தோடும் நற்பண்போடும் மிக நெருக்கமாக உள்ளது. அநீதியாளன் அதன் அநீதிகளையும் மற்றைய தேவைகளையும் அதிகமதிகம் பெறப் பாடுபடுகின்றான். நீதியான வன் தன்னைப் போன்றவர்களைவிட ஒரு சிறிதும் மேலதிகமாய்ப் பெற விரும்புவதில்லை. எனவே நீதியானவன், அறிவுடையவன், நேர்மையான வன் என அழைக்கப்படுவான். இக்கருத்தை ஏற்றுக்கொள்ள முடியுமானால் அநீதியானவனை, தீயவன், தீய பண்புடையவன் என்றும் கொள்ளமுடியும். சுருங்கக்கூறின் சோக்கிரட்டீஸ் பாத்திரம் நீதியென்பது ''நற்பண்பும் ஞானமுமாகும்" என்றும் ''நன்மை" ''நல்லது" என்ற கருத்துக்களை நீதி எண்ணக்கரு கொண்டிருக்கிறது என்றும் கூறுகிறது.

குடியரசில் நீதி நண்பனுக்கு நன்மையையும், பகைவனுக்குத் தீமையையும் தரும் என்னும் கருத்து, ஒவ்வொருவரும் அவரவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தரத்துக்கு ஏற்றவாறு நீதி வழங்கப்படவேண்டும் என்ற கருத்துடன் அமைந்துள்ளதைக் காணலாம். குடியரசில் காணப்படும் நீதியின் விளக்கம் குடியரசின் பிரதான பாத்திரமான சோக்கிரட்டீசினால் முன்வைக்கப்பட்டது. எனினும் இப்பாத்திரத்தினால் நீதி அல்லது நேர்மை என்பதற்கு சரியான விளக்க முறையினைக் கூற முடியவில்லை. நேர்மையற்ற தன்மை அல்லது அநீதியான போக்கு நீதியினை விட வெற்றியையும், சௌகரியத்தையும் தருகின்றது. சாதாரண மக்கள் அநீதியைக் கடிந்துக் கொண்டாலும் அல்லது அவர்கள் அநீதியை வெறுப்பதாகக் கூறிக் கொண்டாலும் உண்மையில் அநீதியினால் வரக்கூடிய பலன்களை மறைமுகமாகப் போற்றுகின்றவர்களாகவும் உள்ளனர். இதுவோர் முரண்பாட்டைக் காட்டுகின்றது. நீதியே வேண்டும், அநீதி வேண்டாம் என்று சொன்னபோதும், அநீதிக்குத் துணைபோகின்ற தன்மையையும் அநீதியை விரும்பி மக்கள் ஆதரிக்கின்ற போக்கையும் காணமுடிகிறது.

எனவே நடைமுறையில் அநீதி நீதியைவிட செல்வாக்குமிக்க தாகும். அதேநேரம் நீதியையும் நேர்மையையும் பின்பற்றுபவர்கள் துன்பங்களை அனுபவிக்கின்றனர் அல்லது அனுபவிக்க நேருகின்றது என்று, பிளேட்டோ எடுத்துக் காட்டுவது ஒரு நாட்டின் நடைமுறையிலுள்ள நீதி பற்றிய பிரச்சினையை எடுத்துக் காட்டுகின்றது. இது சீர்பெற நீதியோடு சேர்த்து ஒழுக்கப் பிரமாணங்களும் வலியுறுத்தப்படவேண்டும். நீதியையும் நேர்மையையும் மனிதன் கடமையாகக் கொள்ள வேண்டும்.

சமுதாயத்தில் ஒரு நன்மையை அச்சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு பகுதியினரும் தம் கடமைகளைச் சரிவர நிறைவேற்றுவதன் மூலம்தான் பெறமுடியும். தமது கடமையினைச் சரிவர நிறைவேற்றுவதென்பது நீதியினாலும், நேர்மையினாலுமே முடியும். நீதியையும், நேர்மையையும் ஒரு விதியாக மதிக்கின்றவர்கள் கடமைக்கு முக்கியத்துவமளிக்கின்றனர். போதனையாக அல்லது ஒழுக்கமாக அன்றி நீதியை ஒரு விதியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பிளேட்டோ வாதிடுகிறார் எனக்கருதலாம்.

கடமையின் போது எது நீதி, எது அநீதி, எது சரி, எது பிழை என்று கருதக்கூடியதாக இருக்கும். நாட்டில் வாழும் ஒவ்வொரு மனிதனும் அவரவருக்கு உரிய கடமைகளைச் செவ்வனே செய்யும்படி தூண்டுகின்ற ஆற்றலையே நீதி என்று கூறப்படுகின்றதா என்றும் வினவலாம். இங்கு பிளேட்டோ கூறியுள்ள நீதியை அல்லது நேர்மையை ஒரு நாட்டின் சட்டங்களினாலன்றி தனி மனித நிலையிலும் சமுதாய நிலையிலும் மனிதன் தானே உணர்ந்து நீதியையும், நேர்மையையும் கடைப்பிடிப்பதே ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும், ஐக்கியத்திற்கும் வழியமைக்கின்றது என கருதலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மற்றொருவருக்கு உரியதை தனக்கென உருவாக்கிக் கொள்ள நீதி இடமளிக்காது. அவரவருக்குரியது அவரவருக்காகும். இதுதான் நல்லவனுக்கு நன்மையையும், தீயவனுக்கு தீமையையும் நீதி தருகிறது என்பதன் பொருள். ஒரு ஆட்சியாளனின் கடமை, நீதியை நிலை நாட்டுவதாகும். நீதியை நிலைநாட்டுவதென்பது மற்றவர்களினால் இன்னொரு சாராருடைய சுதந்திரம் பாதிக்கப்படாமல் பாதுகாப்பதாகும். அவர்களுடைய நலன்களும், பொருளாதார வளங்களும் அவர்களுக்கும் சரியாகச் சென்றடைய வேண்டும். அதில் தடை ஏற்படக்கூடாது. இது ஒரு நாட்டின் நீதியினால் நிலைநாட்டப்படவேண்டும்.

இந்த வேறுபாடுகள் குறைந்து சீரான சமமான நிலைக்கு வரும்போது தான் நீதியின் உண்மையான பயனைப் பெற்றுக் கொள்ள முடியும். மக்கள் தமது தேவைகளிலும், திறன்களிலும் வேறுபடுகின்றனர். நீதியினால் இவ்வேறுபாட்டை ஏற்றுக்கொள்ளமுடியுமா? வேறுபாடுகள் இவ்விதமாக இருந்த பொழுதும் ஒவ்வொரு மனிதனதும் தகுதியைக் கவனத்திற் கொள்ள வேண்டும். இந்தவகையில், தனிமனிதன் ஒருவனின் திறமையும், அவனது ஏனைய நிலைமைகளும் தான் அவனது தகுதியை எடுத்துக் காட்டுகின்றன. எனவே, நீதியென்பது சிக்கலான சமுதாயப் பொறிமுறையான அமைப்பென ஏற்றுக்கொள்ளலாம். சமுதாயப் பொறி முறை உடைந்து தகர்ந்து போகாமல் இருப்பதற்காகவே மக்கள் நீதியை நாடுகின்றனர். நீதி சுதந்திரத்தையும், சமத்துவத்தையும், நலன்களையும், கிடைக்கக் கூடிய எல்லாத் தராதியான உயர்வுகளையும் எவ்வாறு பார பட்சமற்ற முறையில் சமுதாயத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் வழங்குவது என்பதில்தான் கவனம் செலுத்துகின்றது. இதன் மூலம் நீதி வெற்றி பெற வாய்ப்பு உள்ளது.

ஆகவே, சுதந்திரமும், சமத்துவமும் இங்கு முக்கியப்படுத்தப் படுத்தப்படுகின்றது. நீதியின் கண்ணோட்டத்தில், சுதந்திரமான, சமத்துவமான ஒரு சமுதாயத்தை உருவாக்குவதனையே பிளேட்டோ வலியுறுத்தினார். பிற்காலத்தில் அரிஸ்டோட்டில் நீதியில் பகிர்ந்தளிக்கும் 'நீதி' என்னும் கோட்பாட்டை முன்வைத்தார். நலன்கள் மக்களிடம் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும். என்ற கருத்து அங்கு வலியுறுத்தப்பட்டது. சமூகத்தில் ஒருவன் இன்னொருவனைவிட உயர்ந்த வனுமல்ல, தாழ்ந்தவனுமல்ல என்னும் கருத்து இங்கு முன்வைக்கப் படுகிறது. இதில் சமத்துவக் கருத்து பிரதிபலிக்கின்றது. சமத்துவக் கருத்து எல்லோருக்கும் ஒரே விதமான நலன்களையும், திருப்தியையும் பகிர்ந்தளிக்கக் கோருகின்றது. தற்கால நீதியில் இப்பகிர்ந்தளிப்புக் கொள்கை அடிப்படையாகும். மேலும் தற்கால நீதி கூட அடிப்படையில் பிளேட்டோ, அரிஸ்டோட்டில் ஆகியோர் முன்வைத்த நீதி பற்றியதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஒழுக்கம் பற்றியதுமான கருத்துக்களில் இருந்து வளர்ச்சி பெற்றதாகும். உதாரணமாக,

- ஒவ்வொரு மனிதனையும் சமமாகக் கருதல்
- ஒவ்வொருவருக்கும் அவரவருக்குரிய விதத்தில் நன்மைகளையும் நலன்களையும் பகிர்ந்து அளித்தல்
- அவரவர் திறமைக்கு ஏற்ப பகிர்ந்தளித்தல்

அவர்களின் இவ்வகைக் மூலக்கருத்துக்களையே இன்னும் நீதித் துறை சார்ந்த அறிஞர்கள் சிந்தித்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அத்தியாயம் 10

ஒழுக்கவியல் நோக்கில் தண்டனைக் கோட்பாடுகள்

பொதுவாக நாம் சட்டத்தை குற்றவியல் பிரிவுடன் சம்பந்தப்பட்ட ஒரு விடயமாகக் கருதுகின்றோம். சட்டம் சட்டத்தை அமுலாக்கல் போன்றவை ஒன்றுக்கொன்று தொடர்புப்பட்ட நிலையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு காவல் அதிகாரி குற்றங்களைத் தடுப்பதை ஒரு தொழிலாகக் கொண்டிருக்கின்றார். சட்டங்களை அமுலாக்குவது அவரது காரியங்களில் ஒன்று. ஆனால், அது அத்துடன் நின்றுவிடுவதில்லை. உண்மையில் அது போய் ஒரு உச்ச நிலையை அடைகின்றது. அந்த உச்ச நிலை தண்டனையாகும். அதாவது ஒருவன் குற்றம் செய்தால் அது வழக்கு மன்றங்களில் விசாரிக்கப்பட்டு இறுதியில் தண்டனை வழங்கப்படுகின்றது. இது தான் பொதுவான, பொது அறிவுக்குரிய விளக்கமாகும். சட்டப் பிரச்சினைகளில் ஒழுக்கவியல் சார்ந்த பிரச்சினைகள்தான் முக்கியமாக எழுகின்றன. இவ்வாறு சட்டததில் எழும் பிரச்சினைகளில் மிகவும் முரண்பாடு மிக்க பிரச்சினையாக தோற்றமளிப்பது தண்டனை ஆகும். இதில் சில அடிப்படையான கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

தண்டிப்பதற்கு எமக்குள்ள உரிமை என்ன?
தண்டனையை எல்லா வழிகளிலும் நியாயப்படுத்த முடியுமா?
நீதியான தண்டனையென்பது என்ன?
எச்சந்தர்ப்பத்தில் நாம் ஒருவனை மன்னிக்கலாம்?

மெய்யியல் நோக்கு

இந்தக் கேள்விகள் அடிப்படையான மெய்யியல் அணுகு முறையைக் கொண்ட, பிரச்சினைத் தன்மைகொண்ட கேள்விகளாகும். இவை சமூக மெய்யியலிலும், ஒழுக்கமெய்யியலிலும் முக்கியமான பெரும் கேள்விகளாக உள்ளன. இந்தக் கேள்விகளுக்கு ஒரே விதமான விடை அமையுமெனக் கூறமுடியாது. இந்தக் கேள்விகள் தண்டனையின் முழுப்பிரச்சினை பற்றிய நியாயப்பாட்டினை உருவாக்கும், ஐயமிக்க கேள்விகளாக உள்ளன. உளமருத்துவர்களும், சமூக விஞ்ஞானிகளும் தண்டனையை ஒரு குற்றச் செயல் எனக் கூறுகின்றார்கள். அதாவது, குற்றத்திற்காக குற்றம் இழைக்கப்படுகின்றது எனக் கூறுகின்றார்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மேலும், தண்டனைக்குப் பதிலாக நோய் தீர்க்கும் முறை ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென உளமருத்துவர்களும், சமூக விஞ்ஞானி களில் சிலரும் கூறுகின்றார்கள். சட்ட மெய்யியலாளர்கள் தண்டனையை நியாயப்படுத்த முடியும் என்றும் ஆனால், தண்டனை வழங்குவதற்கு என்று உருவாக்கப்படும் அடிப்படைத் தளங்களைப் பற்றி அபிப்பிராய பேதங்கள் உண்டென்றும் கூறுகின்றார்கள். மெய்யியலானது உள மருத்துவம், மற்றும் சமூக விஞ்ஞானக் கூற்றுக்களில் தங்கி இருக்க வேண்டியதில்லை. தண்டனையை நிராகரிப்பதோ அல்லது ஆதரிப்பதோ என்பதல்ல. ஆனால், தண்டிப்பதில் எழும் ஒழுக்கப் பிரச்சினைகள் என்ன? தண்டனை ஏன் அவசியம் அது நியாயப்படுத்தப்படக் கூடியதா? என்பன பற்றி ஆய்வு செய்வது ஒரு மெய்யியலாளனுக்குரிய பணி எனக்கருதலாம்.

பொதுவாக ஒவ்வொரு குற்றங்களுக்கும் பின்னணியாக இரண்டு விதமான பாதிப்புக்கள் இருக்க முடியும்.

அ. உளரீதியான பாதிப்புகள்
ஆ. சமூகரீதியான பாதிப்புகள்

இவை இரண்டையும் திருத்தினால் அல்லது இவ்விரண்டிலும் மாற்றம் கொண்டு வந்தால் சீர்திருந்தலாம் எனச் சில கருத்துக்கள் உள்ளன. பொதுவாக இளம் வயதினையுடையவர்கள் அதிகம் குற்றம் இழைப்பவர்களாக காணப்படுகின்றார்கள். இவர்களை உளரீதியாக சீர்திருத்த முயற்சிக்க வேண்டும். சமுதாயரீதியான பாதிப்புக்கள் என்பது ஒருவனின் வாழ்க்கையில் அவனுக்கு எழும் வீட்டுப் பிரச்சினை, பணப் பிரச்சினை, வாழ்க்கைப் பிரச்சினை போன்ற சிலவற்றை குறிப்பிடலாம். உளரீதியான பிரச்சினை என்பது பழிக்குப் பழிவாங்க நினைத்தல், தான் பிரத்தியேகமான ஒருவன் என்பதைக் காட்டிக் கொள்ளல் போன்றவை யாகும். இவ்விரு பிரச்சினைகளும் ஒருவனை குற்றம் செய்யத் தூண்டு கின்றன. இந்தப் பிரச்சினை அதன் உச்ச நிலையாக பாலியல் பிரச்சினை வரை செல்கின்றது. பாலியல் தூண்டல் காரணமாகவும், வக்கரிப்பு மூலமாகவும் ஒருவன் குற்றம் செய்ய முனைகின்றான். வக்கரிப்பு என்பது மற்றவர்களைக் கேவலமாக நடத்தல், கடுமையான தூசணங்களைப் பாவித்தல் போன்றவைகளைக் குறிக்கின்றது.

தண்டனையின் பொருள்

தண்டனை என்றால் என்ன? அது ஏன் நியாயப்படுத்தப்படல் வேண்டும்? என்ற கேள்விகளை நோக்கினால், தண்டனை என்பது சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நேரங்களில் ஒரு உருவகத் தன்மையைக் கொண்டிருக்கின்றது. அனாவசியமாக ஒருவன் நல்ல மழையில் திரிந்து விட்டு வந்து தடிமல் பிடித்தால் இது அவனுக்கு நல்ல தண்டனை என்கிறோம். இது கவன யீனத்துக்கான தண்டனை. இது தண்டனையின் உருவகத் தன்மை எனலாம். ஆனால், இதைவிட நுணுக்கமாகத் தண்டனை என்ற சொல்லை நாம் அறிய வேண்டியிருக்கின்றது. சட்டத்துறையில் அதிகாரம் உடையவர் கள் யார் குற்றம் செய்கின்றார்களோ, அவர்களுக்குத் தண்டனை வழங்குகின்றனர். இந்தப் பின்னணியிலேயே தண்டனையை நாம் நோக்க வேண்டும். இதை நாம் தெளிவாகச் சொன்னால், சில சந்தர்ப்பங்களில் ஒரு வேதனை அல்லது இழப்பு திட்டமிட்டுக் குறிப்பிட்ட நோக்கத்துடன் கட்டாயப்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றது. இதைத்தான் தண்டனை என்கிறோம். இது உண்மையிலேயே ஒருவனது அபிப்பிராயத்துக்கு மாறாக, அவன் மீது சுமத்தப்படுகின்றது. ஒருவனது விருப்பத்தையும், அபிப்பிராயத்தையும் பெறாது ஒருவன் மீது இழப்பையும் வேதனையையும் சுமத்த முடியுமா? இவ்வாறு இழைக்கப்படும் துன்பத்தையும் இழப்பையும் நியாயப்படுத்த முடியமா? இவை தண்டனைக் கருத்தில் எழக்கூடிய பாரதூரமான பிரச்சினைகளும், கேள்விகளுமாகும். இவ்வாறான சந்தர்ப் பங்களில்தான் சட்டங்கள் மனிதனது தனிப்பட்ட வாழ்வில் நேரடியாகத் தலையிடுகின்றன. இது மனிதனது உறவுகளைப் பாதிக்கின்றது. நாம் ஏற்கனவே பார்த்தது போலத் தண்டனை இழப்புக்களையும், துன்பத்தையும் கட்டாயமாக ஒருவன் மீது சுமத்துகின்றது. என்றாலும், இது வழங்கப்படும் சந்தர்ப்பங்களில், அலலது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஒரே விதமாக அமைவதில்லை.

களவு, மோசடி போன்ற குற்றச் செயல்களுக்கு மாத்திரம் தண்டனை அல்ல. அறவழியில் நேர்மையாக ஒரு செயலைச் செய்கின்ற சந்தர்ப்பத்திலும் தண்டனை வழங்கப்படுகின்றது. ஒரு அரசாங்கத்தின் கடுமையான ஒரு வரி விதிப்பை மக்கள் எதிர்க்கும் போதும், அந்நிய ஆதிக்கத்துக்கு எதிராக மக்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கின்ற போதும், தண்டனை வழங்கப்படுகின்றது. எனவே, தான் தண்டனைக்கு ஒரு கொள்கைத் தெளிவில்லை. அதற்கு ஒரு சட்டநியாயம் இல்லை. அதை யாரும் எப்போதும் எடுத்துக் கொள்ளலாம். இவ்விதமாகத் தண்டனையை அனுபவிக்கும்போது மனச்சாட்சியைப் பொறுத்தவரையில் தான் குற்றவாளி அல்லாத நிலையில் பொறுப்பற்ற முறையில் ஒருவன் மீது தண்டனையைச் சுமத்தும் போது தனிமனிதன் தனக்குள்ளேயே கேள்வி எழுப்புகின்றான். நான் என்ன குற்றம் செய்தேன் என்று சமுதாயத்தைப் பார்த்துக் கேட்கி றான். காந்திஜிக்கு சுதந்திரப் போராட்டத்தின் போதும், கிரேக்கச் சட்டத்தை மிறினார் என்று சோக்ரட்டீஸ்க்கும் வழங்கப்பட்ட தண்டனைகளின் போது அவர்கள் இவ்வாறுதான் கேள்வி எழுப்பி இருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஒழுக்கவியல் நோக்கு

தண்டனையை, வழங்கும்போது ஒரு நிறுவனத்தின் ஊடாக மக்கள் அங்கீகாரம் பெற்ற விதத்தில் குற்றவாளியைத் திருத்துவதற்கும் தண்டனையில் நீதியை உறுதிப்படுத்துவதற்கும், தண்டனை ஒரு வாய்ப்பாக அமைகின்றது. இப்பிரச்சினையை மையமாக வைத்து ஒழுக்க நியாயத்துக்கு ஏற்ப தண்டனையைச் சரியான முறையில் வழங்கப்பட வேண்டியதன் அவசியம், அதற்குரிய நியாயங்கள் போன்றவற்றுடன் தான் ஒழுக்கவியல் மிகவும் முக்கியமாகத் தொடர்புபடுகின்றது. தண்டனையின் ஒழுக்கவியல் ரீதியான ஆய்வுகள், தண்டனையில் அடங்கியுள்ள ஒழுக்கப் பிரச்சினைகளையும், தண்டனை வழங்கப்படுவது எவ்வகையில் நியாயமானது என்பதையும் ஆராய்கின்றது. தண்டனைக் கோட்பாட்டை நாம் ஆராயும்போது அது தனி மனிதனையும், சமூகத்தையும், ஒழுக்கத்தையும் சம்பந்தப்படுத்தியதாக அமைந்திருத்தலைக் காணலாம்.

ஒழுக்கமும் சட்டமும்

சட்ட விதிகள் மீறப்படும்போது நீதித்துறை தண்டனை விதிக்கின்றது. இது ஒழுக்கவியல் பிரச்சினையுடன் சம்பந்தப்பட்டுள்ளது. தண்டனை சமூக நிறுவனம் என்ற ரீதியில் மக்கள் அதில் நம்பிக்கை வைத்துள்ள போதிலும் அதில் சம்பந்தப்பட்டுள்ள துஷ்பிரயோகங்கள், குழறுபடிகள் பற்றி அவர்கள் அக்கறை காட்டுகின்றனர். தண்டனை முறையே தேவையற்றது என நிராகரிப்போர் மிகவும் குறைவு. எவ்வாறாயினும் தண்டனை எண்ணக்கருவில் உள்ள முக்கியமான பிரச்சினை தண்டனையை நியாயப்படுத்துவதுபற்றிய விடயத்தில்தான் அடங்கியுள்ளது.

நியாயப்படுத்தல் எவ்வாறு என்று விசாரணை செய்யும்போது பழிக்குப்பழி அல்லது துன்பத்திற்குத் துன்பம் என்ற (Retributive) தண்டனைமுறை தவறுக்குத் தண்டனை வழங்கப்படவேண்டும் அதாவது தவறு தண்டிக்கப்படத் தகுதியுடையது என்று நியாயப்படுத்த முயற்சிக்கிறது. தவறுசெய்தவன் அல்லது குற்றமிழைத்தவன் அவன் செய்த குற்றத்தின் அளவு துன்பம் அனுபவிக்கவேண்டும். அதனால் Retributive முறை துன்பத்திற்குத் துன்பந்தரும் தண்டனை முறை என்றும் கூறப்படுகிறது. குற்றவாளி செய்த குற்றத்திற்குத் தகுதியான தண்டனை தரப்படுதல் வேண்டும் என்பதுதான் இதில் இருந்து பெறப்படும் நியாயமாகும்.

குற்றம் செய்தவன் அதற்கான துன்பத்தைத் தண்டனையாகப் பெற வேண்டும். அவ்வாறு பெறாதிருப்பது ஒழுக்கரீதியில் குறைபாடானது என்றும் இக்கோட்பாடு எடுத்துக் காட்டுகிறது. ஜோன் றோல்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

(John Rawls) இனது கருத்தின்படி நோக்கினால் இதனோடு இன்னொரு கருத்தும் சம்பந்தப்படுகிறது. அது பயன்வழிவாதம் (Utiliterianism). பயன்வழிவாதம் சமுதாய ஒழுங்கு என்ற நோக்கிலிருந்து இப்பிரச்சினையை அணுகுகின்றது. நடந்தவை நடந்தவையே சமூகத்தின் எதிர்கால ஒழுங்கும் இருப்பும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும் என்பது அதன் நிலைப்பாடாகும். தண்டனை இந்த ஒழுங்கிற்கு பாதகமற்ற விதத்தில் இருக்கும் போதுதான் அது நியாயப்படுத்தப்படலாம். அதனால் பயன்வழிவாதம் தண்டனைக்காகத் தண்டனை என்ற கருத்தை எதிர்க்கின்றது. தண்டனை ஏற்றுக் கொள்ளப்படவேண்டுமானால் சமுதாயத்தின் நலனுக்கு அதனால் பயனுண்டு என்பது நிரூபிக்கப்பட வேண்டும் என்பது அதன் நிலைப்பாடாகும்.

மேலே கூறப்பட்ட பழிக்குப்பழி நோக்கும், பயன்வழிவாதத்தின் நிலைப்பாடும் ஒன்றுக்கொன்று முரண்பட்டனவாகும்.

இப்பிரச்சினையை விளக்குவதற்காக ஜோன் றோல்ஸ் முன்வைத்துள்ள ஒரு உதாரணப் பகுதியை இங்கு நோக்கலாம். இது தந்தைக்கும் மகனுக்கும் இடையில் நடக்கும் உரையாடல்:

மகன் ''நேற்று ஏன் Jஜெயியில் அடைக்கப்பட்டான்'' தந்தை: ''வங்கியில் அவன் கொள்ளையடித்ததனால் அவன் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளான்.'' மகன்: சற்று வித்தியாசமான கேள்வியைக் கேட்கிறான். ஏன் மனிதர் ஏனைய மனிதர்களை சிறையில் அடைக்கின்றனர். (இதற்குத் தந்தை அறிந்திருக்க வேண்டிய பதில்) ''நல்லவர்களைத் தீயவர்களிலிருந்து காப்பாற்றுவதற்காக'' அல்லது ''எம் அனைவருக்கும் மனக்கவலையை ஏற்படுத்தும் வேலையைச் செய்யாது தடுப்பதற்காக அல்லது நாம் இரவு நேரத்தில் பயமின்றித் தூங்கச் செல்வதற்காக''.

இங்கு இருவிதமான வினாக்கள் தரப்பட்டுள்ளன. ஏன் J தண்டிக்கப் படவேண்டும் (மற்றவர்கள் எவராவது தண்டிக்கப்படாது) என்று அல்லது ஏன் அவன் தண்டிக்கப்பட்டான். இது முதலாவது J பற்றி ஏழும் வினாவாகும். இரண்டாவது வினா, ஏன் நாங்கள் தண்டனை நிறுவனத்தைப் பெற்றிருக்கிறோம். (I) வேறு எவனையும் தண்டிக்காது குறிப்பிட்ட J யைத்துண்டிப்பதற்குக் காரணம் அவன் குற்றம் செய்துள்ளான், சட்டத்தை மீறி உள்ளான், அவன் செய்த குற்றத்திற்காக அவன் தண்டனையைப் பெற்றுள்ளான்.

ஜோன் றோல்ஸின் வார்த்தைகளில் கூறுவதனால் ''மனிதன் தண்டிக்கப்பட்டுள்ளான். ஏனெனில் அவன் சட்டத்தை, மீறி உள்ளான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

''சட்டம் மீறப்பட்டால் அதற்குத் தண்டனை இருக்கிறது என சட்டம் கூறுகிறது''

ஹார்ட் கூறுவதன்படி தண்டனையை நியாயப்படுத்தலில் மூன்று அம்சங்கள் அடங்கி உள்ளன. (I) தண்டனையின் நியாயப்படுத்தலின் நோக்கம் என்ன? (II) தண்டித்தலில் எதை நியாயப்படுத்துகிறோம். (III) எவ்வளவு தூரம் எவ்வாறு தண்டித்தலை நியாயப்படுத்தலாம். இக்கேள்விகள் ஓரளவு ஒன்றுடன் ஒன்று தொடர்பானவை. பாரம்பரிய தண்டனைக் கோட்பாடுகள் இவற்றுக்கும் வேறுபட்ட பதில்கள் அளிக்கலாம்.

தண்டனையை நியாயப்படுத்தல் (Justification of punishment) என்பதை ஜெயில் சீர்திருத்தங்களுடன் சம்பந்தப்படுத்திய விளக்கமாகக் கொள்ளக் கூடாது. தண்டனை என்பதை இங்கு சட்டரீதியான தண்டனை என்று எடுத்துக்கொள்ள வேண்டும். ஆகவே சட்டரீதியான தண்டனை என்றால் (legal punishment) என்பது (I) சட்டங்கள், (II) குற்றவாளி யாரென்பதைத் தீர்மானிப்பதற்கான முறையான விசாரணைகள், (III) தண்டனை வழங்குவதற்கான அதிகாரம் பெற்ற சமூகப் பொறிமுறை என்பன இருக்க வேண்டும்.

இந்த மூன்று வகை அம்சங்களையும் பெற்றுள்ள சமுதாயத்தில் தான் சட்டரீதியான தண்டனை நிறுவனம் உள்ளது எனக்கொள்ளமுடியும்.

தண்டனையில் முரணான இரு கோட்பாடுகள் உள்ளன. அவை deterent and retributive அதாவது தடுத்தற் கோட்பாடும் பழிக்கும் பழிக் கோட்பாடுமாகும் இத்தோடு சீர்திருத்தத்தண்டனைக் கோட்பாட்டையும் மூன்றாவதாகச் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

குற்றத்தடுப்பு கோட்பாடு

இது தடுத்தற் கோட்பாடு என்றும் கூறப்படும். தடுத்தற் கோட்பாடு மிகவும் பழைமையானது. இதுபற்றிய பழைமையான கூற்று பிளேட்டோ வினால் முன்வைக்கப்பட்டது. இதில் காணப்படுவது கடந்து போனவைக் கான பழிவாங்குதல் அல்லது தண்டனை அது எதிர் காலத்திற்கானதாக வும் அதாவது தண்டிக்கப் படுபவனும் அதனைப் பார்ப்பவர்களும் அல்லது ஏனையோரும் குற்றம் செய்யாதிருக்கக் கற்றுகொள்ள வேண்டும். முற்றாகக் குற்றச் செயலிலிருந்து அவர்கள் விடுபட அல்லது பழைய நடத்தைகளை முடிந்தளவு குறைத்துக் கொள்ளவாவது கற்றுக்கொள்ளல் என்ற பொருளில் பிளேட்டோ அவரது Laws இல் இதனைக் கூறி உள்ளார்.

Z. A. ZAHIR
B.A. (Econ) P.G.D. In Edu
In - Service Advisor
Zonal Education Office
PUTTALAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இதனை நன்கு நோக்கும்போது பிளேட்டோவின் நியாயப் படுத்தலில் நோக்கக் கொள்கை (Teleological) பண்பு தென்படுவதைக் காணலாம். தண்டனை தன்னளவில் நன்மையானதல்ல. ஆனால் அது தீமையை அல்லது குற்றத்தைக் குறைக்கும் நோக்கைக் கொண்டுள்ளது அல்லது அதற்குக் கருவியாகப் பயன்படுத்தபடுகிறது.

தடுத்தற் கோட்பாடு எதிர்காலத்தை நோக்கிச் செயல்படக் கூடியது. தண்டனை வழங்கப்பட்ட காலத்திலிருந்து அதன் விளைவுகள் எதிர்காலத்தில்தான் (குற்றத்தைத் தடுப்பதாக, குறைப்பதாக) அமைய இருக்கிறது. ஏன் தண்டிக்கப்படவேண்டும் என்பதற்கு தடுத்தற்கோட்பாடு விடை தருகிறது. மேலும் தண்டனைக்கான நியாயப்படுத்தல் என்ற அர்த்தத்தில் நோக்கினால் இக்கோட்பாடு அனுபவவாத எடுகூற்றின் ஆதாரத்தைப் பெற்றிருப்பதைக் பார்க்கலாம். அதாவது: தண்டனை மக்களைக் குற்றம் செய்யாது தடுக்கிறது. எனினும் இது குற்றத்தைக் குற்றவாளியில் அல்லது மற்ற மக்களில் இருந்து தடுக்க உதவுகிறது என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதா? குற்றத்தைத் தடுக்க குற்றங்கள் நடைபெறுவதற்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றை அழித்தல் தான் சரியான வழி என்று கூறமுடியாதா?

எவ்வாறாயினும் தண்டனை இருப்பதனால் பலர் அதற்குப் பயந்து குற்றச் செயல்களைச் செய்யாது விடுகின்றனர் என்பதில் உண்மை இருக்கிறது. தண்டனைக்கு ஆளாக சந்தர்ப்பங்கள் கிடைக்காது என்று நம்பக் கூடிய கலவர காலங்கள், யுத்த காலங்கள், அல்லது பொலிஸ் சேவை பல நாட்களுக்குச் செயல்படாத நிலை போன்ற சூழல்களில் குற்றச் செயல்கள் அதிகரிப்பதை இதற்கு ஆதரவுச் சான்றாகக் காட்டப் படுகிறது.

அதாவது, தண்டனை கிடைக்கும் என்ற அச்சுறுத்தல் குற்றச் செயல்களின் அதிகரிப்பை தடுக்கிறது எனக்கூறலாம். குறைந்த பட்சம் இதில் உள்ள உத்தரவாதம் என்னவென்றால் குற்றவாளி (பல கொள்ளை களைத் தொடர்ச்சியாக நடத்திக் கொண்டிருந்தவன்) தண்டனை பெற்று, அவன் சிறையில் இரு வருடத்தண்டனையை அனுபவித்தால் அந்த இருவருடங்கள் அவனது குற்றச் செயல் தடுக்கப்படுகிறது. மேலும், தண்டனைக் காலத்தில் குற்றவாளி மனமாற்றம் பெற்றுத் திருந்துவதற்கும் (குற்றச் செயல்களை முற்றாகக் கைவிடுவதற்கும்) சந்தர்ப்பம் உருவாக வாய்ப்பு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

காண்டின் நோக்கு

தண்டனை பற்றிய காண்டின் கருத்துக்கள் பழிக்குப் பழியை வலியுறுத்துபவை. குற்றம் செய்தவனுக்கு அவன் செய்த குற்றத்தின் அளவு அல்லது சமமாகத் தண்டனை வழங்கப்படவேண்டும். 'கொலை செய்தவன் சாகவேண்டும்,' என்று அவரது கூற்றைக் கொண்டு இதற்கு உதாரணம் தரலாம். அவ்வாறு குற்றத்திற்கு சமஅளவில் தண்டனையை வழங்குவது கடமை என்றும் காண்ட் கூறுகிறார். உச்சபரிமாணத் தண்டனைக்கருத்து என இதனைக் கூறுவர்.

காண்டின் தண்டனைக் கருத்து தண்டனையில் இருந்தன்றி சட்டம், சட்டத்துறை நீதி (Legal Justice) என்பனவற்றுடனும் மிக முக்கிய மாக சுதந்திரத்தோடும் (Freedom) உள்ள அடிப்படைக் கருத்தாக்கங் களிலிருந்து தோற்றம் பெறுகிறது. ஒரு மனிதனின் சுதந்திரமும் கௌரவமும் பாதுகாக்கப்பட தண்டனை என்ற பலாத்காரம் பயன்படுத்தப் படவேண்டியதுதான் என அவர் உறுதியாகக் கருதுகிறார்.

காண்டின் நோக்கில் சட்டம், நீதி, உரிமைகள் என்பன பலாத் காரத்தைப் பயன்படுத்த அதிகாரத்தன்மை கொண்டவைகளாக உள்ளன. ஒவ்வொருவரும் மற்றவர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். உரிமை என்பது தனிநபர்களின் சட்டபூர்வமான சுதந்திரங்களாகும். மற்றவர்களுக்கும் தான் பெற்றிருப்பது போன்ற உரிமை, சுதந்திரம் உள்ளது என்று ஒருவன் எண்ணுவதில் தான் இதன் பிரதான இருப்புத் தங்கியுள்ளது. இவ்வாறு ஒவ்வொருவரும் ஏற்று நடந்து கொண்டால் பிரச்சினைகள் தகராறுகள் எழச் சாத்தியமே இல்லை. சமுதாய வாழ்வின் சாத்தியமும் வெற்றியும் இந்த ஏற்புடைமையிலும் அங்கீகரிப்பிலும்தான் தங்கியுள்ளது. அதாவது குற்றச் செயல் அதாவது பிறர் உரிமைகளையும் சுதந்திரத்தையும் மீறாத நிலை இதனால் உருவாகும். ஆனால் சமூகத்தில் இந்த நிலை மாற்றமானதாகவே உள்ளது. ஒழுங்குமீறல்கள் அடிக்கடி நிகழ்கின்றன.

ஒழுங்குமீறல்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட வேண்டும். இதைப் பலவந்தத்தின் மூலம் அதாவது சட்டத்தினால் ஒழுங்கமைக் கலாம் எனக் காண்ட் கருதுகிறார். காண்டின் கருத்தில் ஒரு செயல் நீதி என்று அதற்கே உரித்தான இறுகிய பொருளில் அழைக்கப்படுவதன் அர்த்தம் ஒருவனுடைய உள்நோக்கம், மனோநிலை எவ்வாறிருந்தாலும் சட்டத்துடன் கொண்டிருக்கும் உறுதிப்பாட்டுடன்தான் இது கருத்திற் கொள்ளப்படுகின்றது. மற்றவர்களின் உரிமைகளை மீறிய அல்லது தரமறுக்கும் செயல் அநீதியாகும். இதனால் சட்டத்தின் மூலம் இதனைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பலவந்தப்படுத்தல் அதாவது உரிமை மீறல்களுக்கு இடமளிக்காது பாதுகாத்தல் ஒழுக்காீதியாகச் சரியான நடவடிக்கையாகும்.

காண்டின் தண்டனை பற்றிய இவ்வுறுதியான நிலை பயன் வழிவாதிகளின் கொள்கைகளிலிருந்து அவரது நிலைப்பாட்டைப் பிரித்துக் காட்டிய போதும் சட்டத்தில் இயல்பாகவே, தடுத்தல் (deterent) நோக்கம் உள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்கிறார். பலாத்காரம் (சட்டம்) பிரயோகிக்கப் படுவதினாலும் உரிமை மீறல்கள் நடைபெறாது பாதுகாக்கும் அல்லது தடுக்கும் தன்மை காணப்படுவதனால் இதற்கு தடுத்தற் கோட் பாட்டுடன் உள்ள தொடர்பை ஏற்றுக்கொள்ள முடியும். எனது சுதந்திரம் உனக்காகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. உனது சுதந்திரம் எனக்காகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் கடப்பாடும், தங்கியிருத்தலும், கடன்பட்டிருத்தலும் பரஸ்பரம் இருவருக்குமுரியதாகும். அதாவது காண்டின் நோக்கில் ஒவ்வொரு நபரும் சட்டத்திற்கு அடிபணியக் கடப்பாடு உடைய வர்களாவர். உரிமைகள் என்றால் கூட அதுவும் இவ்வாறு தான் பலவந்தத்தைப் பயன்படுத்தும் அதிகாரத்தை சட்டம், நீதி, உரிமை என்பன தருகின்றன.

ஆனால், இதில் ஒரு விசேட தன்மை உள்ளது. இப்பலவந்தத்துக் குரிய அதிகாரம், சுதந்திரம் பாதிக்கப்பட்ட, உரிமை பாதிக்கப்பட்ட தனிநபர்க்குரியதல்ல. தனிநபர் தனக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்குத் தானே நீதி வழங்க முடியாது என்பது தான் இதன் பொருள். அவ்வாறு நேருமாயின் அது அராஜகத்திற்கு இட்டுச் செல்வதாகும். உண்மையில் இப்பலவந்த அதிகாரம் சிவில் சமூகத்திற்குரியதாகும். சிவில் சமூகத்தில் தான் சட்டபூர்வமான நீதிப்பகிர்வுக்கு இடமிருக்கிறது. இல்லாவிட்டால் ஒவ்வொரு நபரும் தனது பாதிப்பிற்குத் தானே நீதி வழங்கும் நிலை ஏற்படும். ஆகவே காண்ட் கூறும் பலவந்த அதிகாரம் என்பது உண்மை யில் rule of law என்பதையே குறிக்கிறது.

மேலும் தண்டனை நீதியானதாக அல்லது நீதியின் நிபந்தனை கள் பூர்த்தியாக்கப்பட்டதாக இருக்கவேண்டும். தண்டனைக்காகத் தண்டனையல்ல. நீதியின் கோரிக்கையைத் தண்டனை பெற்றிருக்க வேண்டும் என்ற கருத்தில் காண்ட் முக்கிய கவனம் செலுத்தினார். குற்றவாளி நீதியாகத் தண்டிக்கப்பட வேண்டும் என்று காண்ட் கருதுவதாக இதனைக் கூறலாம். நீதிமன்றம் ஒருவருக்குத் தண்டனை விதிக்கு முன்னர் அவர் குற்றவாளியும் குற்றஞ்சாட்டப்பட வேண்டியவரும் அவர் தான் என்பதை அறிய வேண்டும். அந்நபர் சட்டத்தை மீறியுள்ளான் என்பது மட்டுமல்ல அவனது குற்றச் செயலுக்கு அவனே பொறுப் பாளனுமாகவுள்ளான் என்பதும் நிரூபிக்கப்பட வேண்டும். அவன் தெரிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கொண்டே சட்டத்தைப் புறக்கணித்துள்ளான் என்பதுதான் அவன் ஒரு குற்றவாளி என்பதற்குரிய முக்கிய நிபந்தனையைப் பூர்த்திசெய்கிறது.

இவ்வாறு குற்றமிழைத்த ஒருவன் ஒழுக்கரீதியில் தவறு செய்த வனாவான். இதற்கான சட்டவிளைவு என்னவெனில் அது தண்டனை. மேலும் குற்றங்களில் அளவு ரீதியான தராதரமும் உண்டு. ஒரு செயலிற்கு குற்றம் சாட்டப்படக் கூடிய பொறுப்பினைப் பொறுத்து குற்றத்தின் அளவு விகிதம் மாற்றமடையலாம். திட்டமிட்டே ஒரு குற்றச் செயலில் ஈடுபடுவதைவிட மனவெழுச்சி அழுத்தங்களினால் அக் குற்றத்தைப் புரிவதில் குறைந்த அளவு குற்றம் அல்லது குறைந்த அளவு தவறு நடந்துள்ளதாகக் கொள்ளவேண்டும்.

பயன்வழிவாதத்தில் தண்டனை

பயன்வழிவாதிகள் தடுத்தற் கோட்பாட்டின் பிரதான ஆதரவா ளர்களாவர். பயன்வழிவாதம் (Utiliterianism) ஒரு ஒழுக்கவியல் கோட்பாடு, இன்பமே உள்ளார்ந்த நலன் என்றும் துன்பம் உள்ளார்ந்த தீமை உடையது என்றும் இக்கொள்கை கூறுகிறது. ஆங்கிலேயரின் ஒழுக்கவியல் கோட்பாட்டு வளர்ச்சிக்கு பயன்வழிவாதம் பெரும் பங்காற்றி யுள்ளது. பயன்வழிக்கொள்கைக்கும் அனுபவ வாதத்திற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. ஹியூம், ஜெரமிபெந்தம், ஜேம்ஸ்மில், ஸ்டுவர்ட் மில் ஆகியோர் பயன்வழிவாதத்தின் முக்கிய சிந்தனையாளராவர். இன்பம்தான் நன்மைதரக் கூடியது. இன்பம் தரக்கூடியவற்றையும் இன்பத்திற்கு இட்டுச் செல்லக் கூடியவற்றையும் மக்கள் நல்லவை என்று கருதுவதாகப் பயன்வழிவாதம் கூறுகிறது.

ஜெரமி பெந்தம் நடைமுறைக்கேற்ற விடயங்களிலிருந்து இவ்வின்பக் கோட்பாட்டை விளக்கினார். நன்மை இன்பம் இரண்டையும் பெந்தம் ஒன்றாகக் கருதினார். நன்மையை மக்கள் விரும்புகிறார்கள். மக்களின் அந்த நோக்கம் சமூக நிபந்தனை, சட்டம் என்பனவற்றால் நிறைவேற்றப்பட வேண்டும் என்பது அவரது நோக்கமாகும். 'சமூகத்தின் இன்பத்தைப் பேண அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது. தண்டனை மூலமும் பரிசளித்தல் மூலமும் அரசாங்கம் இதனை நிறைவேற்றுகிறது.' என பெந்தம் கூறுகிறார். குற்றவாளிக்கு மிகக் குறைந்த தண்டனை வழங்கப்படுவதை அவர் வரவேற்றார். இவ்வாறு செய்வதற்கு அரசாங்கம் தேவையான நடைமுறைகளை வகுக்க வேண்டும் என அவர் கூறுகிறார். பெந்தம் தண்டனை தன்னளவில் தீமையானது துன்பம் தருவது என்று கூறுவதோடு தமது அடிப்படைக் கொள்கையான Utility அல்லது பயன் என்ற அளவை விதிக்கு அமைவான தண்டனையினால் சமுதாயத்திற்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பெறக் கூடிய பயன் என்ற நோக்கில்தான் தண்டனையின் அவசியத்தை அவர் மதிப்பீடு செய்கிறார்.

தண்டனை என்ற தீமையை (துன்பத்தை) ஏன் சமுதாய அங்கத்த வனுக்கு அல்லது மனிதனுக்கு வழங்க வேண்டும் என்ற வினாவிற்கு அவ்வாறு செய்யாவிட்டால் அதைவிட அதிகமான துன்பமோ (தீமையோ) இன்பத்தைப் பெறுவதில் குறைபாடோ ஏற்படும். அதனால் (சமூகநலன் கருதித்) தண்டனை அவசியம் என்பது அவரது பதில். அவரைப் பொறுத்தவரை தண்டனை வெறுப்பிற்குரியது. அது தீமையானது. ஆனால், தீவிர வேதனை தரும் தீய செயல்களைக் கட்டுப்படுத்தவும் இன்ப நிலையில் சமுதாயத்தில் ஒரு சமநிலையைப் பெற்றுத்தரவும் இத் தீமையை (தண்டனையை) அனுமதிக்கலாம் என்பதே அவரது வாத மாகும். அதாவது சமுதாயத்தின் மொத்த நன்மைக்காக (இன்பத்திற்காக) தனி நபர்கள் தண்டிக்கப்படவேண்டும். இதுதான் செந்நெறி பயன்வழிவாத தடுத்தற்கோட்பாடாகும்.

பெருந்தீங்குகளைத் தவிர்ப்பதே தண்டனையின் நோக்கம். தீங்கினைத் தவிர்க்கத் தேவையில்லாத சந்தர்ப்பங்களில் தண்டனை அவசியமற்றது என்றே பெந்தமின் கொள்கை கூறுவதாகக் கருதலாம். தண்டனை வழங்குவதாயின் அத்தண்டனை பயன் தருவதாக இருக்க வேண்டும். தண்டனையை வழங்காது வேறு வழிகளில் ஒரு தீமையைத் தடுக்க முடியுமானால் பெந்தமின் கருத்தில் அதை நாடுவதே பொருத்தமானது. பெந்தமின் திட்டத்தின்படித் தண்டனையில் இரு முக்கிய செயற்பாடுகள் காணப்படுகின்றன.

1. அது குற்றவாளியின் குற்றம் புரியும் நடத்தையைக் கட்டுப் படுத்துகிறது.

2. அதில் பொதிந்துள்ள சீர்திருத்தப்பண்பு. அது குற்றவாளியைச் சீர்திருத்துகிறது. மற்றவர்களையும் சீர்திருந்தத் தூண்டுதல் தருகிறது (எச்சரிக்கை செய்கிறது).

மேலும் அது ஏனையவர்களின் (குற்றச்) செயல்களை அல்லது குறிப்பிட்ட வகையிலான (தீய) நடத்தைகளை தடுக்கிறது.

தண்டனை வழங்குவதற்கான விதிகள் பற்றி பெந்தம் தந்துள்ள வகையீடுகளை ஜோன் பிலமனாட்ஸ் பின்வருமாறு தொகுத்துத் தந்துள்ளார். இவை பெந்தமின் தண்டனை பற்றிய ஒன்பது விதிகள் என்று கூறப்படுகின்றன. அவற்றுள் சிலவற்றை இங்கு நோக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அ. குற்றவாளிக்குத் தான் செய்த குற்றத்தினால் கிடைத்த இலாபத்தை விட மிகுதியான தண்டனை கிடைக்க வேண்டும்.

ஆ. குற்றத்தினால் விளையும் தீங்கின் மிகுதிக்கேற்ப மிகுதியான தண்டனை வழங்கவேண்டும்.

இ. எதிர்பார்க்கும் பயனுக்கு அதிகமான தண்டனை வழங்கப் படக் கூடாது.

மக்களின் ஒழுக்க வாழ்க்கையோடு தண்டனை சம்பந்தப் பட்டுள்ளது. ஒழுக்க வழியில் நல்ல செயலுக்கும் தண்டனை கிடைக்கிறது, தீய செயலுக்கும் தண்டனை கிடைக்கிறது. தண்டனை மூலமாகத் தீயொழுக்கத்தைப் பரப்பவும் நல்லொழுக்கத்தைத் தடுக்கவும் முடியும். எனவேதான் ஒழுக்கவியலில் தண்டனை பற்றிக் கூறும்போது எந்தவகையில் தண்டனை தேவை எனக்காட்ட முற்படுவதாக வில்லியம் லில்லி கூறுகிறார். இவ்வகையில் ஒழுக்கவியல் தண்டனையை எவ்வாறு ஒழுக்காீதியாக நியாயப்படுத்தலாம் என்பதை ஆராய்கிறது எனக்கூறலாம். தண்டனைபற்றி மூன்று பிரதான கோட்பாடுகள் வருமாறு:

Deterrent Theory (தடுத்தற் கோட்பாடு)
Retributive Theory (எதிர்ப்பழிக் கோட்பாடு)
Reformative Theory (சீர்திருத்தத் தண்டனை)

தடுத்தற்கோட்பாடு

மற்றவர்களை எச்சரிப்பதற்காக வழங்கப்படும் தண்டனை எனவும் இது கூறப்படும். குற்றம் செய்த ஒருவனைத் தண்டிப்பதன் மூலம் ஏனையோரும் அதே குற்றத்தைச் செய்யாது தடுப்பதுதான் இத்தண்டனைக் கோட்பாட்டின் நோக்கமாகும். ஒரு நீதிபதி இந்தக் கொள்கைக்கு இசையத் தனது தீர்ப்பினைப் பின்வருமாறு வழங்கலாம். இந்த வெள்ளாட்டைக் களவெடுத்ததற்காக நான் உன்னைத் தண்டிக்கவில்லை. அந்த வெள்ளாடு திருட்டுப் போகாது இருக்கவே இத்தண்டனையை உனக்கு வழங்குகிறேன்.

தனிமனிதன் மற்றவர்களுக்காக அல்லது சமுதாயத்தைத் திருத்தம் செய்வதற்காகக் கருவியாகப் பயன்படுத்தப்படலாமா? என்று இத்தண்டனைக் கோட்பாட்டின் நோக்கத்தை எதிர்ப்போர் கேள்வி எழுப்பு கின்றனர். மற்றவர்களுக்கு மாதிரியாக மட்டும் என்ற நோக்கு தவறான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தாகும். இதில் தண்டனை பெறுபவன் நல்லவனாக இருந்தால் என்ன? தீயவனாக இருந்தால் என்ன என்ற ஒரு நிலை தோன்றலாம். இது ஒழுக்க நோக்கில் தவறானது. மேலும் மற்றவர்களுக்கு எச்சரிக்கை என்று நோக்கும்போது அதிகூடிய தண்டனையை நீதிபதி ஒருவர் செயற் படுத்த முன்வரலாம். ஆனால் அதி கூடிய தண்டனையை நாம் ஏற்க முடியாது. தண்டனையில் ஒழுங்கும் அளவுமீறாத நிலையும் இக்காலத்துக் குரிய கண்ணோக்கில் அவசியமான கருத்துக்களாகும். மனிதன் ஒரு முடிவுப் பொருள், அவன் கருவியல்ல. அவனது தற்சுதந்திரம் கௌரவம் என்பனவற்றை குறைத்து மதிப்பிட முடியாது. ஆனால் சில வேறுபாடுகள் நிகழ்வதற்கு இடமிருக்கிறது. இலகுவான தண்டனை கடுமையான தண்டனை என்பதை குற்றச் செயலின் பின்னணி, குற்றவாளி என்ற நோக்குகளில் இருந்து பார்க்கும்போது வேறுபாடுகள் நிச்சயம் எழலாம்.

வில்லியம் லில்லி கூறும் பின்வரும் கருத்தை இங்கு நோக்கலாம். ''ஒரு குற்றவாளி மீண்டும் அக்குற்றத்தைச் செய்யமாட்டான் என்று நீதிபதி உறுதியாக நம்புகையில் தண்டிக்காமல் இருப்பது நல்லது. ஆனால் திரும்பத் திரும்பக் குற்றம் செய்து நீதிமன்றம் வரும் ஒரு குற்றவாளிக்கு நீதிபதி கடுமையான தண்டனையை சிபாரிசு செய்வது நன்மை பயக்கும் ஒன்றாகும்.''

எதிர்ப்பழிக் கோட்பாடு

பழிக்குப்பழி அல்லது துன்பம் இழைத்தவனுக்கு துன்பத்தையே திருப்பித்தருவது என்ற இலட்சியத்தை எதிர்ப்பழிக் கோட்பாடு கொண்டுள் ளது. ஒருவன் செய்த செயலின் தீவினை அவனது தலைக்கே திரும்பு வதற்கு இத்தண்டனை வழிசெய்கிறது. அவனது தீமையான செயல் மற்றவர்களுக்கு மட்டும் தீமையானதாக இருக்கவில்லை. அந்தத் தீமைக்குள்தான் அவனும் உள்ளான் என்பது தான் இதன் அர்த்தம் என மெக்கன்ஸி கூறுகிறார். தொண்மைச் சமுதாயங்களில் தண்டனை தோன்றிய வரலாற்றுடன் தொடர்புபட்டிருப்பதும் இத்தண்டனை முறைதான்.

இத்தண்டனை பழிவாங்கும் நோக்கைப் பிரதிபலிக்கிறது எனக்கருதலாம். தண்டனை எப்போது தோன்றியது என்பதைக் கால அளவில் அறிய முடியாமற் போகலாம். ஆனால் தண்டனை புராதன காலம் தொட்டு நடைமுறையில் இருந்துள்ளது. புராதன மனிதன் குற்றங்களுக்கு கொடூரமான தண்டனைகளை வழங்கினான். அவனது கொடூரமான அணுகுமுறை அவனது காலத்திற்குரியதாகும். பிற்பட்ட காலங்களில் கிறிஸ்தவ நாடுகளில் அறிஞர் பலர் பழிக்குப்பழித் தண்டனைக் கோட்பாட்டை நிராகரித்தனர். கிறிஸ்து போதித்த மன்னிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கொள்கைக்கு மாற்றமாக இது பழிவாங்கல் மனோபாவத்தைக் கொண்டுள்ளதென அவர்கள் இக்கோட்பாட்டைக் கண்டித்தனர்.

பழிக்குப்பழியில் இருந்துதான் தண்டனை ஆரம்பிக்கிறது. பழி தீர்ப்பது விலங்குகளிடமும் காணப்படுவது. வளர்ச்சியடையாத, பூர்வீக மான, முரட்டுத்தனமான பண்பை இது உள்ளடக்கியுள்ளது. அதனால் இது தண்டனையின் தோற்ற மூலத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம். பைபிள் கண்ணுக்குக்கண், பல்லுக்குப்பல் என்று கூறுவது மிகவும் வெளிப்படையாகப் பழிக்குப்பழியையே குறித்து நின்றபோதும் அதில் ஒரு வளர்ச்சியும் மாற்றமும் உள்ளது. பண்டைய தண்டனைகளின் கொடுமைகளுக்கு பைபிள் ஒரு மட்டுப்படுத்தலை அல்லது வரையறை யைத் தண்டனையில் கொண்டுவருகிறது என இதைக்கொள்ளவேண்டும்.

யாத்திராகமத்தில் கூறப்படும் தண்டனைகளைப் பின்வருமாறு சுருக்கமாகத் தரலாம். மனிதருக்குக் கடவுள் கொடுத்த நீதி நெறிகளாக யாத்திராகமம் இவற்றைக் கூறுகிறது: வேண்டும் என்று ஒரு மனிதனைக் கொல்பவன் கொலை செய்யப்படக்கடவான். ஒருவன் கொல்லப்பட்டால் உயிருக்கு உயிர் ஈடுசெய்யப்பட வேண்டும். கண்ணுக்குக்கண் பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால், தழும்புக்குத் தழும்பு பழிவாங்க வேண்டும்.

காதை அறுத்தவனுக்குத் தண்டனை கொலையாகவோ அல்லது அவன் சார்ந்த கூட்டத்தினரையே அழிப்பதாகவோ இருந்த அளவு கடந்த பழிதீர்த்தல் வேட்கையை பைபிள் இவ்வாறு 'கண்ணுக்குக்கண் என வரையறுத்தாகவே கொள்ளவேண்டும். சமுதாய நெறிமுறைகளின் தொடர்ச்சியான வளர்ச்சியில் கொடூரமான பழிவாங்கல் முறைகளும் இலட்சியங்களும் நெறிப்படுத்தப்பட்டு வந்ததற்குரிய தொடக்கப் புள்ளி என இதனைக் கூறலாம்.

சமுதாய வளர்ச்சியில், சமுதாயத்தை குறித்த ஒழுங்குநிலைக்குள் வைத்திருக்க கடுமையான தண்டனைகளை சமுதாயம் நடைமுறைப் படுத்தியுள்ளது. சமுதாயத்தைப் பாதுகாக்கச் சட்டங்கள், விதிகள் தேவை யாக உள்ளன. சட்டம் மீறப்படாது பாதுகாத்தலும் இதனுடன் சேர வேண்டியுள்ளது. ஏனெனில் சட்டம் குலையும் போது சமுதாய ஒழுங்கும் குலையலாம். பழிக்குப் பழிவாங்கும் கொள்கையைத் தற்கால நோக்கில் தீங்கானது என்றுதான் கூறவேண்டும். ஆனால், இது வெறும் இலட்சிய நோக்கினால் அன்றி நடைமுறைச் சூழல்களைக் கொண்டும் தீர்மானிக்கப் பட வேண்டிய விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பழிவாங்குதல் என்ற பொருளின் அடிப்படையில் கிறிஸ்தவர்கள் எதிர்ப்பழித்தண்டனையை நிராகரித்ததை வேறுவகையிலும் நோக்க முடியும். மெக்கன்ஸியின் கருத்துப்படி பழிவாங்குவதை தனிப்பட்ட பழிவாங்குதல் அதாவது, தனிநபர் ரீதியிலான பழிவாங்குதல் என்ற அர்த்தத்தில்தான் கிறிஸ்தவ ஆதரவாளர் அதை எதிர்த்திருக்கலாம். ஆனால், எதிர்ப்பழி கோட்பாடு (பழிக்குப்பழி கொள்கை) தனிநபர் பழிவாங்கும் ஒன்றெனக் கருதுதல் தவறு. இது நீதிமன்றத்தினால் தரப்படும் தீர்ப்பிலிருந்து நிறைவேற்றப்படும் தண்டனையாகும். ஆகவே, இதில் வேறுபாடு உள்ளது. ஆனால், பறிகொடுத்தவனது அல்லது பாதிக்கப்பட்டவனது பழிவாங்கும் உணர்வை நீதித்தீர்ப்பு நிறைவு செய்கிறது என்று கூற இடமிருக்கிறது. ஆனால், முக்கியமாக தனிநபர் நேரடியாகப் பழிவாங்க உள்ள வாய்ப்பை, இடத்தை நீதிமன்ற முறை இல்லாதொழிக்கிறது. இது முன்னேற்றமான நிலையாகும்.

இங்குள்ள பிரதான பிரச்சினை, சமூகத்தை நிலையாக வாழ வைக்க இத்தண்டனை எவ்வாறு உதவும்? எவ்வளவு தூரம் உதவும்? என்பதாகும். தண்டனையைக் கூட்டிக் கொடுப்பதோ! அல்லது குறைப்பதோ! பிரச்சினையல்ல. சமுதாயம் அழியாமல் சீர்குலையாமல் இருக்க இத்தண்டனையின் பங்கு என்ன என்பதைத்தான் நாம் பார்க்க வேண்டும். ஏனெனில், மனிதன் சுதந்திரமானவனாக வாழ வேண்டும், அவனது உரிமைகள், சட்டபூர்வமான நலன்கள் பாதுகாக்கப்படவேண்டும்.

சீர்திருத்தக் கோட்பாடு

தற்காலத்தில் தண்டனையில் சீர்திருத்தக் கொள்கை முக்கிய இடத்தைப் பெற்றுவருகின்றது. இது தண்டனைக்கான குற்றத்திற்கு வழங்கும் தண்டனையில் சீர்திருத்தமா? அல்லது குற்றத்துக்குத் தண்டனையை வழங்காத வகையில் ஒரு முறையைக் கடைப்பிடிப்பதா? என்ற கேள்விகளை இது எழுப்புகிறது. தீவிர, சீர்திருத்தவாதிகள் தண்டனையை கைவிட்டு குற்றவாளியைச் சீர்திருத்த வேண்டும் என்கின்றனர். இதை ஏற்றுக் கொள்ளலாமா? தண்டித்தலை விட, ஏன் ஒருவன் குற்றம் செய்தானென்று குற்றத்துக்கான காரணத்தை ஆராய வேண்டும் என்பதிலேயே கவனம் செலுத்த வேண்டும் என்று இதன் ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

குற்றவாளியை சீர்திருத்தக் கூடிய கல்விமுறை, அன்பு காட்டுதல், மன்னிப்பு, சிறைச்சாலையில் போதிய சௌகரியம், தண்டனைக் குறைப்பு போன்றவற்றைச் சீர்திருத்தக் கோட்பாட்டாளர் முன்வைக்கின்றனர். ஆகவே, பிரதான கேள்வி தண்டனையில் துன்பத்தை வைத்திருப்பதா? அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இல்லாமல் ஆக்குவதா? அடிப்படையில் துன்பத்தை வைத்திருப்பதுதான் தண்டனை. குறிப்பிட்ட அளவு துன்பம் இருப்பது குற்றவாளிகளை சீர்திருந்த யோசிக்கத் தூண்டுகிறது. துன்பம் இல்லாத தண்டனையை வழங்குவதிலும் பார்க்கத் துன்பமுள்ள தண்டனையை வழங்குவதால் எதிர்காலத்தில் குற்றச் செயல்களை விட்டொழிக்க அது கருவியாக முடியும். சிறைத்தண்டனைகளில் வழங்கப்படும் வழமைக்கு மாற்றமான சௌகரிய அதிகரிப்பும் மகிழ்ச்சியான சூழலும் மூன்றாம் மண்டல நாடு களில் வறுமையில் உழல்பவர்களைக் குற்றச் செயலுக்குத் தூண்டலாம். தண்டனையில் துன்பம் நீக்கப்படுவதைவிட துன்பத்தின் அளவு, தன்மை பற்றியோசிக்கலாம். தற்காலக் கோட்பாடுகள் பல, குற்றவாளியின் உடலுக்குக் கடும் சேதம் விளைவிக்கக் கூடிய தண்டனை முறைகளை எதிர்க்கின்றன. தண்டனையில் துன்பத்தைக் குறைப்பதைப் பற்றிய கருத்து இன்று முக்கியத்துவம் பெற்று வருகிறது.

சீர்திருத்தத் கொள்கையிலுள்ள முக்கிய விடயம், குற்றவாளி திருந்துவதென்றால், அவன் திரும்பவும் அக்குற்றத்தைச் செய்யக் கூடாது என்பதற்காக அதற்குப் போதிய எளிய சில வகையான முறைகளைச் செய்யலாம். அதாவது சில ஒழுக்க நடவடிக்கைகளை கற்பிக்கலாம். இத்தண்டனை சரியானதாக இருக்கவேண்டுமெனின், தூக்குத்தண்டனை முறை இருக்கமுடியாது. அதாவது தண்டனையின் நோக்கம் குற்ற வாளியைச் சீர்திருத்துவது எனின், அங்கு தூக்குத் தண்டனை கைவிடப்பட வேண்டும். அதாவது தூக்குத்தண்டனையை இக்கொள்கை முற்றாக நிராகரிக்கிறது. தூக்குத்தண்டமை நாகரிக சமுதாயத்திற்கு ஏற்றதா என்பது மற்றொரு விவாதத்திற்குரிய பிரச்சினையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அத்தியாயம் II

கலைமெய்யியலில் இரசனையியலும் மதிப்புக்களும்

மதிப்புக்கள் அல்லது பெறுமானங்கள் (Values) உண்மையைப் போலவே, மற்றொரு பிரச்சினைக்குரிய விடயமாகும். சிறந்தது, மோசமானது, புகழ்ச்சிக்குரியது, இகழ்ச்சிக்குரியது, நன்மை, தீமை, அழகு, அவலட்சணம் போன்ற பதங்களை நாம் நாளாந்தம் பயன்படுத்துகின்றோம். ஒவ்வொரு நபருக்கும் ஒவ்வொரு வகையான பெறுமான அலகு இருக்கின்றது. ஒவ்வொரு சமூக அமைப்புக்களிலும் பெறுமானம் என்பது ஒரு முறையாகச் செயல்படுகின்றது.

ஆதி கிரேக்க காலத்திலிருந்து இப்பெறுமானம் பற்றி எழுதப்பட்டு வந்துள்ளது. அப்போது இதன் கோட்பாட்டுப் பகுதிக்கே முக்கியத்துவம் தரப்பட்டது. தற்காலத்தில் புதிய போக்கில் இது ஆராயப்பட்டு வருகின்றது. axiology என்ற கிரேக்க பதம் axio என்பதிலிருந்து உருவானது. இதன் பொருள் மதிப்புடையது, பெறுமதியானது என்பது ஆகும். ஒழுக்கவியலும் (Ethics) இரசனையியலும் (Aesthetics) இரண்டும் பெறுமதி என்பதற்குள் அடங்குகின்றன. மக்கள் நன்மை-தீமை, நல்லது கெட்டது பற்றி எப்போதும் பேசுகின்றார்கள். இவை அறநிலைப்பட்டவை அல்லது ஒழுக்கவியல் ரீதியானவை. இதனால் ஒழுக்கவியலை ஒரு விசேட விஞ்ஞானம் எனக் கூறலாம். என்பார் மெக்கன்ஸி. அதாவது அறச்செயல்கள் பற்றிய ஒழுக்கவியல் ஆராய்ச்சி இயற்கை விஞ்ஞான ஆராய்ச்சியைப் போன்ற தல்ல. அளவையியல், இரசனையியல் (அழகியல்) என்பனவும் இத்தகைய சிறப்புநிலை விஞ்ஞானமாகத்தான் கருதப்படுகின்றன. அளவையியல் உறுதித் தன்மையை நாடுகிறது. இரசனையியல் (அழகியல்) அழகு நயப்பாக (appreciation of beauty) உள்ளது.

மதிப்புத்தீர்ப்புக்கள்

ஒழுக்கவியல் நன்மை தீமையை ஆராய்கிறது. இத்தகைய கற்கைகள் மேல்வரம்பிட்ட (normative) அல்லது நியமவிஞ்ஞானங்கள் எனக் கூறப்படும். நியமவிஞ்ஞானங்கள் பெறுமானத்தரத்தை மட்டுமே பார்க்கின்றன. மனித அனுபவத்தில் மூன்று பிரதான பெறுமானங்கள் உள்ளன, அவை: உண்மை, அழகு, நன்மை அழகு நயப்பில் உள்ளது. நன்மை ஆற்றும் செயலில் உள்ளது. உண்மை அறிவதில் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எவ்வாறாயினும் இவை பிரச்சினைக்குரிய விடயங்களாகும். இவை உருவாக்கும் கூற்றுக்களில் தீர்க்கமான மெய்யியல்ரீதியான வேறுபாடுகள் காட்டப்படலாம். தீர்ப்புக்களைப் பொதுவாக நேர்வுத் தீர்ப்புக்கள் பெறுமானத்தீர்ப்புக்கள் எனப்பிரிக்கலாம். (Factual Judgments and Value Judgments) நேர்வுக் கூற்றுக்கள் விவரணத்தன்மையும் அனுபவத்தன்மையும் கொண்டவை. பேராதனைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான தூரம், அம்மைநோய்க் கிருமியைக் கண்டுபிடித்தது, உடல் வெப்பத்தின் அளவு, என்பன நேர்வுத் தீர்ப்புக்களாகும். ஈரானின் (Chidren of the Heven) சினிமாவைப்பற்றிய அபிப்பிராயம், மார்க்ஸிம் கோர்க்கியின் தாய் நல்ல நாவல், பரீஸானாவை விட சரோஜினி நல்லவள் என்பன போன்ற தீர்ப்புக்கள் பெறுமானத் தீர்ப்புக்கள் ஆகும். மீண்டும் கூறுவதாயின் உண்மை அல்லது நேர்வுத் தீர்ப்புக்கள் அனுபவக் கூற்றுக்களின் விபரிப்புக்களாகும். ஒரு கவிதை அழகானது, நண்பன் விட்டுத் திருமண வைபவத்திற்குச் செல்லவேண்டும், அஸ்வினியின் நட்பு நேர்மையானதா போன்றன மதிப்புத் தீர்ப்புக்களாகும். அல்லது பெறுமானத் தீர்ப்புக்களாகும்.

பெறுமானத்தீர்ப்புப்பற்றிய தற்போதைய பிரச்சினை அவை அறிவுரீதியானவையா அல்லது உணர்ச்சிரீதியானவையா என்பதுதான். பாரதியின் குயில்பாட்டு, சின்ன மௌலானாவின் நாதஸ்வரம், நல்லது அல்லது அழகானது என்று கூறும்போதும் மாதவியின் நடத்தை தவறானது என்று கூறும்போதும் இவை உண்மை பொய் பற்றிய தீர்ப்பா அல்லது உணர்ச்சி வெளியீடா என்ற பிரச்சினை எழுகிறது. இது சம்பந்தமாக வேறுபட்ட மெய்யியல் விளக்கங்களும் கொள்கைகளும் உள்ளன. பொதுவாகக் கூறுவதானால் பெறுமானக் கூற்றுக்கள் மதிப்பீட்டுக் கூற்றுக்கள் ஆகும்.

ஹெரல்ட்டைட்டஸ் கூறும் பின்வரும் இரு உதாரணக் கூற்றுக்களின் மூலம் இதனை மேலும் விளக்கலாம். Edgar .S. Brightman ன் கூற்றுப்படி பெறுமானம் என்றால் அதன் அடிப்படையான பொருளில் எது உண்மையாக விரும்பப்படுகிறதோ, அது அங்கீகரிக்கப்படுகிறது. எது மகிழ்வூட்டுவதாக உள்ளதோ, அது விருப்பத்திற்குரிய பொருள் ஒன்றை தூய்ப்பதில் பெறும் அனுபவத்திலிருந்து எழும் கிளர்ச்சி தரும் ஆவல் நிறைவு ஆகும். டோர்த்தீ லீ கூறுகிறார். பெறுமானம் என்பதை நோக்கினால் ஒன்றை விட மற்றொன்றை ஒருவன் தேர்வு செய்கிறான். அது நல்லது அல்லது மோசமானது என்று தீர்ப்பு வழங்குகிறான். முதல் கூற்று விருப்பத்தையும் அங்கீகரிப்பையும் பற்றியது. இரண்டாவது கூற்று தீர்ப்பு வழங்கப்பட்ட பொருளை அல்லது சூழலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆனால் விரும்பப்படும், மகிழ்ச்சி தருகின்ற எல்லாம் இதில் அடங்காது. தீய எண்ணங்கள் தீய செயல்கள் இதில் அடங்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிலரின் கருத்தில் பெறுமானம் அகவயமானது. பெறுமானத் தீர்ப்புக்கள் மன உணர்வுரீதியானவை. ஒன்றை விரும்புவது பற்றிய அல்லது வெறுப்பது பற்றிய உணர்வு நிலை அல்லது மனக்கிளர்ச்சி. உண்பது, விளையாடுவது, கவிதை வாசிப்பது, இசை கேட்பது யாவும் பெறுமானத் தன்மை கொண்டவை. அவை மகிழ்ச்சியளிக்கும் உணர்ச்சி களை கொண்டவை நயத்தலின் பங்கின்றி பெறுமானம் என்பதும் இல்லை என்பார் ஜோர்ஜ் சான்த்தயானா.

இவற்றை பெறுமானம் பற்றிய அகவய (Subjective) விளக்கங்கள் எனக்கூறலாம். இவர்களின் இக்கொள்கைப்படி நன்மை தீமை பற்றிய அழகு அழகின்மை பற்றிய தீர்ப்புக்கள் நபரு நபர் வேறுபடும் குழுவுக்குக் குழு வேறுபடும்.

பெறுமானம் பற்றிய புறவயக்கருத்துடையவர்கள் பெறுமான நேர்வு (Value fact) அவதானிப்பவனில் தங்கியிருக்கவில்லை எனக் கொள்வர். அழகியல் பற்றிய, ஒழுக்கம் பற்றிய ஒருவனின் அறிவு மற்றும் அனுபவங் களிலிருந்து ஒரு பெறுமானத்தை உருவாக்கக் கூடிய தகுதியை அவன் பெறுகிறான். C.E.M. ஜோட் தரும் ஒப்பீட்டை இங்கு நோக்கலாம். வெப்பம் பற்றி மக்கள் தங்களது அபிப்பிராயத்தில் வேறுபடலாம். வெப்பம் அகவயமானது என்று யாரும் கூறுவதில்லை. இதைச் சரிபார்க்க வெப்பமானி உள்ளது. அதன் மூலம் வெப்பத்தை அளந்து பிரச்சினையை முறையாகத் தீர்க்கலாம்.

அழகியலுக்கும் ஒழுக்கவியலுக்கும் அவ்வாறானதொரு அளவு கருவி இல்லை. எது சரியான தீர்மானம் என்பதை மதிப்பீடு செய்வதற்கு உரைகல் அல்லது அளவீட்டுமுறை இருக்கலாம் என்று சிலர் வாதிடு கின்றனர். ஒரு தரைத்தோற்றம் அழகாயுள்ளது என்று நான் கூறினால் அது அழகானது என்று கூறும் எனது தீர்ப்பு எனது முடிவு அல்ல. அதற்குக் காரணமான நிறமும், வடிவமும், தோற்றங்களும், இயல்புகளும் தரைதோற்றக் காட்சியாய்க் கண்முன்னால் உள்ளன. இவ்வாறு பெறு மானங்கள் புறவயமானதுதான் என வாதாடுபவர்கள் அழகியல் பெறுமானக் கூற்றுக்கள் தொடர்பாக பெரிய அளவில் கருத்தொற்றுமை காணப் படுவதாகக் கூறுகின்றனர். தாஜ்மஹல், மோனாலிஸா, மைக்கல் எஞ்சலோ வின் ஓவியப்படைப்புக்கள் என்று பலவற்றை இதற்கு உதாரணங்களாக அவர்கள் காட்டக்கூடும்.

அழகைப்பற்றிப் பேசுவது கடினமானதாக இருந்தாலும், அழகைப் பற்றி மனிதன் இயற்கை, பல்வேறு வகை சுற்றாடல்கள் போன்ற விடயங் களில் அழகை ஒரு திருப்திக்குரிய, மகிழ்ச்சிக்குரிய, நிறைவுக்குரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஒன்றாக ஏற்றுக்கொள்கின்றான். அழகு என்பதன் அடிப்படை பார்க்கும் மனதனுக்கும், பார்க்கப்படும் பொருளுக்கும் இடையிலுள்ள தொடர்பு பற்றியது. அது அனுபவத்தைச் சார்ந்தது. பார்க்கப்படும் பொருளுக்கும், பார்ப்பவனுக்கும் இடையே ரசனை உணர்வு செயற்படுமானால் அதுவொரு அழகு பற்றிய மனிதனுடைய ஒரு தீர்மானம் சம்பந்தப்பட்டதாகும். இந்த விடயங்களையும் அனுபவங்களையும் இரசனையியல் ஆராய்கின்றது. கலைமெய்யியல் என்ற துறையும், இது போன்ற விடயங்களை ஆராய் கின்றது.

பொதுவாக மெய்யியலும், இறையியலும் கோட்பாட்டுரீதியான எண்ணக்கருப்பிரச்சினைகளை அதிகளவில் கொண்டிருக்கின்றன. இங்கு இரசனையியலில் காணப்படுவது அனுபவத்தின்பாற்பட்ட விடயங்களாகும். அதாவது, காட்சி, அனுபவத்திலிருக்கிறது. இந்த அனுபவங்கள் மகிழ்ச்சி என்ற ஒரு விடயத்தை உள்ளடக்கிக் கொள்கின்றது. கலைத்துவப் பொருட்களைப் பார்க்கும்போது ரசனைக்குரிய மனக்கிளர்ச்சி அல்லது மனஉணர்வு வெளிப்படுகின்றது. அதாவது, ஒரு கலைப்படைப்பில் ஒரு கலைஞன் தூண்ட முயற்சிப்பது அதுதான். இந்த அனுபவங்கள் (இரசனையியல், மனக்கிளர்ச்சி) ஒரு தனித்த பார்வையல்ல, அந்த பார்வைக்கு ஒரு பின்னணி இருக்கின்றது. ஏனெனில், அழகு, அழகின்மை என்பது இந்தப் பின்னணியை அடிப்படையாக வைத்துத்தான் ஏற்படுகின் றது. தென் துருவத்தில் வாழ்கின்றவர்களின் அழகு பற்றிய கருத்துக்கும் அதற்கு வெளியிலுள்ளவர்களின் அழகு பற்றிய கருத்துக்கும் வேறுபாடு உண்டு. ஆபிரிக்கக் கறுப்பு இனமக்களின் அழகியல் மதிப்பீடுகளும் இந்திய மதிப்பீடுகளும் வேறுபடலாம். பண்பாடு, ஒருவனின் அறிவு நிலை, தொடர்புகள், மரபுகள், அறிவைத் தூண்டும் தொடர்புகள் போன்ற பல கூறுகளைக் கொண்டதாகத்தான் இரசனையியலின் வளர்ச்சி உள்ளது.

இரசனையைப் பொறுத்தவரையில் அதனுடைய மறுவிளைவு எவ்வாறு இருக்கலாம் என்றால் சிலவேளை அது மனிதனுடைய நரம்பு மண்டலங்களில், இருதயங்களில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும். மேலும், இரசனை அனுபவங்கள் மனிதனுக்கு உற்சாகமூட்டவும், நல்ல எண்ணங் களை ஏற்படுத்தவும் மேலும் பல மீள் உணர்வு மீட்டல்களை அது ஏற்படுத்தக்கூடும். இரசனையியல் அனுபவங்களில் ஏற்படும் மறுவிளைவு களில் ஒன்றாக வேறுபட்ட உணர்வுகள் இருக்கின்ற மனிதர்களை ஒன்றாகச் சேர்க்கக்கூடிய சக்தி அதற்கு இருக்கலாம்.

மரங்கள், மலர்கள், நதிகள் எல்லாம் அழகாக இருக்கின்றன. இதில் எழுகின்ற பிரதானமான பிரச்சினை எது உண்மையில் அழகு, எதை நாம் அழகு என்று சொல்கின்றோம்? இது நிரந்தரமாக அலசப்பட்டு வரும் விடயம். கலையில் இரசனை அனுபவங்கள்தான் அடிப்படையானதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆதாரமானதுமாகும். எது இரசனை பெறுவதற்கு உரியதாக இல்லையோ அதை நாம் கலை என்று சொல்வதில்லை.

அழகும் இரசனையியலும்

இரசனையியல் அனுபவம் என்பது காட்சியனுபவத்தினூடாக அதிலும் குறிப்பாக பார்வையிலும், கேட்பதினாலும் பெரிதும் சம்பந்தப்பட்டு இருக்கின்றது. ஆனால், பார்வைக்கும் கேள்விக்கும் மாத்திரம்தான் உரியது என இரசனையியலை நாம் வரையறுக்க முடியாது. உண்மையில் இரசனையியல் அனுபவம், நமது ஏனைய புலன் உணர்வுகளோடும் சம்பந்தப்பட்டதாகும். இந்த அனுபவத்தை மனிதன் ஒன்றில் இயற்கையில் இருந்தோ அல்லது அவனே உருவாக்கியபடைப்புக்களிலிலிருந்தோ அதனைப் பெறுகின்றான்.

இரசனையியல் உணர்வு கலைப் படைப்புக்களின் மேல் எழலாம். ஒரு கலைஞன் தனது படைப்பொன்றின் இரசனையியல் விளைவுகளை அதிலே பதிக்கின்றான். ஒரு இரசனையியல் அனுபவத்தின்போது அதிலே கலாசாரம் நுண்ணறிவு, இயைவுத் தன்மைகள், மெல்லிய மனஉணர்வுகள் என்பன சம்பந்தப்பட இடமிருக்கின்றன. ஆனால், முக்கியமானதென்பது இந்த துணைப் பண்புகளிலிருந்து முழுதாக ஈடுபட்டு ஒரு தனித்துவ மானதும் பிரத்தியேகமானதுமான ஒரு அடிப்படையானமூலமன உணர்வுக்கு இடமளிப்பதுதான் இரசனையியல் அல்லது இரசனை.

இரசனையியல் அனுபவம் என்பதை, விலகி, அப்பாற்பட்டு பார்ப்பவைகளின் பயன்மதிப்புக்களைப் பாராது, விடுபட்டு நடைபெறும் ஒரு பிரத்தியேக அனுபவம் எனக் கூறலாம். அது மனத்திருப்தியை, நிறைவை அளிக்கிறது. சிலர் இசையை ரசிக்கும் அனுபவத்தில் அது ஒரு நோய்நிவாரணியாக (தெரப்பியாக) ஆகின்றது அல்லது ஆன்மீக உணர்வுகளுக்கு புத்துணர்ச்சி தருகின்றது என்றும் கூறுகின்றனர். 'இரசனை' என்ற தூய நிலையோடு வேறும் பண்புகள் இதில் ஒன்று கலக்கலாம் என்பதை இது காட்டுவதாகக் கருதலாம்.

இரசனையியலில் அனுபவத்துக்கு ஆதாரமாக எது அமைகின்றது என்ற கேள்வி மிக முக்கியமானதாகும். ஆனால், இதற்கு வெவ்வேறு விதமான அபிப்பிராயங்கள் இருக்கின்றன. இங்கு நாம் முக்கியமாகக் கவனிப்பது கலைகளில் இரசனையியல் தூண்டுதலுக்கு ஆதாரமாக இருக்கும் அம்சம் எது என்பதைப் பற்றியதாகும். அழகு என்பது சில வேளைகளில், ஒவ்வொரு கலைகளிலும் அக்கலைகளுக்கு உரிய இயல்பு, தன்மை, பரப்பு, ஆழம், விபரிப்பு என்பனவற்றிற்கு ஏற்ப வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

படலாம். மேலும் அழகு என்பது அளவு, தரம், விபரிப்பு, ஆழம், பரப்பு என்பவற்றுடன் தொடர்புபடுவதனால் கலைகளுக்கும் இரசனை அனுபவத்துக்கும் நெருங்கிய தொடர்புண்டு. அவைகளின் அடிப்படைப் பண்பாக இரசனை அனுபவத்தைக் கூறலாம். எந்தவொரு படைப்பில் இரசனைப் பெறுமானம் இல்லையோ அது ஒரு கலைப்பாடாகக் கூறப்படுவதில்லை. இரசனை உணர்வுக்குக் கலைப்படைப்புகளில் தொடர்பிருக்கிறது. கலைப் படைப்புக்களில் பொதிந்திருக்கும் அம்சம் எனவும் இதனைக் குறிப்பிட லாம். மீண்டும் இதற்கு அழகு என்பதனைத்தான் பதிலாகச் சொல்ல வேண்டும். இது ஒரு முக்கோணத்தைப் போல மூன்று அம்சங்களைக் கொண்டுள்ளது. இரசனை, கலை, அழகு, என்பனவே அவை.

இவ்வாறு வரைவிலக்கணங்கள் வெவ்வேறு வகையாக அமைந்தாலும், அழகு என்ற அம்சம் இல்லை என்று எந்தவொரு வரைவிலக்கணமும் கூறவில்லை. உண்மையில் நாம் அழகை, பல்வேறு, நாளாந்த வாழ்க்கை விடயங்களில் பேசுகின்றோம். அழகான சாரி, அழகிய முகம், அழகிய மேகம், அழகான புற்றரைக் காட்சி என்று சொல்கின்றோம். உண்மையில் இவ்வாறு எமது நாளாந்த வாழ்க்கையில் அழகைப் பற்றிக் கூறும்போது இதில் நாம் வேறுபடலாம். பொதுவான விளக்கங்களின்படி கலை என்பது அழகாக இருப்பது. எவை அழகாக இல்லையோ அவைகள் கலைகள் இல்லை என்ற ஒரு கருத்து நீண்ட காலமாக முன்வைக்கப்பட்டுள்ளது. இது ஒரு பாரம்பரியக் கருத்தாகும். இந்த நோக்கை நாம் ஆராய்ந்தால் ஒருங்கிணைவு இல்லாத தன்மை காணப்பட்டால் அது அழகு அல்ல. அதனால் அவ்வாறான தொன்று கலையுமல்ல. மிக அண்மைக்கால இரசனையியல் அனுபவம் பற்றிய ஆய்வு இந்தக் கருத்துக்கு ஆதரவாக இல்லை. சில பரிசோதனைக் கலைப் படைப்புக்கள் நாம் பாரம்பரியமாக ஏற்றுக் கொண்டுள்ளவற்றைப் புறக்கணிக்கின்றன. உதாரணமாக நவீன சிற்பம், நவீன ஓவியம். எவை, அழகு என்பதை வேறு ஒரு பாணியில் முன்வைக்கப்பார்க்கின்றன. சில பரிசோதனையான பண்புகளை, அம்சங்களை, அவை கலைப் படைப்புக் களில் கொண்டு வருகின்றன. அவை பாரம்பரியமான அழகு பற்றிய கொள்கைகளை மறுப்பதுபோல் உள்ளன. அதாவது ஒரு கலைஞன் அழகானதை பிரதிபலிப்பதைப் போலவே அழகற்றதையும் பிரதிபலிக்க முடியும். ஆனால், கலை அழகானது என்ற வரையறையை அவன் மீற வில்லை. அங்கு கலைஞன் எடுத்துக்காட்டும் அம்சம் எவ்வளவு அவலட்சணமானதாக இருப்பினும், அதன் நேர்த்தி ஒரு யதார்த்தத்தை அல்லது உண்மையைப் பிரதிப்பலிப்பதற்கு அவன் கையாண்டுள்ள கலை ஒழுங்குகள் சாகக்கிடக்கும் தொழுநோயாளியை கென்வஸில் ஓவியமாக, நடிப்பில் பாத்திரமாக அந்த அவலட்சணக் காட்சியை அவன் கலையாக்கும்போது அது அழகின் நிறைவான பண்புகளுக்கு எந்தக் குறைபாட்டையும் கலையில் தருவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நவீன கலைக் கோட்பாடு

கலைஞன் ஏதாவதொன்றில் தான் காணும் வகையில், வடிவம் தந்து தனது மன உணர்வுகளையும் தனக்குள்ளே ஏற்படும் எண்ணங் களையும் பிரதிபலிக்க முயல்கின்றான். பல்வேறு சமயங்களில் ஒரு துயரம் அல்லது அநீதி அல்லது கொடூரம் முதலியன அவனுடைய அகப் பார்வைக்கு உரிய வகையில் வடிவம் பெறுகின்றன. இந்த வகையில் சில கலைப் படைப்புக்கள் உண்மையில் இவை அழகியவை யல்லவாயினும் ஒரு கலைஞன் தன்னுடைய மனஉணர்வுகளுக்கு ஏற்ப எவ்வாறு காண முயல்கின்றான் என்பதன் கலைப்பிரதிபலிப்பாக அது அமைகிறது. இது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அல்ல. சில சந்தர்ப்பங் களிலேயே தான் இத்தன்மை வருகின்றது. இதனாலேயே, மிக அழகாகத் தோன்றுகின்ற சூரிய அஸ்தமனம், சூரியன், சந்திரன், இயற்கைக் காட்சிகள் போன்றவற்றை இயற்கை அழகுகள் என்று சொல்லலாம். இவற்றைக் கலைப்படைப்பென்று சொல்வது இல்லை, ஓவியம், சிற்பம், கட்டிட நிர்மாணம், நடனம், இசை, நாடகம், புனைகதை, கவிதைகளைப் பற்றி பேசும்போதுதான் அழகு பற்றிய பிரச்சினை தோன்றுகின்றது. நடைமுறை யில் நாம் காணும் அழகற்றவற்றையும் ஒரு கலைஞன் நேசித்தால் அதுவும் கலைப்படைப்பாகி விடுகின்றது. ஆகவே, அழகு என்பது கலை யில் ஒரு விசேட பொருள் தருவதாக உள்ளது. படைப்பில் அவன் அடையும் வெற்றி என்பது நாம் தினமும் காண்கின்றவற்றை அப்படியே பிரதிபலிப்பது அல்ல. ஆனால் நாங்கள் காணாத ஒன்றை அவன் கண்டதைக் கொண்டு அவனால் விவரிக்கப்படும் பாணியில் அது தங்கியுள ளது. அங்குதான் அவனுடைய கலைப்படைப்பில் அவன் தனது சில நுணுக்கங்களை அவனாக வெளிப்படுத்துகின்றான். அதனால் கலைப் படைப்பைப் பற்றிப் பேசும்போது அது என்ன என்ற கேள்வி எழுகின்றது. ஆனால், அது என்ன என்பது அல்ல. அது எவ்வாறு அமைந்துள்ளது என்பதே கலைக்குரிய நிதர்சனமாகும்.

இரசனையியல் அனுபவத்தைபற்றிய சில அடிப்படைகளை அறிவதற்கு புலன் உணர்வு (sensation), புலன்காட்சி (perception), எண்ணக்கரு (concept) என்பவற்றிற்கிடையிலான வேறுபாடுகளை அறிதல் வேண்டும். புலன் உணர்வு புலன் உறுப்புக்களினால் பெறப் படுகிறது. பார்த்தல், கேட்டல், சுவைத்தல் முதலியன இதில் அடங்குகின் றன. ஆனால், மூலநிலையில் இவை மங்கலானவை, தெளிவு குன்றி யவை. இவை கருத்துக்களைக் காவி வருவதில்லை. இந்த புலன் உணர்வுத் தூண்டல்கள் ஒரு அலகாக அமையும்போது பொருட்கள் அங்கு தெளிவான புலப்பாட்டிற்கு வருகின்றன. நாம் பார்ப்பனவாகிய, கல், கதிரை, மரம் மலை என்பவற்றை தெளிவுபட அறிகிறோம். இவற்றையே நாம் புலன் காண்டல் (புலன் காட்சி) என்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தனியன்களிலிருந்து பொதுமைக்கு நாம் செல்வோமானால் அங்கு பொதுக்கருத்துக்கள் concept அல்லது எண்ணக்கரு என்ற கட்டத்திற்கும் வருகிறோம்.

மல்லிகை மலரை அல்லது கஸ்ஸாலியைப் பார்த்தேன் என்பது ஒரு புலன்காட்சிக்குரியது. அது ஒரு தனியனைக் குறித்து நிற்கும் காட்சி. ஆனால் 'மலர்' என்பதைப்பற்றி அல்லது கஸ்ஸாலியைப் பற்றிப் பேசாது பொதுவான 'மனிதன்' பற்றிப் பேசினால் அங்கு குறித்த தனியன் மறைந்து பொதுவான 'மனிதன்' அங்கு (கற்பனையாகத்) தோற்றமாகிறான். இவ்வாறு 'மனிதன்' என்ற அப்பொது கருத்து நிலைதான் concept அல்லது எண்ணக்கரு ஆகும்.

இரசனையியல் அனுபவம் பார்த்தலை, கேட்டலை அதிக அளவில் கொண்டுள்ளது. ஆயினும் தொடுதல், சுவைத்தல், முகர்தல் என்பனவும் இவ்வனுபவத்திற்குள் அடங்குகின்றன. மனிதனின் கண்களும் காதுகளும் அழகை நுகர்கின்றன, அதில் இன்பங்கொள்கின்றன என்று அல் கஸ்ஸாலி கூறுகிறார். அழகு கண்களுக்கும் காதுகளுக்கும் மட்டும் மட்டுப்படுத்தப் பட்டதல்ல பசுமையான புற்பூண்டும், ஒடுகின்ற தண்ணீரும் கண்களுக்கு இனிமையாவது போல காதுகளுக்கு நல்லகுரலோசை இனிமையைத் தருகிறது. நல்ல நறுமணம் மூக்கிற்கும், ருசிமிகுந்த உணவு நாவிற்கும் இன்பத்தைத் தருகின்றன என இமாம் கஸ்ஸாலி விளக்குகிறார். இயற்கையில், அல்லது மனிதனால் ஆக்கப்பட்டவற்றில் பார்த்தல்அனுப வத்தினால் எழும் ஒருவகை மகிழ்வுதரும் அனுபவத்தை இரசனை இயல் அனுபவம் எனலாம். இரசனையியல் ஒருவனில் தோற்றவிக்கப் படும் உணர்வாகும்.

இரசனையியலின் இயல்பை மீட் (Mead) பின்வருமாறு பிரித்து விளக்குகிறார். மீடின் இவ்விளக்கத்தைக் கூர்ந்து நோக்கினால் அது அழகு, ரசனை ஆகியவற்றின் இயல்புபற்றி அல்-கஸ்ஸாலி முன்வைத்த கருத்துக்களுக்குச் சமமாக இருப்பதைக் காணலாம். இப்போது மீடின் கருத்தைப் பார்ப்போம்:

1. உறவற்றநிலை அல்லது பற்றற்றுப் பிரிந்திருத்தல். அதாவது அவனது (இரசனை) அனுபவத்தின் போது நாளாந்த வாழ்வின் தொடர்புகளை இதனுடன் பந்தப்படுத்தாத நிலை.
2. ஆவலற்ற நிலை, வசப்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம் அற்றிருப்பது. அடைந்து கொள்ளவேண்டும் என்ற ஆவல் அற்றிருப்பது. தன்வசமாக்க வேண்டும் என்ற ஆவல் அற்ற நிலையில் எவ்வித சமூக அந்தஸ்து பொருளாதார நோக்கம் இன்றி மகிழ்ச்சியை விருப்பைப் பெற்றிருப்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

3. இரசனை மனப்பாங்கு நபர் சாராதது. இரசனையியல் பொருளினால், ஒருவன் கவரப்படும்போது அவன் அவனிலிருந்து விடுபடுகிறான். குறுகிய அவனது இலட்சியங்களிலிருந்தும் அவன் விடுபடுகின்றான்.

இன்பம் தருவதனால் மனிதன் அழகை விரும்புகிறான் என்றும் அது எவ்வித பலாபலனையும் கருதாத, சுயநலம் கலவாத பற்று அல்லது நேசம் என அல்-கஸ்ஸாலி கூறுகிறார். ஆதாயம், சகாயம், பயன், பாதுகாப்பு எதையும் கருதாத தூய விருப்புத்தான் அழகு ரசனையில் மனிதனால் வெளிப்படுத்தப்படுகிறது என்ற கஸ்ஸாலியின் கருத்தோடு மேற்கூறியவற்றையும் ஒப்பிட்டு நோக்கலாம்.

இரசனையியல் அனுபவம் தான் கலைக்கு அடிப்படையாக உள்ளது. அதனால் இரசனையியல் பெறுமானத்தைப் பெறாத எதனையும் கலை என நாம் கூறமுடியாது. உண்மையான இரசனையியல் பெறுமானத்தைப் பெற்றிருப்பதுதான் அல்லது இரசாயனயியல் பெறுமானம் தான் கலையின் அழகை அல்லது இரசனையியல் பெறுமானத்தை நியாயப்படுத்துகிறது.

ஹெரால்ட் டைட்டஸ் தந்துள்ள விபரிப்புக்களைப் பயன்படுத்தி இரசனையியல் அனுபவத்தில் அடிப்படை அலகுகளாக உள்ள பண்புகளை நான்காக வகுத்துப் பார்க்கலாம்:

ஊடகம்:
ஓவியம், இசை, சிற்பம் என்று பார்க்கும் போது பல்வேறு வகை மூலப் பொருட்கள் ஊடகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட கலையில் கூட (உதாரணமாக சிற்பக்கலை: பாறை உலோகம் பனிக்கட்டி, கடதாசிகூழ்) வேறு வேறு மூலப் பொருள்கள் பயன் படுத்தப்படலாம். ஓவியங்களுக்கும், சிற்பங்கள், சிலைகள் வடிப் பதற்கும் பல்வேறு மூலப்பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

தொழில் நுட்பம்:
கலைப்படைப்பு ஒரு குறிப்பிட்ட ஒழுங்கினை பெறுவதற்கு அல்லது வடிவத்தைப் பெறுவதற்கு பயன்படுத்தப்படும் முறையை இவ்வாறு குறிப்பிடலாம். ஒரு கலைப்படைப்பின் உயர்வையும் நேர்த்தியையும் அல்லது பலவீனத்தையும் நேர்த்தியின்மையையும் தொழில் நுட்பம் தீர்மானிக்கலாம். அதனால், இரசனையியல் அனுபவங்களில் திறன் களிற்கு தரப்பட்டுள்ள இடம் முக்கியத்துவம் வாய்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கலைவடிவம்:

கலைப்படைப்பொன்றின் பாகங்களை ஒரு ஒழுங்கிலும் நேர்த்தியிலும் சிக்கல் பொருந்த ஒரு ஒழுங்கில் செய்யும் செயற்பாடு உள்ளது. அதை வடிவம் எனக் கூறலாம். பல்வேறு பாகங்களின் ஒழுங்கமைப்பு தரும் முழுமைத்துவப்பண்பு எனபது இவ்வடிவமைப்பில் உள்ளது. எடுத்துக்கொண்ட விடயம கலையாய் ஆக்கம் பெறுவதற்கு சில வரன்முறையான தேவைகள் நிறைவு செய்யப்படவேண்டும். அது அடிப்படைப்பண்பாகும். இசைக் கருவியில் பல்வேறு ஒலிபேதங் கள் எழலாம். வெவ்வேறு இசைக்கருவிகள் வேறுபட்ட பல ஒசை களை எழுப்பலாம். ஆனால் ஒரு இன்னிசை உருவாக ஓசைகளின் ஒழுங்கமைப்புத் தேவை. பல்வேறு அங்க அசைவுகளை மனிதர்கள் செய்கின்றனர். நாட்டியமும் அங்க அசைவுகள்தான். ஆனால் நடனம் என்பது அசைவுகளின் வரன்முறையான அல்லது ஒருவகை ஒழுங் கமைப்பையும் தொழிற்நுட்பத்தையும் கொண்ட ஒரு நிர்மாண முயற்சி யில் இருந்து அது பிறக்கிறது.

உள்ளடக்கம்:

கலைப்படைப்பு உட்படுத்தியுள்ள விடயம் அல்லது பொருள் பற்றிய பிரச்சினை உள்ளடக்கமாகும். கலை கற்பனையிலிருந்துதான் தான்தோன்றியாய் உருவாகின்றது என்பது அல்ல அது குறிப்பிட்ட இயற்கைப் பொருளின் செயற்பாட்டில் அல்லது பயன்படுத்தலில் இருந்து பிறக்கிறது. அதனால், இது கலைப்படைப்பொன்று விடயப் பொருட்களுடன் அல்லது உள்ளடக்கத்துடன் தொடர்புபட்டுள்ளது எனக் கூறலாம். வாழ்க்கையின், உலகின், இயற்கையின், எண்ணங் களின், உணர்ச்சிகளின், கற்பனைகளின் ஏதாவது விடயங்களைத் தான் கலைப்படைப்பொன்று உள்ளடக்கமாகக் கொள்கிறது. காலைக் காட்சி, குளிர் நீரோடை, பிரிவுத்துயரம் போரின் கொடுமை, காதல் உணர்வு, இலட்சியக் கனவு, தேச அபிமானம் என இவை அமையும்.

கலைக்கோட்பாடுகள்

பிளேட்டோ

நவீன காலத்தில் இரசனையியல் பிரத்தியேகமான மெய்யியற் பிரிவாகக் கொள்ளப்படுகிறது. நவீன கலைக் கோட்பாடுகள் கலையை ஒரு முடிவுப் பொருளாக ஏற்றுள்ளன. 'அழகு' என்பதற்கு ஒரு முழு முதலான, பூரணமான பெறுமானம் இருப்பதாக அவை வலியுறுத்து கின்றன. அதனால் கலை கலையினால் நிறைவடையக் கூடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நிர்வகிக்கப்படக் கூடிய ஒரு முற்றுப் பொருளாய் உள்ளது. பிளேட்டோவின் காலத்தில் இது இவ்வாறிருக்கவில்லை. அவர் பெரிதுபடுத்திப் பேசிய இயக்கவியல், பௌதிகவியல், ஒழுக்கவியல்களுடன் கலைக்கு அவர் இடம் தரவில்லை. பிளேட்டோ கலையை ஒழுக்கத்திற்கும் மெய்யியலுக்கும் கட்டுப்பட்டதாகக் கருதினார். அழகு என்பதல்ல, அழகு ஒழுக்கத்திற்கு பணிவுள்ளதாக இருக்க வேண்டும் அல்லது அவ்வாறிருப்பதுதான் அழகு. கவிதை ஒழுக்கத்தின் கட்டுப்பாட்டை ஏற்க முடியாது போனால் அது அனுமதிக்கப்படக்கூடாது. கவிஞர்களும் மற்றக் கலைஞர்களும் கட்டுப் பாட்டிற்குட்படுத்தப்பட வேண்டும். தீமை, அடக்கமின்மை, அற்பத்தனம், கண்ணியமின்மை போன்ற நன்மைக்கு மாற்றமான குணங்களை எக்கலை கொண்டிருந்தாலும் அதற்குக் காரணமாக இருக்கும் கலைஞர்கள் தடுக்கப்பட வேண்டும் என குடியரசு கூறுகிறது. கருத்துக்களின் அறிவைப் பெறுவதுதான் கல்வியின் மொத்த நோக்கமுமாகும். விஞ்ஞானமோ, கணிதமோ, கலையோ எதுவானாலும் கல்விப் பாடத் திட்டத்திற்குட்பட்ட ஒன்றாகத்தான் அது இருக்கவேண்டும். அதனால் பிளேட்டோவிடம் கலை தற்காலத்தைப் போல ஒரு முடிவுப் பொருளாக தானே நிறைவு பெற்றதொன்றாக இருக்கவில்லை.

பிளேட்டோவின் கலைபற்றிய இக்கண்ணோக்கிற்கு கலை பற்றிய அவரது சொந்த மதிப்பீடு ஒரு காரணமாயிருந்துள்ளது. கலை பிளேட்டோவின் கருத்தில் போலச் செய்வதில்தான் (imitation) தங்கியுள்ளது என்பது அவரது குடியரசு நூலிலும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

ஓவியமும், சிற்பமும் பொருள்களையும் மனிதர்களையும் சித்திரிக்கின்றன. இசை மனிதனின் உணர்வு அலைகளைப் போன்மையாக அல்லது மாதிரியாகத் தருகின்றன. பிறிதொருபொருள் ஒன்றினைத்தான் கலை பிரதி செய்கிறது என்பது இதன் பொருள் பொருளைப் புலன்கள் பிரதி செய்கின்றன. பொருள்கள் கருத்துலகின் பிரதிகள். ஆகவே கலை என்பது பிரதியின் பிரதி (Copy of Copy) என பிளேட்டோ கூறுகிறார். உண்மையில் பிளேட்டோ கலைகள் மீது அபிமானமுள்ளவராக இருந்தபோதும் இத்தகைய விமர்சன கருத்துக்களையும் அவர் அங்காங்கே தமது சிந்தனைகளில் வலியுறுத்தி வந்துள்ளார். கலை நிர்மாணத்திறன் பற்றிய பிளேட்டோவின் குறைவான மதிப்பீடே இதற்குக் காரணமாக இருக்கலாம்.

ஸ்டேஸ் கூறுவதுபோல பிளேட்டோவின் இக்கருத்தில் தவறுள்ளது. கலைஞன் பொருளை பிரதி பண்ணவில்லை. ஆனால், அதைக் கருத்து வயப்படுத்துகிறான் என்பது அவரால் உணரப்படவில்லை. எனினும் கலையின் மேதமை பற்றி உயர்ந்த மதிப்பீடும் பிளேட்டோவிடம் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கலைஞன் அறிவுச் சட்டத்திற்குட்பட்டு செயலாற்றுபவனல்ல. ஆனால், அவன் செயல்கள் அகத்தூண்டுதலுக்குட்பட்டவை. முன்னரே தரப்பட்ட விதிகளுக்கும் சட்டங்களுக்கும் கட்டுப்பட்டு அவன் தன் அழகு நிர்மாணத்தை படைக்கவில்லை. கண் முன்னால் அவனால் தரப்பட்ட படைப்பைப் பார்த்துத்தான் விமர்சகர்கள் அதன் விதிகளை கண்டறிந்து கூறுகின்றனர் என்ற சிறந்த மதிப்பீடு அவரால் தரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பிளேட்டோவின் கருத்துக்களில் அகத்தூண்டுத (inspiratiion) லை விட உயர்ந்த இடத்தைப்பெற்றிருப்பது பகுத்தறிவாகும்.

குடியரசில் தரப்பட்டுள்ள உரையாடலிலிருந்து இதனைச் சுருக்கமாகத் தரலாம். கலைகள் போலியானவை என்பதை குடியரசு விளக்கும் போது: மேசையைச் செய்பவன் அதற்குரிய (மேசைபற்றிய) எண்ணத்துடன்தான் அதனைச் செய்கிறான். இவனைவிட இன்னொரு கலைஞனும் உள்ளான். அவன் எல்லாத் தொழிலாளிகளுடைய வேலைகளையும் செய்யக்கூடியவன், அவன் ஒரு மந்திரவாதி போன்றவன். ஒரு முகம் பார்க்கும் கண்ணாடியை போல வானம், மரம், காடு, மலைகளை அதனால் (கண்ணாடியால்) காட்டமுடிவது போல் அவனும் செய்கிறான். கண்ணாடி காட்டும் தோற்றங்கள் போல் இக்கலைஞன் காட்டுபவையும் தோற்றங்களே. ஒரு ஓவியன் மேசையை ஓவியத்தில் படைக்கலாம். ஆயினும் அது வெறும் தோற்றமே. அவன் உண்மை உருவத்தைச் செய்யவில்லை. அது அவனால் முடியாது. உலகில் உள்ளது போன்ற ஒன்றைத்தான் அவனால் செய்யமுடியும். தத்துவ ஞானியர் நோக்கில் அவன் உண்மை சொல்லவில்லை. ஏனெனில் உண்மை கருத்துலகுக்குரியது. அது உண்மை பற்றிய தெளிவற்றதொரு விளக்கம். அதனால் பிளேட்டோவின் நோக்கில் மேசைகள் மூன்று வகைப்படும்

அ. கடவுளால் செய்யப்பட்டது (கருத்து)
ஆ. தச்சனால் செய்யப்பட்டது. (பொருள்)
இ. ஓவியனால் செய்யப்பட்டது. (கலை)

மேசையின் உண்மையான படைப்பாளி மூலகர்த்தா பிளேட்டோ வின் கருத்தில் இறைவன். உண்மையான மேசையைச் செய்யும் வல்லமை கொண்ட உண்மையான கர்த்தா அவர்தான். ஓவியன் நிலை என்ன? அவன் சிருஷ்டி கர்த்தா இல்லையா? அவனும் படுக்கையை அல்லது மேசையைச் செய்தபோதும் ஓவியன் சிருஷ்டி கர்த்தா இல்லை. ஏனையோர் செய்வதைப் பார்த்து அதுபோலச் செய்பவன்தான் ஓவியன். இயற்கை ஒழுங்கில் கடவுள், தச்சன் என்பவர்களுக்கு அடுத்தபடியில் இருப்பவன் தான் ஓவியன். இவனும் கலைஞனேயானாலும் இவன் போலிக் கலைஞன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மேசைக்கும் எல்லாப் பொருள்களுக்கும் ஒரு உண்மை நிலை இருக்கிறது. ஓவியனால் அது படைக்கப்படுவதில்லை. மேசையின் பல்வேறு தோற்றங்களைத்தான் (சரிவாக, பக்கவாட்டில், மேலிருந்து கீழாக) அவனால் படைக்கமுடியும். ஓவியன் தோற்றங்களை வரைபவனே என்று பிளேட்டோ கூறுகிறார்.

அரிஸ்டோட்டில்

பிளேட்டோ முறையான கலைக்கொள்கை வகுப்பாளராக இருக்க வில்லை. இது பற்றிய விரிவான விளக்கங்களுக்கும் அவர் செல்ல வில்லை. ஆயினும் சிதறிய வகையில் அவரால் பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. கலையும் ஒழுக்கமும் அவரால் அடிக்கடி வலியுறுத்தப்பட்டது என்பதை ஏற்றுக்கொள்ளலாம். அரிஸ்டோட்டில் தமது கவிதையியலில் (Poetic) இரசனையியலைப் பேசினார். எனினும் அங்கும் அவர் பிரதானமாகக் கையாண்ட விடயம் கவிதையும் முக்கியமாக நாடகமுமாகும். அரிஸ்டோட்டில் இரசனையியலை இரண்டாகப் பிரிக்கிறார்:

i. கலையின் இயல்பும் உட்பொருள் வளமும்
ii. கவிதை இயலுக்கு மேலே கூறப்பட்டதை பிரயோகித்தலும்

பிளேட்டோவைப் போலவே அரிஸ்டோட்டிலும் கலையை போலச் செய்தலாகவே கருதினார். ஆனால் அவரது கருத்து பிளேட்டோவி லிருந்து வேறுபட்டிருந்தது. பிளேட்டோவின் போலச் செய்வதில் கருத்தின், தச்சனின், பிரதி (copy) யைத்தான் ஓவியன் பிரதி செய்கிறான். கலைஞன் இங்கு மூன்றாம் நிலைப்பட்டவன். ஆனால், அரிஸ்டோட்டிலின் போலச் செய்வதில் ஓவியன் பிளேட்டோ கூறும் கருத்தையே போலச் செய்கிறான். அவன் செய்வது தச்சனின் மேசையை அல்ல கர்த்தாவின் மூலப் படைப்பான (கருத்து) மேசையை. அதனால் அரிஸ்டோட்டிலிடம் போலச் செய்தல் Copy of the original ஆகிறது. தனியன்களான புலன்படைப்புக்கள் அல்ல பொதுமையான கருத்துப்படைப்புத்தான் அங்கு பிரதி செய்யப் படுகிறது. பிளேட்டோவின் கலைஞன் மூன்றாம் தரத்தினை போலிக் கலைஞன், என்ற கருத்தை இது கடந்து செல்கிறது.

போன்மைப்பண்பும், போன்மைப்பண்பால் விளையும் படைப்பைக் கண்டு மனித உள்ளத்தே தோன்றும் மகிழ்ச்சியும் மனிதனிடத்தே இயற்கையாகவே அமைந்துள்ளவை என கவிதையியலில் அரிஸ்டோட்டில் கூறுகிறார். இது ஒரு இயல்பூக்கம் போல மனிதனில் இயல்பாய் அமைந்துள்ளது. இது குழந்தைப் பருவத்திலிருந்தே ஆரம்பித்து விடுகிறது. குழந்தை பிறரைப் பார்த்துச் செய்துபமகும் பல நடைமுறைகள் இப்போலச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

செய்தலின் செயற்பாடுகளாகும் என அரிஸ்டோட்டில் கூறுகிறார். பிற உயிரினங்களை விட இதில் மனிதன் சிறந்து விளங்குகிறான். அதுமட்டுமன்றி மனித அறிவுக்குத் தொடக்கமாக அமைவதும் பார்த்துச் செய்யும் இப்போன்மைப்பண்பேயாகும். இவ்வாறு பார்த்துச் செய்யப்படும் கலைகளால் அவன் மகிழ்வடைகிறான்.

ஓவியத்தில் அழகு என்பது அழகான பொருளையோ காட்சியையோ சித்தரிப்பது மட்டுமல்ல. அருவருக்கத்தக்கவைகள், இழிந்த விலங்குகள் கூட ஓவியமாக வரையப்படும் போது அவை பார்த்து மகிழத்தக்கனவாக இருப்பதாக அரிஸ்டோட்டில் கூறுகிறார். இது கலையில் அவலட்சணம் அழகானதா என்ற பிரச்சினைக்கு அரிஸ்டோட்டிலின் தீர்வாகக் கூறலாம். உள்ளதை உள்ளதுபோல் அல்லது பார்த்ததைப் பார்த்ததைப் போல் படைப்பதும், மனிதர் தமக்குத் தெரிந்த அதே பொருள் அதேபோல வரையப்பட்டிருப்பதைப் பார்ப்பதிலும் மகிழ்வளிக்கும் அம்சம் உண்டென்பது அரிஸ்டோட்டிலின் கொள்கை. ஒரு யானை வரையப்பட்டிருந்தால் யானையின் துதிக்கை அதேபோல், யானையின் தந்தங்கள் அதேபோல், பருத்தபாதங்கள் அதேபோல் வரையப்பட்டிருப்பது, பார்வையாளனுக்கு அந்த ஒப்பீடு பெரும் மகிழ்ச்சி தருகிறது. ஆனால் கலைப்படைப்பு யானையை யானை போல் வரைவது, செதுக்குவது மட்டும்தானா? போலச் செய்தல் கோட்பாட்டில் குறைதென்படுகிறது என்ற விமர்சனம் உண்டு.

அவ்விமர்சனம் சரியாக இருந்த போதும் அரிஸ்டோட்டில் விளக்கும் போன்மைக்கலையில் இரு முக்கிய பண்புகள் உள்ளன.

அ. இயற்கையில் பார்த்த அதே பொருளை ஓவியத்திலும் பார்த்து அதேபோல் உள்ளது என்பதில் பார்வையாளன் அடையும் நிறைவும் மகிழ்வும் (தடிப்பெழுத்து ஆசிரியரால் இடப்பட்டது).

ஆ. ஓவியத்தில் உள்ள வண்ணக் கலவையினாலும் தூரிகை வீச்சினாலும் சித்தரிக்கப்பட்டிருக்கும் கலை நுணுக்கங்களினாலும் அவனது மகிழ்வு இரட்டிப்பாகிறது.

இரண்டாவதாகக் கூறப்பட்டதில் ஒன்றைப்பார்த்து அதேபோலச் செய்வது மட்டுமல்ல வர்ண வெளிப்பாடு தூரிகை மற்றும் கலை நுணுக்க வெளிப்பாட்டினால் எழும் நிறைவும் மகிழ்வும் அரிஸ்டோட்டிலால் பேசப் படுகிறது. தனது கலைப் படைப்புக்களில் கலைஞன் அல்லது ஓவியன் போலச் செய்வதைக் கடந்து கலை நுணுக்கங்களிலும், தூரிகை, வண்ணச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

செயற்பாடுகளிலும், நுட்பங்களிலும் (மட்டும்) நிறைவும் மகிழ்வும் அடையும் நிலைக்கு இது மாறிச் செல்லும் என்பதும் அது கலையம்சமே என்பதும் அரிஸ்டோட்டிலின் கருத்துக்களில் பிரதிப்பலிப்பதையே இது எடுத்துக் காட்டுவதாகக் கருதலாம்.

மேலும் போலச் செய்யும் கலைப் படைப்பில் ஓவியர் அல்லது சிற்பி தனியனைப் படைக்கவில்லை. தனியன் ஊடாகப் பொதுமையே படைக்கப்படுகிறது. மனித சிற்பம், ஒரு விலங்கு (யானை) ஓவியம் நாம் அறிந்த அந்த மனிதனை (காந்திஜி) அல்லது கண்டி எசலப்பெரெஹெராவில் முன்னால் செல்லும் ராஜா யானையை அல்ல ஒரு மனிதனை, ஒரு யானையை அதாவது தனியனை அல்ல, பொதுமையை அப்படைப்பு பிரதிபலிக்கிறது. தற்கால ஓவியன் ஒரு உருவப்படத்தை வரையும்போது அதற்காக எடுத்துக் கொண்ட மாதிரி மனித உருவத்தை அதேபோல் அன்றி தனது மனப்போக்கிற்குரியதாகப் படைப்பதற்கு ஒப்பாக இதை எடுத்துக்கொள்ளலாம்.

இங்கு ஓவியன் மாதிரி (Model) மனித உருவத்தை, ஒரு கருத்தைத் தோற்றுவிக்கும் ஆதாரப் பொருளாகக் கொண்டு அதிலிருந்து தனது பூரண, பொதுமையான படைப்பை நிர்மாணிக்கிறான். பார்வையாளன் பொதுமைகள் ஓவியத்தில் தனிப்பொருளை (Particular object) மட்டும் பார்க்கிறான். கலைஞன் தனிப்பொருளிலிருந்து பொதுமையைப் (Universal) பார்க்கிறான். கலை அதன் முடிவான அர்த்தத்தில் பொதுமையைத்தான் காட்சிப்படுத்துகிறது.

கலையையும் வரலாற்றையும் கவிதையின் மூலமாக அரிஸ்டோட்டில் ஒப்பிடுகிறார். வரலாறு தனியன்களை தனியன்களாகக் கையாள்கிறது. அது நேர்வை மட்டுமே கூறுகிறது. நடந்ததைப் பற்றிய உண்மையான விடயத்தை அது பதிவு செய்கிறது. கலையில் அழிவற்ற உண்மை உள்ளடங்கியுள்ளது. இவ்வகையில் வரலாறு கருத்துடன் (Idea) தொடர்பற்றுள்ளது. அது கூறுவன முடிவுக்குரியவை, அழியக் கூடியவை. ஆனால், கலைப் பொருள் பொருள்களின், நிகழ்வுகளின் உள்ளார்ந்துள்ள சாரத்தை தருகிறது. கருத்து என்ற நோக்கில் பார்த்தால், முதல் இடத்தில் இருப்பது மெய்யியலாகும். கலைக்கு இரண்டாம் இடம் தரப்பட வேண்டும். வரலாறு மூன்றாவது இடத்திற்குரியது. கலை இரண்டாம் இடத்தைப் பெறக்காரணம் அது கருத்தை, பொதுமையைக் கையாள்கிறது. கவிதை இயலில் இக்கருத்தை அரிஸ்டோட்டில் கூறுகையில்: கவிஞனுக்கும் வரலாற்றாசிரியனுக்குமுள்ள வேறுபாடு வெறும் இலக்கிய வடிவத்தால் வருவதல்ல. உரை நடையில் எழுதப் படுவது வரலாறு, செய்யுள் நடையில் எழுதப்படுவது கவிதை என்று கருதக்கூடாது. கிரேக்க வரலாற்றாசிரியன் ஹெராடட்டஸின் வரலாற்றைச் செய்யுளில் எழுதினால் அது கவிதை ஆகிவிடாது. வடிவத்தால் வேறுபட்ட வரலாறாக அது இருக்கும். கவிதை நிகழத்ததக்கதை நிகழக் கூடியதைப் படைக்கிறது. கவிதை இயற்றப்படுகிறது. அதாவது கவிதைப்பொருள் உணர்த்தும் உண்மைகள் பொதுமையைத்தழுவியவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Z. A. [illegible]HIR
B.A. (Econ) P.G.D. In Edu
In - Service Advisor
Zonal Education Office
PUTTALAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media